# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 31 | கதிர் 332 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 07, ஞாயிற்றுக்கிழமை 23.10.2016


## மறித்தும் நிற்கவில்லை

# வாள்வெட்டுக் கும்பல் என்று நினைத்தே சூடு

### இப்படி விளக்கம் சொல்கிறார் யாழ். மூத்த பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை நிற்குமாறு பொலிஸார் சைகை காட்டியுள்ளனர். ஆயினும் அவர்கள் நிற்கவில்லை. நிற்காது சென்றமையால் வாள்வெட்டுக் குழு என்று நினைத்துப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அவர்கள் நின்றிருந்தால் பொலிஸார் சுட்டிருக்கமாட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லாஸ்.

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில், குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் கடந்த பக். 51

## தூதரகத்தை முற்றுகையிட்டு சென்னையில் போராட்டம்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை பக். 51

## பொருளாதார நிலைய இழுபறி தொடர்கிறது

### அடிக்கல் நடும் நிகழ்வும் ஒத்திவைப்பு

வவுனியா, ஒக். 23

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பொருளாதார மத்திய நிலையத்துக்கான இடத் தெரிவு தொடர்பில் மீண்டும் ஏற்பட்ட சர்ச்சை காரணமாகவே, அடிக்கல் நடும் நிகழ்வு பக். 51

## கைதான பொலிஸாருக்கு நவம்பர் 4 வரை மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 பொலி பக். 51

## யாழில் கலகம் அடக்க 400 பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து யாழ்.குடாநாட்டில் ஏதும் அசாதாரண சூழல் தோன்றினால் அதனைக் கட்டுப்படுத்த பக். 51

## கண்டிக்கிறார் வைகோ

சென்னை, ஒக். 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பக். 51

## சாவடைந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு

### பக்கச்சார்பற்ற விசாரணைக்கும் ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 23

துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரினதும் குடும்பத்துக்கு பக். 51

## பல்கலை. மாணவர்களுக்கு மக்கள் அஞ்சலி

### கிளி. மாணவனின் இறுதிக் கிரியை இன்று



யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம், கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்களின் உடலங்கள் அவர்களது இல்லங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் உடலங்களுக்கு பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரை பக். 51

## திட்டமிட்டுச் சுடவில்லை தவறுதலாக நடந்துவிட்டது

### மாணவனின் பெற்றோரிடம் மன்னிப்புக் கோரிய பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை நாங்கள் திட்டமிட்டுச் சுட்டுக்கொல்லவில்லை. தவறுதலாக நடந்துவிட்டது. சகல செலவுகளையும் தருகிறோம். வேலை வாய்ப்பும் தருகிறோம் என்று பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று எம்மிடம் மன்னிப்புக் கோரினர் பொலிஸார். எனினும் நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கொல்லப்பட்ட கிளிநொச்சி மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

கந்தரோடையைச் சேர்ந்த சுலக்சன், கிளிநொச்சியைச் பக். 51


metecno The Specialist

சுவரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு வடிவிலான தகடுகள் | பேர்லின்ஸ்

METROOF Total Roofing Solutions

மெட்டெகனோ லங்கா பிரைவட் லிமிட்டட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com

Sri Lanka Germany Italy Spain Portugal Bulgaria METECNO LANKA (PVT) LTD Mexico Chile Columbia India Thailand Vietnam

அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...

24 கெரட் இற்கு ரூ.36,000
22 கெரட் இற்கு ரூ.33,000

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411

ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை

011 5 411 411

SDB வங்கி



"ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" என்னும் தொனிப்பொருளிலான பனை சார் உற்பத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம். பி. லோகநாதன் தலைமையில் நேற்று ஆரம்பமானது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு சிறந்த பனைசார் உற்பத்தியாளர்களுக்குக் கௌரவிப்பையும், ஊக்குவிப்பு தொகையும் வழங்கினார். (த)

# இவ்வருடம் வராது பயங்கரவாத சட்டவரைவு



## ஆழமான கலந்துரையாடல்கள் தேவை என்கிறார் பாக்கியசோதி சரவணமுத்து

கொழும்பு, ஒக். 23

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் இன்னமும் அரசுக்குள் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்று நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலாளரும் மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்குவது தொடர்பில் பெரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. அனைத்துத் தரப்பும் அதற்கு இணக்கப்பாடு தெரிவித்தால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் அதனை சட்ட வரைவாகச் சமர்ப்பிக்க முடியும்.

இதுவரை பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், உறுதியான இணக்கப்பாடுகளோ, தீர்மானங்களோ எட்டப்படவில்லை. எனவே, இது தொடர்பில் இன்னும் ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது அனைவரினதும் கோரிக்கையாக உள்ளது.

அரசில் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், இந்த வருடத்தில் பயங்கவரவாதத் தடைச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படக் கூடிய வாய்ப்பில்லை. காரணம், வற் வரி திருத்தச் சட்டவரைவு, வரவு - செலவுத் திட்ட விவாதம் என அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறவுள்ளதால் இது இவ்வருடம் சாத்தியப்பட வாய்ப்பில்லை - என்றார். (தி)

# சிவில் அமைப்புகளுடன் பிரதமர் சிறப்புச் சந்திப்பு

கொழும்பு, ஒக். 23

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட பூரண ஆதரவை வழங்கியிருந்த சிவில் அமைப்புகள் அரசின் அண்மைய செயற்பாடுகள் தொடர்பில் கடும் அதிருப்தியடைந்துள்ள சூழலில், சிவில் அமைப்புகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட சந்திப்பொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்டபோது நாட்டின் ஒட்டுமொத்த சிவில் அமைப்புகளும் நல்லாட்சியை நோக்கி தமது ஆதரவை அச்சங்களைக் கடந்து வெளிப்படுத்தியிருந்தன. அதேபோல், கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவைத் தேர்ந்தெடுக்க சிவில் அமைப்புகள் ஆதரவு தெரிவித்திருந்தன. சிவில் அமைப்புகளின் முக்கிய தலைவர்களில் ஒருவராக மறைந்த சோபித தேரரும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் மற்றும் கடற்படை தளபதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்தமை தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இதன் காரணமாக நல்லாட்சி அரசு தொடர்பில் சிவில் அமைப்புகள் கடும் அதிருப்தியடைந்துள்ளன. ஜனாதிபதி கூறியது போல் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஆகிய மூன்று நிறுவனங்களும் அரசியல் ஒழுக்கப்பத்திரத்திற்கு அமையவா செயற்படுகின்றன என்று சிவில் அமைப்புகள் கேள்வியெழுப்பியுள்ளன.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் முகமாக சிவில் அமைப்புகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வாரத்தில் விசேட சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது. (த)

# யாழில் மின் தாக்கி பெண் சாவு

பொருத்துக்களும், வெடிப்புக்களும் உள்ள மின்சார வயரில் தோய்த்த உடுப்புக்களை உலரப்போட்ட வேளை மின்சாரம் தாக்கியதால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம், அராலி மத்தியில் இடம்பெற்றது. மயூரன் சிவலோஜினி (வயது - 28) என்பவரே உயிரழந்தார். அவர் இரண்டு மாதக் குழந்தையின் தாய். நீரிறைக்கும் இயந்திரத்துக்கு மின்சாரம் வழங்கும் வயரில் உடுப்புக்களை உலரப் போட்டுள்ளார். வயரில் காணப்பட்ட வெடிப்பினால் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார். (டு-4-ரி7)

# கடத்தல்களைத் தடுக்க கடல் எல்லைச் சந்திப்பு

## இலங்கை-இந்தியக் கடற்படைகள் ஆராய்வு



கொழும்பு, ஒக். 23

கடத்தல்கள் மற்றும் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் இரு நாட்டுக் கடற்படைகளும் இணைந்து செயற்படுவது குறித்துப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை-இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படைகளுக்கு இடையிலான 27 ஆவது பன்னாட்டுக் கடல் எல்லைச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் இந்தியக் கடற்படைக் கப்பலான ஐ.என். எஸ் கட்மாட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கடற்படையின் வடபிராந்திய தளபதி றியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமையிலான இலங்கைக் கடற்படை அதிகாரிகளும், தமிழ்நாடு-புதுச்சேரி கடற் பிராந்திய கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் அலோக் பட்னாகர் தலை மையிலான இந்திய கடற்படை அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பேச்சு நடத்தினர். இதன்போது கடத்தல்கள் மற்றும் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத் துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. (த)

# ஊழல்வாதிகள் யாரையும் தப்பவிடாது இந்த அரசு

## சொல்கிறார் நீதியமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஒக். 23

இந்த அரசு ஊழல்வாதிகள் எவரையும் தப்பவிடாது. அதேவேளை, அநியாயமாக - ஏனையவர்களின் தேவைக்காக எவரையும் கைதுசெய்யாது. அரசியல் பழிவாங்கலை நாம் ஒருபோதும் மேற்கொள்ளவில்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சர்ச்சைக்குரிய கூற்று தொடர்பில் கருத்துக் கூறிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

முப்பது வருடங்களாக இந்த நாட்டை அழித்துக்கொண்டிருந்த கொடிய போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினரை நாம் என்றென்றும் கௌரவிக்க வேண்டும். அவர்களின் பெயர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்வகையில் நாம் செயற்படக்கூடாது. அதே நிலைப்பாட்டில்தான் ஜனாதிபதியும் உள்ளார்.

அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட கடற்படை அதிகாரிகள் மூவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை ஜனாதிபதி எதிர்த்துள்ளமையானது இப்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இராணுவத்தினரின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் எவரும் செயற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பது குற்றமல்ல.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றை சிவில் அமைப்புகள் சில விமர்சிக்கின்றமைதான் இங்கு வியப்புக்குரிய விடயம். ஜனாதிபதி ஒட்டுமொத்த ஊழல்வாதிகளையும் பாதுகாப்பதற்கு முயற்சி செய்வது போல் இவர்கள் கூறுகின்றனர்.

யாரைக் கைதுசெய்ய வேண்டும் என்ற பெயர்ப்பட்டியலை இந்த அமைப்புகள் சில தான் எம்மிடம் கொண்டு வந்து தருகின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு ஜனாதிபதியை விமர்ச்சிக்கும் தகுதி கிடையாது - என்றார். (த)

# கோப் குழு அறிக்கையை தாமதப்படுத்துவதற்கு சதி

கொழும்பு, ஒக். 23

மத்திய வங்கியின் முறிகள் தொடர்பில் கோப் குழு மேற்கொண்டுள்ள விசாரணை அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதனை தாமதப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி முறிகள் தொடர்பிலான கோப் குழு அறிக்கை நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் முன்வைக் கப்படவுள்ளது.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் குற்றச்சாட்டுக்களிலிருந்து நிரபராதியெனின், இந்த விவாதத்தை நடத்துவதற்கு ஒத்துழைப்பதன் ஊடாக அதனை நிரூபிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (த)

## விற்பனைக்கு

NP - PP- XXXX இலக்கமுடைய TATA
பட்டா விற்பனைக் குண்டு.
தொடர்பு:- 077 157 7424

## தேவை

Bag தொழிற்சாலைக்கு ஜுகி மெசினில் தைக்கக்கூடிய பெண்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 329 0663, 071 766 6788

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் மூன்றுபேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு சமையல் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

T.P : 077 3611282

(C 25991)(16,17,19)

## IPS

(i) இலவச கணினி வகுப்புக்கள்
O/L, A/L மாணவர்கள்,உத்தியோகத்தர்கள், கணினி பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கானது
**Ms-office + Internet Technology**

(ii) சிறுவர் கணினி வகுப்புக்கள்
ICT வகுப்புக்கள் தரம் 6-9 வரையானது.

ஆரம்பம்: 05,06-11-2016 சனி, ஞாயிறு

IPS கல்வி நிறுவனம்
தொடர்புகளுக்கு: 076 6852529
email : ipsstudies@gmail.com
திருநெல்வேலி.
(J 5610) (16,17,19)

## தேவை

லவ் பேட்ஸ், ஜாவா, பிங்பர்ஸ், புறாவகைகள், பொமினேறியன் நாய் உட்பட நல்லினநாய் வகைகள், முயல், சில்க்கி,பென்ரன், கினிக்குஞ்சு, வான் கோழிக்குஞ்சு, மணித் தாரா, என்பன வீட்டிற்கு வந்து கொள்வனவு செய்யப்படும்.

077 547 0701

## “B” வகை சிறுநீரகம் தேவை

41 வயதுடைய ஆணொருவருக்கு அதே வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும்.

077 978 3528

## வேலையாள்கள் தேவை

கே.கே.எஸ் வீதி, உப்புமடம் சந்தியில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி இயக்குநர்களாக பணிபுரிவதற்கு உயர் தரம் படித்த கணினி அறிவு ஆங் கிலம் ஓரளவு பேசத் தெரிந்த இரு பெண் பிள் ளைகள் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 545 2892

## காணி விற்பனைக்கு

புத்தூர் தெற்கு நவக்கிரி இராச வீதியில் (அரசடி சங்கத்திற்கு அருகில்) அமைந்துள்ள 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 1605767

(C 25989)(16,17,19)



## SUPER BALL சுபர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 566
சீட்டிழுப்பு திகதி 2016.10.22
சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
30 52 54 58 E

சுப்பர் ஜக்பொட்
ரூ.56,525,540/=

Web: www.dlb.lk
ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2016.10.24 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகாது

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2811 திகதி 22.10.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
14 29 43 46 Y
போனஸ் இல. புதன்கிழமை ஜக்பொட்
05
ரூ. 32,724,425/-

Web: www.dlb.lk
ஜாதா நிற டிக்கட்டுக்கள் 26.10.2016 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகாது.

## சளியில் இருந்து விடுதலை

பல காலமாக பலவிதமான மருந்துகள் (Antibiotics) சாப்பிட்டும் சுகமாகாத சளி, இருமல் Astham குறட்டை, நித்திரையில் மூச்சடைப்பு இவைக்கான சிறப்பு, சித்த ஆயுர்வேத Acu சிகிச்சை கரு உற முடியாத பலவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் உண்டு.

Dr.R.Sivagurunathan.
No.54,33th lane, Wellawatte.
(C 22835)(14,17,18)

077 730 1669 யாழிலும் வைத்தியரை சந்திக்கலாம்.

## கற்றால் மட்டும் போதுமா ? கற்றதுக்கேற்ற வேலை வேண்டாமா ?

**உங்கள் மனம் விரும்பும் தனியார் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள இன்றே தொடர்பு கொள்ளவும்.**

WINSTAR JOB BANK

**இவ்வருடம் எம்மூலமாக 100 இற்கும் அதிகமானோர் விரும்பும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளனர்.**

* ACCOUNTANT * NURSE * CALL CENTRE EXECUTIVE
*EXCECUTIVES * CASHIER * RECEPTIONIST
*DRIVER * CARPENTERS *PHARMACIST
*RECOVERY OFFICERS * SALES BOY/GIRLS
*SOFTWARE MARKETING

நீங்கள் பல காலம் தேடிக்கிடைக்காத வேலைவாய்ப்பினை சில காலங்களில் தேடிப் பெற்றுக்கொள்ள புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக்கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.
(பதிவுக்கட்டணம் உண்டு)

WINSTAR JOB BANK
# 106 தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021 3202789
076 5450539

fb : winstarjobbank, web : www.winstarjaffna.com

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் பிரபல்யம்மிக்க புடைவையகத்துக்கு பணியாளர்கள் (ஆண் / பெண்) உடன்தேவை.
* EPF, ETF உடன் திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.
* புடைவை விற்பனையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும். 077 0185471

## கணக்கு இலிகிதர் தேவை

நெல்லியடியில் இயங்கும் லங்கா ரெயில்ஸ்(மாபிள்) விற்பனை நிலையத்திற்கு கணக்கு இலிகிதர் தேவை. கணக்கியல் அறிவுடையவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 857 7243
(C 22835)(14,17,18)

## கடை இடமாற்றம்

164. ஸ்ரான்லி வீதியில் இயங்கும் எங்கள் ஸ்தாபனமான ஹரிணி காட்வெயர் அன் மோட்டோர்ஸ் 21.10.2016 ஆம் திகதியிலிருந்து இல.281. கே.கே.எஸ். வீதியில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(J 5554) (14,17,18) உரிமையாளர் - ஸ்ரீபாதன்

தொடர்பு: 021 222 2850

## தேவை

இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஜாம், பிஸ்கட், சொக்லட், கையுறை, பாஸ்டா, சொசேஜஸ் தயாரிப்பு தொழிற்சாலைகளில் தயாரிப்பு / லேபல்/ பொதியிடல் போன்ற பிரிவுகளுக்கும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், மேற்பார்வையா ளர்கள்,QC, கனரக, மென்ரக வாகன சாரதிகள், Hotel களில் Room Boy, Kitchen Helper,Cook,Steward அதே போன்று விமான நிலையம் துறைமுக தனியார் துறைகளுக்கும் வேலையாள்கள் தேவை. வயது 18-55 வரை, ஆண், பெண் சேர்த்துக் கொள்ளப்படுவர். சம்பளம் 15, 000/= - 35 ,000/= வரை சிறந்த ஊதியமும் தொழில்டிப்படையில் உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
077 505 2239 No: 173,Palali Road, Kandarmadam Junction,Jaffna

## வேலைவாய்ப்பு

எமது கொழும்பில் இயங்கும் கேபிள் டி.வி உதிரிப்பாகம் மற்றும் டிஸ் அன்ரனா விற்பனை திருத்துதல் மற்றும் பொருத்துதல் செய்யும் நிறுவனத்துக்கு கொழும்பில் தங்கி வேலை செய்யக்கூடிய
* விற்பனையாளர் - Count ER Sale
* Electronic - Technicians
* டிஸ் அன்ரனா பொருத்துநர்
* உதவியாளர்

நிரந்தரமாக வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள / அனுபவ-மில்லாத வேலை பழக விருப்பமுள்ளோரும் தொடர்பு கொள்ளவும். EPF, ETF உடன் திறமைக்கு ஏற்ப சம்பளம், தங்குமிடம், உணவு வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

077 771 0785 - குமார்

## MAJESTIC CINEPLEX Jaffna

A CEYLON THEATRES CINEMA
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம்
10.00 a.m / 1.00 p.m / 4.00 p.m / 7.00 p.m
Fri/Sat 9.30 p.m





சில்வர்
10.15 a.m / 1.15 p.m / 4.15 p.m / 7.15 p.m
Fri/Sat 9.30 p.m





பிரொன்ஸ்
10.30 a.m / 1.30 p.m
4.30 p.m / 7.30 p.m
Fri/Sat 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712

facebook. CeylonTheatres
www.ceylontheatres.lk

## ST.CLAIR COLLEGE



## கனடாவில் உயர்கல்வி

கனடாவின் **St. Clair College** பிரதிநிதிகளின் நேரடி வருகை



இடம் : IIS City Campus
காலம் : 25/10/2016
நேரம் : காலை 9.00 மணி

அன்றைய தினம் நேர்முக தேர்வு இடம்பெற இருப்பதனால், ஆர்வமுள்ளவர்கள் அனைத்து ஆவணங்களுடனும் வருகை தந்து பிரதிநிதிகளை சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

071 777 5666 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

IIS CITY CAMPUS

**IIS CITY CAMPUS**
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8060 | 0214900900
www.iis.edu.lk
iis@iis.lk | info@iis.edu.lk

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### விற்பனைக்கு

பொம்மேரியன் இன 45நாள்களே ஆன நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன.

077 563 2007/ 021 222 0978

### காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 34 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் வழங்கப்படும்.

076 857 3798

### காணி விற்பனைக்கு

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், 14 ஆம் கட்டை காரைநகர் செல்லும் வழியில் சித்தன்கேணி சிவன் கோயிலுக்கும் வடக்கம்பரை அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட 14 ஆம் கட்டை யில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P : 077 5587153 (J 5511) (16,17,19)

### வீடு காணி விற்பனைக்குண்டு

யாழ்.அரியாலை, A.Vறோட்டில் தபாற்கட்டைச் சந்தியிலிருந்து 650m தொலைவில் 2வீடுகளுடன் கூடிய 4பக்க சுற்று மதிலுடைய 5பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (5281) (14,17,18)

தொடர்பு: 077 459 8412

### கடைக் கட்டடம் விற்பனைக்கு

116 அடி நீளம், 16அடி அகலம் கொண்ட 3 மாடிக் கட்டடம் இல.162, Stanley Road, Jaffna இல் விற்பனைக்குண்டு. தண்ணீர், Toilet வசதிகள் எல்லா மாடிகளிலும் உள்ளது.
(நேரடி தொடர்புக்கு மட்டும், முகவர் தேவையில்லை)

011 250 4788

### வீடு விற்பனைக்கு உண்டு

சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு. (J 5491) (16,17,19)

தொடர்பு: 077 7998386

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் செருக்கற்புலம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆதனம் செருக்கற்புலம் நிலப்பரப்பு 8 குளி 13.8 உம், கிணறும் விற்பனைக்கு உண்டு. (J 5531) (16,17,19)

077 1177013, 077 3273125

### காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்கரை வீதி பொலிகண்டியில் கடற்கரைக்கு முன்பாக 8 பரப்பு 14.60 குளி காணி உடைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம்.

தொடர்பு: 077 742 0240

### விற்பனைக்கு

நல்லின தென்னங்கன்று, செவிழி தென்னை, கட்டை இனம்(பெரிய இளநீர்),ஒட்டு மாங்கன்று, தேசி, தோடை, ஒட்டுப்பலா , ஈரப்பலா, கஜு, மாதுளை, 1Kg கொய்யா, பசன்புறூட், நெல்லி, யம்பு, முருங்கை, ரெட்லேடிப்பப்பாசி, வெற்றிலை, அம்பர்லா, கொடித்தேசி, கமுகு மற்றும் மலை வேம்பு, தேக்கு, சமண்டலை, சவுக்கு, சுந்தரவேம்பு, வேம்பு(ஊர்), மேலும் பல இன பூங்கன்றுகளும் பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு. இவைகள் அனைத்தும் எமது பண்ணையில் உற்பத்தியானவை.

நியூ லங்கா பாம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
077 612 9343

நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு,
பிள்ளையார் கோயிலுக்கு அருகில்.

### வீடு/ அறை வாடகைக்குத் தேவை

தனியார் வங்கியில் அதிகாரியாக பணிபுரியும் ஒருவருக்கு வீடு/ அறை யாழ் நகரை அண்மித்த பகுதியில் வாடகைக்குத் தேவை.

077 722 2262

### வேலையாள்கள் தேவை

மானிப்பாய் பிள்ளையார் சுப்பர் மார்க்கட்டிற்கு வேலையாள் தேவை.
காசாளர் - 2 (பெண்கள்)
(கணினி அறிவு, அனுபவம் அவசியம்),
சேல்ஸ் பெண்கள் (அனுபவம் விரும்பத்தக்கது)
ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
021 225 5148
(அ/25936)(7.19.20)

### தேவை

நாள் சம்பளத்திற்கு வேலை செய்யக்கூடிய பெயின்ரிங் வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை. (J 5601) (14,17,18)

077 213 2461/ 021 205 2080

### தேவை

கொழும்பிலுள்ள மொத்த வியாபார கடைக்கு ஆண்/ பெண் விற்பனையாளர்கள், உதவியாளர்கள் தேவை.

சிறந்த சம்பளத்துடன் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

111&113,Old Moor Street, Colombo - 12
011 244 4020/ 011 488 0626

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1982, பரணி நட்சத்திரம்,கிரகபாவம் 11, பிரான்ஸ் PR உள்ள மணமகனுக்குப் படித்த அழகிய மணமகள் தேவை.
(மணமகன் நவம்பரில் வரவுள்ளார்)

077 450 7446

### மணமகள்கள் தேவை

- 85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 14 பாவமுடைய பிரான்ஸ் PR உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
- 85 இல் பிறந்த 10 செவ்வாய் 13½ பாவமுடைய சுவிஸ் PR உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டது.)
- 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19½ பாவமுடைய லண்டன் PR (பிரஜா உரிமை) பெற்ற MSc IT மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 87 இல் பிறந்த 4 இல் சூரியன் செவ்வாய் 46¼ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு டாக்டர் விரிவுரையாளர் மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 40¼ பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 84 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 48 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற IT இஞ்சினியர் மணமகனுக்கு C.I.MA BBA மணமகள் தேவை.
- மேலும் செவ்வாய்க் குற்றமுள்ள சூரியன் செவ்வாயும் பாவம் குறைந்த சூரியன் செவ்வாய் ஜாதகமும் எம்மிடம் உள்ளன.

கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி,
முடமாவடி- 077 607 0862

# ஏனையவை

### தங்குமிட வசதி

மூன்று நேர உணவுடன் இந்திய முறைப்படியும் வைபவங்கள் மற்றும் மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

077 998 1896, 075 098 3921

### வேலை வாய்ப்பு

வெல்டிங் வேலைக்கு வெல்டர், பழகுநர் தேவை.

077 376 0594

### DANISH மொழி

டென்மார்க் நாட்டிற்கு போக உள்ளவர்கள் Danish மொழி கற்க வேண்டுமா ?
தொடர்புகளுக்கு -
071 3207957
(ஜே5536)(7.9.20)

### வேலைவாய்ப்பு

பாதுகாப்பு சேவை கம்பனிக்கு கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள, அனுபவமற்ற OIC/JSO/LSO உடன் தேவை. சம்பளம் 35000/= இற்கு மேல், உணவு சகாயவிலையில், தங்குமிடம் இலவசம். வயது 60 வரை. சிங்கள, ஆங்கில அறிவுள்ளோர்க்கு முன்னுரிமை.

Brown Berets Security, Rajahiriya.
071 244 6926 , 011 287 1280

### அமெரிக்க வீஸா லொத்தர்

BBS Netting மூலம் விண்ணப்பியுங்கள்

அமெரிக்காவில் நேர்மையாக குடியேறுங்கள் அரிய சந்தர்ப்பம். உடன் விண்ணப்பியுங்கள். 14வது வருட சேவை. எமது விண்ணப்பத்திற்கு ரூ15/- முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்.

தனியாள் - 475/-
குடும்பம் - 975/-
CALL - 0775811106

BBS Netting,
3/14 Pinwatta Road
Dehiwala.

விண்ணப்பித்த சான்றிதழ் தரப்படும். வெற்றி பெற்றால் உடன் அறிவிப்போம், வெற்றியாளர்க்கு வழிகாட்டல் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் விண்ணப்பம் பெற: உமா ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி (சிவன் கோவில் முன்பாக).

www.bbsnetting.com

### நீண்டகால வாடகைக்கு

புத்தம் புதிய Mitsubishi Double Cab வாகனம் நீண்டகால வாடகைக்குக் கொடுக்கப்படும்.

077 078 7111

### வாடகைக்கு

கிளிநொச்சி , இராமநாதபுரத்தில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 075 545 7159

### NEAT விற்பனை அதிகாரி

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி
அடிப்படைச் சம்பளம் + கொமிசன் ரூபா 50,000 இற்கு மேல். வாகன சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரத் துடன் தொடர்புகொள்ளவும். இலக்ரோனிக் தராசு/ கேஷ் ரெஜிஸ்டர்/ LED TV மற்றும் பல இலக்ரோனிக் பொருள்கள்)

நியூ வெயிங் ஸ்கேல்ஸ் (பிறைவேட்) லிமிட்
சிலாபம் வீதி, கொச்சிக்கடை.
072 215 5153

### கிளிநொச்சியில் ..... ஆடம்பர வீடு வாடகைக்குண்டு

கிளிநொச்சி நகரின் மத்தியில் A9 வீதி 6 அறைகள், குசினி, 2 வாகன கராச், வற்றாத குடிநீர்க்கிணறு போன்ற வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 077 6514 758

### வீடு, காணி விற்பனைக்கு

பம்பலப்பிட்டிய, ரம்யா வீதியில் காலி வீதிக்கு அருகில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
11.65 Perches

Gajan- 077 934 7222

### பணிப்பெண் தேவை

கொழும்பு 5 இல் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு பணிப் பெண் தேவை. வயது 30 - 50 வரை.
சம்பளம் 18,000 இற்கு மேல் தரப்படும்.

077 226 8825

### காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோயிலிலிருந்து உரும்பிராய்ப் பக்கமாக பலாலி வீதியில் கிழக்குப் பக்கமாக இரண்டாவது 20 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. பாதை பலாலி வீதியிலிருந்து காணிக்கு செல்ல முடியும்.

021 223 0456

### வாடகைக்கு

அரசடி வீதி, கந்தர்மடத்தில் பிரபல கல்லூரிக் கருகில் கடைகளும், படிக்கும், தொழில்புரியும் ஆண்களுக்கான இரு Sharing Rooms வாடகைக்குண்டு

076 617 9055

### தேவை

4 - 5 மாதங்கள் பணிபுரியக்கூடிய பெண் உதவியாளர் தேவை. பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

Kaushav@gmail.com

### தேவை

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி, மன்னார், புத்தளம் போன்ற பிரதேசத்தவர்களில் எமது காரியாலயத்திற்கு எழுதுவினைஞர்கள் தேவை. (Female) பெண்கள் தேவை. சம்பளம் 20,000/= + பயிற்சியின் பின் அதிகமாகப் பெறலாம். வயது 31 வரை. திருமணமாகாதவர்கள் விரும்பத்தக்கது. (C 22824) (14,17,18)

077 600 0507 ,
077 799 9159

### வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் , சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் இரண்டு மாடி வீடு வாடகைக்கு உண்டு. இரண்டு குடும்பங்கள்,அலுவலகத்திற்கு ஏற்றது. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

077 656 9929, 077 505 3654

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## ரண் கெகுழு மாணவர் கௌரவிப்பு

சாவகச்சேரி, ஒக்.23

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற, சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் 'ரண் கெகுழு' கணக்கு வைத்துள்ள மாணவர்களை வங்கிக் கிளையினர் கௌரவிக்கவுள்ளனர்.

இந்தக் கணக்கு வைத்துள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு வங்கிக் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ந-9)

COLOMBO HIGHER EDUCATION

Study in Europe
Schengen Visa
Latvia, Lithuania, Sweden, Poland, German, Ect...

UK, USA, New Zealand, Australia, France & Italy

இம்முறை எமது நிறுவனத்தில் விசா பெற்ற சில மாணவர்கள்

* எல்லா விதமான சேவை கட்டணமும் விசாவிற்கு பின்னரே
* எந்தவித முற்பணமும் இல்லை ✈ IELTS தேவையில்லை (Schengen Visa)
* நேரடியாக ஆவணங்களுடன் வரவும் ✈ குடும்பத்துடன் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு
CHEC
COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
No. 40 2/2, Galle Road, Colombo 06.
077 024 25 55 / 077 736 12 30 / 011 754 9600
Email : info@checonline.com web : www.checonline.com
FLEX Graphic

ஆர். தாசா மலர்ச்சாலை

நெளுக்குளம் சந்தி, இல. 243, கூமாங்குளம், வவுனியா. தண்டிகை, பான்ட் வாத்தியம், மேளம், வாகனப்பாடை போன்ற மரணச் சடங்கு சேவைகள் 24 மணி நேரமும் வழங்கப்படும்.

076 707 8031, 077 068 8031

பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

Qualification
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

Benefits
- Basic Salary
  *Marketing Executive - 15,000/= +++
  *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com
Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

இருமலுக்கு சளிக்கு அனைத்திற்கும்...

பீம்

முப்பது வருடகால தரம் மற்றும் குணாம்சத்துடன் தினமும் பாதுகாத்து இருமலை இல்லாதொழித்து சுகமாக்கும் பக்கவிளைவுகளற்ற ஒரே பானம்.

பீம் ஆடாதோடை பனங்கற்கண்டு பாணியின்

ஏக விநியோகஸ்தர்கள்: இராசையா அன் சன்ஸ்
209, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். A9 வீதி, கிளிநொச்சி. 202, பஜார் வீதி, வவுனியா.
மற்றும் பார்மஸிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வெல்லுங்கள்
எமது தயாரிப்புக்களில் 5இன் பெயர்களைக் குறிப்பிட்டு தபால் அட்டையில் 06.11.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தங்கள் விபரங்களுடன்
Beam Hela Osu Lanka (Pvt)Ltd,
456, Awissawella Road, Miriswatta,
Puwakpitiya.
என்னும் முகவரிக்கு அனுப்பி எமது பரிசுப்பொதியை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

100% Natural Fresh
பீம் ஹெல ஓசு லங்கா (தனியார்) கம்பனி

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

ROYALCERT
DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC · UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

01, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

30, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

IELTS
சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை
05, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

KIDS' Class Grade 1-10
சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்
சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது
19, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy
Contact (Jaffna Branch) : 033 33 40 600
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

# லசந்தவின் படுகொலை;
# புலனாய்வு அதிகாரியின் கடிதத்தில் சந்தேகம்

கொழும்பு, ஒக். 23
ஊடகவியலாளர் லசந்தவை தாமே சுட்டுக் கொன்றதாகக் கடிதம் எழுதி வைத்து விட்டு உயிரை மாய்த்துக் கொண்ட தாகக் கூறப்படும் இராணுவப் புலனாய்வு அதிகாரி, லசந்தவின் கொலை நடந்த நேரத்தில் அவரது வீட்டிலேயே இருந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
சார்ஜன்ட் மேஜர் இலந்தரிகே எதிரிசிங்க ஜெயமான்ன என்ற முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி தாமே லசந்த விக்கிரமதுங்கவைக் கொலை செய்ததாகவும், இந்தக் கொலை தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது நண்பரான இராணுவப் புலனாய்வு அதிகாரி சார்ஜன்ட் மேஜர் மலிந்த உடலகம அப்பாவி என்றும் அவரை விடுவிக்குமாறும் கடிதம் எழுதி வைத்துவிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.
இவரது தொலைபேசிப் பதிவுகளை ஆராய்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி காலை லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை இடம்பெற்ற நேரத்தில், அவர் கேகாலையில் உள்ள தனது வீட்டிலேயே இருந்ததாக கண்டறிந்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.
உயிரிழந்த புலனாய்வு அதிகாரி எழுதி வைத்த கடிதம் உண்மையானதா - அவரது உயிரிழப்புக்குப் பின்னால் வேறு யாரேனும் இருந்தார்களா என்று இரண்டு சிறப்பு புலனாய்வுக் குழுக்கள் விசாரணையில் ஈடுபட்டுள்ளன. (த-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விக்னேஸ்வரி (வேவி) சண்முகநாதன்



தோற்றம்:-06.06.1958
மறைவு :-21.10.2016

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 13 இராமநாதன் தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி (வேவி) சண்முகநாதன் 21.10.2016 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சண்முகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அ.ப.பாலசுப்பிரமணியம் மற்றும் தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சுகிர்தா, லகிர்தா, காலஞ்சென்ற மயூர்தா மற்றும் நிஷாந்தி, கஜரூபன், நேசரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனதாஸ், சிவசூரியதாஸ், கிருஷ்ணதாஸ், குமரதாஸ், துளசிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜேந்திரன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமியும், வினோசன், விதுசா, சர்மிகா, சுவிட்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கணேசமூர்த்தி, சோமசுந்தரிபிள்ளை, காலஞ்சென்ற நவமணி மற்றும் கமலாம்பிகை, சோமசுந்தரம், சிவராணி, யோகமலர், யசோதினி, நகுலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனி யும், மாங்கயற்கரசி, காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், கணபதிப்பிள்ளை மற்றும் தர்மபாலன், சந்திராதேவி ஆகியோரின் அன்பு சகலியும், தேவதாஸ், பரமேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளையில் அமைந்துள்ள ஜெயரட்ன மலர்ச்சாலையில் நேற்று (22.10.2016) சனிக்கிழமை தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் தொடர்மாடி,
கொழும்பு - 13

தகவல்:
ந.சண்முகநாதன்
(கணவர்).

(J/5595)
(11,18,21)



### கிருஸ்ணசாமி ஸ்ரீஸ்கந்தராஜா
(ஸ்ரீதரன் - நாதஸ்வர வித்துவான்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு கெக்கிலிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீதரன்) 21.10.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஜெகதாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் தங்கராசா (செல்வன்) மங்கையற்கரசி (இராசாத்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் முருகதாஸ் (ஆஸ்திரேலியா - தவில் வித்துவான்), கமலதாஸ், இராஜேஸ்வரி, ராதை, பானுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நந்தகோபன் (பிரான்ஸ்), மதுராங்கி, விஷ்னுவர்த்தன் (ஜேர்மனி), ராகவர்த்தனி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தன், நாகதீபன் (நாதஸ்வர வித்துவான்), அனுசியா ஆகியோரின் அன்புமாமனும் தேவர்மா, பிரவஷ்மன் ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (24.10.2016) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு
கெக்கிலிப்பாய் வீதி, இணுவில்.
077 3725971

தகவல்
குடும்பத்தினர்.

(ஜே5629)(17,19,20)

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
02
07
1931

மறைவு
20
10
2016

### சதாசிவம் சிவானந்தன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவானந்தன் 20.10.2016 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் குலராணியின் அன்புக் கணவரும் ஸ்ரீதேவி, காண்டீபன், சியாமளா , சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னுலட்சுமி, இராஜலட்சுமி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2016) திங்கட்கிழமை காலையில் Chapel Ridge Toronto கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனடா

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(ஜே/5601)(12.18)

### இராமநாதன் பத்மநாதன்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

பிறப்பு
26.06.1939

இறப்பு
22.10.2016



கட்டுடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் பத்மநாதன் நேற்று (22.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாவதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பத்மாவதி (இளைப்பாறிய அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி) மற்றும் ஜெயமணி (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாம் ஜெயதேவா, சீதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனுஷா (பதவிநிலை உத்தியோகத்தர், வவுனியா வளாகம் யாழ் பல்கலைக் கழகம்), நிர்மலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலதாஸ் (உதவி நிதியாளர் வவுனியா வளாகம் யாழ் பல்கலைக் கழகம்), சுகுணபவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுர்ஷன், மயூரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் கட்டுடையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.
021 225 6888

# மாணவர் கொலை பொலிஸ் அதிகார அடாவடியின் உச்சம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 23
நேற்றுமுன்தினம் இரவு நேரத்தில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது பொலிஸ் அதிகார அடாவடித்தனத்தின் உச்சமாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.
இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்தது.
அந்தக் கட்சி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தற்செயலானதா அல்லது திட்டமிட்டதா என்பது மூடி மறைப்புக்கள் இன்றி முழுமையான விசார ணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
அமைதியாகவும் சமாதானமாகவும் இருந்து வரும் மக்கள் மீதும் மாண வர்கள் மீதும் எங்கிருந்து பலாத்காரம் பிரயோகிக்கப்படுகின்றது என்பதற்கும் இந்தச் சம்பவம் ஒரு உதாரணமாகியுள்ளது - என்றுள்ளது. (ற-4)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி (பள்ளியக்கா) நவரெட்ணலிங்கம்



மண்ணில் 23. 04. 1934
விண்ணில் 21. 10. 2016

யாழ். வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நவரெட்ணலிங்கம் 21.10.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவைச் சேர்ந்த நல்லதம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், புங்குடுதீவைச் சேர்ந்த நவரெட்ணலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், விவேகானந்தன் (விவே - லண்டன்), விஜயா (விஜி - கனடா), ராஜவினோதா (வினோ - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, நாகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், நீலாவதி, சியாமளா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவராணி, குகநேசன், வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சுப்பிரமணியம், இலிங்கப்பிள்ளை மற்றும் சிவானந்தன், சந்திராம்பாள், நகுலேசபிள்ளை, கருணைநாதன், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், செல்லம்மா, இராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மங்கையற்கரசி அவர்களின் அன்புச் சகலியும், சாய், சாய்நாத், சஞ்ஜயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2016) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில்

தகவல்:
திருமதி புவனேஸ்வரி,
இலிங்கப்பிள்ளை

தொடர்புகளுக்கு:
நவரெட்ணலிங்கம் (கணவர் -கனடா- + 164 744 84873)
விவேகானந்தன் (விவே - மகன் - பிரித்தானியா- + 442 0840 69334
விஜி குகன் (மகள் -கனடா- +164 7226 2629
வினோ வசந்தன் (மகள் -கனடா- + 164 795 53381

(ஜே.5606)(13.18)

# போதைக்கு எதிரான போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## உள சமூக முகாமைத்துவ நிறுவன தலைவர் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஒக்.23

கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிரானமாபெரும்கையெழுத்துப் போராட்டத்துக்கு இன, மத, அரசியல், பால்நிலை பாகுபாடுகளை மறந்து அனைவரும் ஆதரவு தரவேண்டும்.

இவ்வாறு உளசமூகமுகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் தவராசா தர்ஸன் வேண்டுகோள் விடுத்தார்.

உள சமூக முகாமைத்துவ நிறுவனத்தால் கிளிநொச்சி சந்தைக்கு எதிரில் நவம்பர் 19ஆம் திகதி மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப. 12.30 மணிவரை போதைப்பொருளற்ற எமது கிராமம் எனும் தொனிப் பொருளிலான கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் ஆதரவு கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது–

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையைக்கட்டுப்படுத்தபொலிஸாரும் அரச மற்றும் அரசசார் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். எனினும் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது என்பது மிக சிரமமான காரியமாகவுள்ளது. போர் முடிவடைந்து ஏழு ஆண்டுக்கள் கழிந்த நிலையிலும் மக்கள் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் போதை காரணமாக விருத்தியடையவில்லை என்று கூறப்படுகிறது. இலகுவாக சம்பாதிக்கக்கூடிய வழிகளைத்தேடி குறுக்குவழிகளில் ஈடுபடும் ஒரு சில சமூக விரோதிகளால் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தின் இருப்புகேள்விக்குள்ளாகின்றது. போதைப்பொருள் கடத்தல் மற்றும் உற்பத்தி செய்பவர்களை குற்றவாளிகளாக கைது செய்தாலும் பொலிஸாராலோ, நீதி துறையாலோ சட்டத்துக்கு அப்பால் எதுவும் செய்ய முடியாது. கைது என்பதும் சிறை என்பதும் பழகிப்போனவர்கள் மீண்டும் குற்றங்களை செய்யவே முனைகின்றனர். வெறும் தண்டனைகளாலோ அல்லது ஓரிரு நாள்கள் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களினாலோ இவற்றைக் கட்டுப்படுத்த முடியாது.

வடமாகாணசபை இந்த விடயத்தில் நேரடியாக கவனம் செலுத்தி 2017ஆம் ஆண்டு கிராமங்கள் தோறும் போதைப் பொருளற்ற எமது கிராமங்களை உருவாக்க சிறப்புதந்திரோபாய பொறிமுறைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியேகவனவீர்ப்புக்கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இன, மத, அரசியல், பால்நிலை பாகுபாடுகளை மறந்து எமது தமிழ் சமூகத்தின் வளர்ச்சியில் பற்றுக்கொண்ட அனைத்து சமூக செயற்பாட்டு அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், மாணவர்கள், கிராமஅபிவிருத்திச்சங்கங்கள்,மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், ஆட்டோசங்கங்கள், மதத்தலைவர்கள், இளைஞர் கழகங்கள் என அனைவரும் அணி திரண்டு ஆதரவு நல்க வேண்டும்.

மாகாண மற்றும் மத்திய அரசுகளுக்கு அழுத்தங்களை வழங்கி சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாகவே போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியும் என்பதனை வலியுறுத்துவதற்கும், எதிர் வரும் திட்ட பாதீட்டில் போதைப் பொருள்பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்த நிதி ஒதுக்கீட்டை இரு அரசுகளும் செய்வதற்கான உந்துதலை வழங்கவே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.– என்றுள்ளது. (ற-21)

# பனை சார் உற்பத்திகளின் மூலம் பெண்கள் வாழ்வாதாரம் உயர்வு

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு, கிழக்கில் 469 பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட குடும்பங்கள் பனம் சார்ந்த உற்பத்திப் பொருள்கள் தயாரித்தலில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்கின்றனர்.

இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவித்தார்.

ஞாலத்தில் புதுமைபுகும் தாலம் எனும் தொனிப் பொருளில் பனைஅபிவிருத்திச் சபையால் பனை சார் உற்பத்திகள் மற்றும் புதியதொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும், ஆய்வரங்கம் மற்றும் விற்பனையும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறுகின்றது. இந்தக் கண்காட்சியானது மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது–

2016 ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சால் பனை சார்ந்த முயற்சிகளுக்கு அதிகூடிய நிதியாக 160 மில்லியன் ரூபாவும், திக்கம் வடிசாலையை மீளக் கட்டியெழுப்புவதற்கு 100 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 260 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இருந்து மீள் குடியேற்ற அமைச்சினால் பனை சார்ந்த உற்பத்திகளை பெருக்குவது தொடர்பாக பல கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பனம் கைப்பணிக் கிராமங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும்பொருள்கள்சிறுசுவடுகள் கட்டமைப்பின் மூலம் உள்வாங்கப்பட்டு அவர்களின் பொருள்களை பனை அபிவிருத்தி சபை வாங்கும் முறை, பனம் சார் தும்பு உற்பத்திசெய்யப்படுதல், இதற்குரிய உற்பத்தி உபகரணங்கள் வழங்கல், பனைசார் உற்பத்திகளில் நினைவுச் சின்னங்கள், பரிசுச் சின்னங்கள் தயாரித்தல், போன்ற கருத்திட்டங்கள் முக்கியமாக கருதப்பட்டுள்ளன.

இந்தக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தக் கருத்திட்டங்களில் பனம் கைப்பணிப் பயிற்சி மற்றும் பனை ஆராய்ச்சி நிலையம் என்பனதான் தற்போது செயற்படுத்தப்படுகின்றன. ஏனைய திட்டங்களும் விரைவுபடுத்தி செயற்படுத்த வேண்டும்.– என்றார்.

கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில், யாழ், கிளிநொச்சிநாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன், பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சிவசங்கர், பனை அபிவிருத்தி சபை பொது முகாமையாளர் லோகநாதன், கைத் தொழில் அபிவிருத்தி சபையின்பொதுமுகாமையாளர்சிவகெங்கா மற்றும் பனை அபிவிருத்தி சபையின் ஒவ்வொரு திட்ட முகாமையாளர்கள், பணியாளர்கள், ஊழியர்கள், பனம்சார் உற்பத்தியாளர்கள்எனப்பலர்கலந்து கொண்டனர். (ற-ரி)

# பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ வாரம் நாளை

யாழ்ப்பாணம், ஒக.23

மத்திய சுற்றாடல் அதிகார சபை நாடளாவிய ரீதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் இலத்திரனியல் மின்சாதன கழிவு முகாமைத்துவ வாரமாக நாளை 24 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரிடமிருந்தும் பொலித்தீன் பிளாஸ்ரிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிப்பதற்கான நடவடிக்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வடமாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடத்தப்படவுள்ளது.

சேகரித்து வைக்கப்பட்டுள்ள கழிவுகளை நல்லூர் கிட்டுப் பூங்காவில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள சேகரிப்பு நிலையத்தில் நாளை 24 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை ஒப்படைக்கலாம் என மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-ரி3)

## மனிதமும் பனைமரமும் பனை அபிவிருத்திச் சபையும் நீடுழி காலம் வாழ கரம் கூப்பிய வாழ்த்துக்கள்




பனைமாது ஏடகம்
பாரியத்திரம் பார்பதம்
புற்பதி புல்லுதியம்
போந்து போந்தை
நீலம் துருமேகம்
தருமவிசாரன் தாளி
தாலம் பூலோக கற்பகம்
காமபுரம் கரும்புளம்
பஞ்சம்போக்கி கற்பகதருவென
சொரியும் பனை விருட்சமும்
பனை அபிவிருத்திச் சபையும்
மனிதமும் பார்போற்ற வாழ்ந்திடவே
கணபதியாம் கற்பகனை கற்பகவல்லியை
கரம்கூப்பி கவிபாடி வணங்கி
நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றேன்
அன்பே சிவம் அன்பே சிவம் அன்பே சிவம்

சாந்தி! சாந்தி! சாந்தி!

– நாகலிங்கம் சற்குணநாதன்

## பனைமரம் பேசுகிறது!

என்பெயர் பனை மரம் என்பார்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்களில் என்னைப்பற்றி இருக்கும் வேறு பெயர்களை சொல்கிறேன்.

எனக்கு ஓடகம், தாலம், கரும்புறம், காமம், பெண்ணை, போந்து, புற்பதி, புற்றாளி, தாளி, தருவிராகன் என்று பல பெயர்கள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் எனது தாவர பெயர் (Boassus Flabellifer) எனக்கு உங்கள் டாஸ்மாக் சரக்கு போல் இல்லாமல் நிறைய மருத்துவ குணங்கள் இருக்கின்றன. அதனால் என்னை தமிழர்கள் கற்பக விருட்சம் என்றார்கள். கூடவே எனது பதநீருக்கு பத்திரகாளியம்மன் அமுதம் என்றார்கள். கடுமையான வெயில் காலத்தில் நான் காய்ந்து போக கூடாது என்பதற்காக பானையில் தண்ணீர் சுமந்து என்னை காப்பாற்றினார்கள் தமிழர்கள்.

திருவள்ளுவருக்கு எழுத ஓலை தொடங்கி தமிழ்மக்களுக்கு கல்கண்டு கருப்பட்டி கட்டில் கூளகு வீடு வேய தட்டி என்று எல்லாமும் நான்தான். வான்நோக்கி உயர்ந்து சென்று மழையை வரவழைக்கும் ஆற்றல் எனக்குண்டு. இப்போது ஓசோன் படலம் ஓட்டை விழுந்து விட்டது. என்கிறார்களே... என்னை நீங்கள் காப்பாற்றினால் ஓசோன் படலத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை நான் பார்த்துக் கொள்வேன். இப்போது கிடைக்கும் பிரண்டி, விஸ்கி, ரம்கள் எல்லாம் தமிழர்களின் குடலில் புற்றுநோயையும் புண்ணையும் வரவழைக்கிறது. ஆனால் எனது பனஞ்சாற்றால் உடலுக்கு நல்லது கிடைக்கும். பனங்கள் உண்டால் எப்படி போதை கிடைக்கும் என்று என்னைப் பற்றி தெரிந்த சித்தர்கள் எப்படி எழுதி வைத்திருக்கிறார்கள் தெரியுமா?

பனஞ்சாறு பனங்கள் அல்லது பதநீர் அருந்த உடலின் சக்தி அதிகரிக்கும் சிறுநீர் பெருகும் ஆரோக்கியத்தைத் தரும், மலச்சிக்கல் தீரும் மேக வெட்டை, பெருங்கிரந்தி நோய்க்கு நல்லது. பனஞ்சாற்றை தேமல் உள்ள இடத்தில் தடவி வந்தால் தேமல் குணமாகும்.

உடலின் உட்சூடு தணியும். வெயில் காலத்தில் பதநீரைச் சாப்பிட கபம். நாள்பட்ட இருமல், குன்மம், தொண்டை நோய், தோல் நோய்கள் குணமாகும். சோகை தீரும்.

அம்மைநோயால் ஏற்பட்ட வெப்பம் தீரும். இப்படி ஏராளமாக சொல்லியிருக்கிறார்கள்.

பனங்கள்ளை உண்டால் போதையும் மயக்கமும் உண்டாகும். நடைதளரும் மந்தம் உண்டாகும். மதியை மயக்கும் (இதெல்லாம் எனக்கு இருக்கும் கெட்ட குணங்கள் தான். நான் இல்லையென்று சொல்லவில்லை) ஆனால் கள்ளச் சாராயத்தைவிட 48 சதவீதம் ஆல்கஹோல் கலந்த மதுசாரங்களை விடவா கெடுதல் செய்து விடப்போகிறேன்.

– பா.சுதாகரன்.

ஊடக அனுசரணை:

# பல்கலை மாணவர் மீது சூடு நடத்தியதை ஏற்கமுடியாது

*வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்*

யாழ்ப்பாணம், ஒக். 23

அவசர காலச் சட்டம் நடைமுறையில் இல்லாத சந்தர்ப்பத்தில், சுடுவதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. பல்கலைக் கழக மாணவர் மீது துப் பாக்கிச் சூடு நடத்தியமை தவறு. இது கண்டனத்திற்குரியது. இவ்வாறு வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், மாணவர் ஒருவர் உயிரிழந்தார் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது-

பொலிஸாருக்கு சுடுவதற்கான அதிகாரத்தை யார் வழங்கினார்கள். அவர்கள் தமது தற் பாதுகாப்புக்கு மாத்திரமே சுட முடியும்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள குற்றங்களைப் பொலிஸார் கட்டுப்படுத்த வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனால் பொலிஸார் தமது வரம்பை மீற முடியாது. பல்கலைக் கழக மாணவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை வரம்பு மீறியசெயல். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (ற-5)

# துரத்திப் பிடிக்க முடியாவிட்டால் எதற்காக நவீன மோட்டார் சைக்கிள்?

## அமைச்சர் மனோ கணேசன் சீற்றம்



கொழும்பு, ஒக்.23

துரத்திப் பிடிக்க முடியாவிட்டால் ஆயிரம் சீசீ மோட்டார்சைக்கிள் எதற்கு? முழந்தாளுக்கு கீழே சுடத் தெரியாவிட்டால் பொலிஸ் பயிற்சி எதற்கு?. குற்றம் இழைத்தோர் மீது கடும் நடவடிக்கைகள் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு எடுக்க வேண்டும். இவ்வாறு கடும் கண்டனம் வெளியிட்டார் அமைச்சர் மனோ கணேசன்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழ மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உயிரிழப்பு கொலைகள் எனக் கருத வேண்டிய சாட்சியங்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. பொலிஸ் காவலரணில் நிறுத்தாமல் செல்வோரைத் துரத்தி பிடிக்கவே பொலிஸாருக்கு அதி நவீன 1000 சீசீ மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. காவலரணில் நிற்காமல் வேகமாக போனவர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்துகொண்டு போனார்கள் என்ற தகவல் இல்லை. பின் னர் ஏன் சுட வேண்டும் என தெரியவில்லை. அவர்களைத் துரத்திச் சென்று வழி மறித்துப் பிடிக்க வேண்டும். அப்படியே சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் முதலில் ஆகாயத்தை நோக்கியும், பின்னர் முழந்தாளுக்கு கீழேயும் சுட வேண்டும் என்ற விதிகள் சிறு குழந்தைக்கும் தெரியும். இவை பயிற்சி பெற்ற பொலிஸாருக்குத் தெரியவில்லை. சில வாரங்களுக்கு முன் மலையகத்தில் புசல்லாவையில் ஓர் இளைஞர் பொலிஸ் காவலில் இருந்தபோது மரணமடைந்தார். இப்போது யாழ்ப்பாணத்தில் இரு இறப்புகள் நிகழ்ந்துள்ளன. இலங்கை வந்திருந்த ஐ.நா. சபையின் சிறுபான்மை விவகார அறிக்கையாளர் ரீடா ஐக் இங்கே இருக்கும்போது இந்த சம்பவம் நிகழ்ந்திருந்தால் இன்னமும் நிலமை கேவலமாக இருந்து இருக்கும்.

எங்களுக்கு இராணுவம் வேண்டாம். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் சிவில் பொலிஸ் எங்கள் நண்பர்கள் என்று இன்று கூறத் தொடங்கி இருக்கும் யாழ்ப்பாணத்து மக்களை பொலிஸ் மீது அவநம்பிக்கை கொள்ள வைக்கும் சம்பவங்கள் இவை. பொலிஸ் துறை தொடர்பில் நம்பிக்கைகளை ஏற்படுத்த குற்றம் இழைத்தோர் மீது கடும் நடவடிக்கைகளை சுயாதீனபொலிஸ் ஆணைக்குழு எடுக்க வேண்டும்.- என்றார். (ற-4)

# மாணவர் உயிரைப் பறித்தவர்கள் பொலிஸில் இருக்க தகுதியற்றோர்

## அங்கஜன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் இருவரின் உயிரை எந்த சலனமும் இன்றிப் பறித்தவர்கள் பொலிஸில் இருக்கத் தகுதியற்றவர்கள். அவர்களது இந்த கொடூரச் செயலுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும். நான் அரசியல்வாதியாக அல்லாமல் யாழ்ப்பாண பிரசை என்ற ரீதியில் இந்த விடயத்தில் அதிக கவனத்துடன் ஈடுபடுவேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஓர் இளைஞனின் பெறுமதியை நான் நன்கு அறிவேன். பொலிஸாரின் அசமந்தப் போக்கால் இரு இளைஞர்களை இழந்து தவிக்கின்றோம். வாள் வெட்டு வன்முறையுடன் சம்பந்தப்பட்டவர்களை பிடிப்பதற்காக இன்னொரு வன்முறையை அப்பாவி இளைஞர் மீது பொலிஸார் பிரயோகித் தது மன்னிக்க முடியாத குற்றமே. அவசரகால சட்டம் நடைமுறையில் இருந்தபோதுகூட இவ்வளவுக்கு கொடுமைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதில்லை .

யாழ். கல்விச் சமூகத்தின் மீது எந்த ஓர் அதிகாரமும் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்க முடியாது. 5 பொலிஸாருக்குக் கொடுக்கும் அதிக பட்சத் தண்டனைகள் எதிர்காலத்தில் இளைஞர்கள் மீது அதிகாரத்தை திணிக்க முற்படுவோருக்குப் பாடமாக அமைய வேண்டும்.

இது தொடர்பில் நான் கடும் அழுத்தம் ஒன்றை ஜனாதிபதிக்கு கொடுத்துள்ளேன். சரியான நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை இந்தப் பல்கலைக்கழக மாணவர்களின் இறப்புக் கொடுக்கும் வரை நான் ஓயப் போவதில்லை - என்றுள்ளது. (ற-4)

# பொலிஸாரின் வரம்பு மீறிய செயல்களை ஏற்க முடியாது

## வடக்கு பதில் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் கூட்டாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

குற்றங்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற போர்வையில் பொலிஸாரின் வரம்பு மீறிய செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண பதில் முதலமைச்சர் த. குருகுலராசா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா ஆகியோர் கூட்டாக வலியுறுத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் தொடர்பில் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அதில் உள்ளதாவது-

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திக் கொலை செய்த சம்பவத்தை எம்மால் ஏற்க முடியாது.

குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் விரைவாக நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடாது துரித நீதி பெற ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறான பெரும் கொலைக்குற்றங்கள் தொடர்பாக கடந்த காலங்களில் வெறும் கண்துடைப்பு விசாரணைகள் நடைபெற்ற வரலாற்றையும் எம்மால் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

அசம்பாவிதம் நடைபெறுவதற்கு அடிப்படையாக இருந்த காரணிகளை முற்றாக அறிவதற்கு ஓர் ஆக்கபூர்வமான விசாரணைக்குழு அமைத்து ஒரு முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோருகின்றோம்.

இதனை நாங்கள் ஒருமித்துத் தெரிவிப்பதன் காரணம் வடக்கு மாகாண சபை, அரசியற் பேதமில்லாது இந்த விடயத்தில் கரிசனை கொண்டிருக்கின்றது என்பதனை எடுத்துக் காட்டவே - என்றுள்ளது. (ற-4)

# பல்கலை. மாணவர் கொலை திட்டமிடப்பட்ட அச்சுறுத்தல்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவது தலைவிதியா? அல்லது தமிழர்கள் இலங்கை நாட்டில் வாழ்வதற்கான அச்சுறுத்தலா?. பல்கலைக் கழக மாணவர்கள் கொல்லப் பட்டதும் ஒருவகை அச் சுறுத்தல் என்றே தோன்றுகின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. யாழ்.பல்கலைக்கழகமாணவர்களின் உயிழப்புத் தொடர்பில் சங்கம் விடுத் துள்ள செய்திக் குறிப் பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது-

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவரின்உயிரிழப்புஅனைத்துக் கல்விச் சமூகத்தையும், மக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. மாணவர்களைக் கொலை செய்து ஏனையவர்களை அச்சுறுத்தும் செயல் என்றே நாம் கருதுகின்றோம். குடாநாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்களைக் கண்டும் காணாமலும் கணக்கெடுக்காமல் உள்ள காவல்துறை பல்கலைக்கழக் மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தவேண்டிய அவசியம் என்ன?

இது ஒருவகையான திட்டமிடப்பட்ட அச்சுறுத்தலே. பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துவதற்கு செய்யப்படும் பாதகமான செயல் என்றே நாம் கருதுகின்றோம். இந்தக் கொலையை வன்மையாகக் கண்டிப்பதோடு கொல்லப்பட்ட மாணவர்களின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும். கொலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். - என்றுள்ளது. (ற-4)

4 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



தோற்றம் 25 . 05 . 1936

மறைவு 06 . 11 . 2012

அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்
(ஓய்வு நிலை அதிபர், J.P)
திதி: 23.10.2016

நிறைகுடத்துப் பால் போல
நெஞ்சமெல்லாம் நிறைந்த தெய்வம்
ஆறாத துயரத்தைத் தந்து
அவசரமாய் போனதேனோ?
மூச்சு நிற்கும் காலம் வரை தங்கள்
முகம் தெரியும் அன்பு அப்பா
பேச்சினிலும் மூச்சினிலும் உங்கள்
பெயர் நிலைக்கும் உண்மையிது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சண்முக நிவாஸ்"
43/4, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தும் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பவற்றிடமிருந்து பெருமளவான அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் சில பிரசுரமாகியுள்ளன. மிகுதி நாளைய உதயனில் பிரசுரமாகும்.




## சட்டவிரோத மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.23
முல்லைத்தீவில் சட்டவிரோதமாக மணல் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். டிராக்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்தது.
புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திப்பிலியில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.
முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலின் கீழ் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் க.ஜெசிந்தன் தலைமையிலான அணி குறித்த நபரைக் கைது செய்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி7)

# 400க்கும் அதிக கால்நடைகள் வட்டுவாகல் கடற்படை முகாமில்

### உரிமையாளர்களிடம் நாளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, ஒக்.23
வட்டுவாகல் கடற்படை முகாமுக்குள் உள்ள 450 கால்நடைகளை பிரதேச செயலக அதிகாரிகள் பார்வையிட்டு உறுதி செய்தனர்.
இவ்வாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
வட்டுவாகல் கடற்படை முகாமில் உள்ள கால்நடைகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க கடற்படை இணக்கம் தெரிவித்தது. அதன் உரிமையாளர்கள் நாளை திங்கட்கிழமை பிரதேச செயலகத்தைத் தொடர்பு கொண்டு பதிவுகளையும், பட்டிக் குறிகளையும் குறிப்பிட வேண்டும்.
கடந்தவாரம் பிரதேச செயலக அதிகாரி, கிராம சேவையாளர், சில கால்நடை உரிமையாளர்கள் முகாமுக்குள் சென்று பார்வையிட்டனர். எமக்கு இதுவரை கிடைத்த முறைப்பாடுகளில் சுமார் 100 மாடுகளே குறிப்பிடப்பட்டுள்ளபோதும், முகாமுக்குள் 400 முதல் 450 வரையான மாடுகள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வட்டுவாகல், முல்லைத்தீவு பிரதேச மக்களின் கால்நடைகள் மட்டுமன்றி புதுக்குடியிருப்பு மக்களுக்குச் சொந்தமான கால்நடைகளும் அங்கு இனங்காணப்பட்டன. இனங்காணப்பட்ட மாடுகள் அனைத்தையும் ஒரே நாளிலோ அல்லது இரு நாள்களிலோ முகாமில் இருந்து வெளியேற்ற கடற்படை இணக்கம் தெரிவித்தது.
புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கால்நடைகளின் உரிமையாளர்கள் நாளை திங்கட்கிழமை எமது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். கால்நடைகளை முகாமுக்குள் சென்று பிடிப்பதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைத்தாலேயே ஒரே நாளில் கால்நடைகளை முகாமுக்கு வெளியே கொண்டுவர முடியும்.
கால்நடைகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு மாவட்ட செயலாளர் பணித்துள்ளார். அதையடுத்தே குறித்த நடவடிக்கைய்யை நாளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.- என்றார். (ற-101)

## 4000 மில்லியன் ரூபா செலவில் மன்னாரில் மீன் பிடிப் பண்ணை

மன்னார், ஒக்.23
மன்னாரில் 4 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் மீன்பிடிப் பண்ணை அமைக்க மத்திய அரசு அனுமதித்துள்ளது. பண்ணை அமைக்கப்பட்டால் 4 ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.
இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் ப. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்று முன்தினம் மாவீரர் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டார். அதில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரி வித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
மன்னார் மாவட்டத்தில் மீன்பிடிப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கு மத்திய அமைச்சர் மகிந்த அமரவீராவுடன் தொடர்பு கொண்டு அனுமதி கோரியிருந்தேன். மத்திய அமைச்சர் அதற்கான நிதி ஒதுக்கித் தரப்படும் என்று தெரிவித்தார். முழு வேலைத் திட்டத்தையும் மத்திய அரசுதான் மேற்கொள்ளவுள்ளது. இந்த வருடத்தில் 300 மில்லியன் ரூபா செலவு செய்யவேண்டியுள்ளது. ஆரம்ப கட்டவேலைகள் நடைபெறுகின்றன.
வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட வேலைத் திட்டம் பூர்த்தி செய்யப்படுமாக இருந்தால் குறைந்தது திட்ட முன்மொழிவுகளின் படி 4ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.
பதினாறாயிரம் குடும்பங்கள் தமக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளன. அதில் ஒரு பகுதியளவு தான் எங்களால் கடந்த வருடமும் இந்த வருடமும் வழங்கக் கூடியதாக இருந்தது-என்றார். (ற-21)

# மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் முத்தரிப்புத்துறைக் கிராம மக்களிடம் தெரிவிப்பு

மன்னார், ஒக்.23
மன்னார், முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் கடற்படையினரில் கெடுபிடி தொடர்பாக கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன். மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.
மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறை கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடற்படை வீரர்கள் கிராம மக்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. அதையடுத்து வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்றுமுன்தினம் முத்தரிப்புத்துறை செங்கோல் மாதா ஆலய வளாகத்தில் பிரதேச மக்களைச் சந்தித்தார். அதன்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
கிராமங்களிலோ அல்லது வீடுகளிலோ சந்தேகத்துக்கு இடமானவர்களின் நடமாட்டம் காணப்பட்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடவும். அல்லது சந்தேக நபர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கவும். அவர்களைத் தாக்கிக் காயப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம். இந்தச் சம்பவம் தொடர்பில் கிராமத்தைச் சேர்ந்த 11 பேரின் பெயர் விவரங்கள் எமக்கு வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் 6 பேர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சட்டம் தனது கடமையைச் செய்கின்றது. கிராம மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் அதற்கு உரிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளுகின்றேன்.- என்றார்.
முத்தரிப்புத்துறை கிராம மக்கள் இதுவரை தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை. கிராமத்தைச் சேர்ந்த 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எத்தனைபேர் இவ்வாறு கைது செய்யப்படுவார்கள் என மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. கடற்படையினரின் புலனாய்வுத் துறை இன்னும் பலரது விவரங்களைச் சேகரிக்கின்றது என்று நாங்கள் அறிகின்றோம். பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டினர்.
முத்தரிப்புத்துறை பங்குத்தந்தை அருட்தந்தை டெனி அடிகளார் தலைமையில் இடம் பெற்ற சந்திப்பில் மன்னார் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜெயசேகர, வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, சட்டத்தரணி லோகு, அருட் தந்தையர்கள், கிராம சேவையாளர், கிராம மக்கள் கலந்து கொண்டனர். (ற-4,56)

## தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது

சாவகச்சேரி, ஒக்.23
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் பணியாளர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
கடந்த வியாழக்கிழமை வைத்தியசாலை வளாகத்துக்கு வெளியே உள்ள சைக்கிள் திருத்தகத்துக்குச் சென்ற பாதுகாப்பு அலுவலரையும், உடன் சென்ற பெண் பணியாளரையும் மதுபோதையில் காணப்பட்டவர்கள் தாக்கினர். அதில் பாதுகாப்பு அலுவலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற வைத்தியசாலை மேற்பார்வையாளர், பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரையும் குறித்த நபர்கள் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த சம்பவம் தொடர்பாக மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். (ற-9)

# வவுனியாவில் பிறப்புச் சான்றிதழ் இன்றி 1, 151 பேர்

வவுனியா, ஒக்.23
வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் ஆயிரத்து 151பேர் பிறப்புச் சான்றிதழ்கள் இன்றி உள்ளனர். வதிவோர் தகவல் முறைமை 2016ஆம் ஆண்டுக்கான நிரந்தரக் குடும்பங்களின் விவரங்கள் கணினி மயமாக்கல் நடவடிக்கையில் இது தெரியவந்தது.
இவ்வாறு வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
கடந்த ஏப்ரல் மாதத்தில் வவுனியா கள்ளிக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் இலங்கையில் முதற்தடவையாக வதிவோர் தகவல் முறைமை நிரந்தரக் குடும்பங்களின் விவரங்கள் கணினி மயமாக்கல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
தற்போது நடைமுறையிலிருக்கும் குடும்ப விவரங்கள் அடங்கிய அட்டையை நவீன தொழிநுட்பத்துடன் கூடிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய குறிப்பாக குடும்பத்தவர்களின் எண்ணிக்கை, பெயர், சொந்த முகவரி, அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கம், காணி உறுதியின் விவரங்கள் சாரதி அனுமதிப்பத்திரம், வாக்காளர் அட்டை போன்ற அனைத்து விடயங்களையும் கணினியில் உட்படுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவையாளர் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.
இதனால் பொது மக்களின் சேவை களை இலகுவில் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். பொதுமக்கள் குடும்ப அட்டையைக் கொண்டுசெல்லவேண்டிய தேவையும் ஏற்படாது. ஒரு குடும்பத்தின் முழுமையான விவரங்களையும் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.
தற்போது கள்ளிக்குளத்தில் 156 குடும்பங்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. அங்கு 172பேருக்குபிறப்புச்சான்றிதழ் இல்லை என்ற விடயம் தெரிய வந்தது. ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவில் 979 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பதும் தெரிய வந்தது. அவர்களுக்கு உடனடியாக நடமாடும் சேவை யூடாக பிறப்புச் சான்றிதழ் வழங்க பிர்தேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
9ஆயிரத்து 937 குடும்பங்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட குடும்ப அட்டை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 7 ஆயிரத்து 403 குடும்பங்களுக்கான தகவல்கள் திரட்டப்பட்டு கணினியில் பதிவேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு திட்டம் தொடர்பான விவரங்களைக் கேட்டு வருகின்றார்கள். இந்தத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயல்கின்றோம்.- என்றார். (ற-21)

# சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்தவருக்கு மறியல்

மட்டக்களப்பு, ஒக் 23
மட்டக்களப்பு-புன்னைச்சோலையில் 15 வயதுச்சிறுமி ஒருவரை கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளித்த பின்னர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களிடம் கையளிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-47)



# மலையகத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக லண்டனில் போராட்டம்

கொழும்பு, ஒக் 23
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தி லண்டனில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் வாழ்கின்ற இலங்கையர்கள், அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மோசடி செய்ய வேண்டாம், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டாதே போன்ற மும்மொழிகளிலும் எழுதிய வாசகங்களை கையில் ஏந்தியவாறு லண்டனிலுள்ள இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். (த)

# சிகரெட் பெட்டிகள் கடத்த முயன்ற சீனப் பெண் கைது

கொழும்பு, ஒக் 23
சட்டவிரோதமான முறையில், 477 சிகரெட் பெட்டிகளைக் கடத்த முற்பட்ட சீனப் பெண்ணொருவரை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்துள்ளதாக, சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

30 வயதுடைய குறித்த பெண்ணிடமிருந்து 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (த)






**இனிய தீபாவளித் திருநாளை முன்னிட்டு...**

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# மாபெரும் மெகா சேல்

# இந்தியன் பஜார்



**இடம்**

**யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம்**

**05.10.2016 முதல் 30.10.2016 வரை**

உங்களுக்குத் தேவையான
திருமணப் பட்டுப்புடைவைகள்,
கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள் மற்றும் சிறுவர்
சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகளை
மாபெரும் விலைத் தள்ளுபடியில்
பெற்றுக் கொள்ளலாம்.

**சல்வார் துணிகள்**

| | | |
|---|---|---|
| ❖1 டொப் சல்வார் துணி (கொட்டன்) | ~~1000/=~~ | 750/= |
| ❖2 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1250/=~~ | 1000/= |
| ❖3 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1750/=~~ | 1500/= |

யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன்கருதி

**21.10.2016 வெள்ளிக்கிழமை முதல்**

**இல.80, கஸ்தூரியார் வீதி,**
**மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, முதலாம் மாடியில்**
**திருமண பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்**
**"இந்தியன் செலக்ஷன்"**
**புதிய காட்சியறை திறந்து வைக்கப்பட்டுள்ளது**

என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த நிகழ்வில் சகல வாடிக்கையாளர்களையும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
இந்தியன் செலக்ஷன்

# பாதுகாப்பான மின்சாரப் பாவனைக்கான புதிய தேசிய நியமம் அறிமுகம்

இலங்கையில் மின்சாரத் தொழிற்றுறையானது ஓர் ஒழுங்கினுள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கில், அந்த இலக்கினை அடைவதற்காக இலங்கை அரசாங்கத்தால் 2002 ஆம் ஆண்டு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. 2009 ஆம் ஆண்டுக்குரிய இலங்கை மின்சாரச் சட்டத்தின் மூலம், இலங்கையில் மின்சாரத் தொழிற்றுறையை ஒழுங்குறுத்துகை செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்தால் இவ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

தன்னுடைய செயற்பாடுகளை, உரிய விற்பன்னர்களைப் பயன்படுத்தி முறைப்படுத்தி புரிந்து வரும் ஆணைக்குழுவானது, இலங்கையின் மின்சாரத் தொழிற்றுறைக்கான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழினுட்ப ஒழுங்குறுத்துநராக தொழிற்பட்டு வருகின்றது. இலங்கை மக்களின் பாதுகாப்பான மின் பாவனைக்கும் மற்றும் அவர்களுடைய மின் நுகர்வு சார் விவகாரங்களுக்கும் ஆணைக்குழு முன்னுரிமை அளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்சார விபத்துகள் மூலமாக மரணமடைவோர் பற்றிய தரவுகளை காவல் துறையினர் மூலமாகப் பெற்று, இலங்கையில் ஆண்டுதோறும் மின் விபத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கையை இவ் ஆணைக்குழு அறியத் தருகின்றது. 2012 ஆம் ஆண்டளவில் 180 ஆக இருந்த இந்த மரண எண்ணிக்கையானது 2013 ஆம் ஆண்டளவில் 76 ஆகவும், 2014 ஆம் ஆண்டில் 73 ஆகவும் இருந்தமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இலங்கையில் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாத முடிவுவரை மின் தாக்குதலுக்கு இலக்காகி 82 நபர்கள் மரணமடைந்துள்ளனர்.

ஆனால், சர்வதேச நியமச் சுட்டிகள் ஓர் ஆண்டில் ஒரு மில்லியன் சனத்தொகைக்கு ஒரு மின்சார இறப்பே அதிக பட்ச அளவாகக் கருதுகின்றன. அந்த வகையில் பார்க்கும் போது, கிட்டத்தட்ட 22 மில்லியன் சனத்தொகை கொண்ட இலங்கையில், ஆண்டுக்கு மின்சார இறப்பு எண்ணிக்கை 22 இனைத் தாண்டிச் செல்கின்ற நிலமை கவலைக்கிடமானதாகும். இத்தகைய நிலையினை 2020 ஆம் ஆண்டளவில் மாற்றும் நன் நோக்கத்தில், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது தனது செயற்பாடுகளை துரிதமாக முடுக்கி விட்டுள்ளது.

கூர்மையான கத்தியானது கனிகளை வெட்டவும் பயன்படும். அதேவேளை, ஒருவரைக் காயப்படுத்தவும் அதனைப் பயன்படுத்த முடியும். பாதுகாப்பாகவும் அவதானத்துடனும் பயன்படுத்தப்படும்போது, எந்த ஒரு மூலவளமும் பயன்படுத்தும் நபருக்கு சாதகமான பலனையே வழங்கும். மூலவளங்களை சிக்கனமாக பயன்படுத்துதல் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியத்துவம் அவற்றை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதற்கு வழங்கப்படவேண்டும். இலங்கையில் நடைபெறும் பல்வேறு வகையான மின்சார விபத்துகளுக்குக் காரணம், பாதுகாப்பு அற்ற மின்பயன்பாடே ஆகும்.

பொது மக்கள் பாதுகாப்பாக மின் பாவனையை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில், 13 அம்பியர் செவ்வக முனை பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகளை தேசிய நியமம் ஆக்குவதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆனது, அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தது. இலங்கையின் அமைச்சரவை கடந்த 16 ஒகஸ்ட் 2016 அன்று, இந்த தேசிய நியம அமுலாக்கத்திற்கு அனுமதி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும், இலங்கையில் பயன்பாட்டில் இருந்துவரும் பிளக்குகள் மற்றும் சொக்கெற்றுகளை தரக் கட்டுப்பாடு செய்யவல்ல எந்த ஒரு நியமமும் இல்லாதிருந்தது. இதனால் பலவகையான சொக்கெற் அவுட்லெட்டுகள் இலங்கைக்குள் இறக்குமதி செய்து கொண்டுவரப்படுகின்ற நிலையே இன்றுவரை தொடர்கின்றது. இவ்வாறு இலங்கைக்குள் கொண்டு வரப்படும் பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகளின் தரத்தைப் பரிசோதிக்கும் எந்தச் செயற்பாடும் நடைபெறுவதில்லை.

அமைச்சரவை அனுமதியினூடாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நடைமுறைக்கு வந்துள்ள புதிய தேசிய நியமத்தின் மூலம் இந்த நிலை மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 13 அம்பியர் செவ்வக முனை பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகளை தேசிய நியமம் ஆக்கியமை தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களுக்கு அளிக்கும் வகையில் ஆணைக்குழுவானது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

இதன்படி, 16 ஒகஸ்ட் 2017 இற்குப் பின்னர் இலங்கைக்குள் இந்தத் தேசிய நியமத்திற்கு விரோதமான பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகளை இறக்குமதி செய்யவோ அல்லது உற்பத்தி செய்யவோ முடியாது என்னும் நிலை உருவாகி உள்ளது. ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் அல்லது ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டுள்ள சாதனங்களைக் கருத்திற் கொண்டே இந்த ஓர் ஆண்டு கருணைக்காலம் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் இந்த தேசிய நியமத்திற்கு ஒவ்வாத எந்தவொரு பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகள் ஆகியவற்றையும் 16 ஒகஸ்ட் 2018 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்குள் விற்பனை செய்வது தடை செய்யப்படும். மின்சார உபகரணங்களை விற்கும் தொழிலில் ஈடுபட்டு இருப்போரின் நலனைக் கருத்திற்கொண்டே இந்த ஈராண்டு கருணைக்காலமானது வழங்கப்பட்டு உள்ளது.

தற்போது வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பிளக்குகள் மற்றும் சொக்கெற் அவுட்லெட்டுகளை, அவற்றின் காலாவதித் திகதி அல்லது ஆயுட்கால முடிவுவரை, தொடர்ந்தும் பயன்படுத்துவதில் எவ்வித தடையும் இல்லை. ஆனால் புதிதாக வீடுகள் மற்றும் கட்டடங்களைக் கட்டும் போது, அவற்றுக்கான மின் சுற்றுகளை வடிவமைக்கும்போது, இப் புதிய நியமத்தை கருத்தில் கொள்ளவேண்டும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றது.

13 அம்பியர் செவ்வக முனை பிளக்குகள் மற்றும் சொக்கெற்றுகளைப் பயன்படுத்தும் தேசிய மற்றும் ஒற்றை நியமத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில், இலங்கை சுங்கம், ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாட்டாளர்கள், இலங்கை கட்டளைகள் நிறுவகம், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் ஆகிய பல அமைப்புகளின் ஒருங்கிணைந்த ஆதரவு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சகல இடங்களிலும் ஒரே மாதிரியான மின்சாரம் வழங்கும் கட்டமைப்புகள் இருப்பதால், மக்களின் மின்பாவனையானது மிகுந்த பாதுகாப்புடன் இருப்பது உறுதிப் படுத்தப் படு கின்றது.

2038 ஆம் ஆண்டளவில் முழு இலங்கையும் இந்த ஒற்றை நியமத்தின் பயன்பாட்டில் இருக் கும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

வி.விமலாதித்தன்
உதவிப் பணிப்பாளர் - பெருநிறுவனத் தொடர்பாடல்கள், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

## மின்சார பிளக்குகள் மற்றும் சொக்கெற்றுகளுக்கான தேசிய நியமத்தின் அறிமுகம்

### இன்றைய நிலமை




நியமத்திற்கு விரோதமானவற்றின் இறக்குமதி, உற்பத்தி ஆகியன 2017 ஒகஸ்ட்டின் பின்பும், அவற்றின் விற்பனை 2018 ஒகஸ்ட்டின் பின்பும் **தடை** செய்யப்படும்.

### நியமப்படுத்தலின் பின்னர்




இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
6-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: (011) 2392608 தொலை நகல்: (011) 2392641

SKT

# சிறிகுமரன் ரெக்ஸ்

தித்திக்கும் தீபாவளியை " சிறிகுமரன் ரெக்ஸ் " உடன் கொண்டாடி மகிழுங்கள்



Office wear
சாறி ரூபா 590/= இலிருந்து
(With Blouse)

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி, சல்வார் மற்றும் ஆடைத் தெரிவுகளை அதிரடி விலைகளில் பெற்றிட.

இச்சலுகை 19.10.2016 - 29.10.2016 வரை மட்டுமே.

சிறிகுமரன் ரெக்ஸ்
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

---

## தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

- Table mat - ~~2400/=~~ - 1550/=
- Kitchen Rack - ~~2000/=~~ - 1500/=
- Iron Board - ~~1300/=~~ - 1000/=
- மெத்தை ~~2600/=~~ 2250/=
- பிரம்பு செற் ~~16500/=~~ 14750/=
- லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) ~~41400/=~~ 36500/=
- 6 கதிரை ரீப்போ ~~5500/=~~ 4050/=
- ஸ்ரீல் அலுமாரி ~~10999/=~~ 8950/=
- 6X4 கட்டில் ~~10500/=~~ 8750/=
- TV ஸ்டான்ட் ~~10700/=~~ 8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415, 077 358 3879

---

யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட விசாலமான காட்சியறையை

# ROYAL Collection



இல. 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின்புறமாக)



ஆண்கள் / பெண்களுக்கான ஆடைத்தினுசுகள் மற்றும் அழகு சாதனப்பொருள்கள்




தீபத்திருநாளை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

ROYAL COLLECTION
NO.223, POWER HOUSE ROAD
(Behind Jaffna Teaching Hospital) T.P : 021 2225573

---


வருட இறுதியை சந்தோஷமாக கொண்டாட, அனுபவிக்க...

# மலேசியன் சுற்றுலா ஹோட்டல் பெக்கேஜ்

## யாழ் மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவை பார்வையிடுவதற்காகவே மிக மிகக் குறைந்த விலையில் சிறந்த Hotel Package அறிமுகப்படுத்தப்படுகிறது.

## மலேசியா தலை நகரில் 3 Star Hotel



- 3 இரவுகள் 4பகல்
- காலை உணவு அமெரிக்கன் Style
- விமான நிலையத்திலிருந்து Hotel வரை இரு வழிப் பயண வசதிகள் உட்பட

Hotel Package **7499/=** மாத்திரமே.

விமான Ticket+Visa வசதிகளும் செய்து தரப்படும்.
" நீங்கள் பதிவு செய்யும் நேரத்தில் Ticket+Visa கட்டணம் அறவிடப்படும்"

Note: சந்தைப்படுத்தல் (ஆண் /பெண்)மற்றும் காசாளர் (பெண்) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

SHARMILA TRAVELS & TOURS
No.289, Stanley Road, Jaffna.
மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்.
T.P No: 021 222 0266/ 021 222 0267
pettah@sharmilatravels.com

---

சொவ்ட்லொஜிக்கின் தீபாவளி சிறப்பு தள்ளுபடிகள்.



30% வரை தள்ளுபடிகள்
இலகு தவணை திட்டம்
விசேட சலுகைகள்
வட்டியின்றி செலுத்தும் முறை.

softlogic

- Panasonic TH-32D400 — NI-P250 — ரூ. 15,000/= விலைக்கழிவு — 3 YEARS — ரூ. 49,999/- — ரூ.2,690 x 14 மாதாந்தம்
- SAMSUNG UA32FH4003 — ரூ. 15,000/= விலைக்கழிவு — 3 YEARS — ரூ. 49,999/- — ரூ.2,690 x 14 மாதாந்தம்
- DELL DELL 3558 CORE I3 — இலவசம் — ரூ. 10,000/= விலைக்கழிவு — 4 YEARS — ரூ. 69,999/- — ரூ.3,971 x 15 மாதாந்தம்
- acer ES1-531 — ரூ. 10,000/= விலைக்கழிவு — இலவசம் A4 Colour Printer — ரூ. 54,999/- — ரூ.3,600 x 14 மாதாந்தம்
- SAMSUNG RR19 — ரூ. 7,000/= — 10 — ரூ. 46,999/- — ரூ.2,350 x 17 மாதாந்தம்
- SAMSUNG RT27JARMASE — ரூ. 9,000/= விலைக்கழிவு — 10 — ரூ. 86,999/- — ரூ.4,300 X 17 மாதாந்தம்
- Midea MA570-S140STCL — ரூ. 2,500/= — ரூ. 46,999/- — ரூ.2,690 x 14 மாதாந்தம்
- Whirlpool WWT-70X — ரூ. 1,500/= — ரூ. 27,999/- — ரூ.1,570 x 14 மாதாந்தம்
- Panasonic 13000 BTU Inverter Type — ரூ. 116,999/-
- Panasonic Mixer Grinder — ரூ. 13,499/-
- Rice Cooker — ரூ. 4,499/-
- Panasonic Microwave — ரூ. 13,999/-


| | | |
|---|---|---|
| Puthukkudiyiruppu 021 206 1571 077 505 7870 | Thirunelvely 021 567 1118 077 834 7733 | Nelliady 021 567 2148 077 372 5604 |
| Jaffna 021 567 1108 077 799 1283 | Chunnakam 021 567 2148 077 892 8168 | Softlogic max 021 567 8989 077 739 7734 |

நிபந்தனைகளுக்குட்பட்டது*
* சொவ்ட்லொஜிக் உத்தரவாதத்தின் பக்கபலம்

Panasonic SAMSUNG Candy IONIS Kelvinator DELL NOKIA xerox Russell Hobbs Midea lifeStyles

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

மலர்வு 03 . 09 . 1946



உதிர்வு 20 . 09 . 2016

கடந்த 20.09.2016 புரட்டாதி மாதம் செவ்வாய்க்கிழமை
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பையா அழகானந்தம்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று(23.10.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில்(இணுவில் கந்தசாமி கோயில் அருகில்) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**
(J 5563)
(14,17,18)


**குடும்பத்தினர்.**
**077 869 2236**

# குருதிக் கொடை வழங்க முன்வரவேண்டும் மக்கள்

## *வவு. பொது வைத்தியசாலை பணிப்பாளர் கோரிக்கை*

வவுனியா, ஒக.23
மக்கள் மத்தியில் குருதிக்கொடை தொடர்பிலான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது. அதனாலேயே நாடளாவிய ரீதியில் குருதி வங்கிகளில் குருதித் தட்டுப்பாடு நிலவுகின்றது.
இவ்வாறு வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்
வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை குருதி வங்கியில் உள்ள குருதி சேமிப்பு இரு தினங்களில் முடிவடையவுள்ளதால் அவசரமாக குருதி வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.
வவுனியா பொதுவைத்தியசாலையில் நேற்று முந்தினம் இடம்பெற்ற குருதிக் கொடை நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
ஓ, ஏ, பி. போன்ற எதிர்மறை குருதி வகைகளுக்கு கூடுதல் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதை நிவர்த்தி செய்வதற்கு பொது மக்கள் முன்வர வேண்டும். மக்களிடையே குருதிக்கொடை பற்றிய சரியான விழிப்புணர்வு இல்லாமையே இதற்கு காரணமாகும். குருதிக்கொடை தொடர்பான விளக்கத்தை பொதுமக்களுக்கு ஊடகங்களே வழங்க முன்வர வேண்டும். குருதிக் கொடைகளை வழங்க முன் வருவோர் மேலதிக தகவல்களை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் குருதி வங்கியூடாக பெற்றுக்கொள்ள முடியும்.
வவுனியா வைத்தியசாலையில் குருதி வங்கியில் குருதிக்குப் பற்றாக்குறை என்று வெளியான தகவலை அடுத்து இளைஞர்கள் பலர் குருதிக் கொடையை வழங்க முன்வந்தனர். (ற-21)

# 41ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும்



அமரர்
**லூக்காஸ் பற்றிமா மனோகரன்**

தோற்றம்
08.08.1947

மறைவு
13.09.2016

(23.10.2016)

உயிரோடு நடமாடி உணர்வோடு உறவாடி
பிரியாத உறவாகி பிரியமுடன் இருந்த உங்களை
நினையாத பொழுதினில் நிலை தடுமாற வைத்து
மலைபோல இருந்த உங்களை மண்மூடிக் கொண்டதென்ன?
உறவைப் பிரிந்து எம் உயிர் துடித்தவேளை உண்மை அன்பு கொண்டு எம்மை
ஆறுதல்படுத்திய அனைவருக்கும்
தோளோடு தோள் சேர்ந்து தோழமையானவர்க்கும்
அந்நிய தேசமிருந்து ஆறுதல் செய்திகள் கூறி - எமை
ஆற்றுகைப்படுத்தியவர்க்கும்
இரங்கல் உரைகள் மூலம் அன்னாரின் பெருமை கூறி
கவிதை வழி எங்கள் கண்கலங்க வைத்து நினைவில் நீங்கா நினைவானவர்க்கும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் இதய பூர்வ நன்றிகள்

'அன்பகம்'
புனித அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு

**பீரிஸ் விஜயா குடும்பத்தினர்.**
077 704 8999/ 077 644 7320

# மரண அறிவித்தல்



## செல்லப்பா பஞ்சநாதன்

**(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி)**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பஞ்சநாதன் 20.10.2016 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- ஜெகதீஸ்வரி அம்பாள் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (செல்வம்)- பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ரவிரேகா (ரோகினி) வின் அன்புக் கணவரும், தர்சிகா (லண்டன்), தர்சன் (Virtusa Polaris Pvt Ltd Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செந்தில்நாதன், இரகுராமன் மற்றும் கயிலைநாதன், சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சக்திகுகன் (லண்டன்), காலஞ்சென்ற சக்திகுமரன் (லண்டன்), சக்திசடாசரம் (லண்டன்) , புனிதரேகா (லண்டன்), சக்திசிவகிரிபவன் (லண்டன்), ஜனகரேகா (லண்டன்), சக்திகுருபரன் (லண்டன்), மீனலோஜினி (லண்டன்) சக்திகுலதிலகன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கூடத்து அம்மன் கோயிலடி,**
**சங்கானை.**
(சே/5570)(10.18)


தகவல்:
**குடும்பத்தினர்.**

**T.P: 077 670 1321, 077 508 9217**

# மரண அறிவித்தல்

## திருமதி வசந்தமலர் பாலசுந்தரம்

**பிறப்பு** 25.05.1952
**இறப்பு** 17.10.2016



யாழ்.மாவிட்டபுரம் வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமலர் பாலசுந்தரம் 17.10.2016 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசுந்தரம்(தேவன்) அவர்களின் நேசமிகு மனைவியும் கிரிவரன்(கிரி - பிரான்ஸ்), கமலவரன்(கமல் - பிரான்ஸ்), கார்த்திகா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, தில்லைநாயகி மற்றும் இராசதுரை, காலஞ் சென்ற அருமைநாயகி மற்றும் திருச்செல்வம், ஜெகராஜா(ஜெகம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபாகரன்(கிருபா பிரான்ஸ்), வரன்யா(சௌமியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நவரத்தினம் , நடேசபிள்ளை (முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்) மற்றும் கமலாதேவி (தேவி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஓவியாவின் அருமை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வங்கியடி**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**
(J/5590)
(14,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**+ 94 776 184 597**
**+33 627 176 521**
**+33 753 998 828**
**+94 776 306 217**
**+33 768 085 765**

# சாய்ந்தமருதுக்கு தனியான நகரசபை

## *பைசர் முஸ்தபா உறுதியளிப்பு*

அம்பாறை, ஒக் 23
சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை ஒன்றை வெகுவிரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.
சாய்ந்தமருதுக்கு தனியான நகர சபை வேண்டுமென வேறுசில அரசியல்வாதிகள் தன்னிடம் கோரிக்கை விடுத்தபோதும், அவர்கள் இதயசுத்தியாக இந்தக் கோரிக்கையை விடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.
அரசவர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாணத்துக்கான முதலாவது கிளை சாய்ந்தமருதுவில் ஆரம்பிக்கப்பட்டது.
இதில் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனுடன் இணைந்து குறித்த கிளையைத் திறந்துவைத்த பின்னர் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர்,
சாய்ந்தமருது மக்களின் நீண்ட காலக் கோரிக்கை இனி நிறைவேறப் போகின்றது.
இந்தப் பிரதேசத்துக்கு தனியான நகரசபை வேண்டுமென்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் ஜெமீல் ஆகியோர், என்னிடம் நீண்ட காலம் வலியுறுத்தி வந்ததன் பிரதிபலன் இப்போது உங்களுக்குக் கிடைத்துள்ளது.
இந்தப் பிரதேசத்துக்குத் தனியான நகரசபை ஒன்று வேண்டுமென என்னிடம் வேறுசில அரசியல்வாதிகள் கோரிக்கை விடுத்த போதும், அவர்கள் இதயசுத்தியாக இந்தக் கோரிக்கையைவிடுக்கவில்லைஎன்பதைநான்உணர்ந்து கொண்டேன்.
வெறுமனே ஒளிப்படங்களுக்காகவும், பத்திரிகை விளம்பரங்களுக்காவுமே அவர்கள் இந்தக் கோரிக்கையைவிடுத்துஉங்களைஏமாற்றுகிறார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன்.
முஸ்லிம்களின் மீதும், பள்ளிகளின் மீதும் கொடூரங்கள் இழைக்கப்பட்டபோது நானும், அமைச்சர் ரிசாத் பதியூதீனும் மட்டுமே மக்களோடு மக்களாக களத்தில் நின்று துணிந்து போராடினோம்.
நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கின்ற போதும், சமூகத்துக்காகப் பாடுபடும் அமைச்சர் ரிசாத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. அவரைப் பலப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது–என்றார். (கு)

## நினைவுப் பேருரை

அளவெட்டி,ஒக்.23
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் சமூகாவலர் மகாஜன சிற்பி அமரர் ஜெயரட்ணம் நினைவுப் பேருரை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நினைவுப் பேருரையை பேராசிரியர் மா.சின் னத்தம்பி நிகழ்த்துவார்.(கு-36)

## கவிதைத் தொகுப்பு வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 23
புரவலர் புத்தகப் பூங்கா 37 ஆவது வெளியீடான இராகலை தயானியின் அக்கினியாய் வெளியே வா கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இராகலை தமிழ் மகா வித்தியாலய பாரதி மண்டபத்தில் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ.மரியதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (கு)

## சைவ சமய அறிவுப் பரீட்சை

சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் சைவ சமய அறிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
20 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையானது. தரம் 3 தொடக்கம் 11 வரையான மாணவர் களுக்கானது. இந்தப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைச் செயலர் அறிவித்துள்ளார். (கு)




# சலூன்கள் என்ற பெயரில் விபசாரம்

*கட்டுப்படுத்துமாறு நீதிபதி உத்தரவு*

மட்டக்களப்பு, ஒக் 23
மட்டக்களப்பு நகரில் சிகையலங்கார நிலையங்கள் என்ற பேரில் மாணவிகளைப் பயன்படுத்தி விபசாரம் நடைபெறுவதாகக்கூறப்படுவது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.
மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் சிகையலங்கார நிலையங்கள் என்ற போர்வையில் சில இடங்களில் இயங்கிவரும் நிலையில் பாடசாலை மாணவிகளைப் பயன்படுத்திவிபசாரநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மாணவர்கள், பெற்றோர் மத்தியிலிருந்துநீதிமன்றத்துக்குக்கிடைத்த முறைப்பாட்டையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மாவட்டதில் கலாசாரச் சீரழிவுக்கு இடமளிக்கும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையெடுக்குமாறும், இவ்வாறான கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (கு-47)

## மூன்று மாதக் குழந்தை உட்பட மூவர் கத்திக்குத்தில் படுகாயம்


கொழும்பு, ஒக் 23
பதுளை, மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவாகெலே பகுதியில், தாயொருவர் தனது இரண்டு பிள்ளைகளை கத்தியால் குத்திவிட்டு, தானும் கத்தியால் குத்திக்கொண்ட சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
படுகாயமடைந்த மூவரும் தற்போது பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
30 வயதுடைய தாய், இரண்டரை வயது மகள் மற்றும் மூன்றே மாதங்களான மகன் ஆகியோரே இவ்வாறு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். 3 மாதங்களேயான குழந்தையின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(கு)






# மாகாண முதியோர் விழா நாளை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஒக். 23
மாகாண முதியோர் தின விழா கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.
வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த முதியோர்கள், முதியோர் சங்கப் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொள்வர்.
மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக மாகாண பதில் முதலமைச்சரும், மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.
விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை தலைமைச் செயலர் அ.பத்திநாதனும், கௌரவ விருந்தினர்களாக மாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் ஆகியோரும் கலந்து கொள்வர்.
மாகாணத்தில் உள்ள பிரதேச செயலக ரீதியாக சமூகப் பணிகளில் ஈடுபடும் ஆண், பெண், முதியவர்கள் கௌரவிப்பு, முதியோர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கல் ஆகியவையும் முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (த-9)



கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்ட சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் மாணவர்கள் சிலர் நேற்றைய தினம் உதயன் பணிமனைக்கு வருகை தந்து பத்திரிகைச் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். (ற-ரி)

# விடை பெற்றார் கியூபா தூதுவர்

கொழும்பு, ஒக். 23
இலங்கைக்கான கியூபா நாட்டின் தூதுவராகப் பணியாற்றிய பொலோ ரெண்டினோ பெடிஸ்டாவுக்கும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலகவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.
பெட்டிஸ்டா தனது பதவிக் காலத்தை நிறைவு செய்துகொண்டு, நேற்று இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.
இதற்கு முன்னராக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலகவை சந்தித்த கியூப தூதுவர், இலங்கையில் தனது பணிகளை இலகுவாக மேற்கெள்வதற்கு ஊடகத்துறை அமைச்சர் வழங்கிய ஒத்துழைப்புக்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்.
அத்துடன், "பெடிஸ்டா கியூபாவின் தூதுவராக இலங்கைக்கு ஆற்றிய சேவைகளை அமைச்சர் கயந்த கருணாதிலக்க பாராட்டியதாக, ஊடகத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டது. (த)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

தென்மராட்சி ஒக். 23
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுச் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தினர் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகளை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நூலக மண்டபத்தில் நடத்துகின்றனர்.
போட்டிகளில் பங்குபற்றவுள்ள வகுப்பொன்றிலிருந்து 3 மாணவர்கள் வீதம் அனுப்பி வைக்குமாறு, தென்மராட்சி தெற்குப் பிரதேச பாடசாலைகளின் அதிபர்களுக்கு பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார். 24 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு தரம் 4-5 மாணவர்களுக்கு வாசிப்பு போட்டியும், 25 ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு தரம் 6-7 மாணவர்களுக்கு ஆங்கில வாசிப்பு போட்டியும், பி.ப.2 மணிக்கு தரம் 6-9 மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியும்,
26 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு தரம் 10 மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும், பி.ப.3 மணிக்கு தரம் 11-12 மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. (த-9)

# கற்பிட்டிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம்

புத்தளம், கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டி வீதியை மறித்து மீனவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கற்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டார். கற்பிட்டி கடல் பிரதேசத்தில் 'லைலா' வலைகளைப் பாவித்து மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு தரப்பு மீனவர்கள், கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன்போது பொது மக்களின் மோட்டார் சைக்கிள்கள், மீனவப் படகுகள் மற்றும் லொறி என்பன தீக்கிரையாக்கப்பட்டதோடு, பலர் தாக்கப்பட்டுக் காயங்களுடன் கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (த)






# 2015 ஏப்ரல் முதல் ரூ. 730 வேண்டும்

கொழும்பு, ஒக்.23

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பாக ஏற்படுத்திக்கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வர வேண்டும் என்று, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை, ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்று, அத்தொழிலாளர்களினால் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இருப்பினும், தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் தோட்டத் தொழிற்சங்கங்களும் இணைந்து, 730 ரூபாவுக்கான நாள் சம்பளத்துக்கு கைச்சாத்திட்டன. இது, தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை, மிதித்து நசுக்குவதற்கான ஒப்பந்தமாகவே கருதப்படுகின்றது என, மேற்படி சம்மேளனத்தின் தலைவர் ஏ.பிரேமரத்தின கூறினார்.

மேற்படி கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமையால், , 730 ரூபாவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில், தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இந்தச் சம்பள அதிகரிப்பு இடம்பெற வேண்டும். 2015 ஏப்ரல் முதல், 2016 ஒக்ரோபர் வரையான 19 மாதங்களுக்குரிய நிலுவைச் சம்பளம், தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அதனைப் பெற்றுக்கொடுக்கத் தவறும் பட்சத்தில், அது குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த்)

# ஒரே வீதியை இரு பக்கத்தில் திறந்து வைத்த அமைச்சர்கள்

கொழும்பு, ஒக். 23

ஹபராதுவ, லியனகொட, லுனுமோதல வீதியை இரண்டு அமைச்சர்கள் திறந்து வைத்துள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த வீதியின் ஒரு பகுதியை அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவும், மற்றைய பகுதியை நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவும் திறந்து வைத்துள்ளனர்.

ஹபராதுவ ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் சந்திரலால் அபேகுணவர்த்தனவினால் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் சந்திம வீரக்கொடியின் அழைப்பில் டிலான் பெரேராவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து வீதியின் இரு பகுதிகளையும் குறித்த அமைச்சர்கள் திறந்து வைத்துள்ளனர்.

ஒரு பாதையை இரண்டு அமைச்சர்களினால் இரண்டு பக்கங்களில் திறக்கப்பட்டமை தொடர்பில் ஹபராதுவ மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (த்)

பான் ஏஷியா வங்கியில்

www.pabcbank.com
(011) 4 667 222

24 கரட் தங்க நாணயம் ஒன்றுக்கு
50,000

24 கரட்
42,000

22 கரட்
38,000

சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

பான் ஏஷியா
பொன்
LOAN

பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மாணவர்களின் கொலைகள் கடும் கண்டனத்துக்குரியவை

சட்ட ஒழுங்கைப் பொலிஸார் பேணவேண்டியது அவசியம். அதற்காக அவர்கள் அப்பாவிகளைக் கொல்வதையோ அப்பாவிகளின் சாவுகளுக்குக் காரணமாக இருப்பதையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டியது. ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும்கூட ஒரேயொரு நிரபராதி கூட தண்டிக்கப்படக்கூடாது என்பதுதான் குற்றவியல் சட்டத்தின் தாற்பரியமே!

அப்படியிருக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் உயிர்களைக் காவு கொள்வதற்குப் பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு காரணமாகியிருப்பதை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

உயிரிழந்த மாணவர்களில்பவுன்ராஜ் சுலக்சன் பொலிஸாரின் துப்பாக்கிக் குண்டினால் நேரடியாகத் தாக்கப்பட்டு இறந்துள்ளார். மற்றைய மாணவரான நடராசா கஜனின் தலை வேகமாக மோதியதால் அது நொருங்கி இறப்புச் சம்பவித்துள்ளது. எனினும் கஜனின் சாவுக்கும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூடே மறைமுகமாகக் காரணமாகியிருக்கிறது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த சுலக்சனின் மார்பைக் குண்டு தாக்கியதும் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் போய் மதிலுடனோ அல்லது சுவருடனோ மோதுண்டதில் அடிபட்டே கஜனின் தலை நொருங்கியிருக்கிறது.

இவ்வாறு இரு அப்பாவி உயிர்களைக் கேட்டுக் கேள்வி இன்றி காவு கொள்வதற்குப் பொலிஸார் எப்படித் துணிந்தனர் என்ற அடிப்படைக் கேள்வியை ஒதுக்கிவிட்டு இந்தச் சம்பவத்தைப் பார்க்க முடியாது. அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில் பொலிஸார் அவ்வளவு இலகுவாக - எடுத்த வீச்சில் - துப்பாக்கிச் சூட்டை நடத்திவிடமுடியாது. கால்களுக்குக் கீழே சுட்டுப் பிடிப்பதாக இருந்தால்கூட உயர் அதிகாரிகளிடமிருந்தும் நீதிவானிடமிருந்தும் முறையான அனுமதி பெற்றபின்பே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட வேண்டும். அதுவே நடைமுறையும்கூட.

அப்படியிருக்கும்போது அப்பாவி மாணவர்கள் இருவரை நோக்கி எப்படி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்? அவர்களுக்கு அதற்கான துணிவையும் அனுமதியையும் வழங்கியவர்கள் யார்? சம்பவம் நிகழ்ந்த பின்னரும் தாம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர் என்பதையும் அதற்கான காரணத்தையும் முறையான அறிவிப்பு மூலம் வெளியிடுவதற்குப் பொலிஸார் தயங்கியதுடன் அதனை ஒரு விபத்துப்போன்று சித்தரிப்பதற்கு முயன்றதன் பின்னணி என்ன? சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று அந்தப் பகுதியில் இரவுக் கடமையில் இருந்த 5 பொலிஸாரை மட்டும் கைது செய்தது சரியா? அவர்களுக்குச் சுடுவதற்கான அனுமதியை வழங்கிய அதிகாரி ஏன் கைது செய்யப்படவில்லை? எத்தகைய சூழ்நிலையிலும் துப்பாக்கியைப் பயன்படுத்த அனுமதித்த பொலிஸ் உயர் அதிகாரி இந்தக் கொலைகளில் பொறுப்பற்றவரா? போன்ற பல்வேறு வினாக்களுக்கு இந்த வழக்கில் விடை கிடைக்கவேண்டியிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய தேவை ஏன் வந்தது என்பதைப் பொலிஸார் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். விரைந்து அந்த விவரங்களைப் பொலிஸார் வெளியிட வேண்டும்.

அதுமட்டுமல்ல, பொலிஸார் மிகுந்த பொறுப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டியதும் அவசியம். 1980களின் நிலைமை மீண்டும் திரும்புவதற்குப் பொலிஸார் காரணமாக இருக்கக்கூடாது. தமிழ் இளைஞர்கள் தீவிரப் பாதையைத் தேடி ஓடுவதற்கு அப்போது இருந்த பஸ்ரியாம்பிள்ளை போன்ற தமிழ் பொலிஸாரையும் உள்ளடக்கிய பொலிஸ் மிகப் பெரும் காரணம் என்ற வரலாற்றை மறப்பது நல்லதல்ல. மீண்டும் அதுபோன்ற நிலைமையை ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் செயற்படக்கூடாது.

நிதானத்துடனும் புத்திசாதுரியத்துடனும தொழிற் திறமையுடனும் செயற்படுவதற்கான போதிய பயிற்சிகளையும் வசதிகளையும் பொலிஸாருக்கு வழங்குவதற்கு கொழும்பு அரசு முழுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தெற்கிலும் ஏனைய மாவட்டங்களிலும் குற்றமிழைப்பவர்களைத் தண்டனை இடமாற்றம் செய்யும் இடமாக வடக்குப் பகுதியைப் பயன்படுத்தாமல், இங்குள்ள முரண்பாடுகளையும் களநிலவரத்தையும் உணர்ந்து செயற்படக்கூடிய பொலிஸ்ாரையே கடமையில் ஈடுபடுத்துவதையும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.


எல்லாவற்றுக்கும் மேலாக பொலிஸ் அதிகாரம் தமிழர்கள் கைகளிலும் ஓரளவுக்காவது இருந்திருந்தால் இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாமோ என்ற நப்பாசையும் இல்லாமலில்லை. எனவே அதிகாரப் பகிர்வையும் விரைவாக்கி, இதுபோன்ற சம்பவங்கள் மீளவும் நிகழாமல் இருப்பதைக் கொழும்பு உறுதிப்படுத்தவதும் அவசியம்.

இலைஜா ஹூல்

*(நேற்றைய தொடர்ச்சி)*

கொழும்பில் இருக்கும் வரைக்கும் ஒன்றும், முதலமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் ஒன்றுமாக விக்னேஸ்வரன் கருத்துக்களைத் தடுமாற்றத்துடன் தெரிவித்து வருவதன் பின்னணியை ஆராய்வது அவரது கொள்கைப் பற்றுறுதியைப் புரிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவும்.

தமிழ் மக்களே கூட்டமைப்பைத் தொடர்ச்சியாகத் தெரிந்து வரும்போது, அந்த ஜனநாயக ஆணையை மதித்துக் கூட்டமைப்பின் அரசியற் பயணத்துக்கு உறுதுணையாக நிற்காமல் கூட்டமைப்பை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்க்கின்றாரெனின், மக்களைவிடத் அவருக்கு அதிகம் தெரியும் என்று நினைக்கிறாரா? மேலும், வடக்குத் தமிழ் மக்களின் பதைபதைப்பைப் பார்த்து உண்மையிலேயே துடிக்கும் நெஞ்சம் அவருக்கு இருக்குமாயிருந்தால் கையிலிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு செய்ய முடிந்தவற்றைச் செய்திருக்க வேண்டாமா?



வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக இவர் முன்னெடுத்த உருப்படியான நடவடிக்கைதான் என்ன?

வட மாகாண சபை, தான் இயற்றிய ஒவ்வொரு சட்டத்துக்கும் ஒரு நூறு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றது. மாகாண சபையின் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி பயன்படாமல் கொழும்பு அரசின் திறைசேரிக்கே திரும்பியிருக்கின்றது. வட மாகாண முதலமைச்சராகவிருந்து வெற்றுத் தீர்மானங்களை நிறைவேற்றியதையும், தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு நெம்பு கொடுத்து வந்த ஜெயலலிதாவின் தமிழக சட்டமன்றத் தீர்மானங்களை வாழ்த்தி மடல் வரைந்ததையும் விடுத்து, இவர் செய்தது வேறேதுமுண்டா?

**கொழும்பில் இருக்கும் வரைக்கும் ஒன்றும், முதலமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் ஒன்றுமாக விக்னேஸ்வரன் கருத்துக்களைத் தடுமாற்றத்துடன் தெரிவித்து வருவதன் பின்னணியை ஆராய்வது அவரது கொள்கைப் பற்றுறுதியைப் புரிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவும்.**

ராஜபக்ச காலத்திலாவது ஒரு கெடுபிடி இராணுவ ஆளுநர் இருந்தார். ஆட்சி மாற்றத்தின் பின்னர் வட மாகாணத்திற்கு சிவில் நிர்வாக பின்னணியைக் கொண்ட, ஒத்திசையும் ஆளுநர் நியமிக்கப்பட்டார். அதன் பின்னரும்கூட மாகாண சபை இயக்கத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. மாகாண சபையால் மக்களுக்குப் பயனில்லை என்பது முதலமைச்சரது கொள்கை நிலைப்பாடாகவிருந்தால் இன்றுவரை அவர் முதலமைச்சர் பதவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் என்ன?

தமிழ் மக்கள் பேரவையைத் தொடக்கும்போது இதிலேதும் கூட்டமைப்புக்கெதிரான அரசியல் கிடையாது. தமிழர் அரசியலில் மக்கள் இயக்க மொன்றின் தேவையை உணர்ந்தே இதைத் தொடங்கினோம் என்று முதலமைச்சர் தன் வாயாலேயே படித்துச் சொன்னதில் உண்மை யேதுமிருந்தால், ஏன் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தன் வடமாகாண சபை உறுப்பினர்களோடும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் இணைந்திருந்து மக்கள் இயக்கத்தை ஆரம்பித்திருக்கக்கூடாது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியற் போக்கை யாரும் எதிர்க்கக் கூடாதென்பதில்லை, எதிர்ப்பவர்கள் ஆகக் குறைந்தபட்சம் அதைத் தெளிவாகவே மக்களிடம் சொல்லிவிட்டுச் செய்ய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் - குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் - உழைப்பின் பயனாகக் கிடைத்த தலைமைத்துவத்திலிருந்து இறங்கிவிட்டு, தன் தனித்துவமான அரசியற் திட்டத்தை மக்களிடம் முன்வைத்து மக்கள் ஆதரவைப் பெறவேண்டும்.

அதை விடுத்து கடந்த பொதுத் தேர்தலில் செய்த நடுநிலைப் பூச்சாண்டி வேலைகளைத் தொடர வேண்டிய அவசியமில்லை. இங்குமிருந்து அங்குமிருந்து, இன்றொரு கருத்து, நாளையொரு கருத்தென விக்னேஸ்வரன் தொடச்சியாகச் செய்தும், சொல்லியும் வருபவை மக்கள் கரிசனையையும், கொள்கை உறுதியையுமா பிரதிபலித்து நிற்கின்றன?

**உள்நோக்கம்:**
**ஏன் இந்த எழுச்சி?**

இந்தப் பின்னணியில் முதலமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட எழுக தமிழின் பின்னணியின் உள்நோக்கம் என்ன? அது ஏன் இப்போது திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது?

2009ஆம் ஆண்டில் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றபோது தமிழ் மக்கள் தமது அரசியற் போராட்ட வரலாற்றில் மிகத் தாழ்ந்த வலுவிலிருந்தார்கள். பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொடுத்து, மேலும் பலரை அகதிகளாக்கி எதிர்காலம் குறித்த அச்சத்துடன் தமிழினமிருந்தது. இந்த நெருக்கடியான நிலைமையிலிருந்து பன் மடங்கு உறுதியான நிலையிலேயே 2015-



# எழுந்த பின்?

## எழுக தமிழ் மீதான மறுபார்வை 2

ஒகஸ்ட் பொதுத் தேர்தலை சந்தித்தார்கள்.

இந்தப் பரிணாம மாற்றத்தின் பின்னால் இருந்த நிகழ்வுகளான 2012, 2013, மற்றும் 2014 ஆண் டுகளில் நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத் தீர்மானங்களாகவிருக்கட்டும், 2015இல் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜனாதிபதித் தேர்தலாகவிருக்கட்டும் எல்லா வற்றிலும் தமிழரின் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசியற் தலைமையாக தமிழினத்தை வழி நடத்தி தமிழ் மக்களைப் பலப்படுத்தியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே.

இந்த நிலை மாற்றங்களின் பின்னால் கூட்டமைப்பிற்கி ருந்த பங்களிப்பை உணர்ந்தே கடந்த ஓகஸ்ட் மாதம் தமிழர் கள் மீண்டுமொரு முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் ஆதரித்தார்கள். போரின் பின்னரான இடை வெளியில் தமிழர் தாம் பல்வேறு முனைகளில் அடைந்த வெற்றிகளை இயன்றளவு விரைவாக உறுதிப்படுத்தவும், ஆக்க பூர்வமாக்கவும் ஆர்வம் கொண்டிருந்தனர். அடைந்த வெற்றிகளுள் இழந்திருந்த சர்வதேச சமூகத்தின் ஆதரவை மீளப் பெற்றமை, மகிந்த ராஜபக்சவை பதவியிறக்கித் தெற்கில் ஓரளவு சாதகமான ஆட்சியை நிலைப்படுத்தியமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாட்டின் எதிர்க் கட்சி நிலைக்கு உயர்த்தியமை என்பன முதன் மையானவை.

இந்த வெற்றி நிலைப் படுத்தற் (consolidation)செயன் முறையில் உச்ச பட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய புதிய அரசமைப்பின் தோற்றமும், நடைமுறையாக்கலும் அதி முக்கியமானவை. எழுக தமிழில் பேசியவர்களும் அரசமைப்பு உருவாக்கம் பற்றியே அதிகம் பேசியிருந்தார்கள். இவர்கள் தங்கள் உரைகளில் அரசு இந்தப் புதிய அரசமைப்பைத் தமிழரது பங்களிப்போ, அறிவோ இன்றி உருவாக்கி அனுமதியின்றித் தமிழர் மீது தீர்வாகத் திணிக்க முயல்வதான படத்தைப் புனைய முற்பட் டிருந்தார்கள்.

ஆனால், தமிழரது கனமான உள்ளீடோடுதான் இந்த அரசமைப்பு உருவாகி வருகின்றது. இந்த அரசமைப்பு வரைபில் தமிழரது ஜனநாயகப் பிரதிநிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்காற்றியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை அந்தக் கட்சியின் தலைமை தெளிவாகவே தமது தேர்தல் அறிக்கைகளில் சொல்லி வந்திருக்கின்றது. இதுவரை கூறி வந்தவற்றிலிருந்து நழுவி விட்டு தன் மக்களிடம் சாட்டுப்போக்குச் சொல்லிப் பிழைத்துக்கொள்ள முடியாது என்பதை கூட்டமைப்புத் தலைமை நன்கு அறியும். மேலும், அரசு இந்த வருட ஆரம்பத்திலிருந்து மாவட்டங்கள் தோறும் அரசமைப்புத் தொடர்பான மக்களது கருத்துக்களைக் கேட்டு வந்திருக்கின்றது. இந்த அமர்வுகளில் வடக்கிலும், கிழக்கிலும் பல் வேறு மக்கள் அமைப்புக்கள் தமது யோசனைகளை முன்வைத் திருக்கின்றன.

அரசமைப்புத் தொடர் பான முக்கியமான பேச் சுக்கள் இதுவரை மூடிய கதவுகளின் பின்னாலேயே நடந்து வந்திருக்கின்றது என்பது உண்மை. இருப்பி னும், இன்னமும் சொற்ப நாள்களில் இதுவரை பூட்டிய கதவுகளின் பின்னால் நடந்த பேச்சுக்களின் பேறுகள் பொது வெளிக்கு வரவிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களில் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் வெளிவர விருக்கும் இடைக்கால அறிக்கை தெளிவு படுத்தும். இதுவரை அரசமைப்பு வரைபுப் பணிகளை முன் னெடுத்த 21பேர் கொண்ட வழிகாட்டும் குழு தமது முன்மொழிவுகளை அரசமைப்புச் சபையிடம் பிரேரித்து அவற்றைச் சபை ஏற்றுக்கொண்ட பின்னர், இந்த முன்மொழிவுகள் மீதான பொது வாக்கெடுப்புடன் புதிய அரசமைப்புக்குச் செயல் வடிவம் கொடுக்கப்படும்.

இறுதியில், நடைபெறவிருக் கும் பொது வாக்கெடுப்பில் புதிய அரசமைப்பை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராக ரிக்கும் தெரிவு - நாட் டின் ஏனைய மக்களோடு சேர்ந்து - தமிழர் அனைவருக்குமே கிடைக்கும். ஆகவே, எழுக தமிழ் ஒழுங் கமைப்பாளர்கள் அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் புனைந்த படத் தில் உண்மையேதுமில்லை.

மேலும், தமிழர் எதைத் தீர் வாக எதிர்பார்க்கிறார்கள் என் பதைச் சிங்கள மக்க ளுக்கு எடுத்துச் சொல்லவே இந்த எழுக தமிழ் என்றால், அது கொழும்பிலோ, கண்டியிலோ, அல்லது காலியிலோ செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், இதுதான் நோக்கமாக இருந்திருந்தால் யாழ்ப்பாணத்திலே நடத்தியிருந்தாலும் அதன் நிறச் சாயம் வேறாகவே இருந்திருக்கும்.

தமிழரது உரிமைக் குரலின் நியாயத்தை சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின், அவர்களிடம் அதை எப்படிக் கொண்டுசேர்க்க வேண்டுமென்பதை நீண்ட நாள்கள் தெற்கில் வாழ்ந்து, கற்று, பணியாற்றியவரும் தனிப்பட்ட ரீதியில் சிங்களவருடன் நெருங்கிய தொடர்பு களைக் கொண்டவருமான முதலமைச்சர் தெரியாமலிருக்கச் சாத்தியமில்லை.

சிங்களவரிடம் எடுத்துச் சொல்லிப் பயனில்லை, அழுத்திச் சொல்லவே எழுக தமிழ் என்கின்றார்கள் சிலர். ஆனால், ஊர்வலங்களும், அறிவிப்புகளும் தமிழ் அரசியலில் விந்தை மிகு நிகழ்வுகள் அல்ல. போரின் பின் கடுமையான இராணுவ நெருக்கடிகளிருந்த காலத்திற்கூட பேரணிகளும், ஊர்வலங்களும் நடந்தன. கூட்டமாகப் பெருக்கெடுத்து வந்து கண்டனம் தெரிவிப்பதெல்லாம் தமிழர்கள் அவ்வப்போது நடத்திக் காட்டியவைதான். இதைவிடப் பெரிய போராட்டங் களைத் தமிழினம் இந்தத் தீவின் கரைகளைத் தாண்டி ஐ.நா சபை முன்றல் வரை செய்திருக்கின்றது. இவையே தும் தெற்கை அதட்டியதாகவோ, உலகை உலுப்பிய தாகவோ தெரியவில்லை. அப்படி உலுக்கியிருந்தால் இன்றும் அரசியற் தீர்வு குறித்தும், காணி விடுவிப்புத் தொடர்பிலும் பேசிக் கொண்டிருக்கத் தேவை இருந் திராது. ஆகவே, எழுக தமிழ் அரசை அதிர வைத்தது, சிங்கள்த் தேசியவாதத்தை வெருள வைத்தது, உல கத்திடம் தமிழரது கருத்துக்களை ஓங்கி ஒலிக்கச் செய் தது என்ற கதைகள் யாவும் கையெழுத்து வேட்டை மூலம் சர்வதேச குற்றவியல் பொறிமுறையைத் தருவித்திடமுடியும் என்று நாம் கடந்த ஆண்டில் கேட்ட புளுகுச் சங்கதிகளுக்கு ஒப்பானவை. சில பேரவைப் புதல்வர்கள் இந்த ஊர்வலம் வழி தவறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை வெருட்டி வைக்கவென முன்னெடுக்கப்பட்டதாகச் சொல்கின்றனர். ஆனால், சம்பந்தனுக்கு செய்தி சொல்வதற்கு இதுபோன்றதொரு சலசலப்பு அவசியமற்றது. மேலும், தமிழர் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே விரும்புவதை நேற்றுவரை தேசங்களின் இணைப்பு, ஒரு நாடு இரு தேசம் என்றெல்லாம் கதைவிட்டு மக்களைக் குழப்பி வந்தவர்கள் சொல்லித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிய வேண்டியதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகத்திரையைக் கிழிக்கவே இந்த எழுச்சி என்ற முழக்கங்களும் வலுவற்றவை. கூட்டமைப்புத் தன் அரசியல் நிலைப்பாடுகளை தெளிவாகவே முன்வைத்து வந்திருக்கின்றது.

இந்த நிலைப்பாடுகளிலிருந்து விலகித் தமிழருக்குக் கேடுண்டாக்கும் அரசமைப்பொன்றை அரசோடு சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்குமானால் கஜேந்திரகுமாருக்கும், பிரேமச் சந்திரனுக்கும் செய்ததை தமக்குச் செய்யத் தமிழ் மக் கள் தயங்கமாட்டார்கள் என்பதைக் கூட்டமைப்புத் தலைமை நன்கறியும்.

*(நாளையும் எழுந்து விழும்)*

## மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்!

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வழியான 751 இலக்க அரச பேருந்துகள் ஒழுங்கு முறையாக சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வழியான 750 இலக்க அரச பேருந்துகள் 30 நிமிடங்களுக்கு ஒன்று என்றவாறாக சேவையில் ஈடுபடும் அதே வேளை, 751 இலக்க அரச பேருந்துகள் காலையில் குறிப்பிட்ட அளவும் மாலையில் குறிப்பிட்ட அளவும்தான் சேவையில் ஈடுபடுகின்றன. இடை நேரங்களில் பிரயாணத்தை மேற் கொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாது அந்தப் பிரதேச மக்கள் அல்லலுறுகின்றனர். சில சமயங்களில் 750 வழித்தடப் பேருந்து காற்றுப் போயோ, பழுது பட்டோ நின்றுவிட்டால், 751 வழியான பேருந்துகளை சேவையில் இடைநிறுத்தி 750 வழித்தட பேருந்துகளுக்கு பதிலீடாக அனுப்புவது எவ்வகையில் நியாயம்? பேருந்துச்சாலைக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு கேட்டால் பஸ் புறப்பட்டு விட்டது என்று கூறுவர். இல்லாது விட்டால் அலைபேசி அழைப்பைத் தொடரமாட்டார்கள். ஆடத்தெரியாதவன் அரங்கு பிழையென்றானாம் என்ற கதைபோன்று நொண்டிச்சாட்டுக் கூறுகின்றனர். மக்களுக்காக சேவை செய்யவேண்டிய அரச அதிகாரிகளே இவ்வாறு நடந்து கொள்வது சரிதானா?

**கொற்றவை.**

## ஜே /409,புலோலி மத்திக்கு நிரந்தர கிராம சேவையாளர் அவசியம்

ஜே/409, புலோலி மத்தி பிரிவுக்கு கிராம சேவையாளராக பல்லாண்டுகளாக சேவையாற்றிய கிராம சேவையாளர் சுகவீனம் காரணமாக இளைப்பாறியமையால், தற்காலிகமாக சேவையை வழங்க அயல் பிரிவுக் கிராமசேவகர் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் இந்தப் பகுதி மக்களுடன் அவருக்குப் போதிய அறிமுகம் அற்ற நிலையிலும், வியாழன் மட்டுமே அவரைச் சந்திக்க முடியும் என்ற நிலையிலும் அநேகர் சங்கடப்படவேண்டியுள்ளது. எனவே உகந்த சுமுக நிலை இடம்பெற, உரிய நிரந்தர நியமனத்துடன் கிராம சேவையாளரொருவரை நியமித்தால், இந்தப்பிரிவுக்கு நன்மை கிட்டும். சிரமம் குறையும். உரிய வடமராட்சி வடக்குப் பிரதேச நிர்வாகம் இதுவிடயத்தில் கவனம் செலுத்துமாக.

**ஸ்ரீஸ்கந்தராசா ஆத்தியடி, புலோலி.**

## உரியவர்கள் கவனம் செலுத்தி உதவுவார்களா?

யாழ். குடாநாட்டு வீதிகளில் பல, குறிப்பாக யாழ். நகரத்து எல்லைக்குட்பட்ட வீதிகளில் பல 'காப்பெற்' வீதிகளாக மாற்றமுற்றதனால் வாகனங்களது சாரதிகள் தமது வாகனங்களை அதீத வேகத்தில் செலுத்திச் செல்வது வாடிக்கையாகி விட்டுள்ளது.

பாதசாரிகள் வீதிகளைக் கடக்க வேண்டிய இடங்களில் இடப்பட்ட மஞ்சள் குறியீடுகள் தற்போது பல இடங்களில் வர்ணம் மங்கித் தெளிவாகத் தெரிவதில்லை. பாதசாரிகள் குறித்த வீதிக் கடவைகள் குறித்துப் பழக்கப்பட்டுப் போனமையால், உரிய இடங்களில் பாதையைக் கடக்க முனைகின்றனர். ஆயினும், இந்தப் பிரதேசத்துக்கு புதிதாக வரும் வாகனச் சாரதிகள் குறித்த மஞ்சள்கோடுகள் தெளிவில்லாதிருப்பதால் பாதசாரிகள் பாதையைக் கடக்க தமது வாகனங்களை நிறுத்தி அனுமதிப்பதில் சிரமத்தை எதிர்நோக்குவதை அண்மையில் ஒருநாள் நேரடியாகக் கண்டு அனுபவிக்க நேர்ந்தது.

எனவே குறித்த பாதை ஒழுங்குகளை மேற்கொள்ளப் பொற்றுப்பான தரப்பினர் இது குறித்து அக்கறை செலுத்தி பாதையின் மஞ்சள் கோடுகளைக் தெளிவாகச் சகல தரப்பினருக்கும் தெரியக் கூடியதாகப் புதுப்பித்து வர்ணம் தீட்டி, விபத்துக்களைத் தடுத்து பாதசாரிகளும், வாகன ஓட்டுநர்களும் பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்ள உதவுவார்கள் என நம்புகிறேன்.

**க.ஜீவா, கல்வியங்காடு.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

# நீர்வெறுப்பு நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!

திருமதி சஸ்ரூபி சதீஸ்


உலக நீர்வெறுப்பு நோய் தினம் வருடா வருடம் செப்ரெம்பர் 28 ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

நீர்வெறுப்பு நோயானது மிருகங்களிடமிருந்து மனிதனுக்குக் கடத்தப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு வைரஸான Rabies Virus ஆனது தங்கி வாழ்வதற்கான சிறந்த இடமாக விலங்குகளின் உடல் காணப்படுகின்றது. இவ்வகையான வைரஸினால் பீடிக்கப்பட்ட விலங்குகளிலிருந்து மனிதனுக்கு கடத்தப்படுவதன் மூலம் ஏற்படும் இறப்புக்களில் 95வீதத்துக்கு மேலான இறப்பானது நாய்க்கடியினால் ஏற்படுகிறது.

இவ் வைரஸானது உடலின் மூடிய தோலினூடாக எம் உடலினுள் செல்லாது. இவ் வைரஸானது விலங்குகளிலிருந்து அவற்றின் எச்சில் மூலம் உடம்பில் ஏதேனும் காயங்கள் (சொறிவதால் ஏற்பட்ட கீறல் காயமாகினும்) காணப்பட்டால் அல்லது அந்த விலங்கு எம்மைக் கடித்தால் எம் உடலினுள் சென்றுவிடுகிறது. இவ்வாறு சென்ற வைரஸானது உடலின்மூளையின்பகுதிக்குசென்று அங்கு மேலும் வளர்ச்சியடைந்து குணங்குறிகளைக்காட்டமுனைகிறது. இவ்வகையான ஆபத்தான நீர்வெறுப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் செப்ரெம்பர் 28 ஆம் திகதி உலக நீர்வெறுப்புதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தினம் இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்வை ஞாபகப்படுத்துகிறது. இந்த நோயிற்கெதிரான நீர்ப்பீடனத்தை வழங்கக்கூடிய தடுப்புமருந்தைக் கண்டு பிடித்த இரசாயனவியலாளரும், நுண்ணங்கிவியலாளருமான லூயிஸ் பாஸ்ரர் இறந்ததினமும் செப்ரெம்பர் 28 ஆம் திகதியேயாகும். இன்றைய நாள்களில் பாதுகாப்பான, வினைத்திறனான தடுப்புமருந்தை நீர்வெறுப்பு நோய்க்கெதிராகப் பாவிப்பதன் மூலம் இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்த இயலுமாகியுள்ளது.

இந்த வருடம் 2016ஆம் ஆண்டுக்கான தொனிப்பொருளாக அமைவது, "நீர்வெறுப்பு நோய்க்கெதிரான தடுப்பு மருந்து பற்றிய கல்வியை மக்களுக்கு புகட்டுவதன் மூலம் நீர்வெறுப்பு நோயை இல்லாதொழிப்போம்" என்பதாகும். இந்தத் தொனிப்பொருள் மூலம் எதிர்பார்க்கப்படும் விடயம், 2030ஆம் ஆண்டளவில் இந்தநோயினால் ஏற்படும் மனித இறப்புக்களை இல்லாதொழித்தல் என்பதாகும்.





### வைரஸ் தொற்றின் அறிகுறி

இனி இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவரில் தென்படும் அறிகுறிகளைப் பார்ப்போம். உடலினுள் தொற்றுக்குள்ளான இந்த வைரஸின் வளர்ச்சிக் காலம் அல்லது அடைகாக்கும் பருவம் பொதுவாக ஒன்று தொடக்கம் மூன்றுமாத காலமாயினும், அது ஒரு வாரம் தொடக்கம் ஒருவருடம் வரைகூட நீடிக்கலாம். விசர்நாய்க் கடிக்குள்ளான ஒருவரில் ஏற்படும் குணங்குறிகளை இரு பிரதான வகையினுள் உள்ளடக்கலாம். ஆரம்ப குணங்குறிகளாக காய்ச்சல் ஏற்படல், நாய் கடித்த இடத்தில் எரிவு காணப்படல் போன்றவை உணரப்படும். மேலும் இந்த வைரஸானது, எமது மூளைமைய நரம்புத் தொகுதியெங்கும் பரவுவதால் நாள் போக்கில் மூளை மற்றும் முள்ளந்தண்டுப் பகுதிகளையும் பாதிக்கும். இதனால் வழக்கத்துக்கு மாறாக அதீத படபடப்பு, தன்னால் கட்டுப்படுத்த முடியாத உடல் ஆட்டங்கள் காணப்படல் மற்றும் தண்ணீரை வெறுத்தல் போன்ற செயற்பாடுகளை அவதானிக்கலாம். சில நாள்களின்பின்னர், இதய, சுவாச அங்கங்களின்தொழிற்பாடு இல்லாமற்போனதும் இறப்பு நேரிடுகிறது. மற்றைய வகையான குணங்குறி குறைவாகவே தென்படும். அதாவது நாயின் கடிக்குள்ளான இடத்தைச் சுற்றியுள்ள தசைப்பகுதியானது சிறிது சிறிதாக உணர்ச்சியற்றதாக, விறைப்பாக மாறும். பின்னர், உடல் முழுவதும்விறைப்புநிலைஏற்பட்டுஇறுதியில்இறப்புநேரிடுகிறது. ஒவ்வொரு 15 நிமிட இடைவேளையில் ஒருவர் இந்த நோயால் இறக்கின்றார் எனக் கணக்கிடப்படுகிறது. இதிலும் 40 வீதமானோர் 15 வயதுக்குக் குறைவான சிறுவர் பராயத்தினராவர் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இனி, எவ்வாறு விசர்நாய்க்கடி வியாதியை இல்லாதொழிக்கலாம் என்று பார்ப்போம். எமது வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பூசி போடவேண்டும். இதன்மூலம் Rabies வைரஸை நாயின் உடலிலிருந்து அழித்துவிடலாம். மேலும், மனிதர்களாகிய நாமும் முற்கூட்டியே இந்தத் தடுப்பு ஊசியைப் போட வேண்டி நேரிடலாம். எவ்வாறான சந்தர்ப்பங்களென்றால், தொலை தூரத்துக்கு பயணிக்க வேண்டியிருப் பின், அல்லது விலங்குகள் வதியும் இடத்தில் முகாம் அமைத்து தங்கியிருக் வேண்டியிருப்பின் அல்லது விலங்குகளுடன் விளையாடுபவராயின் முற்பாதுகாப்பு அவசியமானதே.

அடுத்ததாக, சிறுவர்களை விசர் நாய்க் கடியிலிருந்து பாதுகாப்பது எப்படி என்று நோக்குவோம். பொதுவாக 5 வயது தொடக்கம் 14 வயது வரையுள்ள சிறுவர்களை கவனத்திற் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். மிகவும் சிறந்த பாதுகாப்பான முறை யாதெனில்,.வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பூசி போடுவதும், சிறுவர்களை நாய் கடிக்காமல் இருக்கும்படி பாதுகாத்துக் கொள்வதுமாகும்.

### விசர்நாய்க் கடியிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது எப்படி?

01.நாய் தனது உணவில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது அல்லது தனது குட்டிகளுடன் விளையாடிக் கொண் டிருக்கும் போது அல்லது தூக்கத்திலிருக்கும் போது அதைத் தொந்தரவு செய்யக் கூடாது. அதையும் மீறி தொந்தரவு செய்தால் அல்லது பயமுறுத்தினால் என்ன நடக்கும். எங்கள் செல்லப்பிராணி எங்கள் சிறுவனையே கடித்து விடுகிறது.

02.நாய் கோபத்துடன் இருக்கும்போது தனது பற்களை வெளியே காட்டிக் கொண்டிருக்கும். அத்துடன் பயத்துடன் காணப்படுகையில் தன் வாலைத் தன்பின் இருகால்களுக்கிடையில்வைத்துக்கொண்டு தன் இரு செவிச் சோனைகளையும் சமாந்தரமாக நிலத்தை பார்த்தபடி வைத்துக் கொள்ளும், இத்தகைய சந்தர்ப்பத்தில் சிறுவரை நாயிடமிருந்து விலகியிருக்கச் செய்ய வேண்டும்.

03.நாய்உங்களைக்கடிக்கவரும்போதுஉடனடியாகவே அந்த இடத்திலேயே அசையா மரம் போல் நிற்க வேண்டும். அல்லது நிலத்தில் விழுந்து விட்டால் அசையாப் பாறை போல் நடிக்க வேண்டும்.

04.வளர்ப்பு நாயாக இருப்பினும் அதனுடன் விளையாடத் தொடங்கு முன்னர், பெற்றோரின் சம்மதத்தைப் பெறவேண்டும். நாயுடன் அறிமுகமாகும் போது அதன் முதுகின் மேலாக அல்லது பக்கவாட்டின் மேலாக பொதுவாக தடவுவதன் மூலம் அதனுடைய நட்பைப் பெற்றுக் கொள்ள முயலலாம்.

05.நாயின் கடிக்கு இலக்காகியிருந்தால், காயத்தை உடனடியாக சவர்க்கார நீரினால் 15 நிமிடத்தினுள் கழுவவும். கழுவிய பின் முதலுதவி வசதியை பெற முனைய வேண்டும். அத்துடன் உங்களைக் கடித்த நாயைப் பற்றிய விவரங்களையும் (நாயின் நிறம், பருமன், எங்கே வைத்து கடித்தது, உடலின் எப்பாகத்தில் கடித்தது, இந்த நோய்க்கு விசர்நாய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதா?) அவதானித்து வைத்திருக்க வேண்டும். பின்னர், வைத்தியசாலை சென்று சிகிச்சை பற்றிய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

01.தன்போக்கிலுள்ள நாயைத் தொந்தரவு செய்யாதீர்!
02.கோபமாயிருக்கும் நாயிடமிருந்து விலகி இருப்பீர்!
03.நாய் கடிக்க வரும்போது அசையா மரம் போல் அல்லது அசையாப் பாறை போல் கிடப்பீர்!
04.வளர்ப்பு நாயாக இருப்பினும் பெற்றோரின் சம்மதத்துடன் நாயை அணுகுவீர்!
05.நாய் கடித்த காயத்தை சவர்க்கார நீரால் கழுவி முதலுதவிச் சேவையைப் பெற்றுத் தடுப்பூசி ஆலோசனையையும் பெறுவீர்!



சூரியகாந்தி
உதயன்
23.10.2016



பக். 25
இராணுவக் கொள்ளை



பக். 26
செல்ஃபி



பக். 24
ஜனாதிபதி புலம்பியதன் அர்த்தங்கள்



பக். 23
சோகத்தில் தாய்லாந்து



# பாசி வளர்ப்பில் கடலோரப் பெண்கள்



குணசேகரன் சுத்தீனா

கடற்கரையில் பலதரப்பட்ட மனிதர்கள் நின்றார்கள். அவர்கள் தமது வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தொழிலுக்குப் போவோர், தொழில் முடித்து வருபவர்கள் என்று தமது வேலைகளில் ஆண்கள்தான் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் எமில்டா அக்கா, றோஸ் அக்கா போன்ற சில பெண்களும் அங்கு நின்றார்கள். அவர்கள் பாசி வளர்ப்பவர்கள் என்பதை அவர்களின் செயல்களே காட்டின.

"இப்ப நாங்களும் உழைக்கிறம். எங்களுக்கான தேவைகளைக் குறைந்தளவாவது பாசியால வாற பணத்தைக் கொண்டு நிறைவேற்றமுடியுது. இது ஒரு இலகுவான தொழில். எங்கட கடலோட இணைந்ததான தொழில்"





என்கிறார்கள் அவர்கள். "வேலையில்லாமல் வீட்டில சும்மா இருக்கிறத நினைச்சு நிறைய நாள்கள் கவலைப்பட்டிருப்பன். அவர் இருக்கேக்கயே வறுமையில தான் வாழ்ந்தனாங்கள். இப்ப அவர் இல்லாத போது நாங்க படுற கஸ்ரத்த வார்த்தைகளால சொல்ல முடியாது. பாசி வளர்ப்பு எனக்குப் பெரும் உதவியாக இருக்குது. நல்ல வருமானம் தரும் தொழிலாயுமுள்ளது"

பாசி வளர்ப்பில் ஈடுபடும் பெண்கள் ஒவ்வொருவரின் வார்த்தைகளும் இப்படித்தான் இருக்கின்றன. கரையோரச் சூழல் மற்றும் சமூகங்களுடன் தாக்குப் பிடிக்கும் வாழ்வாதாரம் என்ற முறையில் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு இப்பொழுது வளர்ச்சி கண்டு வருகிறது கடற்பாசி வளர்ப்பு.

பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மீனவக் கிராமம் வலைப்பாடு. இங்கு வாழும் அனைவரும் கடற்றொழிலை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகின்றார்கள். ஆண்கள் கடற்றொழில் செய்கிறார்கள். பெண்கள் வீடுகளில் தான் இருப்பார்கள். சில பெண்கள் சிப்பி சேகரிக்கச் செல்வார்கள். சிலர் கடலட்டை வளர்ப்பிலும் ஈடுபடுகின்றார்கள். இவற்றில் பெண்களால் குறைந்தளவு பணம்தான் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் கடற்பாசி வளர்ப்பு பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்குப் பெரும் உதவியாக இருக்கின்றது அவர்களுக்குத் தேவைக்கேற்ப வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கின்றது.

கடற்பாசி வகைகளில் 'கப்பாபைக்கஸ்' எனும் பாசியை வளர்ப்பதற்காகத் தெரிவு செய்கிறார்கள். 'கப்பாபைக்கஸ்' பாசியில் இருந்து 'கூழிறுக்கி' என்று அழைக்கப்படுகின்ற ஒரு வகையான மூலப் பொருள் பிரித்தெடுக்கப்படுகின்றது.

நீரியல் நடவடிக்கைகள், நீண்ட கால இலாபமீட்டல், எதிர்காலத்திற்கான முதலீடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பாசி வளர்ப்பிற்கு ஏற்ற இடமாக மன்னார் வளைகுடாப்பரப்பைத் தெரிவு செய்திருக்கிறார்கள்.

காய்ந்துபோன பாசிகளை மீண்டும் ஒருமுறை உலர்த்திக் காயவைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் எமில்டா அக்கா. அருகில் சென்ற நானும் அவற்றைத் தொட்டுப் பார்த்தேன். "இன்றைய வெயிலோட இந்தப் பாசிகளை அள்ளலாம் பிள்ள" என்றார் அவர்.

## கடல் விவசாயம்

"நாங்கள் பாசி வளர்ப்பைக் கடல் விவசாயம் என்றுதான் சொல்லுறனாங்கள். நாத்து நடுவதற்கு நிலத்தைப் பண்படுத்துற மாதிரிக் கடலில உள்ள ஏனைய கழிவுகளை அகற்றினாப்பிறகு அந்த இடத்த நாங்கள் தெரிவு செய்வம். ஆனால் இவ்வாறு நாம் செய்வது கடற்சூழலுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது" என்று மேலும் கூறினார் எமில்டா அக்கா.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி, பெண்களின் பங்களிப்பு போன்றவை சமூகத்தில் இதன் செல்வாக்கை மேலும் அதிகப்படுத்தியது. பாசிகள் முழுநேரமும் கடலிலே இருப்பதால் புறத்தாக்கங்கள் இவற்றைப் பாதிக்காது. குறுகிய பரப்புக்களில் மேற்கொள்ளலாம். கடற்தோற்றத்தில் மாறுதல்கள் ஏற்படுவதில்லை, தாவர பல்லினத்தை மேம்படுத்தல், நன்னீர் தேவைப்படுவதில்லை என்பவை பாசி வளர்ப்பை மேலும் வளர்ச்சியடையச் செய்தது. இந்த வளர்ச்சியில் உலக உணவுக் கட்டமைப்பின் ஊக்கமும் பெரிய தாக்கத்தை மக்கள் மத்தியில் செலுத்தியது.

## சாதகமான கடற்சூழல்

"பாசிவளர்ப்புக்கு ஏற்ற நீர்ப்பகுதியை நன்னீர் ஓட்டம் மற்றும் மாசடைதல் இல்லாது தேர்ந்தெடுக்க வேண்டும். பாறை மற்றும் மணற்பாங்கான கீழ்த்தளத்தில் நீரின் உப்புத்தன்மை 30PPt ஆகவும் நீர் ஓட்டம் 20 தொடக்கம் 40 மீற்றர் தாழ் அலையில் இருந்து 3 மீற்றர் நீர் ஆழமாகவும், வெப்பநிலை 26-32 பாகை செல்சியசும் இருக்க வேண்டும். படகு நிறுத்தும் இடங்கள், சதுப்பு நிலக்காடுகள், நன்னீர்புகும் பகுதிகள், பவளப்பாறைகள் உள்ள இடங்களில் பாசிவளர்ப்பினை மேற்கொள்ள முடியாது.

கடலில் பாசி வளர்ப்பிற்கு நைலோன் நூல், மிதவை, மணல்மூட்டைகள், வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்கள், துளையுள்ள பை மற்றும் துருப்பிடிக்காத கத்தி போன்றவை உருவாக்கத் தேவைப்படும். வலைப்பாட்டில் மோனோலைன் மற்றும் மூங்கில் மிதவை முறை மூலம்தான் பாசி வளர்ப்பை மேற்கொள்கிறார்கள்.

## விதை நடுகை

"பாசிகளுக்கு மேல் மூடுவதற்கு ஈரமான துணிகளைத்தான் பாவிப்பம். விதைப் பாசிகளாக 150கிராம் தொடக்கம் 200 கிராம் வரையான எடை கொண்ட வயதில் குறைந்த ஆரோக்கியமான விதைப்பாசிகளைத் தெரிவு செய்வோம். அவற்றை அதிகாலையில் அல்லது மாலைப் பொழுதில் சூரியஒளி படுவதைத் தவிர்த்து நடுகைக்காக எடுத்துச் செல்வோம். ஏனெனில் சூரிய ஒளி பட்டால் பாசி நுனி தளர்வடைந்து வளர முடியாமல் போயிடும். பின்பு விதைப் பாசிகளை ஒரு விதைப் பெட்டிக்குள் இடம் மாற்றி வைப்போம். அவற்றை 10 தொடக்கம் 15 நிமிடங்களுக்கு அதனுள் வைத்துப் பின்னர் நீருக்குள் அமிழ்த்தி விடுவோம். அவை வளர்ந்து பரவத் தொடங்கிவிடும். இப்பொழுது நாங்களும் பாசி வளர்ப்பில் கைதேர்ந்த வல்லுநர்கள் ஆகிவிட்டோம். நாங்கள் நல்ல முறையில் வளர்த்து அதனைக் காயவைத்து முடிவிலிகளாக இருக்கும்போது நிறுவனத்தினரால் கொள்வனவு செய்யப்படும். அந்தக் கொள்வனவு செய்யப்படும் தருணம் மிகவும் பெருமையாக இருக்கும்" என்றார் எமில்டா.

கரைக்குக் கொண்டுவரப்பட்டிருந்த வளர்ந்து முற்றிய பாசிகளை அள்ளி அணைத்துக் கொண்டு வந்தா றோஸ் அக்கா. பாசிவளர்ப்பில் அனைவருக்கும் எடுத்துக் காட்டாக இருப்பவர் றோஸ் அக்கா நல்ல முறையில் பாசிகளை வளர்த்து எடுப்பாவாம்.

பாசி வளர்ப்புத் தொடர்பாக அறியாதவற்றை றோஸ் அக்காவிடம் பெற்றுக்கொள்ள முயற்சித்தேன். சரியாகக் களைத்துப் போயிருந்தா. நீண்டநேரக் காத்திருப்பின்பின் எனது கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

## உழைக்கும் பெண்கள்

"பாசி வளர்ப்பு எனக்குச் சிறந்த பயனைத் தருகிறது. நான் இதில தான் அதிக நேரம் மினக்கிடுறனான். போசனை இடம், ஒளி போன்றவற்றுக்காக கடற்புற்கள் கடற்பாசியுடன் போட்டிபோடும் இவற்றை அகற்றவேண்டும். இதற்கு அமைதியான வானிலை உள்ள நேரம் நல்லது. விதைப்பாசிகளுடன் ஒட்டிக் கொள்ளும் படிவுகள் மற்றும் வெளிப் பொருள்களை அகற்றுவதற்குப் பயிர்ச் செய்கை வரிகளை நல்லா ஆட்டி விட வேணும். தேவைப்படும்போது ஆதாரத்துக்குப் பயன்படும் பொருள்களைத் திருத்த வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்ட கடல் பாசிகளை அகற்றி ஆரோக்கியமான ஒன்றினால் அவற்றைப் பிரதியீட்டலாம் அல்லது மாற்றுப் பாசியை வைப்போம். ஏனெனில் பாதிக்கப்பட்டதை எடுக்காது விட்டால் அது பரவி அனைத்துப் பாசிகளும் கெட்டுவிடும். அதனால்தான் இப்படிச் செய்வோம். நான் இவற்றில் மிக அவதானமாக இருப்பன்" கூறிக்கொண்டே கிழே கிடந்த பாசிகளை ஒவ்வொன்றாக அள்ளினார் றோஸ் அக்கா.

"அறுவடை செய்யும் முறையில் மாற்றமும் ஏற்படும் பிள்ள. அதாவது உயர் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு 45நாள்களுக்குள் குறையாமலும் 90நாள்களுக்கு மேற்படாமலும் உள்ள காலப்பகுதியில் பாசிகள் நன்றாக முற்றி அறுவடை செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். 65 கிலோகிராம் பாசியை விதைச்சோம் என்றால் 45நாள்களுக்குப்பின்னர் 266கிலோகிராம் பாசியாக் கிடைக்கிறது. காய்ந்த பாசி ஒரு கிலோக் கிராம் 45ரூபாவுக்கு எங்களிட்ட இருந்து கொள்வனவு செய்வினம்.

அடுத்த தடவை நடுகைக்காக இளமையான ஆரோக்கியமான விதைப்பாசிகளை அறுவடையில் இருந்து தெரிவு செய்து வைப்போம். தேவையற்ற கடற்பாசிகள் சிறிய மட்டிகள் போன்றவைகளையும் பிளாஸ்டிக் துண்டுகளையும், படிவுகள் மற்றும் வெளிப்பொருள்களையும் அறுவடை செய்யப்பட்டவையிலிருந்து காயவிட முன்னர் அகற்றிவிடவேணும். ஏனென்றால் இவையும் பாசியுடன் சேர்ந்து உலர்ந்துவிட்டால் பின்பு பிரிக்க ஏலாது"

எடுத்துக் கொண்டு வந்த பாசிகளை வெய்யிலில் காய்வதற்கு ஏற்ற மாதிரிப் பரவி விட்டுக்கொண்டிருந்தார் றோஸ் அக்கா.

"பிள்ள! காயவிடுதலில் இரண்டு முறைகளை நாங்கள் பயன்படுத்திறனாங்கள் அழுக்கு, சேறு, மணல் மற்றும் தேவையற்றவைகள் ஒட்டுவதைத் தவிர்ப்பதற்கு தொங்கவிடும் முறை அல்லது மேடையில் பரவப்படும் முறைகளைப் பயன்படுத்துவோம். காய்வதற்கு இரண்டு அல்லது மூன்று நாள்களும் எடுக்கும். கால நிலையைப் பொறுத்து இது அமையும். மழை பெய்யும்போது மூடி விடுவம். பழுதடைவதைத் தவிர்ப்பதற்கும் நன்னீர் கலந்து விடாது இருப்பதையும் பார்த்துக் கொள்வோம். நீண்ட காலம் தக்கவைப்பதற்கும் உயர் விலைக்கு விற்பதற்கும் 35தொடக்கம் 38வீதம் ஈரலிப்பைப் பேணவும் வேண்டும்.

நாங்க நல்ல முடிவிலிகளாக உலர்ந்த பாசிகளை விநியோகத்திற்கு ஏற்ற மாதிரி வைத்திருப்போம். எங்களிட்ட இருந்து கொள்வனவு செய்வினம். பின்பு இவற்றைப் பதப்படுத்தி உணவுப்பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்துவார்கள். இந்த உணவுப் பொருள்கள் வெளிநாடுகளில் நல்ல விருப்பைப் பெற்றிருக்கின்றன.

எங்களுக்கு நல்லதொரு தொழிலாக பாசிவளர்ப்பு இருக்கின்றது. எதையும் நல்ல முறையில் செய்தால் நல்ல பயனை அனுபவிக்கலாம். நான் இன்னொரு கட்டுப் பாசியையும் எடுத்துக் கொண்டுவர வேணும். இப்ப நல்ல வெயில் நேரம் இரண்டு நாளையில உலர்ந்திடும்" என்றவாறே என்னிடம் இருந்து விடைபெற்றார் றோஸ் அக்கா.

வலைப்பாட்டுக் கடற்கரைக்கு பொழுதுபோக்கிற்காக மட்டும் சென்றுவந்த என்னை இன்று றோஸ் அக்கா, எமில்டா அக்கா போன்ற பெண்கள் இவ்வாறு நல்ல விடயங்களும் இருக்கின்றன என்பதைக் கூறித் திரும்பவும் அழைக்கிறார்கள். "வெயில் எங்களைச்எரித்துவிடாதுபாசியைஅள்ளுங்கோ" என்ற றோஸ் அக்காவின் குரல் கடற் காற்றையும் தாண்டித் தெளிவாகக் கேட்டது.





# சோகத்தில் தாய்லாந்து

தவபாரதி

தாய்லாந்து தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு நாடு. இதன் எல்லைகளாக வடக்கே மியான்மார், லாவோஸ் ஆகியனவும், கிழக்கே லாவோஸ், கம்போடியா ஆகியனவும், தெற்கே தாய்லாந்து வளைகுடா, மலேசியா ஆகியனவும், மேற்கே அந்தமான் கடலும் அமைந்துள்ளன. தாய்லாந்தின் மன்னரே அந்த நாட்டின் அரச தலைவரும், இராணுவப் படைகளின் தலைவரும், அந்த நாட்டின் மதத்தை மேனிலைப்படுத்துபவரும், பாதுகாவலரும் என அனைத்துக்கும் தலைமை தாங்குபவராக விளங்குவார். 1932இல் இராணுவ மற்றும் குடிமக்களின் பங்களிப்புடன் 'கானா ரட்சடோன்' என்ற குழுவினர் தோற்றுவித்த புரட்சி, இதுவரையிருந்த முழுமையான மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசியல் ஆட்சி மாற்றத்திற்கு உதவியது. மன்னர் பிரஜாதீபக் தாய்லாந்தில் முதலாவது அரசமைப்பை அறிவித்தார். அதன் மூலம் இதுவரை நிலவிய வரையறையற்ற முடியாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து தாய்லாந்தின் ஆளுகை அரசியல்சட்ட முடியாட்சியின் அடிப்படையில் இடம்பெற்று வருகிறது. இதன்படி அரச தலைவராகப் பிரதமரும், நாட்டுத் தலைவராக மரபுவழி அரசரும் உள்ளனர்.

## உலகின் நீண்ட கால ஆட்சியாளர்

1932ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியல் மாற்றத்தை அடுத்து முழுமையான மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அன்று முதல் தாய்லாந்து 17அரசமைப்புச் சட்டங்களைக் கண்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் இராணுவ ஆட்சிகளும், ஜனநாயக ஆட்சிகளும் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் அனைத்து அரசுகளும் மரபுவழி அரசர்களையே தமது நாட்டுத் தலைவராக ஏற்றுக் கொண்டன. தாய்லாந்தில் அரச ஒற்றையாட்சி நாடாளுமன்ற முறையின்படி அரசியல்சட்ட முடியாட்சியே நிலவுகின்றது. மன்னர் ஒன்பதாம் இராமாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது இது. 1946இல் முடிசூடிய சக்கிரி வம்சத்தைச் சேர்ந்த ஒன்பதாம் இராமா மன்னர், உலகில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஒரு நாட்டுத் தலைவர், தாய்லாந்து வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த மன்னர் ஆகிய பெருமைகளைக் கடந்த வாரம் இயற்கை எய்தியபோது பெற்றார். மன்னர் பூமிபால் அதுல்யாதெச். (ஒன்பதாம் இராமர்) என்பது அவர் பெயர்.

## 18வயதில் பதவியேற்றவர்

1945களில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தாய்லாந்தின் அரசியல் உறுதிப்பாடு ஆட்டம் கண்டதால், தாய்லாந்தில் மீண்டும் முடியாட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதுவரை சுவிட்சர்லாந்தில் வசித்து வந்த பூமிபோல் குடும்பத்தினர் மீண்டும் தாய்லாந்துக்குத் திரும்பினர். அவ்வேளை தாய்லாந்தின் எட்டாவது மன்னராகப் பூமிபோலின் அண்ணன் ஆனந்த மாஹிடோல் முடிசூடிக்கொண்டார். 1946ஆம் ஆண்டு மன்னர் ஆனந்த மாஹிடோல் அவரது தங்குமிடத்தில் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர்கள் யார்? என்பதற்கான விடை இதுவரை கிடைக்கவில்லை. இதனால் தனது 18ஆவது வயதில் பூமிபோல் அடுல்யதேஜ் தாய்லாந்தின் ஒன்பதாவது மன்னராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன்பிறகு 1946முதல் 2016ஒக்ரோபர்13இல் அவர் இறக்கும் வரை 70 ஆண்டுகள் நாட்டின் தலைவராக இருந்தார்.

> தனது 18ஆவது வயதில் பூமி போல் அடுல்ய தேஜ் தாய் லாந் தின் ஒன்பதாவது மன்னராகப் பொறுப் பேற்றுக் கொண்டார். அதன்பிறகு 1946 முதல் 2016ஒக்ரோபர்13இல் அவர் இறக்கும் வரை 70 ஆண்டுகள் நாட்டின் தலைவராக இருந்தார்.

## சிறந்த ஜனநாயக மன்னர்

1946ஆம் ஆண்டு பூமிபோல் மன்னராகப் பதவி ஏற்றிருந்த நேரத்தில் ஜனநாயக அரசியலா? இராணுவ ஆட்சியா? என எந்த வழியைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பத்தில் தாய்லாந்து இருந்தது. இராணுவ ஆட்சியைக் கேட்டவர்கள் மன்னர் தேவை இல்லை என்றார்கள். இந்தச் சூழ்நிலையில் பூமிபோல் தலைமையிலான அரச பிரபுத்துவ உறுப்பினர்கள், மன்னரை மையமாகக் கொண்ட ஜனநாயக அரசமைப்பை உருவாக்கினார்கள். பூமிபோலின் இந்தத் திட்டம் தாய் லாந்தின் எதிர்கால ஜனநர்யக அரசியலைத் தீர்மானித்தது. கொடுங்கோல் மன்னர்கள் என்ற பதத்தில் இருந்து மாறுபட்டு ஜனநாயக மன்னராகப் பூமிபோல் செயற்பட்டதால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

## மக்களுடன் மக்களாக

பூமிபோலின் ஆட்சியின் முதல் ஏழு ஆண்டுகள் தாய்லாந்தில் இராணுவத்தின் சர்வாதிகாரம் மேலோங்கி இருந்தது. அடக்குமுறைகளை மீறி 1950களில் பூமிபோல், நாட்டின் சிறிய கிராமங்களுக்குப் பயணம் செய்து கிராம மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார். கிராமப்புறங்களிலுள்ள உள்ளூர் விவசாயிகளுடன் கலந்துரையாடி அவர்களது குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்த அவரது அணுகுமுறை, அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. தாய்லாந்து சமுதாயம் மத மற்றும் ஆன்மிக நம்பிக்கைகளில் ஆழ்ந்து ஊறிய சமூகமாகும். பூமிபோல் நாட்டின் முக்கிய கோயில்களுக்குச் சென்று, விழாக்களில் தலைமை தாங்கி தன்னைப் பௌத்தமத நம்பிக்கையின் பாதுகாவலராக முன்நிறுத்திக் கொண்டார்.

## மன்னர்களுக்கு மகிழ்ச்சியில்லை

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரான தக்சின் ஆட்சிக்கு எதிராக 2006இல் நடந்த இராணுவச் சதிக்கும் மன்னர் பூமிபோல் அனுமதி அளித்தது அவரது வரலாற்றில் பெரும் கரும்புள்ளியாக அமைந்தது. தாய்லாந்து அரசமைப்புச் சட்டப்படி மன்னருக்குக் குறைந்த அதிகாரங்களே இருப்பதால், தனது முடியாட்சியைக் காப்பாற்றிக் கொள்ள சர்வாதிகார ஆட்சிக்கு அவர் தோள் கொடுத்ததாக இதனை ஜனநாயகவாதிகள் சாடியிருந்தனர். ஒருபக்கம் மக்களின் நண்பன், மறுபக்கம் சர்வாதிகாரிகளுக்கு நண்பன் என மன்னர் என்னதான் இரட்டைவேடம் போட்டாலும், மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த புகழுக்கு எந்தக் குறையும் வரவில்லை. 'நவீன தாய்லாந்தின் தந்தை, தாய்லாந்து மக்களின் கடவுள்' என வெவ்வேறு அடைமொழிகளில் மக்கள் அவரைக் கொண்டாடி வருகின்றனர். மன்னர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் அல்லது மன்னர் போல மகிழ்ச்சியாக இரு என்று கூறுவார்கள். ஆனால், அது உண்மை இல்லை இறுதியாக ஒரு கூட்டத்தில் பூமிபோல் பேசியது இது. இவ்வாறுதான் இவரின் இழப்பைத் தாங்க முடியாத தாய்லாந்து மக்களும் இன்று சோகத்திலுள்ளனர்.





# புதுப்புது அர்த்தங்களைத் தோற்றுவிக்கும் ஜனாதிபதியின் புலம்பல்கள்!



ஸுடோ ஸ்வாமி

மூக்கு என்று ஒன்று இருந்தால் இடைக்கிடையே சளி என்று ஒன்று ஏற்படத்தான் செய்யும். கூட்டு என்று ஒன்று இருக்குமானால் இடைக் கிடை குழப்பம் என்ற ஒன்றும் இருக்கத்தான் செய்யும். இதற்கு வெறுமனே தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புமாத்திரம் உதாரணமாக அமைந்து விட முடியாது. மத்தியில் அமைந்திருக்கும் நல்லாட்சிக்கான கூட்டணியிலும் இதே பிரச்சினைதான்.

கூட்டரசின் ஜனாதிபதி மைத்திரிபாலவின் புலம்பலை உள்ளடக்கிய அண்மைய உரையை அடுத்து அதனோடு இணைந்ததாக நடக்கும் சம்பவங்கள் உள்நாட்டு அரசியலைப் பரபரப்பாக்கியிருப்பது மாத்திரமல்லாமல் பங்குச் சந்தை யிலும் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தி யிருக்கின்றன.

கடந்த வாரத்துக்கு முந்தைய வாரத்தில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த நிகழ்வொன்றில் பங்குபற் றிய ஜனாதிபதி, அங்கு நிகழ்த்திய உரையில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பெரும் இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவு என்பவை அரசியல் நிகழ்ச்சிநிரல் ஒன்றின் கீழ் இயங்குவதாகத் தெரிவித்து விமர்சித்திருந்தார்.

முன்னாள் படைத் தளபதிகள் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை நடத்திய விதம் குறித்து வருத்தம் தெரிவித்திருந்த அவர்,குறித்த சுயா தீன ஆணைக்குழுக்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இயங்குமிடத்து தாம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்போகிறார் எனவும் அறிவித்தல் விடுத்திருந்தார்.

### உரையின் எதிரொலி

ஜனாதிபதியின் விமர்சனம், தெளிவான வெளிப்படுத்தல் களைக் கொண்டிருக்காமல் விட்டிருந்தாலும் அது ஐ.தே. கவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் இலக்கு வைத்ததே என்பது பகிரங்க இரகசியமாகும். குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியானதிலிருந்து அவரது கருத்தை ஆதரித்தும் எதிர்த்தும் கணைகள் தொடுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. மைத்திரிபாலவின் தேர் தல் வெற்றிக்கு உழைத்த தரப்புக்கள், ஜனாதிபதியின் அறிவிப்புத் தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட் டிருக்கின்றன. ஐ.தே.க. தரப்பிலிருந்து குறிப்பிட்டுச் சொல் லும் படியான உத்தி யோகபூர்வ அறிக்கை எதுவும் வெளி வந்திருக்கவில்லை. ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து கடந்த வாரத்தில் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழு வின் பணிப்பாளர் தில்ருக்ஷி விக்கிரமசிங்கவும் தனது பதவியைத் துறப்பதற்கான கடிதத்தை நீட்டியிருக்கின் றார். அவரது பதவிதுறப்புத் தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

### கட்சியின் பூசல்கள்

கூட்டாட்சி அரசை நிறுவிய பின்னர் இடைக்கிடை இப் படியான குற்றச்சாட்டுக்களுடன் கூடிய அறிக்கைகள் அரங்குக்கு வருவதும் பின்னர் ஊடகங்கள் மைத்திரிக் கும் ரணிலுக்கும் இடையிலான அரசியல் தேன் நிலவு முடிந்து விட்டதாகக் கதை பின்னுவதும் பின்னர் சமர சம் நிகழ்வதும் அல்லது நிகழ்ந்து விட்டதுபோலக் காட்டு வதும் கிட்டத்தட்ட வழக்கத்துக்குரியதாக மாறி வருகின் றது. இத்தகைய அல்லோலகல்லோலம்,மத்திய வங்கிக் கான புதிய ஆளுநரை நியமிக்கும் தறுவாயில் உச்சம் காட்டியிருந்தமை வாசகர்களுக்கு நினை விருக்கலாம்.

அதேவேளை ஆட்சியிலுள்ள இரண்டு முக்கிய கட்சிகளும் தமது ஆண்டு விழாக் கொண்டாட்டங் களை இந்த ஆண்டு பெருமெடுப்பில் கொண்டா டியிருந்தன. எனினும் ஐ.தே.கவின் 70ஆவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம் பொரள்ளையி லுள்ள கம்பல்பார்க்கில் இடம்பெற்றபோது அதன் முதன்மை அதிதியாக சு.க.வின் தலைவரும் ஜனா திபதியுமான மைத்திரிபால சிறிசேன பங்கெடுத்தி ருந்தார். ஆனால், சுதந்திரக் கட்சி தமது 65ஆவது ஆண்டு விழாவை குருநாகலில் கொண்டாடிய போது ரணில் விக்கிரமசிங்கவோ ஏனைய ஐ.தே.க. தரப்பினரோ அதில் பங்கெடுத்திருக்கவில்லை. ஊழல் மற்றும் குடும்பஆட்சி போன்றவற்றை ஒழிப்பது என்னும் தாரகமந்திரத்தைக் கொண்டு கடும் முயற்சிக்கு மத்தியில் போட்டியிட்டு வெற்றி யீட்டிய ஜனாதிபதி, தனது உரையில் வெளிப்படுத்தி யிருப்பது அவரது முரணான நிலைப் பாட்டைக் காண்பிக்கின்றது. ஒரு வகையில் சொல்லப் போனால் அரசியல் நிகழ்ச்சி நிர லின் பின்னணியில் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்கிற தோற்றப்பாடும் அதற்கு இருக்கிறது அல்லது குற்றச்சாட்டு ஒன்றிற்காக படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் சட்டத் தின் கீழ் தண்டிக்கப்படக்கூடாது என்று கொள்வதற்கும் இடம் இருக்கின்றது.

### புதுப்புது அர்த்தங்கள்

குறித்த மூன்று அமைப்புக்கள் தொடர் பாகவும் ஜனாதிபதி தெரிவித்த கருத் துக்கள் ஒருபுறம் இருக்க, அதற்கு அர்த்தம் கண்டுபிடிக்கும் வகையி லான அறிக்கைகளும் உரைகளும் பஞ்சமில்லாமல் உலாவருகின்றன. சு.கவின் பேச்சாளரும் அமைச்சரு மான டிலான் பெரேரா, ஜனாதிபதியின் உரையை கால்ப்பந்தாட்டத்தில் தவ றிழைத்தவர்களுக்குக் காட்டும் மஞ் சள் அட்டையுடன் ஒப்பிட்டுக் கருத்து வெளியிட்டிருக்கிறார். இடர்முகா மைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா, குறித்த நிறுவனங்களின் செயற்படுதிறனை முன்னேற்றும் அல்லது ஒழுங்குபடுத்தும் நோக்கிலேயே ஜனாதிபதி யின் கூற்று அமைந்திருந்ததாக வாதிடுகிறார். மூன்று கடற்படை அதிகாரிகளுக்கும் மற்றும் கோத்தபாய ராஜ பக்சவிற்கும் எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை தொடர் பில் தாம் முன்பு அறிந்திருக்கவில்லை என்பதைக் காண்பிக்கவே ஜனாதிபதிஇவ்வாறு தெரிவித்ததாகக் கூறுகிறார் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க. கோத்த பாய ராஜபக்சவை தம்பக்கம் ஈர்ப்பதற்கான ஜனாதிபதியின் முயற்சி இது என்று கருதுவோரும் இல்லாமல் இல்லை.

> தனித்து ஆட்சி அமைக்க முயற்சி செய்தல், அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளரைத் தயார்படுத்தல், மற்றைய கட்சியைப் பல மிழக்கச் செய்தல், கட்சிக்கு விசுவாசமான வர்களுக்கு நியமனம் வழங்கல், அரசியல் பழிவாங்கல் முயற்சிகள் போன்ற காரியங் கள் தேசிய அரச நிழலின் கீழ் காய் நகர்த்தப்பட்டு வருவது ஜனாதிபதியின் புலம்பல்களில் அவ்வப்போது தலைகாட்டியே வருகின்றது.

### அரசியல் வியூகம்

2020 வரை நிலைக்கக்கூடியதெனக் கருதப்படும் தற் போதைய அரசுக்குள் போட்டி, பிடுங்கல், வாய்க்கட்டுத் திறம் நிலவரமொன்று நிலவுவது அவ்வப்போது உணர்த்தப்பட்டே வருகின்றது. தனித்து ஆட்சி அமைக்க முயற்சி செய்தல், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரைத் தயார்படுத்தல், மற்றைய கட்சிகளைப் பலமிழக்கச் செய்தல், கட்சிக்கு விசுவாசமானவர்க ளுக்கு நியமனம் வழங்கல், அரசியல் பழிவாங்கல் முயற்சிகள் போன்ற காரியங்கள் தேசிய அரச நிழலின் கீழ் காய் நகர்த்தப்பட்டு வருவது ஜனாதிபதியின் புலம் பல்களில் அவ்வப்போது தலைகாட்டியே வருகின்றது. அதற்கு ஐ.தே.க. தரப்பு கடைப்பிடிக்கும் மௌனம் நில வரத்தை மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறது. ரணிலையோ அல்லது ஐ.தே.கவையோ நேரடியாகக் குறிவைக்காமல் இப்படியான புலம்பல்களையும் புறுபுறுப்புக்களையும் ஊடகங்களுக்கு அள்ளிவிடுவதென்பது ஜனாதிபதிக்கு வேண்டுமானால் மன அழுத்தத்தைக் குறைப்பதாக இக்கலாம். ஆனால், நல்லாட்சி விசுவாசிகளுக்குஅது நல்ல செய்தியாக அமையமாட்டாது.


கோப்புப் படம்

**இலங்கைக் கடற்படையில் 'கொமடோர்' பதவியில் இருந்த அஜித் போயகொடவின் 'எ லோங் வோட்ச்: வோர், கேப்டிவிட்டி அண்ட் ரிட்டேர்ன் இன் லங்கா' புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது. அஜித் போயகொட கூறச் செவிமடுத்து எழுதியவர் சுனிலா கலப்பட்டி.**

# இராணுவக் கொள்ளை

என்னுடைய இராணுவ வாழ்க்கையின் போக்கைத் தீர்மானித்த மிக முக்கியமான தருணம் அது. யாழ்ப்பணத்தின் வடக்காக உள்ள தீவுகளில் ஒன்றான காரைநகரில், 1991இல் நாங்கள் நடத்திய இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நடந்த சம்பவம். நோய்வாய்ப்பட்ட, பல வீனமான மக்களை எதிர்கொள்ளும்போது போரின் பாதிப்புகளை உங்களாலும் உணர முடியும்.

காரைநகரின் கடற்படைத் தளம் முற்றுகையிடப்பட்டிருந்ததால், ஒரு மாதத்துக்கு முன்பாகவே எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவைப் பெற்ற சமயத்தில், நான் இருந்த முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்படவிருந்த செய்தி கிழக்குப் பகுதியிலிருந்து கிடைத்தது. அப்போது கடல் வழியைத் தவிர, தரை வழிகள் முற்றுகைக்குள்ளாகியிருந்தன.

இரவில் நாங்கள் பீரங்கி பொருத்தப்பட்ட படகில் அங்கிருந்து புறப்பட்டு, கிழக்குக் கடற்கரை வழியாகத் தீவின் தலைப்பகுதியைச் சுற்றிக்கொண்டு பயணம் செய்தோம். திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவைக் கடந்து, பருத்தித்துறைக்குச் சென்று காலையில் காரைநகரை அடைந்தோம். தளத்தில் இரண்டாம் நிலை அதிகாரியாக எனக்குப் பணி நிலை வழங்கப்பட்டிருந்தது.

## இராணுவ முற்றுகை

காரைநகரில், கண்ணில்பட்ட அனைத்துமே சேதப்படுத்தப்பட்டிருந்தன. அப்பகுதியைக் கடந்து சென்ற இராணுவத்தினரால் 90இற்கும் அதிகமான வீடுகள் வலுக்கட்டாயமாக உடைத்துத் திறக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. தமிழர்களின் கிராமத்தின் வழியே செல்லும்போது, சிங்கள இராணுவம் எந்த மாதிரியான மனப்பான்மையுடன் நடந்துகொள்ளும் என்பதை நான் நேரில் பார்த்தது அங்குதான். பார்வையில் என்ன பட்டாலும் அதைச் சேதப்படுத்தினார்கள். அலுமாரிகள் திறந்து கிடந்தன. ஆடைகள் கலைக்கப்பட்டுக் கிடந்தன. குடும்பப் புகைப்படங்கள் நொருக்கப்பட்டிருந்தன. கட்டப்பட்டிருந்த ஆடு, மாடுகள் அவிழ்த்து விடப்பட்டிருந்தன. சில வீடுகளுக்குள் பசுக்கள் இருந்ததைப் பார்த்தேன். அங்கிருந்து வெளியேறியவர்கள் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துப் பார்த்தார்கள் என்றால், மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப மாட்டார்கள் என்று தோன்றியது. ஒருவேளை, அவர்கள் இளைஞர்களாக இருந்தால், விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்துவிடுவார்கள் என்றும் தோன்றியது.

## அதிகாரத்தின் அச்சுறுத்தல்

கோயில்களுக்குச் சென்றுவிடும்படி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இராணுவம்தான் அப்படி அறிவித்தது. எந்த ஒரு இராணுவம் அணிவகுத்துச் செல்லும்போதும், வீடுகளுக்குள் ஏதேனும் அசைவு தென்பட்டால், கொஞ்சம்கூடத் தயங்காமல் சுட்டுவிடுவார்கள். ஆனால், வழிபாட்டுத் தலங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடாது என்பது ஒரு விதி. எனவே, கோயில்களுக்குச் சென்றுவிடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்பின், சோதனை நடத்துவதற்கும் அது எளிய வழியாக இருந்தது. ஒரு சில நாள்களிலேயே, அந்தத் தீவு தரைப்படைக் கட்டுப்பாட்டில் வந்தது. மக்களைச் சோதனையிடும் பொறுப்பும் அவர்கள் வசம் வந்தது. புலிகள் மக்களிடையே ஊடுருவியிருக்கிறார்களா? என்பதைக் கண்டறிய அது தேவை. ஆனால், வேறு வகையான அட்டூழிங்களையும் என்னால் கவனிக்க முடிந்தது. அதனால்தான், ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகப் பிரித்து நிறுத்துமாறு இராணுவத்தினர் சொன்னபோது நான் ஆட்சேபித்தேன். அங்குள்ளபெண்களுக்கு என்ன நேருமோ என்ற அச்சம் என்னிடம் இருந்தது.

இந்த விடயத்தில் கடற்படை தலையிட வேண்டும் என்று வடபகுதித் தளபதியான எனது மேலதிகாரியிடம் சொன்னேன். இறுதிப் பொறுப்பு நம்முடையதுதான். எனவே, இப்போது நாம் தலையிட்டாக வேண்டும்என்றேன். இராணுவநடவடிக்கைகளுக்கு இராணுவம்தான் பொறுப்பு என்றாலும், மக்களின் பாதுகாப்புக்கும், நலனுக்கும் கடற்படைதான் பொறுப்பு. இராணுவத்தினரின் செய்கைகள் நமக்குத்தான் பிரச்சினையை ஏற்படுத்தும். எனவே, முதலிலிருந்தே நாம் இந்த விடயத்தில் பொறுப்பெடுத்துக்கொள்ளவேண்டும் என்றேன். என்ன ஆனாலும் சரி, குடும்பங்கள் ஒன்றாகவே வைக்கப்படவேண்டும் என்று கூறினேன். குடும்பத்துடன் இருந்தால்அவரவர் தாம் பாதுகாப்பாக இருப்பதை உணர்வார்கள். அண்டை வீட்டுக்காரர்களுடன் இருந்தால்கூட அப்படி உணர மாட்டார்கள் என்று கருதுகிறேன். இதையடுத்து, பொதுமக்கள் தொடர்பான இறுதி முடிவுகளை கடற்படைப் பொறுப்பு தளபதிதான் எடுப்பார் என்று முடிவெடுக்கப்பட்டது.

## திட்டமிட்ட திருட்டு

கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் தீவை விட்டு, தரைப்படையினர் வெளியேறத் தொடங்கினார்கள். படையினர் அங்கிருந்த வீடுகளில் பொருள்களைத் திருடியது, அவர்கள் வெளியேறிச் சென்ற பிறகுதான் தெரிய வந்தது. தங்கள் படையினரைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கவேண்டும் என்று இராணுவ அதிகாரிகளிடம் சொன்னேன். மிகவும் கவனமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொள்ளை அது. பூஜை அறையில்தான் பொதுவாகக் குடும்பங்களின் நகை, பணம் வைக்கப்பட்டிருக்கும் என்பது இராணுவத்தினருக்குத் தெரியும். அதற்காகத்தான் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்தார்கள். தங்க நகைகளைத் தேடி. இது போன்ற கொள்ளைகளைப் பற்றி நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், நேரில் பார்த்தது அதுதான் முதல் முறை.

உங்கள் வீடு நல்ல நிலையில் இருக்கிறது. திடீரென்று வீட்டை விட்டு வெளியேறி, வேறு எங்காவது போகச் சொல்லப்படுகிறது. சில வாரங்கள் கழித்து, திரும்பி வந்து பார்த்தால் உங்கள் வீடு சூறையாடப் பட்டிருக்கிறது. உங்களுக்கு எப்படி இருக்கும்? அது உங்கள் வாழ்நாள் சேமிப்பாக இருக்கும். எல்லாம் போய்விட்டிருக்கும். தலைமுறை தலைமுறையாகச் சேகரிக்கப்பட்ட உழைப்பின் பயன் அனைத்தும் நாசப்படுத்தப்பட்டிருக்கும்.

ஒரு குடும்பத்தின் புகைப்பட அல்பத்தைப் பற்றி ஒரு அந்நியருக்கு என்ன கவலை. ஆனால், அந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை அது ஒரு பொக்கிசம். அந்த அல்பத்தில் பல நினைவுகளின் தொகுப்பு பாதுகாப்பாகச் சேகரிக்கப்பட்டிருக்கும். இப்போது அந்த நினைவுகள் அத்தனையும் அலங்கோலமாகியிருக்கும்.

## தவறுகளுக்கு விளக்கம்

ஒருமுறை இரவு உணவு முடிந்தவுடன், "ஏன் இத்தனை கொள்ளைச் சம்பவங்கள் நடக்கின்றன?" என்று சில இளம் அதிகாரிகளிடம் கேட்டேன். படையினர் இப்படிச் செய்ய எப்படி அனுமதிக்கப்படுகிறார்கள் என்றேன். இப்படியெல்லாம் செய்வது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குச் சாதகமாக அமைந்துவிடுமே என்றும் கேட்டேன். உடனே, படையினர் கண்ணிவெடித் தாக்குதலில் காயமடைந்து கை, கால்களை இழந்தால் அவர்களுக்குக் காப்பீடு தேவைப்படும் என்றெல்லாம் ஒரு நீண்ட கதையைச் சொன்னார்கள். "இதோ பாருங்கள்! உங்கள் படையினர் கை,கால்களைப் பற்றி நீங்கள் கவலைப் படத் தேவையில்லை. அரசு இருக்கிறது, அமைச்சகம் இருக்கிறது. உங்கள் படையினரின் நலனை அவர்கள் பொறுப்புடன் கவனித்துக்கொள்வார்கள். பொதுமக்களிடம் கொள்ளையடிக்க வேண்டியதில்லை" என்று சொன்னேன். "போரில் இப்படியெல்லாம் நடக்கத்தான் செய்யும்" என்று அவர்கள் வாதிட்டனர். இருக்கலாம். ஆனால், நாம் பயிற்சி பெற்ற, நேர்மையான படையினர் என்றால், நமக்குக் கீழ் பணியாற்றும் படையினரை முறைப்படுத்த வேண்டும். சிலரால் இதைச் செய்ய முடிந்தாலே அந்த மாற்றத்தை நாம் கொண்டுவந்துவிட முடியும். ஆனால், அதைச் செய்ய யாரும் விரும்புவதில்லை. அதனால் அவர்கள் பயனடைகிறார்களா, அல்லது அதுதான் சரியான தெரிவாக இருக்கிறதா?

ஓர் இடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர், படையினரிடம் ஏதேனும் திருட்டுப் பொருள்கள் இருக்கின்றனவா? என்று சோதிப்பது கடற்படையில் வழக்கமான நடைமுறை. 'தங்கள் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்படுவதாக படையினர் குற்றம் சுமத்துவதுண்டு. ஆனால், துப்பாக்கிகளைப் பரிசோதிப்பதுபோல் இதுவும் ஒரு பயிற்சிதான். துப்பாக்கி சுடும் பயிற்சி முடிந்தவுடன், துப்பாக்கியும் உங்கள் பொக்கற்றும் வெறுமையாகத்தான் இருக்கின்றன என்பதை நிரூபித்தாகவேண்டும். இது பாதுகாப்புத் தொடர்பானது. வருத்தம் கொள்வதற்கு அதில் ஏதும் இல்லை. போர்ச்சூழலில் இருக்கிறோம் என்று காரணம் காட்டி, காலப்போக்கில் இந்த நடைமுறைகள் குறைக்கப்பட்டுவிட்டன. ஆனால், நீங்கள் அமைதிச் சூழலில் இருந் தாலும் சரி; போர்ச் சூழலாக இருந்தாலும் சரி, தவறு தவறுதான்.

## என்னால் முடிந்தவை

என்னால் கொள்ளையைத் தடுக்க முடியவில்லை. ஆனால், திருடிய பொருள்களுடன் தீவை விட்டு படையினர் வெளியேறுவதைத் தடுக்க முடிந்தது. தரைப்படையினர் கடற்படைப் படகுகளில்தான் பயணித்தாக வேண்டும். எனவே, வீரர்களின் உடைமைகளைத் தவிர வேறு பொருள்களுக்குப் படகுகளில் அனுமதி இல்லை என்று ஓர் உத்தரவு பிறப்பித்தேன். திருடப்பட்ட பொருள்கள் அத்தனையும் நடைபாதை ஓரத்தில் குவித்து வைக்க வேண்டியதாயிற்று.

அங்கு குவிக்கப்பட்டிருந்த பொருள்களில் 'பிரேம்' செய்யப்பட்ட திருமணப் புகைப் படங்களும் இருந்தன. அவை யாரோ சிலரின் புகைப்படங்கள்; யாருடைய வீடுகளிலிருந்தோ எடுக்கப்பட்டிருந்தன. அதாவது, பணம் மட்டும் அவர்களின் கொள்ளையல்ல. இதை எப்படி விளக்க முடியும் என்று தெரியவில்லை. குழந்தைகள் பயன்படுத்திய பொம்மைகள், சைக்கிள்கள் என்று என்னென்னவோ பொருள்கள் இருந்தன. ஆரம்பத்தில் அது சாதாரணமான திருட்டைப் போலத்தான் இருந்தது. அதன் பின்னர் தான் அது முற்றிலும் வேறு மாதிரியானது என்று தெரிந்தது. 'அவர்களுக்கு அழிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டால், கண்ணில் படும் அனைத்தையும் நாசப் படுத்த வேண்டும்" எனும் உள்ளுணர்வு உருவாகிவிடும்போலும்!

நன்றி: த இந்து

# ஊடக சுதந்திரம்

## தொடரும் நீதியற்ற வரையறைகள்!

செ.தமிழரசன்

ஜனநாயக நாட்டினுடைய நான்காவது தூண் என்று சொல்லப்படுகின்ற ஊடகங்கள் தனித்துவமானவை. அவை எப்போதும் மக்கள் மத்தியிலே செய்து வருகின்ற கருத்துருவாக்கம் என்பது மகத்துவமானது. மக்கள் அன்றாடம் செய்கின்ற பணிகளை இதனடிப்படையிலே திட்டமிட்டுக் கொள்கின்றனர், செயற்படுகின்றனர். அந்த வகையிலே சமூக அசைவியக்கத்தின் இயங்கு நிலையிலே சமனிலைத் தன்மையை பக்கச் சார்பின்றிய தகவலளித்தல் செயன்முறை பேணுகின்றது. சமூகத்தின் தனிமங்களுக்கான அறிக்கையிடல் என்பது கொள்கை ரீதியிலே விழிப்புணர்வை தந்துவிடுகின்றன.

இந்த நிலையிலே சமூகத்திற்கான தகவலளித்தலில் முக்கிய பங்காற்றுகின்ற ஊடகவியலாளர்கள் சிறப்பிற்குரியவர்கள். கடமையின் வழி சமூக விடுதலைக்கான பணி செய்தலைவரித்துக்கொண்டவர்கள். மிகக் கடினமான தருணங்களையும் கடந்து பயணிக்கின்றனர். உயிர்களைத் தியாகமும் செய்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்திலே இலங்கையிலே அவர்களுக்கான பாதுகாப்பு என்பதும் தகவலளித்தலில் இருந்து வருகின்ற சுதந்திரமின்மை என்பதும் இதுவரையிலே சரியான அணுகு முறையினுள் கொண்டுவரப்படவில்லை. தற்போதும் உயிர் அச்சுறுத்தல்களும் தகவல் சேகரிப்பில் அச்சுறுத்தல்களும் தொடர்ந்தவண்ணம்தான் உள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடகப் படுகொலைகளுக்கான நீதி என்பது இன்னமும் வழங்கப்பட வில்லை. ஆட்சிப் பீடத்திலே அமர்ந்து கொள்கின்ற அரசுகள் அதற் கான தீர்வுகளை அல்லது பிராயச்சித்தங்களை இதுவரையிலே செய்ததாகத் தெரியவில்லை! அண்மையிலே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மூத்த ஊடவியலாளர் நிமலராஜனின் 16ஆவது ஆண்டு நினைவு தினமும் அதனோடிணைந்ததாக இடம்பெற்ற ஊடக சுதந்திரம் வேண்டிய கவனவீர்ப்பு செயற்பாடும் முக்கியமானவை.

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை செய்யப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ளன. 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி இரவு 10 மணியளவில் ஆயுதம் தாங்கிய குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும், கைக்குண்டு வீசியும் நிமலராஜனை அவரது வீட்டில் வைத்துப் படுகொலை செய்திருந்தனர்.

உயிரிழக்கும் வரை பி.பி.சி. தமிழோசை, வீரகேசரி ஆகிய தமிழ் ஊடகங்களிலும் ஹிரு எவ்.எம். மற்றும் ராவய போன்ற சிங்கள ஊடகங்களிலும் பணியாற்றிய ஒருவர் என்பதுடன் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவருடைய கொலை ஜனநாயக நாட்டின் இறைமையை அவமதிக்கும் செயலாகும்.

ஊடகங்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பிலும் ஊடக சுதந்திரம் தொடர்பிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இன்னமும் நீதி வழங்கப்பட வில்லை. வடக்கில் இடம்பெற்ற எண்ணற்ற ஊடகப் படுகொலைகளுக்கான தீர்வைவேண்டிய குரல்களின் தொனிப்பாக இவை இன்னமும் தொடர்கின்றன.

ஆக, ஜனநாயகம் என்ற வரையறைகளைக் கொண்டு இயங்குவதாக தோற்றம் தருகின்ற நல்லாட்சி அரசாவது மக்களுக்கும் தமக்குமான பாலமாக விளங்குகின்ற ஊடகம் என்கின்ற மகத்துவமான அரண்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகளுக்கான நீதியை வழங்க வேண்டும். தொடரும் நீதியற்ற வரையறைகளைக் கட்டுடைக்க முன்வந்து செயலாற்ற வேண்டும்.





# செல்ஃபி எனும் போதை

ஜெ.காயா

திறந்து மூடும் பெரிய அளவிலான பெட்டி வடிவில் அறிமுகமாகிய ஒளிப்படப் பதிவுக் கருவியில் தமது விசேட தருணங்களைப் பதிவாக்கியிருந்தனர் நமது முன்னோர். தொழில்நுட்ப வளர்ச்சி குன்றியிருந்த அவர்களது காலத்தில் மகிழ்ச்சியான தருணங்களை ஒளிப்படமாக்கி நிலைத்திருக்கச் செய்ய, அவர்கள் முகம் கொடுத்த தொழில்நுட்ப, பொருளாதாரச் சிக்கல்கள் ஒளிப்படங்களின் பரவுகையை மட்டுப்படுத்தியிருந்தன. ஒளிப்படக் கருவியின் மூலம் பதிவு செய்யப்பட்ட காட்சி குறிப்பிட்ட காலதாமதத்தின் பின்னரே அவர்களது கைக்குக் கிடைத்திருந்தது. அவைகூட வர்ணமயமற்ற கறுப்பு, வெள்ளைச் சித்திரிப்புக்களே. இவ்வாறான தன்மையிலிருந்த ஒளிப்படங்களின் விருத்தி நவீன கமராக்கள், ஒளிப்படப் பதிவுக் கருவிகளின்(கைபேசிகள்) கண்டுபிடிப்புக்களுடன் பரிணாமம் பெற்று உடனடியாக ஒளிப்படத்தைப் பதிவாக்குவதாகவும், திரையில் வர்ணமயமாகப் பார்வையிடும் வசதியையும் ஏற்படுத்தியிருந்தது.

குறிப்பாகக் கைபேசிகளின் பாவனை அதிகரித்துவிட்ட தற்காலத்தில் அவை ஒருவரோடு ஒருவர் உரையாடுதல் என்ற அதன் அடிப்படை வசதியிலிருந்து வளர்ச்சியடைந்து கைக்குள் உலகத்தையே சுருக்கி வைத்துள்ள அதீத திறன் கொண்டவையாகத் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் ஒளிப்படங்களைப் பதிவு செய்துகொள்ளும் கருவியைத் (கமரா) தமது பிற்பகுதியில் கொண்டமைந்த இவற்றை இலகுவாக இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல முடிந்ததால் இளையவர்கள் தமது அன்றாட மகிழ்ச்சியான தருணங்களைப் பதிவு செய்து வந்தனர். சுற்றுலாக்கள், நண்பர்களின் பிறந்த தின நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், விசேட பயணங்கள், உறவினர்-நண்பர்கள் கூடிக்கொள்ளும் கொண்டாட்டங்கள் என இடம்பெறத் தொடங்கிய இந்தப் பின்பக்கக் கமரா மூலமான ஒளிப்படப்பதிவு, தூரதேசங்களில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் தத்தமது முகங்களைப் பார்த்து உரையாடிக் கொள்ளத்தக்க வகையில் முன்புறமாகப் பொருத்தப்பட்ட கமராக்கள் கொண்ட கைபேசிகளின் வருகையோடு அபாயகரமான பாதையில் பயணிக்கத் தொடங்கியது.

தூரதேசங்களில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் தத்தமது முகங்களைப் பார்த்து உரையாடிக் கொள்ளத்தக்க வகையில் முன்புறமாகப் பொருத்தப்பட்ட கமராக்கள் கொண்ட கைபேசிகளின் வருகையோடு அபாயகரமான பாதையில் பயணிக்கத் தொடங்கியது.

ஒருவரை ஒருவர் முகம் பார்த்துக் கதைத்துக் கொள்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கைபேசிகளின் முன்பக்கக் கமராக்களைப் பயன்படுத்தி ஒளிப்படம் எடுக்கும் பழக்கமும் ஆரம்பமாகியது. செல்ஃபி என்று பிரபல்யம் பெற்றமைக்கு, இதுவரையிருந்த கைபேசிகளின் பின்பக்கக் கமராக்கள் போலன்றி இன்னொருவரின் உதவியின்றித் தம்மைத் தாமே ஒளிப்படம் எடுத்துக் கொள்ளவும் தனி ஒருவரால் இலகுவாகக் கையாளவும் கூடியவாறும் ஒழுங்கமைக்கப்பட்ட அதன் வசதி நிலையே காரணமாகும். இன்றைய இளைஞர், யுவதிகள் பலர் இதனாலயே பாதிக்கப்பட்டுள்ளனர். தனி ஒருவரால் கையாளக்கூடிய வகையில், உதவிக்கு ஒருவரைத் தேடும் நிலையைத் தவிர்ப்பதற்காக தனி ஒருவரால் இயக்கக் கூடியதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இது மிகப் பெரும் உபத்திரவமாகத் தலையெடுத்துள்ளது.

கைபேசியைத் தனக்கு நேராகப் பிடித்துக் கொண்டு அதன் முன்பக்கக் கமராவில் தனது அழகை இரசித்தபடி வாகன நடமாட்டமற்ற வீதியுடன் இணைத்துத் தன்னைச் சித்திரிக்கும் வகையில் படமாக்கிக் கொள்ள முற்பட்ட இளைஞன், திடீரென அந்த வீதியால் வந்த வாகனம் மோதியதால் உடல் சிதறிவிடுகிறார். உயரமான மலைப்பகுதியில் நின்று அதனுடன் இணைந்த தனது அழகைப் படம் பிடிக்க முற்பட்டு உயரத்தில் நிற்கும் தன்னிலையை மறந்து கீழே வீழ்ந்து சாவடைந்து கொள்கிறார் ஓர் இளம் பெண். இவ்வாறாக உலகம் முழுவதும் மோகமாகி விட்ட இத்தகைய செல்ஃபிக்களின் விபரீதங்கள் இணையம் முழுதும் காணொலிகளாகக் காட்சியளிக்கின்றன. குறிப்பாக இளையவர்களை ஆட்கொண்டுள்ள புதுவித நோயான இதன் விளைவு மகிழ்ச்சியான தருணங்களில் தம்மை மறந்து எதிர்பாராத விபத்துக்களுடன் முடிவடைவதாயுள்ளது.

எமது நாட்டைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்கள் நீரூற்று ஒன்றுடன் தம்மையும் இணைத்து செல்ஃபி எடுக்க முற்பட்டுத் தவறி நீரூற்றுக்குள் வீழ்ந்து உயிரை மாய்த்த நிகழ்வுகளும், நீண்ட ரயில் பாதையின் அழகுடன் தன்னையும் இணைத்துச் செல்ஃபி எடுக்க முற்பட்டு அங்கு வந்த ரயில் மோதிக் காயமுற்று அவயவங்களை இழந்த சம்பவமும் இத்தகைய செல்ஃபி எடுப்பால் வந்த வினைகளே. இவ்வாறு செல்ஃபி எடுக்கும் ஒருவரின் ஆர் வத்தை உளவியல் பலவீனமாக உளவியலாளர்கள் குறிப்பிடுவதுபோன்று மது அருந்துபவர்களும் புகைப் பிடிப்பவர்களும் அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகித் தம்மைச் சீரழித்துக் கொள்வது போலன்றி செல்ஃ பி என்பது ஒருவரை அந்த நொடியிலயே அழித்துவிடும் அபாயமுடைய போதை என்பதை உணர்ந்து இளையோர் சமூகம் கவனத்துடன் செயற்பட வேண்டும்.



# மாமிசப் படையல் பெறும் கிராமியத் தெய்வம்

யாழவன்

கிராமியத் தெய்வ வழிபாட்டூடாக நம்பிக்கை, ஐதீகம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சடங்கினைத்தொன்றுதொட்டுப்பேணி வரும் வழிபாடாகக் காளி மடைச் சடங்கு யாழ்ப்பாணம்- தென்மராட்சிப் பகுதியில் குறிப்பிட்ட மக்கள் குழுமங்களிடையே மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக வரணி, இயற்றாலைப் பகுதிகளில் வருடா வருடம் பெண் தெய்வமாகிய 'காளி'க்குரியதான வழிபாடாக இது கடைப்பிடிக்கப்படுகிறது. வைகாசி, ஆனி, ஆடி ஆகிய ஏதாவதொரு மாதத்தில் ஒரு நாளைக் குறித்து (வெள்ளிக் கிழமை தவிர்ந்த நாள்களில்) தாம் முன்வைத்த வேண்டுதலுக்கமைவாக தத்தமது நேர்த்திக் கடனாக உக்கிர வடிவமான காளித் தாய்க்குப் படையலாகக் கடலுணவுகளுடன் வாழைப்பழங்களைத் தொகுதிதொகுதிகளாகவும் ஒடியல்பிட்டுப் போன்ற கிராம மக்களின் அன்றாட உணவு வகைகளையும் படைப்பார்கள். ஆகமம் சாராத கோயில்களில் இந்தக் காளிமடை வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் சடங்கை மேற்கொள்வதன் மூலம் க்ண்ணூறு, பில்லிசூனியம் அணுகாது என்ற நம்பிக்கையுடன் கருவில் இருக்கும் குழந்தையின்நலன்வேண்டியும் ஊரைப் பாதுகாக்க வேண்டியும் பயிர் விளைச்சல் வேண்டியும் கடைப்பிடித்து வருகின்றனர். பொழுது சாய்ந்ததும் ஆரம்பமாகும் இதற்கான வேலைகள் நள்ளிரவில் காளி வழிபாட்டுடன் முடிவடையும்.

இந்த வழிபாட்டின் போது தெய்வத்துக்குப் படைக்கப்படும் மாமிச ஆகாரங்களான மீன் வகைகளை 'கரும்பு' என்றே அழைப்பர். சுறா, நண்டு, இறால், திருக்கை, கெழுறு போன்ற கடலுணவுகளை இதற்காக மீனவர்களிடமிருந்து வாங்கும்போது அவ்விடத்தில் கர்ப்பூரம் ஏற்றி காளித் தாயை பிரார்த்தனை செய்த பின்னரே அந்தக் கடலுணவுகளை வாங்குவார்கள். இந்தக் கடலுணவுகளை ஆண்களே சமைத்துப் படையலாக்குகின்றனர். இவற்றைச் சமைப்பதற்கு மட்பாத்திரங்களையே பயன்படுத்துகின்றனர். சமைத்தவற்றை உக்கிர தெய்வத்துக்குப் படைத்து வழிபாடு செய்வர். வழிபாடு முடிந்ததும் படைத்தவற்றில் ஒரு பகுதியை எடுத்துத் தீப்பந்தம் ஏந்தியவாறு தண்ணீர், இளநீர், நீர்த்துக் காய் என்பவற்றையும் எடுத்துச் சென்று உடுக்கு அடித்தவாறு ஊர்மனையின் ஒதுக்குப் புறங்களில் படைத்து வழிபட்டு, படைத்த வாழைப்பழங்களைப் பசு மாடுகளுக்கு உண்ணக்கொடுத்துப் பின்னர் பனையோலை கொண்டு அமைக்கப்பட்ட பிளாக்களில் இந்தப் படையல் உணவுகளை வழிபாட்டில் ஈடுபடுபவர்களுக்கு உண்ணக் கொடுப்பர். விலங்குகளை (ஆடு) வதை (வேள்வி) செய்யும் வழிபாட்டுடன் ஒப்பிடுகையில் அதிலிருந்து இது சற்றே மாறுபட்டு கடலுணவுகளைப் படையலாக்குவதாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.





# ஹைக்கூ

## வெட்டிய துண்டுகள்

பிள்ளையார் குளிக்கப்போய்விட்டார்
புத்தர் வந்து குந்திவிட்டார்
ஆக்கிரமிப்பு.

...

உசுப்பல் வசனங்கள்
ஊரையே கொளுத்தின
இனக்கலவரம்.

...

மக்கள் இட்டது வாக்குப்பிச்சை
மறந்து விட்டன வாக்குறுதிகள்
அரசியல்வாதி.

...

முன் அறியா முகங்கள் எல்லாம்
முன்னே வந்து சிரிக்கின்றன
வேட்பாளர்கள்.

...

உள்ளே இருப்பதால்தான்
ஒட்டி நகருது இணக்கஅரசியல்
தமிழ்க் கைதிகள்.

–அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.



# 'மூசு'

ந.ஜெயதாஸ்

காய்த்து ஓய்ந்துள்ள யாழ்ப்பாணப் பலாமரங்கள் தற்போது தண்ணீர்த் தாகத்தில் உள்ளன. வழமைக்கு மீறியதாய் யாழ்ப்பாணப் பலாப் பழங்களின் வாசனை இந்த வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து நகர்ந்து நாட்டின் கிழக்கு–மேற்கு மாகாணங்கள் வரை வீசியிருந்தது. இலங்கையில் யாழ்ப்பாணம் தவிர்ந்த பிரதேசங்களில் பலாப்பழம், மாம்பழம் போன்றன விளைவிக்கப்படினும் அவற்றின் சுவை ஒருபோதும் யாழ்ப்பாண மண்ணில் விளையும் இவற்றுக்கு ஈடாவதில்லை. யாழ்ப்பாண மாம்பழங்களின் இயற்கைச் சுவையைச் சுவைக்கும் வாய்ப்புக் கிடைப்பது தற்காலத்தில் குதிரைக் கொம்பே.

ஏனெனில் மரத்திலிருந்து பருவத்தில் பழுத்தனவாய் அவை அறுவடை செய்யப்படுவதில்லை. இதிலிருந்து சற்று மாறுபட்டு பிடுங்கிப் பழுக்க வைத்தாலும் வைக்கோல், வேப்பிலை போன்ற இயற்கைகளால் போர்த்தப்பட்டுப் பழுக்க வைக்கும் எமது மூதாதையர்களது முறைகூட இன்று இல்லை. விற்பனை, கால விரயத்தைக் கருத்தில் கொண்டு செயற்கை இரசாயனங்கள் விசிறப்பட்டு அவசரமாகப் பழுக்க வைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண மாம்பழங்களின் இயற்கைச் சுவை செயற்கையாகின்றது. ஆனால் யாழ்ப்பாணப் பலாப்பழங்களில் செயற்கை ஒருபோதும் பங்குகொள்வதில்லை.

தன்னைச் செயற்கைப்படுத்த முடியாத அளவுக்குக் கடினமான மேற்பரப்புத் தோல்மைப்பைக் கொண்ட பலாப்பழத்தை வெட்டிய பின்னர் தேன் கலந்து சுவையூட்டி விடுகிறார்கள் நம்மவர்கள். ஆனால் அதன் வாசனையிலும் இயற்கையாகப் பழுக்கும் தன்மையிலும் அவர்களால் செயற்கைப்படுத்த முடியாதுள்ளது. ஆண்டின் இறுதி மாதத்தில் காய்க்கத் தொடங்கும் பலாவின் பிஞ்சினை 'மூசு' என்றழைப்பர். இலக்கணகாரர்கள் இதனைப் பலாவின் இளமைப் பெயர் என்பர். கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் வரை மரத்தில் தொங்கியபடி இருந்து பழமாகும். பலாப்பழங்கள் அதன் பின்னரான காலங்களில் சந்தைக்கு வரத்தொடங்குகின்றன. ஆகையால் பலாமரங்கள் இன்று முழுமூச்சோடு மூசு பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன. எனவே யாழ்ப்பாணப் பலாப்பழங்கள் எப்போதும் யாழ்ப்பாண மண் வாசனையைப் பறைசாற்றிக் கொண்டேயிருக்கும் என்ற நிலை ஒருபோதும் மாற்றங் கொள்ளப் போவதில்லை.

# நம்மவர்க்கு நல்ல பாடம்

ஞானாம்பிகா



அண்மையில் நடந்து முடிந்த தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் வடமாகாணத்தின் கல்விச் சமூகத்தினருக்குத் தோற்றுவித்த அழுத்தங்கள் ஒருபுறமிருக்க, நமது நாடு முழுவதும் நடைபெறும் இந்தப் பரீட்சை கல்வியின் எல்லை பரீட்சையில் பெறும் மதிப்பெண்கள் மட்டுமே என்ற போக்குக்குள் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களையும் அவர்தம் பெற்றோரையும் ஈர்த்துச் செல்கின்றது. இத்தகைய நிலை நீடித்தால் நிச்சயமாக எமது சமூகம் கல்வியில் பின்தங்கி விடும் என்பதில் ஐயப்படத் தேவையில்லை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இதன் முடிவுகள் பெற்றோர், ஆசிரியர் மத்தியில் கவலையை மட்டுமே தந்திருந்தது.

**எதிர்காலத்தைப் பாழாக்கும் பரீட்சைகள்**

பரீட்சையில் பங்குபற்றிய அனைத்து மாணவப் பிஞ்சுகளின் எதிர்காலத்தை அதுமாற்றியமைத்து விடும் என்பதைப் பெற்றோர், ஆசிரியர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. குறிக்கப்பட்ட மதிப்பெண்களைப் பெறாத மாணவர்களின் கல்விப் பயணம் "நான் தோல்வியடைந்து விட்டேனே" என்ற உணர்வுடன் தான் நகரப்போகின்றது. அத்துடன் உரிய மதிப்பெண்களைப் பெற்ற ஒன்றிரண்டு மாணவர்களுடன் வகுப்பறைகளில் இணைந்திருக்கும் சூழல் அவர்களிடையே நிச்சயமாக ஒருவித பாகுபாட்டை உருவாக்கிக் கொள்ளும். இதனால் தொடர்ந்தும் பரீட்சை, போட்டிஎன்கின்றபயத்திலேயே மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் நகரப் போகின்றன. அடுத்த வருடம் நடைபெறவுள்ள புலமைப் பரீட்சைக்கும் தயாராகி வருகின்றனர். எமது நாட்டுக் கல்வி முறையும் ஆசிரியர்களும் இதை ஊக்குவிக்கும் உடந்தைகளாகத் தொடர்ந்தும் செயற்பட ஆரம்பித்துவிட்டனர். இத்தகைய பரீட்சை, புள்ளிகள் என நகரும் எமது நாட்டுக் கல்வி முறை எமக்கு ஒருபோதும் எந்த வகையிலும் முன்னேற்றம் தரப்போவதில்லை என்பதைச் சிறந்த கல்வியை வழங்குவதில் தொடர்ந்தும் முன்னிற்கும் பின்லாந்து எமக்கு உணர்த்தி நிற்கிறது.

**முன்னிற்கும் பின்லாந்து**

ஐரோப்பாக் கண்டத்தில் நோர்வே, சுவீடன் போன்றவற்றுக்கு அருகாக அமைந்துள்ள நாடு பின்லாந்து. 200ஆண்டுகளுக்கு முன்பு இது சுவீடனின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் பின்னர், சிறிதுகாலம் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1917இல் விடுதலை அடைந்தது. முத லாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள், உள்நாட்டுக் கலகங்கள் எனப் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்த நாடு அது. 1950வரை ஒரு விவசாய நாடாக மட் டுமே இருந்த பின்லாந்து, இன்று அதிக அளவு தனி நபர் வருமானம் உடைய நாடுகளில் ஒன்றாகவும், பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றாகவும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அளவுகோல்களாகக் கருதப்படும் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், குடிமக்கள்உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் தலைசிறந்து விளங்குகிறது. வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமையைத் தந்த முதல் நாடான பின்லாந்து, தலை சிறந்த கல்வியை வழங்குவதில் தொடர்ந்து பல வருடங்களாக உலகில் முதலிடத்தில் இருக்கின்றது.

> வகுப்பறை மற்றும் பாடசாலைச் சூழலில் நல்ல இதமான. எந்த வித அழுத்தமும் அற்ற மகிழ்ச்சியான சூழலே நிலவுகிறது. குழந்தைகளுக்குப் புத்தகம் வாசிக்கும் பழக்கம் மிகவும் உற்சாகப்படுத்தப்படுகிறது. உலகிலேயே குழந்தைகளுக்கான புத்தகங்களை அதிகம் பதிப்பிக்கிற நாடு பின்லாந்துதான். மாணவர்களுக்கு வீட்டுவேலை வழங்கப்படுவது இல்லை.

**நமது கல்வி முறைக்கு எதிர்மாறான கல்வி**

பின்லாந்து தொடர்ந்தும் சிறந்த கல்வியை வழங்குவதற்குப் பிரதான காரணம், ஆட்சியாளர் களும், மக்களும் கல்வியில் செலுத்திய அக்கறையும் ஈடுபாடும் தான். பொருளாதார மறுமலர்ச்சி வேண்டுமெனில், சரியான கல்விமுறை தான் சிறந்த கருவி என்று 1963இல் அந்த நாட்டு நாடாளுமன்றம் தீர்மானித்தது. பல்வேறு கருத்துக் கேட்புக் கூட்டங்கள், விவாதங்களுக்குப் பிறகு நாடு முழுவதும் முழுமையான பொதுக் கல்வித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பல நூறு ஆசிரியர்களால் கலந்தாலோசிக்கப்பட்டு இது உருவாக்கப் பட்டது.

8மாதம் முதல் 5வயது வரையிலான குழந்தைகள் பகல் நேரங்களில் அந்தந்த நகராட்சிகளால் பாதுகாப்பாகப் பராமரிக்கப்படுகின்றனர். இதன்போது குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் பழகும் தன்மை, மற்றவர்களின் குணநலன்கள், தேவைகளை அறிந்துகொள்ளுதல் என்று பல்வேறு விடயங்களை இயல்பாகவே கற்றுக் கொள்கின்றன. இந்த ஐந்து ஆண்டு காலப் பயிற்சி, அந்தக்குழந்தைக்கு எதிர்காலத்தில் சுயமாகக் கல்வி கற்க உறுதிசெய்கிறது. இதன் மூலம் பிரகாசமான எதிர்காலம் உறுதிப்படுத்தப்படுகிறது. பின்னர், 6வயதிலிருந்து 7வயதிலேயே, அதுவும் ஒரு வருடம் மட்டுமே பாலர்பள்ளி நடைபெறுகிறது. அங்கேயும் வாசித்தல், கணிதம் போன்றவை இல்லை. பதிலாக இயற்கை, விலங்குகள், வாழ்க்கைச் சூழல் போன்றவைதான் பாடங்களாக உள்ளன. ஏழு வயது வரை குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி இல்லை என்பதுதான் மிக முக்கியமான விடயம். 7வயதிலிருந்து, 15வயது வரை ஒன்பது ஆண்டுகளுக்கு ஆரம்பக்கல்வி கட்டாயமாகிறது. தனியார் பாடசாலைகள் மிகக் குறைவு. தாய்மொழி தவிர கூடுதலாக மற்றொரு மொழியையும் கற்கலாம். கலை, இசை, சமையல், தச்சு வேலை, உலோக வேலை மற்றும் நெசவு போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன.

**பின்லாந்தின் வியத்தகு கல்வி**

வகுப்பறை மற்றும் பாடசாலைச் சூழலில் நல்ல இதமான, எந்த வித அழுத்தமும் அற்ற மகிழ்ச்சியான சூழலே நிலவுகிறது. குழந்தைகளுக்குப் புத்தகம் வாசிக்கும் பழக்கம் மிகவும் உற்சாகப்படுத்தப்படுகிறது. உலகிலேயே குழந்தைகளுக்கான புத்தகங்களை அதிகம் பதிப்பிக்கிற நாடு பின்லாந்துதான். மாணவர்களுக்கு வீட்டுவேலை வழங்கப்படுவது இல்லை. நம் ஊரைப் போல பரீட்சைகள் இல்லை, புள்ளிகள் அடிப்படையில் மற்ற குழந்தைகள் ஒப்பிடப்படுவதில்லை. தரப்படுத்தப்படும் பரீட்சை முறை இல்லை. வீட்டுப் பாடங்கள் வழங்கப்படுவதில்லை. ஆரம்பக் கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியில் கிடைக்கும் வெற்றி அல்ல என்று பின்லாந்து கல்வியாளர்கள் கூறுகின்றனர். மாணவர்கள் தங்கள் திறன்களை உணர்ந்துகொள்வது, வாழ்க்கை பற்றிய புரிதலை இயல்பாகவே கற்றுக்கொள் வது என்று மிக முக்கியமான விடயங்களை அந்நாட்டின் ஆரம்பக் கல்வி தருகிறது.

**ஆசிரியர்களின் தகைமை**

இத்தகைய கல்வி முறையை நல்ல முறையில் நடைமுறைப் படுத்தத் தரமான ஆசிரியர்கள் தேவை. பின்லாந்தில் ஆசிரியர் ஆவதற்குக் குறைந்தபட்சம் பட்ட மேற்படிப்பு படித்திருக்க வேண்டும். ஆசிரியர் தேர்வு முறையும் மிகக் கடினமான ஒன்று. பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தொடர் பயிற்சியும், பரீட்சையும் கட்டாயம். அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கு அதிக வேதனமும், உயர்ந்த சமூக அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது.

கட்டாய ஆரம்பக் கல்விக்குப் பிறகு 16வயதில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் உயர்நிலைக் கல்வி வழங்கப் படுகிறது. இதன்போது மாணவர்கள் தொழிற் கல்வி அல்லது பொதுக்கல்வி என ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம். இதன் பிறகு, கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் உயர் கல்வி வழங்கப்படுகிறது. தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் இணைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள சூழலுக்கேற்பப் பாடத்திட்டத்தையும், கற்பிக்கும் முறையையும் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உண்டு. குழந்தைகளின் படைப்புத்திறன், சிந்தனை என்பவற்றில் பின்லாந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகளை நாமும் பின்பற்ற விளைந்தால் எமது குழந்தைகளும் கல்வியில் சிறந்து, நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.





# றெக்க



மாறுபட்ட கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்துவரும் விஜய் சேதுபதி, வித்தியாசமான ஒரு கதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இரண்டு வில்லன்களின் பகையோடு கதை தொடங்குகிறது. டேவிட் (ஹரிஷ் உத்தமன்) - செழியன் (கபீர் சிங்) இடையே தொழில்ப் பகை. காதலர்களைச் சேர்த்துவைக்கும் சிவா (விஜய் சேதுபதி) இவர்களுக்கு இடையில் வருகிறார். எதிர்பாராத சூழ்நிலையில் டேவிட்டிடம் சிக்கிக் கொள்ளும் சிவா, அதிலிருந்து மீள, அவனுக்காக அமைச்சரின் மகள் அஞ்சலியைக் (லட்சுமி மேனன்) கடத்திக் கொண்டு வர ஒப்புக் கொள்கிறார். அவரால் அஞ்சலியைக் கடத்தி வரமுடிந்ததா? காதலர்களைச் சேர்த்துவைக்க அவர் காட்டும் ஆர்வத்தின் பின்னணி என்ன? ஆகிய கேள்விகளுக்கு விறுவிறுப்பான திரைக்கதை வழியே பதில்தர முயன்றிடும் அறிமுக இயக்குநர் ரத்னசிவாவால் அந்த முயற்சியில் சிறுபகுதியை மட்டுமே அடைய முடிந்திருக்கிறது.

இயக்குநர் சறுக்கிய முதல் இடம் கதைத் தேர்வு. காதலர்களைச் சேர்த்து வைக்கும் கதாநாயகன், வில்லனுக்கு நிச்சயிக்கப்பட்ட கதாநாயகியைக் கடத்தும் கதாநாயகன், வில்லனின் கைப்பாவையாகி மீளும் கதாநாயகன் என நாம் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன பழைய பிம்பங்களையே பயன்படுத்திக்கொண்டதில் தவறில்லை. ஆனால் அவற்றைப் புதிய காட்சிகளோடும், மாறுபட்ட திரைக்கதையுடனும் பொருத்தியிருந்தால், இது போன்ற வழக்கமான நிகழ்வுகளை எதிர்பாராத தடத்தில் பயணிக்க வைத்திருக்கலாம். ஆனால் இயக்குநர் அதற்கு முயற்சிக்கவேயில்லை. சில காட்சிகளைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. குறிப்பாக லட்சுமி மேனனைக் கடத்தும் காட்சிகளும், இறுதிக் காட்சியும் ரசிகர்களின் அறிவுத் திறனை அவமதிப்பவை.

ஒரு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்தவர்கள் என்றாலே வெள்ளைச்சட்டை, வெள்ளை வேட்டி கட்டி, வீச்சரிவாளைத் தூக்கிக் கொண்டு லொறி, வான், உழவுஇயந்திரங்களில் மந்தைகள்போல் கிளம்பி வருவார்கள் என்ற சித்திரிப்புத் தமிழ் சினிமாவில் இருந்து எப்போது ஒழியுமோ?

விஜய் சேதுபதியை வித்தியாசமாகக் காட்டும் முயற்சி எடுபடுகிறது. அதீதமான சண்டைக் காட்சிகளும், சண்டையின் போது அவர் பேசும் 'பஞ்ச்' வசனங்களும் திரையரங்கில் ஆரவாரத்தை ஏற்படுத்துகின்றன.

முதல் பாதியின் இறுதிவரை கதாநாயகன், வில்லன்களின் பராக்கிரம புராணம் பாடி நம்மைத் தூங்க வைத்து விடுகிறார் இயக்குநர். செல்வம்-மாலா அக்கா காதலும், சிவா-மாலா அக்கா இடையிலான அன்பும் ஆறுதலான அம்சங்கள்.

கதையம்சமும் 'வலுவான பாத்திர வார்ப்பும் உள்ள படங்களிலேயே அதிகம் நடிக்கும் விஜய் சேதுபதி இதில் 'நானும் ஆக்ஷன் ஹீரோதான்' என்று அதிரடி காட்டுகிறார். பலவீனமான திரைக்கதை, புளித்துப்போன பாத்திரம் ஆகியவற்றையும் மீறித் தன் அடையாளத்தைப் பதிக்கிறார்.

கவிதை வாசிக்கிறேன் என்று மேடையேறும் கதாநாயகி பாட்டுப் பாடி அசத்தும் அற்புதத்தில் தொடங்கி, வெகுளித்தனமாக விஜய் சேதுபதியுடன் கிளம்பி வருவது வரை லட்சுமி மேனன் கதாபாத்திரம் கருணாகரனைவிட நன்றாகவே நகைச்சுவை செய்கிறது.

வழக்கமாக முரட்டுக் கதா பாத்திரங்களில் வரும் கிஷோர் இதில் மென்மையான கதாபாத்திரம் வழியாகக் கவர்கிறார். அவரது காதலியாக நடித்திருப்பவரும் இயல்பாக வந்து நம்மை ஈர்த்துவிடுகிறார்.

தர்க்க நியாயம் எதையும் பார்க்காமல் இறங்கியிருக்கிறார் இயக்குநர். இதனால் காட்சியை எப்படி வேண்டுமானாலும் அமைக்கலாம், கதாபாத்திரங்களை எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம் என்ற வெளிப்பாட்டுடன் பார்வையாளர்களிடத்தே ஏமாற்றமளிக்கிறது றெக்க.



# தமிழர்க்கு இது கதியோ!

ஆண்டவர்கள் மாறலாம் ஆண்டு பல ஓடலாம்
ஆண்ட எம் மண்ணினை நாம் ஆள வழி தேடலாம்
நம்பினோம் இப்படியே நயமுடன் வழி சேர்த்தோம்
தும்பிக்கையான் வர நம்பிக்கை நாம் கொண்டோம்

குங்குமப் பொட்டழகன் குறிவேட்டி ஆணழகன்
பொங்கு தமிழன் என பொங்கி வந்தான் பேரழகன்
காத்திடுவான் எம்மினத்தைக் கலங்காது அவன் நின்று
சேர்த்திடுவான் எம்முரிமை எமக்காகவே என்றும்
ஆவலுடன் அனுதினமும் பார்த்திருக்கக் காத்திருக்க
பெரும் தாவலுடன் ஏவலுடன் தனிவழியே போனது மேன்!

சம்பந்தமேயில்லா சம்பந்தர் குழுவெறுத்து
சம்பந்தி வாசுவையும் சகோதர இனம் ஒறுத்து
புத்தரின் பெயர்கொண்ட சித்தர்களும் முத்தர்களும்
பித்தர்கள் பிரேமையென்று பேய்க்காட்டும் எத்தர்களும்
போடுகின்ற தாளத்தில் போய் நின்று உழல்வது மேன்!
ஆடுகின்ற ஆட்டமதால் ஐயா நீர் சுழல்வது மேன்

எழுக எழுக! என்றீர் எழுந்திருப்போர் கண்ட தென்ன!
விழுவதற்கு நீரே வழிவகுத்தீர் வேறு என்ன!
தலைவர்கள் தலைக்கொன்றாய் தறிகெட்டு நீர் ஆட
நிலைமை என்ன ஆகிவிடும் உணர்வீரோ உத்தமரே
தலைமைகள் உம் நிலையெண்ணத் தலையோ சுற்றுதையோ!
தலைவிதியோ நிலையிதுவோ! தமிழர்க்கிது கதியோ!

மங்கை மணாளன்
மீசாலை கிழக்கு







# அல்பிநொய்

ஐஸ்லாந்து நாட்டின் மேற்கு ஜோர்ட்ஸ் பகுதியின் ஒரு சிறிய நகரம். கடலையும் மலையையும் தொட்டுக் கொண்டு இருக்கும் ஊரில் இரவெல்லாம் பனிப் பொழிவு. உறைபனி வீட்டு வாசலை அடைத்துக்கொள்ள, காலையில் எழுந்து அதை அகற்றினால்தான் வீட்டைவிட்டு வெளியே வரமுடியும். நொய் எனும் இளைஞனுக்கு ஒவ்வொரு நாளும் இதுதான் பெரிய வேலை. காலையில் எழுந்ததும் முதல் வேலையாக வாசலை அடைத்து நிற்கும் உறைபனியைச் சிறிது சிறிதாக அகற்றத் தொடங்குவான். முழுவதையும் அகற்றுவதற்குள் போதும்போதும் என்றாகிவிடும்.

**பாடசாலை வாழ்க்கை**

கணித பாடமென்றால் கசக்கும் நொய், பாடசாலையில் கணிதத் தேர்வுகளில் அடுத்தடுத்து குறைவான புள்ளிகளைப் பெற அவனது விடயம் தலைமையாசிரியருக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. மாணவர்களுக்கான மனநல ஆலோசகரும் வரவழைக்கப் படுகிறார். அவர் கேட்கும் வெவ்வேறு கேள்விகளில் ஒரேயொரு கேள்விக்குத் தான் சரியான பதில் வருகிறது. பொது அறிவைப் பரிசோதிக்கக் கேட்கப்படும் கேள்விகளில் எந்தப் பிரச்சினையுமில்லை. பொது அறிவு மற்றவர்களைவிட அதிகம் பெற்றவன் அவன். அவனைப் போன்றவர்களை என்ன செய்ய வேண்டும். எப்படி வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்பதில் உள்ள சிக்கல்களை வித்தியாசமாகவே அணுக வேண்டும். பல நேரங்களில் பாட நேரங்களில் சலிப்பையே காணும் அவன், அடிக்கடி செல்லுமிடம் கடற்கரை அருங்காட்சியகம். அதற்கடுத்து எரிபொருள் நிரப்பு நிலையம் அருகிலுள்ள அதிர்ஷ்ட விளையாட்டுக் கடை. இதில் ஏதாவது ஒன்றில் போய் உட்கார்ந்து விடுகிறான்.

உண்மையில் உயர்நிலைப் பாடசாலைகளில் கற்கும் ஆர்வக்குறைபாடுள்ள மாணவர்களை நல்ல நிலைப்படுத்தக் கண்டுபிடிக்க வேண்டிய புதிய வழிகளை விவாதப்படுத்தவே இந்தக் காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இந்தப் படத்தில் நொய் என்பவனின் பாடசாலை வாழ்க்கை தவிர, பல்வேறு உலகங்கள் காட்டப்படுகின்றன. அது மட்டுமின்றி அவன் பொருட்டு இயற்கையோடு மனிதனுக்கு இருக்க வேண்டியுள்ள கவனத்தையும் இந்தப் படம் முன்வைக்கிறது.

**நிலவறையில் தஞ்சம்**

தாயை இழந்த நொய்க்கு பாட்டிதான் எல்லாம். உள்ளூரில் வாடகைக் கார் ஓட்டும் நேரம் போக மீதி நேரம் மதுவின் மயக்கத்தில் இருக்கும் தந்தையின் அரவணைப்பு எதிர்பார்க்க முடியாதது. நண்பர்களிடமும் முரண்பாடுகள். எல்லோராலும் தனித்து விடப்படும் நொய், சென்று தஞ்சமடையும் வேறு சில இடங்களும் உண்டு. அதில் ஒன்று உள்ளூர் புத்தகக் கடை. அடுத்தது பாட்டி வீட்டில் தரைக்குக் கீழுள்ள நிலவறை. பாட்டி அவனுக்குப் பரிசாகக் கொடுத்த பூதக் கண்ணாடிதான் அவனது பிறிதொரு உலகம். அதைக் கொண்டு ஊருக்கு வெளியேயுள்ள கடலையும் மலையும் ரசிப்பான்! நிகழப் போகும் மாற்றத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் தவிப்பான்.

மனிதநேயம் குறித்து ஏமாற்றங்களையே சந்திக்கும் ஒருவன் தஞ்சமடையும் இடம் புத்தகங்கள். அடுத்தது பூமிக்குக் கீழுள்ள நிலவறை. அதன் பின் இயற்கைக் காட்சிகள் என நெய்யை நகர்த்துகின்றன.


அவனைப் புரிந்துகொள்ளாத உலகம் விரும்புவதோ அட்டவணையின்படி நகரும் வாழ்க்கை. பாடப் புத்தகங்களைத் தாண்டாமல் இருந்தால் பெரிய பெரிய உயரத்துக்குப் போகலாம் என்ற எண்ணம். இதிலிருந்து முற்றிலும் மாறுபடும் நொய்யின் பாத்திரத்தை வடித்த விதத்தில் இயக்குநரின் சூழல் சார்ந்த வலிமையான நம்பிக்கையை உணர முடிகிறது.

வகுப்பறையில் குழப்படி செய்யும் நெய்யைக் கண்ட கணக்கு ஆசிரியர் வெகுண்டெழுந்து தலைமை ஆசிரியரிடம் போய்ப் போட்டுக் கொடுப்பதால் பாடசாலையிலிருந்து நீக்கப்படவேண்டிய நிலை. மன முடைந்துபோன நொய், என்ன செய்வது என்று தெரியாமல் பாடசாலையை விட்டு வெளியேறும்போது அதுவரை அவனைப் பற்றிய கவலையில்லாமல் இருந்த அவனது தந்தை, அவனிடம் பிரியமாக நடந்து கொள்ளும் விதம் அருமை. ஒரு மது விடுதிக்கு அவனை அழைத்துச்செல்ல அந்த விடுதியாளர் "சின்னப் பையனை இங்கே அழைச் சிட்டு வரியே அறிவில்லை உனக்கு?" என அடித்து உதைத்துத் தூக்கியெறிய, இருவரும் வீதியில் வந்து விழும் காட்சிகள் சிரிப்பையும் சோகத்தையும் ஒரேநேரத்தில் வரவழைக்கக்கூடியன.

**வாழ்க்கைக் கணக்கு**

அவனை ஒரு வேலையிலும் சேர்த்துவிடுகிறார் அவனது தந்தை. அது பனிமண்டிய நிலத்தில் பிணம் புதைக்கக் குழிவெட்டும் வேலை. அந்த நேரம் பார்த்துப் பாட்டியோ அவனது எதிர்காலம் குறித்து அறிய அவனை சோதிடரைப் போய்ப் பார்க்கும்படி கூறுகிறாள். இவனும் உணவு இடைவேளையில் அவரைப் பார்க்கப் போக அவர் "உனக்கு விரைவில் இறப்பு நிச்சயம்" என்று கூறுகிறார். இத்துடன் அவன் அந்தப் பிணக்குழி தோண்டும் வேலையையும் விட்டு விடுகிறான்.

தொடரும் காட்சிகளில் இயக்குநர் டாகவர் காரி முத்தாய்ப்பாக வைத்திருக்கும் காட்சிதான் நம்மைச் சிந்திக்கத் தூண்டுவது. ஊரில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட, அவன் சாவடைவது நிச்சயம் என்று கூறிய சோதிடர், பாடசாலையிலிருந்து நிறுத்திய ஆசிரியர், பிணக்குழி தோண்டும் வேலையின்போது கடுமையாக வேலை வாங்கிய மத குரு, பாட்டி, தந்தை, ஊர்மக் கள் அனைவரும் கட்டட இடிபாடுகளில் நசுங்கி இறந்து விடுகிறார்கள். நிலவறைக்குள் மாட்டிக் கொண்ட இவன் மட்டும் சுரங்க வழியாகத் தப்பித்துக் கடற்கரை செல்கிறான். தனக்குப் பிடித்தமான பூதக்கண்ணாடி வழியே அங்கு அவனோடு உரையாடும் இயற்கையை ரசிக்கத் தொடங்குகிறான்.



# 'லைவ் பை நைற்'



ஹொலிவூட்டின் மிகவும் கவர்ச்சியான கதாநாயகர்களில் ஒருவரான பென் அப்ளெக் திரைக்கதை எழுதி, இயக்கித் தானே நடிக்கும் திரைப்படமான 'லைவ் பை நைட்' படத்தின் விளம்பரப்படுத்தலைச் சித்திரிக்கும் காணொலி வெளிவந்திருக்கிறது. அதில் "நான் வலுவானவன் இல்லையென்று நினைக்கின்றாயா?" என்று நாயகன் ஒரு பெண்ணிடம் கேட்கிறான். "நீ அத்தனை குரூரமானவன் என்று நான் நினைக்கவில்லை" என்று அவள் பதில் சொல்கிறாள். "சக்திவாய்ந்த ஆண்கள், குரூரமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை" என்று நாயகன் பதில் சொல்கிறான்.

1920 மற்றும் 1930களின் காலகட்டத்தில் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் நடைமுறையிலிருந்த போது, சட்டவிரோத மது வர்த்தகனாக அரசாங்கத்துக்கே சவால் விடுபவனாக உருவெடுப்பவனின் கதைதான் இது. பாஸ்டன் பொலிஸ் தலைவனாக இருப்பவரின் ஊதாரி மகனாகவும் பெரிய ஊதாரித் தலைவனாகவும் பென் அப்ளெக் இந்தப் படத்தில் கதாபாத்திரம் தரித்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்துத் தமிழில் வெளிவந்த தங்கப்பதக்கம் திரைப் படத்தின் கதையை ஞாபகப்படுத்தும் இந்தப் படத்தின் கதை, டென்னிஸ் லெஹானே எழுதிய 'லைவ் பை நைட்'நாவலிலிருந்து எடுக்கப்பட்டது. ஒஸ்கார் விருதுப் படமான 'அர்கோ'வுக்குப் பிறகு பென் அப்ளெக், இயக்குநர் அவதாரம் எடுத்திருக்கும் இந்தப் படத்தில் அப்ளெக், ஷோவி சால்தனா, சியன்னா மில்லர் ஆகியோர் நடித்துள்ளனர்.

'வோர்ணர் பிரதர்ஸ்' நிறுவனம் வெளியிடும் இந்தப் படத்தில் முதலில் நாயகனாக நடிக்க இருந்தவர் லியானர்டோ டிகாப் ரியோ. தற்போது பென் அப்ளெக்குடன் சேர்ந்து இந்தப் படத்தைத் தயாரிப்பவர்களில் ஒருவராக மாறியிருக்கிறார். எழுத்தாளர் டேவிட் லெஹானேயின் கதையைக் கொண்ட 'கான் பேபி கான்' படத்தை ஏற்கனவே பென் அப்ளெக் எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தப் படம் 2017 ஜனவரி 13ஆம் திகதி வெளியாக உள்ளது.



# வறுமையை ஒழிப்போம்

கலாபூசணம்
பீ.ஏ. அந்தோனிமார்க்

உலகில் 40 சதவீதமானோரும் இலங்கையில் 55 சதவீதமானோரும் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி 189 நாடுகள் ஒன்று சேர்ந்து வறுமையைக் குறைக்க வேண்டுமென்று ஐ. நா மிலேனியம் அபிவிருத்தி இலக்கைப் பிரகடனப்படுத்தின. ஒக்ரோபர் 17ஆம் திகதி சர்வதேச வறுமை ஒழிப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இந்த மாநாட்டில் பங்குபற்றி அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்தார்.

**அதிகரித்துச் செல்லும் சனத்தொகை**

இன்று உலக சனத்தொகை 700 கோடியையும் தாண்டியுள்ளது. 2012ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி இலங்கையின் குடிசனம் 20 கோடியே 277597 பேர் ஆகும். இவற்றில் கிராம வாசிகள் தொகை 17 கோடிக்கு அதிகமாகும். 2008ஆம் ஆண்டு கணக் கெடுப்பின்படி 13 கோடிக்கும் அதிகமான மக்கள் மிகவும் வறிய கிராம வாசிகளாவர். இதன்படி 55 சதவீதமான மக்கள் வறுமை யின் பிடியில் சிக்கியுள்ளனர். ஐ.நா மிலே னியம் அபிவிருத்தி இலக்கின்படி வருடா வருடம் 2 கோடி 60 லட்சம் மக்களின் வறுமையை அகற்ற முடியுமென அறிவிக்கப்பட்டது.

1948ஆம் ஆண்டு மனித உரிமைச்சட்டங்களின் பரிணாம வளர்ச்சியாக, உணவுப் பாதுகாப்பு அடிப்படை உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி குடிமக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியது அந்தந்த நாட்டு அரசின் கடமையாகும். நமது நாட்டின் விவசாயச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேவையான உணவுகளை உற்பத்தி செய்ய முடியும்.

**வளங்களின் சமனற்ற பரம்பல்**

பிரதேசவாரியாகப் பார்க்கும் போது சமவளப் பகிர்வு இல்லாத காரணத்தால் மக்களின் வருமானத்தில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. வறுமை, நோய்த்தடுப்பு, சிறுவர்களுக்கு போஷாக்கின்மை, கர்ப் பிணித்தாய்மாருக்கு நோய்கள், பெண்களுக்கு வேலை வாய்ப் பின்மை, தொழில் நிலையங்களில் வழங்கப்படும் குறைவான ஊதியம், தரக் குறைவான கல்வி போன் றன பிரதேசவாரியான சமத்துவம் இல்லாது வித்தியாசமாகக் காணப்படுகின்றன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொழில்வளங்களை இழந்து தலைநிமிர முடியாத நிலையில், பலர் வாழ்கின்றார்கள்.

**போரும் இராணுவ ஆக்கிரமிப்பும்**

போரினால் கணவன் மனைவி, பிள்ளைகளைப் பறிகொடுத்து உளநோய்க்கு உட்பட்டு வாழ்கின்றார்கள். இவர்களின் தொழில் முயற்சியான சொந்த வீடுகள், வயல் காணிகள், மீன் பிடிக்கும் கடல் பிரதேசங்கள் இராணுவத்தினாலும், பெரும்பான்மைசிங்களவர்களாலும்பலாத்காரமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருமானங்கள் சூறையாடப்படுகின்றன. ஜனநாயக முறைப்படிஇவை நிறுத்தப்பட்டுத் தமிழ் மக்கள் தங்கள் வாழ் விடங்களில் குடியேறிக் கடற்றொழிலையும், விவசாயத்தையும் சுதந்திரத்துடன் செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியான போரினாலும், இடப்பெயர்வு, கண்ணிவெடிகளாலும், சுனாமியாலும், தொற்றுநோயின் பெருக்கத்தாலும், வறுமை மேலும் மேலும் அதிகரித்துள்ளது. சில மாவட்டங்களில் குடிதண்ணீர் வசதியற்ற ஏழை மக்கள் பலர் வாழ்கின்றார்கள். வடமாகாணத்தில் கிணறுகள் பாழடைந்து இருப்பதனால், அங்கு குடிதண்ணீருக்கு பஞ்சம் நிலவுகின்றது. நிறை குறைவான 5 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களின் வீதம் தேசியரீதியில் இலங்கையில் சராசரி 29 வீதமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிறை குறைந்த சிறுவர்களின் தொகை மிகவும் அதிகமாகும். பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதம் 2001ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி ஒரு இலட்சம் பேருக்கு 41பேர் ஆகும்.

**ஆசியாவின் நெற் களஞ்சியம்**

இலங்கை ஓர் விவசாய நாடு. நமக்குத் தேவையான உணவுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். நாம் உற்பத்தி செய்யும் உணவு நமது தேவைக்கே போதுமானதல்ல. எனவே உணவுப்பொருள்களை வெளிநாடுகளில் இருந்து பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்து இறக்குமதி செய்கின்றோம். காரணம் உணவு உற்பத்திக்கான உயர் உற்பத்திச் செலவாகும். இதற்கு உரம், கிருமிநாசினி, விதைகள், உள்ளீடுகள் போன்றவற்றின் விலையேற்றமே காரணம் ஆகும்.

விவசாயத்திற்கு நீர் பாய்ச்சும் குளங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளன. இவற்றை முறையாகப் பராமரித்தால், உற்பத்தியை அதிகரிக்கமுடியும். ஒட்டுமொத்தமாக இலங்கையில் 25 வீதமான மக்கள் அதிகூடிய வறுமையில் வாடுகிறார்கள். 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் 20 வீதமானோர் நிறை குறைந்தவர்கள்.

எனவே வறுமையை ஒழிக்க வேண்டுமாயிருந்தால், அரசின் முக்கிய ஸ்தாபனமாகிய திட்டமிடல் அமைச்சு மிகவும் கவனமெடுத்து விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி சிறந்த கொள்கைத் திட்டத்தை உருவாக்கி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். வடமாகாணத்தில் முன்னோடிச் சமூக ஊக்குவிப்புத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். கிராமமக்களை அணிதிரட்டி அபிவிருத்தி திட்டங் களை ஆரம்பிக்க வேண்டும். உயர்நிலை விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் உச்ச விளைவைப் பெறல். சிறுகைத் தொழில் மயமாக்கி, கைதொழில் கிராமங்களை ஏற்படுத்துதல். மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளம், வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம், கிளிநொச்சி யிலுள்ள இரணைமடுக்குளம், முல்லைத் தீவிலுள்ள தண்ணி முறிப்புக்குளம் போன்றவற்றைப் புனரமைப்பதுடன், வட கிழக்கு மாகாணத்திலுள்ள சகல குளங்களையும், திருத்தி அதற்குரிய சகல தண்ணீர் பாயும் வாய்க்கால்களையும் புனரமைப்புச் செய்ய வேண்டும். ஏனெனில் இலங்கையில் நெல் உற்பத்தியில் 40 வீதம், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்துதான் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**புதிய தலைமுறைக்கு எதிர்காலம்**

வேலையற்றோர், தொழிலற்ற இளைஞர்களுக்கு புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கல், பெண்களை ஊக்கப்படுத்தி நவீன வீட்டுத் தோட்டங்களை அதிகரித்தல், இயற்கைவளங்களை நீண்டகாலப் பாவிப்புக்கான கட்டமைப்புக்களை உருவாக்கல். நீதி நியாயமான வர்த்தகச் செயற்பாடுகளை ஊக்குவித்தல். உள்ளக விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளை நேரகாலத்துடன் வழங்குதல். புதிய நீர்ப்பாசனவாய்க்கால்முறைகளையும்,குளங்களையும் அமைத்தல், புனரமைத்தல்.

வறுமையை ஒழித்தல், சமத்துவம்,நல்வாழ்வு என்பனவற்றை வழங்க வேண்டும். என்ற நோக்கத்துக்காக உலக நாடுகள் அனைத்தும் இன்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றன.

இன்று கைவிடப்பட்டிருக்கும் 70 வீதமான வயல் காணிகளை திரும்பவும் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வருவோமாக இருந்தால் இலங்கையில் தன்னிறைவு ஏற்படுவதுடன் மிகுதியை ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியையும் பெறுவதுடன் வியாபார பற்றாக் குறையையும் நிவர்த்தி செய்யமுடியும். எனவே எமது நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு ஓர் ஒன்றிணைக்கப்பட்ட செயற்றிட்டம்தேவை. வெறுமனே ரூபாவின் பெறுமதியைக் குறைப்பதன் மூலம் வியாபாரப் பற்றாக்குறையை நீக்க முடியாது. தற்போதைய போரற்ற சூழ்நிலையில் வடகிழக்கு மாகாணம் உணவு உற்பத்தியை 100 வீதமாக உயர்த்தமுடியும்.

1978ம் ஆண்டிலிருந்து ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் வறுமையையும், பட்டினியையும் ஒழிப்பதில் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தின. ஆனாலும் ஓர் அரசும் நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய வறுமை ஒழிப்புத்திட்டங்களை செயற்படுத்தி வெற்றியடையவில்லை.

எதிர்காலத்தில் எவரும் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கமாட்டார்கள். வறுமை முற்றாக ஒழிக்கப்பட்டு 2030ஆம் ஆண்டு முடிய முன்பு இலங்கை மிலேனிய இலக்கையும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளையும் எட்டிப்பிடிக்கும் என நம்பப்படுகின்றது. உலகத்திலேயே அதிசயிக்கக்கூடிய முறையில் வறுமை ஒழிக்கப்பட்டு ஒரு புதிய சரித்திரத்தை ஏற்படுத்தி உலக நாடுகளுக்கிடையே முன்மாதிரியாக அமையும்போதுதான் ஆசியாவின் அதிசயம் என்ற பெயரை இலங்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல வீடுகளிலும், வீட்டுத்தோட்டங்களிலும் கிணறுகளும் உருவாக்கப்பட்டு நாட்டுமக்கள் அனைவரும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டாலன்றி நாட்டிலிருந்து வறுமையை ஒழிப்பது கடினமே.



# திருமணமான பெண்கள் புகுந்த வீட்டில்...

முதலில் புகுந்த வீட்டில் குடும்ப உறுப்பினர் யார்? யார்? என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களது குணாதிசயங்களைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

தனது தாய், தந்தையரைப் போலவே கணவரின் தாய், தந்தையரையும் கவனிக்க வேண்டும்.

சமையல் செய்யும்போது மாமியார் உதவியுடன் புகுந்த வீட்டில் யாருக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்பதைத் தெரிந்து கொண்டு செய்ய வேண்டும்.

இயலுமான வரைக்கும் தனிக்குடித்தனம் போகாது சேர்ந்து வாழப் பழகவேண்டும்.

புகுந்த வீட்டில் உள்ளவர்களிடம் ஒளிவு மறைவு இன்றி மனம் விட்டு பேசவேண்டும்.

கணவரிடம் அவரது குடும்பத்தினரது குறை குற்றங்கள்ள சொல்லாதீர்கள்.

கணவருடன் நல்ல தோழியாகப் பழகுங்கள்.

புகுந்த வீட்டு பெருமைகளைப் புகழாதீர்கள்.

அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து அன்றாடக் கடமைகளைச் செய்யுங்கள்.

கணவன்-மனைவி இருவருக்கும் இடையில் புரிந்துணர்வுடன் வாழுங்கள்.

புகுந்த வீட்டுக் குடும்பத்துடன் இணைந்து மகிழ்ச்சியுடன் ஆலயம், சுற்றுலா செல்லுங்கள். கணவரது சகோதர, சகோதரிகளிடம் அன்பாகப் பழகுங்கள்.

# அடக்காதீர்!



ஆண், பெண் வேறுபாடின்றி, மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானதும் அன்றாடம் அவர்கள் ஆற்றவேண்டியதுமான கருமம் மலம், சலம் கழிக்கும் இயல்பினைச் சீராக ஆற்றிக்கொண்டு வருவதே. ஆனாலும் இந்த விடயத்தில் ஆண்களை விடப் பெண்கள் மிகக் கவனமாகத் தமது சிறுநீர் கழிவகற்றும் தொகுதியைப் பேணிக்கொள்ள வேண்டும். ஏனெனில் பெண்களுக்கு உடலில் கர்ப்பப்பை, கர்ப்பப்பை வாய்க்குழாய், சிறுநீர்ப்பை, சிறுநீர்க் குழாய், மலக்குடல் ஆகியவை குறித்த பகுதிக்குள் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக அமைந்துள்ளன. இதனால் பெண்கள் சிறுநீர் வெளியேற்றிக் கொள்வதை அடக்கிக் கொள்ளக் கூடாது. சிறுநீர் வந்தால் அடக்கிக் கொள்ளாமல் உடனே வெளியேற்றிவிட வேண்டும். பெண்களுடைய சிறுநீரகங்களுக்கும் சிறுநீர் வெளியேறும் துவாரத்துக்கும் இடையே மிகக் குறைவான இடைவெளிதான் உள்ளது. அதாவது நான்கு முதல் ஐந்து செ.மீ. உடையதாகவே அந்தப் பகுதி காணப்படும். இதனால் சிறுநீர் கொள்ளுமளவு குறைவாகக் காணப்படும்.(ஆண்களுக்கு இந்த இடைவெளி 15 செ.மீ.) அத்துடன் கர்ப்பப் பை, மலக்குடல் ஆகிய உறுப்புகள் அருகருகே அமைந்துள்ளன. இவற்றில் ஏதாவது ஒன்றில் கிருமித்தொற்று ஏற்பட்டால் அது அருகிலுள்ள ஏனைய உறுப்புகளையும் பாதிக்கும்.

முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தன்னிச்சையாகச் சிறுநீர் வெளியேறும் பிரச்சினையாலும் அவதிப்படுகின்றனர். சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் பிரச்சினையும் அதைச் சுற்றியிருக்கும் தசைகள் தளர்வடைவதும் இதற்குக் கரணமாகும்.

இவர்கள் தும்மினாலோ, சிரித்தாலோ, இருமினாலோ, ஏதாவது எடையைத் தூக்கும் போதோ அல்லது குனிந்து நிமிரும் போதோ இவர்களுக்குச் சிறுநீர்க் கசிவு ஏற்படும்.

அத்துடன் கருத்தடை சாதனம் பயன்படுத்துவதாலும் சிறுநீர்ப்பை பாதிப்படையும்.

பிரசவ காலத்தில் சிறுநீரை அடக்கிக்கொள்ளாமலும் சிறுநீர்த் தொற்று வராமலும் பார்த்துக் கொள்வது அவசியம். ஏனெனில் அது குழந்தையைப் பாதிக்கவும் வாய்ப்பிருக்கிறது.

சிறுநீர் பிரச்சினையால் அவதிப்படும் பெண்கள் தயக்கம் கொள்ளாது உடனடியாக மருத்துவரிடம் சென்று அதற்கான சிகிச்சைகளை எடுத்துக் கொள்வது அவசியம்.



## மருந்து சாப்பிட்டபின் என்ன செய்யக் கூடாது?

உணவு, மருந்து சாப்பிட்ட உடனே உறங்குவது தவறு. நிற்பது, உட்காருவது, நின்ற நிலையில் வேலை செய்வது செரிமானத்துக்கு நல்லது.

# முகப்பரு வராமல் தடுக்க...



முகப்பரு முகத்தின் அழகைக் கெடுப்பதோடு அதனைத் தீண்டினால் வலியையும் ஏற்படுத்தும் .அதிலும் வலியின் போது முகப்பருவை அடிக்கடி தொடுவதால் முகப்பரு உடைந்து பரவ ஆரம்பிக்கும். 'ஆண்ட்ரோஜன்' என்ற ஓமோன் நீர் இளமைப்பருவத்திலுள்ள ஆண், பெண் இரு பாலாருக்கும் சுரக்கத் தொடங்கும். ஆன்டோஜன் இந்த எண்ணைப் பசையை மிக அதிகமாகச் சுரக்க வைக்கின்றது.

அப்போது அவை மயிர்த்துளை இடைவெளிகளில் வழக்கத்தை விட அதிகமாகப் படிந்து உருண்டு திரண்டு முகப் பருக்களை ஏற்படுத்துகின்றன. இதில் பக்றீரியாக்கிருமிகள் தொற்றிக் கொள்ளப் பருக்கள் பெரிதாக வீங்குகின்றன.

இளமைப் பருவத்தினருக்கு இது அதிகம் சுரப்பதால் நிறையப் பருக்கள் வரக்கூடும்.

இத்தகைய முகப்பரு வராமல் கட்டுப்படுத்த மருந்துகள் தேவையில்லை. இயற்கை முறைகளைப் பயன்படுத்தி பருக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

1. தினமும் உடற் பயிற்சி செய்ய வேண்டும் அவ்வாறு செய்யும் போது வெளியேறும் வியர்வையினால் துவாரங்களில் உள்ள அழுக்கு நீங்கி பருக்கள் வராமல் தடுக்கலாம்.
2. வேப்பிலைத் துளிரை அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவி ஐந்து நிமிடம் ஊற வைத்தால் தழும்புகள் மறைந்துவருவதுடன் கிருமி நீக்கியாகவும் முகப்பரு வராமல் தடுக்கும்.
3. வெந்தயத்தை அரைத்து முகத்தில் பூசினால் முகப்பரு நீங்கும்.
4. குளிக்கும்போது மஞ்சள் அரைத்து முகத்தில் பூசி ஐந்து நிமிடம் ஊறவைக்க வேண்டும். பின் எலுமிச்சம் சாறு கலந்து முகப்பருவால் ஏற்பட்ட கரும்புள்ளிகள் மீது தடவி வர அவை மறையும்.
5. கொதி நீரில் ஆவி பிடித்து வெள்ளரிக்காய் அரைத்து முகத்தில் தடவிவர முகம் மென்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்
6. ஒலிவ் எண்ணையை தினமும் சூரிய ஒளி படாமல் தழும்புகள் உள்ள இடத்தில் பூசி வந்தால் பருக்கள் மறைவதோடு பருக்கள் உருவாகாமலும் இருக்கும்.

# கவனிக்கப்படாத விலகல்

ந.ஜெயா

பிரித்தானியாவால் ஆளப்பட்டுச் சுதந்திரமளிக்கப்பட்ட உலகநாடுகள் பலவற்றையும் ஒருமைப்படுத்திக் கட்டமைக்கப்பட்டதே 'பொதுநலவாயம்' என்கின்ற அமைப்பு. 1931களில் அத்திபாரமிடப்பட்ட இதன் நிறுவுகை இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் வலுப்பெற்று ஓங்கியது. 1949இல் தன்னால் விடுவிக்கப்பட்டுத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்ட 53நாடுகளை உள்ளடக்கியதாக பிரித்தானியாவின் தலைமையில் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. பொதுநலவாய நாடுகளின் தலைவராக அரசி எலிசபெத் பதவி வகிக்கின்றார். பொதுநலவாய அரசுகளிடையேயான கருத்திணக்கத்துடன் பொதுநலவாயம் தனது செயலகம் மூலமும் அரசு சார்பற்ற அமைப்புகள் மூலமும், பொதுநலவாய அமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுகிறது.

பொதுநலவாய உறுப்பு நாடுகளுக்கிடையே சட்டபூர்வமான கடமைகள் என்று எதுவுமே இல்லை. மொழி, பண்பாடு,வரலாறு ஆகியவற்றாலும் மக்களாட்சி, மனித உரிமைகள், மற்றும் சட்ட ஆட்சி குறித்த ஒத்த கருத்துக்களாலும் இவை ஒன்று கூடியுள்ளன. இவ்வாறான அமைப்பிலிருந்து உறுப்பு நாடுகள் சில தமது பங்களிப்புக்களைக் குறைத்தும் இந்த அமைப்பிலிருந்து விலகியும் வருகின்றன. கடந்த 2013இல் 48ஆண்டுகளாக அங்கம் வகித்திருந்த ஆபிரிக்க நாடான காம்பியா இறுதியாக பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து விலகியிருந்தது. அதன் பிற்பாடு தற்போது இந்து சமுத்திரத்தில் தீவுக் கூட்டங்களாகவுள்ள மாலைதீவும் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

கடந்த 2012இல் பதவி விலகிய அந்த நாட்டு ஜனாதிபதி முகமது நஷீத்துக்கு ஊழல் உள்ளிட்ட குற்றங்கள் புரிந்ததாக 17ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வேளை உடல்நலக் குறைவுக்காகச் சிகிச்சை பெற லண்டன் சென்ற முகமது நஷீத் அங்கேயே தங்கிவிட்டார். இதனால் மாலைதீவில் அவரது ஆதரவாளர்கள் மீது ஆட்சியாளர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்தநிலையில் உள்நாட்டில் நடைபெறும் இத்தகைய குழப்பங்களை நிறுத்தி ஜனநாயகத்தின்மீது முன்னேற்றம் காட்டத் தவறினால் பொதுநலவாய அமைப்பில் இருந்து மாலைதீவு நீக்கப்படும் என பொதுநலவாயநாடுகள் அமைப்பின் பொதுச்செயலர் ஜெனரல் பட்ரிசியா ஸ்காட்லாந்து தெரிவித்திருந்தார்.

இதன் எதிரெலியாகப் பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகுவதாக மாலைதீவு அறிவித்தது. இந்த முடிவு மிகவும் கஷ்டமானது. ஆனால் தவிர்க்க முடியாமல் மேற்கொள்ளப்பட்டது என அதன் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்தது. இதற்குத் தாம் பொதுநலவாய அமைப்பால் பாரபட்சமாக நடத்தப்படுவதாகக் காரணம் தெரிவித்ததுடன் தமது முன்னேற்றம் மற்றும் சாதனைகளுக்குப் பொதுநலவாய அமைப்பில் அங்கீகாரம் இல்லை என்றும் மாலைதீவின் ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொதுநலவாய அமைப்புத் தமது நாட்டுக்கு எதிராகத் திருப்தியற்ற நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் அறிக்கை விட்டுள்ளது.

மேலும், பொதுநலவாய அமைச்சகங்களுக்கான நடவடிக்கைக் குழு மற்றும் பொதுநலவாய செயலகங்கள் மாலைதீவை நியாயமற்ற முறையில் நடத்துவதாகவும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனாலும் மாலைதீவின் இருதரப்பு மற்றும் பலதரப்பு சர்வதேச ஈடுபாடுகள் தொடரும் என்று பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகிய மாலைதீவு தெரிவித்துள்ளது. உலகநாடுகளைப்பொறுத்தவரையில் ஒரு சிறிய நாடு ஒரு பெரிய அமைப்பிலிருந்து விலகியுள்ளமை கவனிக்கப்படாத ஒன்றாகவே நகர்ந்துள்ளது.

# வேண்டாமே மண முறிவு

எஸ்.மல்லிகா

பிரச்சினை இல்லாத வாழ்க்கை யாருக்கும் வாய்ப்பதில்லை. ஆனால் பலருக்கு வாழ்க்கை யில் பிரச்சினை அதிகமாகவும் அடிக்கடியும் ஏற்படுகின்றது. இதற்கு எல்லை மீறிய எதிர்பார்ப்பும் ஒரு காரணம். இது கணவன்– மனைவியர் மத்தியில் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது.

சமுதாயக் கட்டுக்கோப்பின் ஆணிவேர் திருமணம். ஆனால், இன்றைய அநேக திருமணங்களில் இந்த வேர் ஆட்டம் காண்கிறது. காரணம் இருபாலாரினதும் அபரிமித எதிர்பார்ப்பு. இளைய சமுதாயத்தினரின் எண்ணச் சுழற்சியால் அவர்களது எதிர்பார்ப்புக்கள் மாறி வருகின்றன. உலகின் பல பகுதிகளிலும் நாள்தோறும் நிகழ்கின்ற வியத்தகு நிகழ்ச்சிகளும் எழுச்சிகளும் அவர்களது சிந்தனை ஓட்டத்தைப் பாதிக்கின்றன.

தன் மனைவி இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கனவு கணவனுக்கும் தன் கணவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் கனவு மனைவிக்கும் ஆரம்ப எதிர்பார்ப்பாக எழுகின்றது. அவர்களின் கனவு பொய்த்துப்போகவே மணவாழ்க்கை கசக்க ஆரம்பிக்கிறது. இன்னும் சிலர், தமது சுதந்திரத்தை அடமானம் வைத்து இந்தத் திருமண பந்தத்தைச் சுமக்கவேண்டியுள்ளது.

இதுவரை நீ வாழ்ந்தது பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் இனிமேல் என் விருப்பங்களுக்கு ஏற்றபடி தான் நீ வாழ வேண்டும் என்று அநேகமான ஆண்கள் தம் மனைவியருக்குக் கட்டளையிடுகின்றனர். எங்காவது ஒரு மூலையில் இது ஆண்களுக்கும் மனைவியரால் விதிக்கப்படுகின்றது. ஆயினும் பெரும் பாதிப்புக்களைச் சந்திப்பது பெண்கள் தான். இந்த மாற்றம் நிகழாவிடின், அவர்களது நெஞ்சத்தின் அடித்தளத்தில் ஏமாற்றம் எனும் தீ கனலத் தொடங்கும். இதன் விளைவு மணமுறிவு.

நல்ல திருமணம் எப்படித் தோற்றுப்போகும் என்ற கேள்விக்கு எளிதாக ஒரு விளக்கம் சொல்லவேண்டும் என்றால், 'வெளிப்பார்வைக்கு நல்லது போன்று தோன்றிய திருமணத்தின் உள்ளே சில குறிப்பிடத்தக்க குற்றங்களும் குறைபாடுகளும் இருந்திருக்கக்கூடும்' என்பதுதான். ஒரு மணமுறிவு நிகழ்கின்ற போது ஏதோ பொருந்தாத திருமணம் போலும்– அதனால் தான் முறிந்து விட்டது என்று எண்ணுவது தான் நடைமுறை வழக்கு. ஆனால் எல்லா விதத்திலும் பொருத்தமாக இருந்த திருமணங்கள் கூட உடைந்து போகின்றன. சம்பந்தப்பட்டவர்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லைமீறுவதே இதற்குக் காரணம். இந்த எல்லை மீறிய எதிர்பார்ப்புக்களினால் மண வாழ்வில் மனக்குறையும் அதிருப்தியும் ஏற்படுகின்றன. அவற்றில் சில கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அளவு கடுமையானவைகளாக இருக்கின்றன. மேலும் பல திருமண எதிர்பார்ப்புக்கள்– சவுமகிழவும் குழந்தைகளைப் பேணவும் வேண்டுமென்ற நிலையிலிருந்து உயர்ந்து குடும்ப வருவாயைப் பெருக்கவும் குறையின்றிப் பழகவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.- எதிர்பார்ப்புக்கள் எண்ணங்களும் உயர்ந்துகொண்டே செல்கின்றபோது அதை எட்டுவதும் இட்டு நிரப்புவதும் பலருக்கு இயலாத ஒன்றாகி விடுகிறது. இந்த இயலாமை மணமுறிவைப் பரிசளிக்கிறது.

(தொடரும்)





சு.வர்ஷாசினீ,
தரம் - 4,
ஏஞ்சல் ஆங்கில பாடசாலை மானிப்பாய்.



ர.தருண்,
தரம் - 6B,
J.H.C.

> புன்னகை என்பது ஒரு அழகு. அதனைச் சிறிய குழந்தைகளால் கூட புரிந்து கொள்ள முடியும்.
>
> *ஜோர்ஜ் சந்தியானா*

## விடுகதைகள்

1. இடி இடிக்கும்; மின்னல் மின்னும்; மழை பெய்யாது அது என்ன?
2. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அவர் யார்?
3. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இருக்காது அவர்கள் யார்?
4. உடல் சிவப்பு; வாய் அகலம்; உணவு காகிதம் நான் யார்?
5. வெள்ளைக்காரனுக்குக் கறுப்புத் தொப்பி அவன் யார்?



1. பட்டாசு
2. தராசு
3. எறும்புச் சாரை
4. அஞ்சல் பெட்டி
5. தீக்குச்சி

## முயற்சி



நான் இளைஞனாக இருந்த போது பத்துக் காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது தோல்வி அடைவதைப் பார்த்தேன். என்னுடைய வாழ்க்கையில் தோல்வி அடைவதை நான் விரும்பவில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற என்னசெய்யவேண்டும்என்று யோசித்த போது, எனக்கு ஓர் உண்மை பளிச்சென்று விளங்கியது. தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பது தான் அது. ஆகவே முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன். இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்லர்

- பேரறிஞர் பெர்னாட்ஷா.




## அறிவுரைகள்

1. நான் என்னும் இரு சொல்லில் இருக்கின்றது. அகங்காரம், நாம் என்னும் இரு சொல்லோ எம்மை வாழவைக்கும் அன்பாகும்.
2. தேடலுடன் வாழத்துடிப்பவனுக்கு போகும் பாதைகள் இலகுவாகும்.
3. நித்தமும் செய் நீ அப்பியாசம நிலைத்திடும் உன் உடல் ஆரோக்கியம்.
4. தயக்கம் என்னும் சிறு முள்ளை எடுத் தெறிந்து வாழ்ந்தால்தன் திறமை வெளிப்படுத்த தயங்குமா உன் உள்ளம்.
5. மனம் நொந்து போகும் வேளையில் கூட மருந்தாக ஆறுதல் கொடுத்தல் நலமே.
6. உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உறுதியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.
7. இழந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம். இழந்த காலத்தை ஒருபோதும் பிடித்துக் கொள்ளமுடியாது.
8. துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்து விடு, ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே.

## கண்களைக் கலங்க வைத்த ஒரு க(வி)தை!

*முதியோர் இல்லத்தில்*
*இருந்து பேசுறோம்...*
*நீங்கள்*
*'காணாம போச்சு'*
*என்று விளம்பரம்*
*செய்த உங்கள்*
*நாய் இங்கதான் இருக்கிறது..*
*உங்கள் அம்மாவுடன்...*

பிள்ளைகளே, முதியோர் இல்லங்களில் இருக்கும் உங்கள் பாட்டன் - பாட்டிகளை வீட்டுக்கு அழைத்து வருமாறு பெற்றோர்களிடம் கூறுங்கள். அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் உண்டு. இன்றைய விதைப்புதான் நாளைய முளைப்பு இன்று அவர்கள் செய்வதைத்தான், நாளை நீங்கள் அவர்களுக்குச் செய்வீர்கள் என்பதை உணர்த்துங்கள்.

## தேவையான விடயங்கள் ஏன் ஞாபகத்தில் நிற்பதில்லை?



ஒருவர் படிக்கின்ற வழிமுறைகளுக்கேற்ப அவரின் மனதில் பதிகின்ற விடயங்களின் வீதமும் வேறுபடுகின்றதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

1. வாசிப்பதினூடாக 10 வீதம்
2. செவிமடுப்பதினூடாக 20 வீதம்
3. பார்ப்பதினூடாக 30 வீதம்
4. பார்ப்பதோடு செவிமடுப்பதினூடாக 50 வீதம்
5. பிறருடன் கலந்துரையாடுவதினூடாக 70 வீதம்
6. அவ்விடயத்தை சுயமாக அனுபவிப்பதினூடாக 80 வீதம்
7. பிறிதொருவருக்குக் கற்றுக் கொடுப்பதினூடாக 95 வீதம் ஞாபகத்தில் பதிகின்றன.

## வரலாற்றில் இன்றைய தினம்



1694 - பிரிட்டிஷ் அமெரிக்க காலனித்துவப் படைகள் பிரான்சிடமிருந்து கியூபெக்கை கைப்பற்றுவதில் தோல்வி கண்டன.
1707 - பிரித்தானியாவின் முதலாவது நாடாளுமன்றம் கூடியது.
1739 - பிரித்தானிய பிரதமர் றெபேட் வல்பொல தயக்கத்துடன் ஸ்பெயின்மீது போர்ப் பிரகடனம் செய்தார்.
1850 - அமெரிக்க மஸாசுசெட்ஸ் வோர் செஸ்டரில் முதலாவது தேசிய மகளிர் உரிமை மாநாடு நடைபெற்றது.
1915 - தமக்கு வாக்களிக்கும் உரிமை கோரி 25,000 - 30,000 பெண்கள் நியூயோர்க் நகரில் 5ஆவது அவெனியூவில் அணி வகுத்துச் சென்றனர்.
1917 - ஒக்ரோபர் புரட்சிக்கு லெனின் அழைப்பு விடுத்தார்.
1939 - ஜப்பானின் மிட்சுபி G4M இரட்டை இயந்திர குண்டு வீச்சு விமானம் தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.
1956 - ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
1973 - வோட்டர்கேட் ஊழல்; அமெரிக்க ஜனாதிபதி றிச்சார்ட் நிக்ஸன் தனது ஓவல் பணிமனை உரையாடல் ஒலி நாடாவை கையளிக்க ஒப்புக் கொண்டார்.
1992 - கொழும்பில் கறுப்பு வெள்ளி பெரும் கலவரத்தில் முடிந்தது. மருதானையில் கண்ணீர்ப் புகைக்குண்டு. ஆர்ப்பாட்டக் காரர்கள் பொலிஸார் பலர் காயம்.
- யாழ்ப்பாணத் தமிழர் 11 பேர் நீர் கொழும்புச் சிறையில்.
1998 - இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெத்தனியாகுவும் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தும் "அமைதிக்கான நிலம் எனும் ஒப்பந்தத்தை அடைந்தனர்.
2002 - செச்சின் தீவிரவாதிகளால் மொஸ்கோ கலாசார அரங்கில் 700 பேர் வரையான பார்வையாளர்கள் பணயமாக வைக்கப்பட்டனர்.
2004 - ஆபிரிக்கப் கறுப்பின பெண்ணுக்கு சமாதான நோபல் பரிசு.
2007 - நாடாளுமன்றில் டக்ளஸை நோக்கி புத்தகங்களை வீசி எறிந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்.
- கடைசி ஒரு தமிழன் இருக்கும் வரை பேரினவாதிகளுக்கு அடிபணியோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சூளுரை. அரசின் கனவு பலிக்காதெனவும் தெரிவிப்பு.
- டில்லி துணை மேயரின் உயிரைக் குரங்குகள் பறித்த சோகம்

## காருக்குள் திக் திக் நிமிடங்கள்

அது ஒரு மலைப் பிரதேசம். நல்ல இருட்டு நேரம். கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. சூசை பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்தான். யாருமே வீதியில் நடமாடவில்லை. பஸ் ஒன்றும் வருவதாகத் தெரியவில்லை.

ஏதாவது கார் வந்தால் லிஃப்ட் கேட்டுப் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த வேளை, ஒரு கார் மெதுவாக ஊர்ந்து வந்து பஸ் தரிப்பிடத்தின் அருகில் நின்றது. சூசைக்கு யோசிக்க நேரம் இல்லை. கார்க் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து உட்கார்ந்தான். கார் மீண்டும் மெதுவாக நகர ஆரம்பித்தது.




அப்பொழுதுதான் சூசை கவனித்தான் சாரதி இருக்கையில் யாருமே இல்லை. ஆனால், கார் நகர்ந்து கொண்டு இருக்கிறது. சூசைக்குப் பயம் தலையிலிருந்து கால்வரை ஏற்பட்டது. வீதியில் 90 டிகிரி திருப்பம். எதிரே கிடுகிடு பள்ளம். நாம் நிச்சயம் காரோடு சமாதி. செத்தோம் என்று எண்ணிக்கொண்டிருந்த வேளை, காரின் ஜன்னலுக்கு வெளியிலிருந்து ஒரு கை உள்ளே நீண்டு ஸ்டீரிங் வீலை திருப்பியது. பயத்தின் உச்சத்துக்குச் சென்ற சூசை, கார்க் கதவைத் திறந்து வெளியே குதித்தான். சற்றுத் தூரத்தில் ஒரு ஹோட்டல் தெரிந்தது. மூச்சிரைக்க ஒரே ஓட்டமாக அங்கே சென்றான் சூசை.

"ஒரு கார், சாரதி இல்லாமல் வந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக ஒரு பிசாசின் வேலைதான். ரொம்பப் பயமா இருக்கு"

என்று ஹிஸ்டீரியா வந்தது போல கத்தினான் அவன்.

ஹோட்டலில் இருந்தவர்கள் எல்லாம் எழுந்து போய் வெளியே எட்டிப் பார்த்தனர். அந்தக் கார் மெதுவாக வந்து ஹோட்டலுக்கு முன்னால் நின்றது. அதன் பின்பக்கத்திலிருந்து வெளிப்பட்ட இரண்டு மனிதர்கள், கறுப்புநிற மழைக் கோட்டோடு உள்ளே நுழைந்தனர்.

அவர்களில் ஒருவன் சூசையை சுட்டிக்காட்டி, "இந்த ஆளுதான், ரிப்பேரான காரை நாம மழையில தள்ளிக்கிட்டு வரும்போது உள்ளே ஏறி உட்கார்ந்தவன்" என்றான்.



# முடிவடைந்தது முட்டை தினம்

■ பா. அபிராமி

வேட்டையாடி உணவு தேடிய ஆதி மனிதர்களின் காலத்தில் இருந்து, தற்காலம் வரை, மனிதர்கள் பறவை முட்டைகளை உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அவற்றில் குறிப்பிடப்பட வேண்டியது கோழி முட்டை. உலக அளவில் சமையலுக்கு அதிகம் பயன்படுத் தப்படுவது கோழி மற்றும் வாத்து முட்டைகளே. ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் சிறிய அளவில் இருக்கும் கௌதாரி முட்டைகளையும் சமைத்து உண்கிறார்கள். ஜப்பான் மக்கள் கௌதாரி முட்டையை வேகவைக்காமலே உண் கிறார்கள். பிரான்ஸ், இத்தாலி, தாய்லாந்து, ஜப்பான், சீனா, இந்தியா, இலங்கை என அனைத்து உலக நாட்டு மக்களின் உணவிலும் முட்டை சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதிகளவில் உணவாக்கப்படும் முட்டை சைவமா, அசைவமா? என்ற விவாதமும் இதனிடையே உள்ளது. சில சைவப் பிரியர்கள் தமக்குள்ள முட்டைப்பிரியத் தால் அது சைவம் என்று உண்பதுவும் உண்டு. அது போகட்டும்! முட்டை ஊட்டச்சத்துக் கள் நிறைந்த அளவில் சிறிய ஓர் உணவு என்பது மட்டும் உண்மை. முட்டை மட்டும் இல்லை என்றால், உலகிலுள்ள அதிகளவான ஏழை மக்க ளுக்கு உணவில் ஊட்டச்சத்து என்ற ஒன்றே இல்லாமல் போயிருக்கும். மிகக் குறைந்த விலையில் அதிக புரதச் சத் துக்கள் கொண்ட உணவு முட்டை. இதனால் உலகம் முழுவதுமுள்ள மக் கள் முட்டையை உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மூளை மற்றும் தசை வளர்ச்சி, ஞாபகசக்தி மேம்பட, நோய் எதிர்ப் புச் சக்தி, பார்வைத்திறனுக்கு... எனப் பல ஊட்டங்களை முட்டை மனித உடலுக்கு அளிக்கின்றது.



அதிகசெறிவான ஊட்டச்சத்துள்ள உணவுகளில் தாய்ப்பாலுக்கு அடுத்த இடத்தில் இருப்பது முட்டை மட்டுமே.முட்டையை வேகவைக்காமல் பச்சை யாக உண்ணக்கூடாது. அதில், சில கிருமித் தொற்று கள் இருக்கலாம். எனவே, கொதிநீரில் சில நிமிடங்கள் முட்டையை வேக வைத்தே உண்ண வேண்டும். அதனுடன் சிறிது மிளகுத் தூள் சேர்த்து உண் பதுவும் நல்லது. இன்றைய கால, தயா ரிப்பு முட்டைகளை விட நாம் வீடுகளில் வளர்த்து வரும் ஊர்க்கோழிகளின் முட்டை களே ஊட்டத்திலும், ஆரோக்கியத்திலும் சிறந்தவை.
ஆனாலும் இத்தகைய பூரணஉணவான முட்டை சில ருக்கு ஒவ்வாத ஒன்றாகவும் உள்ளது. நீரிழிவு நோயாளிகள் முட்டை யிலுள்ள மஞ்சள் கருவைத் தவிர்த்து வெள்ளைப் பகுதியை மட்டுமே உண்ணவேண்டும். சிறுநீரகப் பிரச்சினை உடையவர்கள் முட்டைப் பக்கம் திரும்பிப் பார்க்கவே கூடாது. அவர்களுக்குப் புரதத்தின் அளவு அதிகமாகி நோய்கள் இன்னும் அதிகமாகிவிடும். இவ்வாறான சிலரைத் தவிர, அதிகளவான ஏழைகளுக்கு முட்டையே குறைந்த விலையில் அதிக ஊட்டம் தரும் மிகச்சிறிய உணவுப் பொருள். ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை 'உலக முட்டை தின' மாகக் கொண்டாடப்படுகிறது.

## ஓடுகின்ற தமிழா ஒரு கணம் நின்று பார்...



ஓடுகின்ற தமிழா!
ஒரு கணம் நின்றுபார்
பண்பாடுகளை படமாக்கி விட்டு
நாகரிகம் பூணுவதால்
நற்புகழ் கிடைக்குமென
ஒரு போதும் எண்ணிடாதே
ஒன்றுமிலா உன் மனதில்
ஓர்மத்தை வித்திடாதே

தேடல்களை தேடியே
தேசங்களை அறிந்திடுவாய்
பிற நாட்டு பாங்கினையும்
பிசகின்றி கற்றிடுவாய்
உன் நாட்டு மொழியிலே
உண்மைதனைஉரைத்திடுவாய்

நீதான் தலைவனென்று
தற்பெருமை கொள்ளாதே
உனை வெல்ல இன்னொருவன்
இருப்பதையும் மறக்காதே
கண்ணெதிரே காண்பதெலாம்
நிஜமென்று நம்பிடாதே

நிம்மதியை தேடி நீ
நெடுந்தூரம் அலையாதே
மனதுக்குள்ளே பூட்டி அதை
மறந்துவிட்டுப் போகாதே

காலங்கள் கடந்த பின்னும்
காவியங்கள் வாழ்வதேன்?
ஆழ்வார்கள் அழிந்த பின்னும்
பாசுரங்கள் ஒலிப்பதேன்?
அற்புத அம்சங்கள் என்றுமே
அழிவதில்லை கண்டாயோ

அற்புத அம்சமாய் நீயும்
அழிவின்றி ஒளிர்ந்திடவே
அழிவுகளை படைக்காது
ஆக்கங்களை கொடுத்திடுவாய்

ஒரு சொல்லில் ஓர் உலகம்
உருவாக்க உன்னையன்றி
யாருமில்லை பூமிதன்னில்
உறுதியாய் நீ வாழ்ந்தால்
உள்ளமும் நிறைந்திடுமே

விஞ்ஞான மாற்றங்கள் உனை
விழித்தெழச் செய்யட்டும்
விழியோர கனவுகள் எல்லாம்
வழி வழியே மலரட்டும்.

பாலாஜினி,
பளை.



# "சொர்க்கமே என்றாலும்... அது நம்மூரைப் போல வருமா"

■ ஜெ.றியா

வளம் கொண்ட தேசம் மட்டுமல்ல நல்ல குணம் கொண்டோரையும் கொண்டிருந்தது யாழ்ப் பாணம். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திற்கு மட்டு முரிய சிறப்பாக இருந்த இது தமிழர் செறிந்து வாழும் வடபகுதி முழுவதுக்குமுரியதான தனித்தன்மையாக விளங்கியது. இலங்கையில் வாழும் மற்றைய இனத்த வர்களுடன் ஒப்பிடுகையில், பெற்றோரையும்மூத்தோரை யும் மதிக்கும் பண்பு, குடும்பம் என்பதில் சிறந்த கட்டுக் கோப்பு, கற்பு நெறியிலிருந்தும் விலகாத பெண் சமூ கம், இறை வழிபாடு, நடையுடை, பேச்சு மொழி என்பன வற்றின் தூய்மை போன்ற நிறைந்த காரணங்களுடன் கூடிய மக்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மண் ணில் பாதம் பட்டால் சொர்க்கபூமி என்கின்ற தன்மையை நிச்சயமாக உணரமுடியும். ஆனால் இன்றைய யாழ்ப்பாணத்தை அன்றிருந்தவர்கள் காணமுடிந்தால் மனம்நோகும் நிலைக்கு ஆளாவர்கள்.
நம் மத்தியில் இருக்கும் ஒருசில மூதாதையர்கள் நொந்துகொள்வதிலிருந்து புலனாகும் இதன் அரு மையை, இதை அறிந்திருந்த வெளிநாட்டவர்களின் வருகையும் உணர்த்துகின்றது. வெளிநாட்டவர்கள் நம் சிறப்பைச் சிரமேற்கொள்ளும் வகையில் வாழ்ந்து காட்டிய நாம் வெளிநாட்டு, அயல்மனித நாகரிகங் களைப் பின்பற்றி நம்மை நாமே சீரழித்துக் கொள் வதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# துகிலுரிப்பு

எஸ்.மல்லிகா

நிலவு உதயமாகி எழும் நேரம் அது. வானமெங்கும் யாரோ ஓர் ஓவியன் சிந்திவிட்டது போன்று வண்ணக்கலவை. அதன் மத்தியில், நட்சத்திரங்கள் முகம் காட்டத் தொடங்குகின்றன. ஆள் நடமாட்டமற்ற வரப்போரப் பாதை நறுந்தென்றலில் நனைந்துகொண்டிருந்தது. அதன் இருபுறமும் பசிய செடிகள் அசைந்தாடிக்கொண்டிருந்தன. இந்த இயற்கையின் அழகில் கிறங்கிப்போயிருந்தாள் மாதவி. அவளருகே பிரகாஷ், அந்தப் பிராந்தியத்தை அவதானித்தபடி இருந்தான்.

"பொழுதுபடப் போகிறது. போவமா வீட்டுக்கு?" என்று அவளை இவ்வுலகுக்கு மீட்டுவந்தான் பிரகாஷ். "ம்...என்னமோ சொல்லனும் என்று கூட்டி வந்திங்க. இதுவரை ஏதுமே பேசாமல் நிற்கிறியள். என்ன, சொல்லுங்கோவன்..." என்று இரைந்தாள் மாதவி. "ஒண்டுமில்லயப்பா. இது புது இடம். எனக்கு யாரையும் தெரியாது. பயமாயும் இருக்கு. வாங்கோ போகலாம்" என்று அவன் மீண்டும் அழுத்திச் சொன்னான். அவனது பேச்சுக்கு மௌனத்தைப் பதிலாக்கி, அவனைப் பின்தொடர்ந்தாள் மாதவி– தனது துவிச்சக்கரவண்டியை உருட்டியவாறு.

"எத்தனை மணிக்கு பஸ் வரும்?" என்று அவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான் அவன். "எட்டரை மணிக்கு" என்றாள் அவள். "இப்ப ஆறரை மணி. பஸ் வரும் வரைக்கும் எங்காவது இருந்து கதைப்பம். வாங்கோ" என்றான் பிரகாஷ். அவளுடைய சைக்கிளில், அவளை ஏற்றிக்கொண்டு அண்மையில் இருந்த கடற்கரை நோக்கிச் சென்றான் அவன். எதன் பொருட்டோ அந்த இரவுப் பயணத்தை அச்சத்துடன் எதிர்கொண்டாள் மாதவி. அவளது இதயம் திக் திக் என்று அடித்தது. பேசாமல் வீட்டுக்குப் போவோமா என்று மனம் அலைபாய்ந்தது. அவளது பெரு மௌனத்தை அவன்தான் உடைத்தான். "என்னப்பா ஒண்டும் பேசாமல் வாறீர்?" அவளது கரத்தைப் பற்றியவாறு கேட்டான் அவன். அந்தக் கரங்களின் தழுவலை அவசர அவசரமாகத் தடுத்து, "ஒண்டுமில்ல" என்ற ஒற்றைச் சொல்லில் தன் அச்ச உணர்ச்சியை வெளிப்படுத்தினாள் அவள்.

"பிரகாஷ், சைக்கிளைத் திருப்புங்கள். நாம் ஏதாவது சனநடமாட்டம் உள்ள தெருவில் நின்று கதைக்கலாம்" என்றாள் மாதவி. "எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனா, நீங்க நித்தமும் போய் வாற இடம் இது. யாராவது உங்களைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்றான் அவன்– உள்ளூரப் பெரிய திட்டத்தைத் தீட்டியவாறு. அவன் பேச்சுக்கு மறுப்பின்றி மௌனித்திருந்தாள் அவள். அந்தக் கடற்கரையோரத்தில் களைத்து நின்றது துவிச்சக்கர வண்டி.

மங்கிய நிலவொளியில் ஒரு தேவதை போன்று தென்பட்டாள் மாதவி. இப்படிப்பட்ட தருணங்களில் பெண் ஒரு போதையாகவும் மாறிவிடுகிறாள். அப்படித்தான் அவனுக்கு இருந்தாள் மாதவி. அவளது மென் கரத்தை மீண்டும் தழுவினான் அவன். "இதோ பாருங்க, நீங்க அவசரமா ஏதோ கதைக்க வேணும் எண்டு சொன்னதாலதான் வந்தனான். இதெல்லாம் இப்ப வேண்டாம். முதலில் நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க" என்றாள் மாதவி– அவனது கரத்தைத் தட்டிவிட்டவாறு. கோபத்தால் சிவந்தது பிரகாஷின் முகம். மௌனமாக அந்தக் கடற்கரை மணலில் அமர்ந்தான் அவன். அவனருகே சென்ற மாதவி, "பிரகாஷ், இந்த நேரம் நாம் இங்க தனித்திருப்பது நல்லதல்ல. மீனவர்கள் யாராவது கடலுக்குச் செல்ல வருவார்கள். எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? தயவு செய்து வாங்கோ போகலாம்..." அவனிடம் கெஞ்சினாள் மாதவி. இதனால் இன்னும் ஆத்திரமுற்ற அவன், "அவங்களுக்கு ஏன் நாம் பயப்படனும்?" என்று வலிந்து அவளது கரத்தைப் பற்றினான். "இதோ பார் செல்லம், நாம கலியாணம் கட்டப்போறவங்க தானே? கண்டவங்களுக்கெல்லாம் ஏன் பயப்படனும்? உனக்கு என்னைப் பிடிக்கலயா?" என்றான் அவன். அதிபலத்தை வரவழைத்து அந்தப் பிடியை விலக்கியவள், "இதோ பாருங்க, இது பொது இடம். அதற்குரிய மரியாதையை நாம் கொடுத்தாக வேண்டும்" என்றவாறு சைக்கிள் அருகே சென்றாள். எனினும், அவனது அருகாமைக்கு அவளது மனம் ஏங்கியது. பெண்களின் மனம் சில சமயங்களில், விசித்திரக் கனவுகளும் விபரீத ஆசைகளும் நிறைந்தவை. "நாம கலியாணம் கட்டப்போறவங்க தானே?" என்று பிரகாஷ் கூறிய வசனம் மனதை வருடும் இனிய சங்கீதமாய் அவள் செவிகளுக்குள் ஒலித்தது. இருந்தும், தாய்வழி வந்த பரம்பரை நாணம் தவறு செய்யாதபடி தடுத்தது. நிலவொளி இப்போது அவனது பெயரைப் போல பிரகாசித்துக்கொண்டிருந்தது. பார்வையால் அவளுடைய துகிலை உரிந்துகொண்டிருந்தான் பிரகாஷ். அவர்கள் தலைகளுக்கு மேலே ஆட்காட்டிக்குருவி ஒலி எழுப்பியவாறு பறந்து சென்றது. சற்றுத் தூரத்தில் பெரு மௌனத்தைச் சுமந்திருந்த அடர் பற்றைகளூடு காட்டு முயல்கள் பாய்ந்து சென்றதால், அவை சலசலத்தன. ஊ... ஊ... என்று பேய்க்காற்று வீசிக்கொண்டிருந்தது. கடல் அலைகள் நிலவின் பொற்கதிர்களை அணிந்து அலைந்துகொண்டிருந்தன. நேரம் எட்டு மணியை அண்மித்தது. தொங்கிய முகத்துடன் அவளை நோக்கி நடந்தான் பிரகாஷ். படர்வதற்குத் தடமற்றுத் தவித்த முல்லைக்கொடி போன்று மாதவியின் சிந்தை ஊசலாடியது. பிரகாஷ் அவள் அருகில் சென்று, "உன்னை விட்டுப்போக மனம் இல்லை. ஆனால், நீ மட்டும் என்னை இன்னும் அன்னியனாகவே நினைக்கின்றாய். பரவாயில்லை. வா போவம்" என்றான். அவனை உற்றுப் பார்த்தன அவள் விழிகள். பேரன்பை அவன் மீது பொழிந்தது மனம். அப்படியே அவன் மேனியில் சாய்ந்தவள், சுயநினைவிழந்தாள். தீக்குச்சியாய் அவனும், மெழுகுவர்த்தியாய் அவளும். கணப்பொழுதுக்குள் எல்லாமும் முடிந்தது. "பிரகாஷ், என்னை உங்கட வீட்டுக்குக் கூட்டிச் செல்லுங்கள் ப்ளீஸ்...இனி நான் எப்படி வீட்டுக்குப் போவது?" கதறினாள் அவள். "விரைவில் அழைத்துச் செல்வேன். இப்போது போகலாம் வா" என்றான் அவன். அப்போது– கண் கூசும் ஒளிக்கற்றைகளைக் கக்கியவாறு ஒரு வெள்ளை வாகனம் அவர்களை நோக்கி வந்தது. அவனது மனதுக்குள் பயப்பீதி. ஒருவேளை இது மாதவியின் திட்டமாக இருக்குமோ? அல்லது ரவுடிக்கும்பலோ? அல்லது குடிகாரர்களோ? அச்சம் தரக்கூடிய அனைத்தையும் சிந்தித்தபடி உறைந்தது அவன் மனம். "யாரப்பா இந்த நேரம் இங்க வாறது?" என்று எச்சிலை விழுங்கியவாறு அவளிடம் கேட்டான். "தெரியல" என்றாள் அவள். கண்ணிமைக்கும் நேரத்தில் அவனைத் தாண்டிச் சற்றுத் தூரத்தில் நின்றது அந்த வாகனம். அதனுள்ளிருந்து இறங்கிய இருவர், "டேய், உங்களுக்குக் காதலிக்க வேறு இடமே இல்லையாடா?" என்று கத்தியவாறு தரையில் அமர்ந்தனர்.



(43 ஆம் பக்கம் பார்க்க)



# நன்றியுணர்வு!

த.சரஸ்வதி

அவசர உலகில் நம்மில் பலரும் நிற்க, இருக்க நேரம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். ஏன்? எதற்கு? என்று சிந்திக்கக் கூட முடியாத நிலை. ஒரே ஓட்டம், நடை, பதற்றம், நேரம் இன்மை எனப் பிரச்சினைமேல் பிரச்சினை. இவ்வாறு தான் இன்று அநேகருடைய வாழ்க்கை. இத்தகைய வேகமான பயணிப்பால் நாம் நன்றியுணர்வு உள்ளவர்களாக இருக்கிறோமா? என்பதை மறந்து விட்டோம். இந்த நன்றியுணர்வை நாம் கடைப்பிடிப்பதன் மூலம் நமக்குத் தேவையானவற்றைப் பெற்று முன்னேறிக் கொள்ளலாம் என்பதை அறியாமலுள்ளோம்.

"யாரிடம் இருக்கிறதோ அவருக்கு அதிகமாகக் கொடுக்கப்படும், அபரிமிதம் உண்டாகும்.
யாரிடம் இல்லையோ அவர்வசம் ஏற்கனவே உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்".

இதை நீங்கள் வாசிக்கும்போது இது நியாயம் இல்லாத கூற்றாகத் தோன்றுகிறதல்லவா? ஆனாலும் இதை ஏற்றுக்கொண்டே தான் ஆகவேண்டும். இது பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகவும் ஏழை மேலும் ஏழையாகவும் ஆவான் என்று கூறுவது போல் இருக்கிறதா? இல்லை இதற்குள் ஓர் உண்மை புதைந்து கிடக்கிறது. இதை நீங்கள் உணர்ந்து கொள்ளும்போது உங்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதைக் காணலாம்.

இப்போது மறுபடியும் அந்தக் கூற்றை வாசிக்கும்போது உங்களுக்கு அதன் உண்மை விளங்கும். அதாவது யாரிடம் எது சம்பந்தமாக நன்றியுணர்வு இருக்கிறதோ அவருக்கு அது சம்பந்தமாக அதிகமாகக் கொடுக்கப்படும். அவருக்கு அபரிமிதம் உண்டாகும். யாரிடம் நன்றியுணர்வு இல்லையோ அவரிடம் ஏற்கனவே உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். நாம் ஒவ்வொருவரும் உடல் ஆரோக்கியம், உறவுகள், உணவு, கல்வி, அன்பு, வாழ்க்கை, பணம், வேலை, போக்குவரத்து, விருப்பங்கள், மகிழ்ச்சி, சொத்து, இயற்கை, பூமி, காற்று, நீர், சூரியன், பௌதிகப் பொருள்கள் மற்றும் சேவைகள் ஆகிய அனைத்துக்கும் தினமும் கட்டாயம் நன்றியுரைக்க வேண்டும்.


உங்களிடம்எது இல்லையோ அல்லது குறைவாக இருக்கிறதோ அதற்கு அது சம்பந்தமான நன்றியுணர்வு உங்களிடம் இல்லாததுதான் காரணம். நன்றி உணர்வு நம்முடைய ஒட்டு மொத்த வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்ற உலக நியதியின் ஊடாக இயங்குகிறது. ஓர் அணுவின் உருவாக்கத்திலிருந்து கோள்களின் இயக்கம்வரை நம்முடையபிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஆற்றலையும் கட்டுப்படுத்துகின்ற ஈர்ப்பு விதி அதாவது 'ஒத்தவை ஒத்தவற்றையே ஈர்க்கும்' என்பதாகவே அமைகிறது. வாழும்உயிரிணங்களின் உயிரணுக்களை ஒன்று சேர்த்து வைத்திருப்பது இதுதான். அதேபோல் பௌதிகப் பொருள்களின் சாராம்சத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதும் ஈர்ப்பு விதிதான். நம்முடைய வாழ்க்கையில் இந்தவிதி நம் எண்ணம் மற்றும் உணர்வுகளில் செயற்படுகிறது. ஏனெனில் அவையும் ஆற்றல்தான் எனவே நீங்கள் எதை உணர்கிறீர்களோ அதை உங்களை அறியாமலே உங்களிடம் ஈர்க்கிறீர்கள். உதாரணமாக "எனக்கு வேலை பிடிக்கவில்லை. என்னிடம் பணம் இல்லை. வாழ்க்கை சரியில்லை. எனக்குப் படிப்பு வராது" என்று நீங்கள் சிந்திக்கும்போது மேலும் அப்படியான சந்தர்ப்பங்களையே ஈர்க்கின்றீர்கள். இதையே உங்களுக்குச் சாதகமாக மனதால் நினைத்து "எனக்கு வேலை பிடிச்சிருக்கு, என்னிடம் பணம் இருக்கு" என்று நல்ல உணர்வோடு இருந்தீர்களானால் அப்படியான சந்தர்ப்பங்களே உங்களுடைய வாழ்க்கையில் ஈர்க்கப்படும். இதனையே ஆங்கிலத்தில் Positive என்பர். ஓர் இரும்புத் துண்டு காந்தத்திடம் எப்படி ஈர்க்கப்படுகின்றதோ அதே போலவே நமது வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் நன்றி உணர்வா லேயே நாம் ஈர்க்கப்படுவோம்.

நன்றியுணர்வு குறித்த யோசனையை நியூட்டனின் விதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது இவ்வாறு கூறுகிறது. நன்றி செலுத்துதல் என்ற ஒவ்வொரு விசை யும் பெறுதல் என்ற ஒரு நேரெதிரான எதிர்விசையை விளைவிக்கிறது. நீங்கள் என்ன பெறுவீர்கள்? என்பது நீங்கள் செலுத்தியுள்ள நன்றியின் அளவுக்குச் சமமாக இருக்கும் அதாவது நன்றி செலுத்துதல் என்னும் செயல் பெறுதல் என்னும் எதிர்ச்செயலைத் தூண்டுகிறது. நீங்கள் எவ்வளவு அதிக உண்மையாகவும் ஆழமாக வும் நன்றியுணர்வு உள்ளவர்களாக இருக்கிறீர்களோ? அல்லது அதிகமாக நன்றியை வெளிப்படுத்துகிறீர்களோ அவ்வளவு அதிகமாக நீங்கள் பெறுவீர்கள்.

பணம் எல்லோர் வாழ்க்கையிலும் ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. இதற்கு நீங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்படுவது, பொறாமை கொள்வது, ஏமாற்றமாக உணர்வது, சந்தேகிப்பது, பணம் பற்றிய பயம் போன்றவற்றால் உங்களுக்கு அதிகமான பணம் கிடைத்து விடாது. ஏனெனில் அந்த உணர்வுகள் அனைத்தும் உங்களிடம் அதற்கான நன்றியுணர்வு இல்லாமையே. பணத்தைப் பற்றிக் குறை கூறுவது, விவாதிப்பது, விரக்தியடைவது, பணம் குறித்து மற்றவர்களை மோசமாக உணரவைப்பது போன்றன நன்றியுணர்வின் வெளிப்பாடு அல்ல. அதனால் உங்கள் வாழ்க்கையில் உள்ள பணம் பெருகிவிடாது. ஆகவே பணத்தைப் பெறும் போதோ அல்லது வாங்கும் போதோ நன்றியோடு இருங்கள். உங்கள் வாழ்நாள் முழுக்கக் கிடைத்த பணத்திற்கு நன்றி கூறுங்கள். பணத்தை செலவழிக்கும்போதும் சேமிக்கும் போதும் சந்தோசமான மனநிலையோடு நன்றிகூறுங்கள். காலையில்எழுந்து காலை நிலத்தில் வைப்பதிலிருந்து இரவு நித்திரைக்கு போகும்வரை உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள் வரைக்கும் அனைத்துக்கும் நன்றி சொல்லி ஆக வேண்டும். இதை வாசித்து நன்றியுணர்வோடு வாழ முயற்சி செய்பவர்களுக்கு நன்றி.



# போதையின் பாதை



போதையின் பாதை இன்று
புதைகுழி போகிறது
புரிந்து கொள்ள யாருமின்றி
புன்னகையும் அழுகிறது

அபின், கஞ்சா, பான்பராக் என
அத்தனையும் முழு வேசம்
அழகான நம் உயிரை
அரித்து விட்டுப் போகின்றன

கண்படும் இடமெலாம்
போதையின் விளைச்சல்கள்
பொலிவாய் வளர்ந்திங்கு
போனைாகள் செய்கிறன

காக்க வந்த கடவுளென மனிதம்
அதன் காலைச் சுற்றி கிடக்கிறது
புவியீர்ப்பு விசை கூட
அதன் பின்னால் போகிறது

குடும்பங்கள் குலைகின்றன
நடுவழியில் திரிகின்றன
போதை மயக்கத்திலே
போக்கிடம் இல்லாமல்

இளைஞர்களும் நிலைதவறி
வந்திங்கு விழுகின்றனர்
கஞ்சாப் புகைதனிலே தினம்
காவியம் படிக்கின்றனர்
புரட்சிகள் பல கண்ட
புத்தியுள்ள மனித இனம்
போதையிலே ஆடுவதால்
நாம்படைத்த எம்முலகம்
நாதியற்று போகிறது

அறிவியல் அறிந்தான்
தொழில்நுட்பம் அறிந்தான்
அத்தனையும் அறிந்தென்ன
வாழத்தான் முடிகிறதா?

சுயநினைவிழந்து தினமும்
சுற்றங்களையும் தான் மறந்து
தள்ளாடும் மனித இனம்
தலை நிமிர்வதெப்போது?

பா.பாலைஜினி, பளை



# அன்னாசிப் பழப் பாயசம்



### தேவையானவை

அன்னாசிப் பழத் துண்டுகள்–ஒரு கப்
சீனி –ஒரு கப்
சவ்வரிசி – 100 கிராம்
தேங்காய்ப் பால் – கால் கப்
நெய் – தேவையான அளவு
கஜு, பிளம்ஸ் – சிறிதளவு
ஏலக்காய்த் தூள் – ஒரு கரண்டி

### செய்முறை

சட்டியில் சிறிதளவு நெய் ஊற்றி கஜு, பிளம்ஸ் போட்டு வறுத்துத் தனியே வைத்துக்கொள்ளுங்கள். மீதியுள்ள நெய்யில் சவ்வரிசியை வறுத்து, அரைக் கப் தண்ணீர் ஊற்றி வேகவைத்துக்கொள்ளுங்கள். அன்னாசிப் பழத் துண்டுகளை அரைத்து வடிகட்டி, சாறெடுத்துக் கொள்ளுங்கள். வேகவைத்த சவ்வரிசியில் சீனியைப் போட்டுக் கொதிக்கவிடுங்கள். லேசாகக் கொதித்ததும், அன்னாசிப் பழச் சாற்றை விட்டு மீண்டும் கொதிக்கவிடுங்கள். அத்துடன் தேங்காய்ப் பால் சேர்த்து மீண்டும் நன்றாகக் கொதித்து வந்ததும் வறுத்த கஜு, பிளம்ஸ் சேர்த்து, ஏலக்காய்த் தூளைத் தூவி இறக்குங்கள். அன்னாசிப்பழப் பாயசம் தயார்.





# குளிர்மையும் மகிமையும்

எமது முன்னோர் நோய்களைத் தீர்க்கப் பயன்படுத்திய இயற்கை விளைபொருள்களுள் ஒன்றுதான் இந்த வெந்தயம். உடலுக்குக் குளிர்மையாகவும் குடற்கிருமித் தொற்றுக்களுக்குச் சிறந்த மருந்தாகவும் விளங்கும் வெந்தயத்தை நீரில் ஊற வைத்து, காலையில் எழுந்ததும் அந்த நீரை வெறும் வயிற்றில் குடிப்பதன் மூலம் ஏராளமான நன்மைகளை பெறலாம். அத்துடன் வயிற்றுளைவைக் கட்டுப்படுத்தும் உடனடி நிவாரணியாகவும் இதனைப் பயன்படுத்தி வந்தார்கள்.

இது கொழுப்பைக் கட்டுப்படுத்துவதோடு சலரோகத்தைம் கட்டுப்படுத்தக்கூடியது. தொண்டைப்புண் மற்றும் காய்ச்சல், இதய நோய் பிரச்சினைகள் போன்றவற்றுக்கும் மருந்தாகின்றது.

உடல் எடையால் கஷ்டப்பட்டு வருபவர்கள், தினமும் காலையில் வெந்தயத் தண்ணீர் மற்றும் சிறிதளவு வெந்தயத்தை மென்று சாப்பிடப் பசி கட்டுப்படுத்தப்பட்டு, உடல் எடை விரைவில் குறையும்.

வெந்தயத்தில் டையோஸ்ஜெனின் இருப்பதால், இவை தாய்ப்பால் சுரப்பைத் தூண்டுகின்றன. எனவே தாய்மார்கள் தினமும் உணவில் வெந்தயத்தை சேர்த்துக் கொண்டால், தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

மாதவிடாய்ப் பருவத்தில் ஏற்படும் வயிற்று வலி, தசைப் பிடிப்பு போன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடத் தினமும் வெந்தயத்தை உணவில் சேர்த்து வருவது நல்லது. வெந்தயத்தால், குடற் புற்றுநோய்களில் இருந்து எம்மைக் காக்கவும் முடியும்.



# முடி வளர்ச்சியை தூண்டும் 6 உணவுகள்

ஆரோக்கியமான, அடர்த்தியான கூந்தலே நம் ஒவ்வொருவரின் ஆசை. ஆனால், வாழ்க்கைமுறை மாற்றங்கள், தவறான உணவுப்பழக்கம், பாரம்பரியம் போன்ற காரணிகளால் எமது முடி உறுதியற்றதாகி விடுகிறது. உறுதியான கூந்தலுக்கு விற்றமின் ஏ, சி, இ, பி5, பி6, பி12, இரும்புச் சத்து, துத்தநாகம், புரதம், கொழுப்பு போன்வை மிக முக்கியம். இவை எமது கூந்தலை பட்டுப்போன்று மென்மையாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றக்கூடியவை.

**பருப்புகள்:** பருப்பு வகைகளில் அதிக அளவு துத்தநாகம், பயோட்டின், இரும்புச்சத்து, புரதம் உள்ளன. குறிப்பாக, புரதச்சத்து தலைமுடிக்கு நல்ல உறுதியையும் வளர்ச்சியையும் கொடுக்கும். முடி உலர்ந்துபோகாமல் தடுக்கும். முடிக்கு நல்ல ஊட்டச்சத்தைக் கொடுக்கும்.

**சர்க்கரைவள்ளிக் கிழங்கு:** இதில் விற்றமின் ஏ, நிறைவாக உள்ளது. மேலும், புரதம், தாமி ரம், இரும்புச் சத்தும் உள்ளது. தினமும் உணவில் சர்க் கரைவள்ளிக் கிழங்கைச் சேர்த்துக்கொண்டால், முடி கொட்டுவதைத் தவிர்க்கலாம். இதில் விற்றமின் ஏ நிறைந்துள்ளதால், திசுக்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது. முடிக்கும் சருமத்துக்கும் ஆரோக்கியத்தைத் தருகிறது.

**கரட்:** விற்றமின் ஏ உள்ளதால் முடியோடு சேர்த்து, கண்களுக்கும் சிறந்தது. தோல்மற் றும் முடியை இளமையாக மாற்றும் தன்மை இதற்கு உண்டு. கரட்டை சாலட் அல்லது ஜூஸ் போன்று தயாரித்துத் தினமும் சேர்த்துக் கொள்வது நல்லது. முடி உதிர்வைக் கட்டுப்படுத்துகிறது.

**பால் :** குறைந்த கொழுப்புச்சத்துள்ள சீஸ், தயிர், கொழுப்பு நீக்கப்பட்ட பால் ஆகியவற்றில் கேஸின் (Casein) எனும் ஊட்டச்சத்து உள்ளது. மேலும், புரதச் சத்து நிறைந்தது. இதனால், தலையில் வறட்சி ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

**பழங்கள்:** மாம்பழம், ஸ்ட்ரோபெரி, கிவி, அன்னாசியில் விற்றமின் சி உள்ளதால், முடியின் அழகைக் கொடுக்கக் கூடிய கொலாஜனை உற்பத்திசெய்யும். இந்தப் பழங்கள் அனைத்தையும் சாலட் போல் செய்து சாப்பிடலாம். தோலுக்கு நல்ல நிறத்தையும், முடிக்கு நல்ல பளபளப் பையும் தரக்கூடியது.

**பச்சை வண்ணக் காய்கறிகள்:** பச்சைக் காய்கறிகள், கீரைகளில் விற்றமின் 'ஏ' மற்றும் 'சி' மிகுதியாக உள்ளன. இது, தலையில் உள்ள எண்ணெய்ச் சுரப்பியைத் தூண்டி, முடிக்கு இயற்கையான ஊட்டத்தையும் அளிக்கிறது. செயற்படுகிறது.

# வயிற்று வலியால் அவதிப்படும் பெண்களுக்கு...

பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாய்க் காலத்தில் இயற்கையான மருத்துவ குணம் மிக்க உணவைக் கொடுங்கள். இதனால் அவ்வேளை ஏற்படும் வயிற்று வலி இல்லாமற் போய் விடும்.

பருவம் எய்திய பெண்களுக்கு அன்றே இவ்வாறான இயற்கை மருந்துவமிக்க உணவைக் கொடுங்கள். வேப்பந்துளிர் மூன்றைச் சுத்தமாகக் கழுவி, நன்றாக அரைத்து அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூளையும் சேர்த்து நன்றாக அரைத்து பாக்கின் அளவினதாக மூன்று உருண்டைகளை எடுத்து தினமும் மூன்று என்றவாறு மூன்றுநாளுக்கு உண்ணக் கொடுக்கவேண்டும்.

கசப்பாக இருந்தால் தேன் தொட்டு உண்ணக் கொடுங்கள். வயிற்றுவலி இல்லாமல் போய் விடும். வேர்க்கொம்புத் தூள் அரைத்து அதனுடன் தேன்கலந்து குழைத்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வயிற்று வலி வராமல் போய்விடும்.



# தோட்டத் தொழிலாளருக்கு பூட்டப்பட்ட விலங்கு

ஆசாத்

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து உலகெங்கும் தொழிலாளர் போராட்டங்கள் ஆரம்பமாகின. நியாயமான ஊதியம், 8 மணி நேரவேலை உட்பட உழைக்கும் மக்களின் உரிமைகள் முன்வைக்கப்பட்டுப் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களிலும் தொழிலாளர் போராட்டங்கள் வெடித்தன.

அவற்றில் 1886இல் எட்டுமணி நேரவேலை கோரி அமெரிக்க நகரமான சிக்காக்கோவில் இடம்பெற்ற பேரணியும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பல தொழிலாளர் கொல்லப்பட்டமையும் தொழிலாளர் போராட்டங்களுக்குப் புதிய உந்து சக்தியைக் கொடுத்தது.

இவ்வாறாக உலகம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற்ற போராட்டங்களில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். அது மட்டுமன்றிப் பல தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுப் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவற்றுக்கு எதிராக உறுதியுடன் முகம் கொடுத்துப் பல நாடுகளிலும் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் காரணமாக தொழிலாளர்களின் உரிமைகள் பல வென்றெடுக்கப்பட்டன.

இவற்றில் 8 மணிநேர வேலை, தொழிற் சங்கங்கள் அமைக்கும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை என்பன முக்கியமானவையாகும்.

இந்த உரிமைகள் ஐ.நா. சபையினால் அங்கீக ரிக்கப்பட்டதுடன் பல நாடுகளின் சட்டங் களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தொழிலாளர் போராட்டங்கள் காரணமாகவும் உற்பத்திகள் தடங்கலின்றித் தொடர வேண்டுமென்பதற்காகவும் இந்த உரிமைகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டாலும் அவற்றை இல்லாமல் ஆக்குவதில் முதலாளித்துவ சக்திகள் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகின்றன. பல தியாகங்கள் மூலம் வென்றெடுக்கப்பட்ட 8 மணி நேரவேலை என்ற உரிமை மணித்தியாலங்களுக்கு ஊதியம் என்ற முறை மூலம் மீறப்படுகிறது. மேலதிக நேரவேலை என்ற பேரில் தொழிலாளர்கள் தாமாகவே எட்டுமணிநேர வேலை என்ற கோட்பாட்டை உடைக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து வேலை நிறுத்தம் செய்யும் உரிமை கூட முதலாளிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்படுத்தப்படும் கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் பறிக்கப்பட்டு விடுகிறது.

## உரிமைகளை மறுக்கும் வர்த்தக மையம்

இலங்கையிலும் சட்டபூர்வமாகப் பன்னாட்டுத் தொழிலாளர் சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபோதிலும் அவை முதலாளித்துவ நிறுவனங்களால் மீறப்பட்டு வருகின்றன. ஆட்சியிலுள்ள அரசுகளும் அவர்களுக்கு மறைமுக ஆதரவை வழங்கி வருகின்றன. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்த சட்டங்களின்படி சுதந்திர வர்த்தக வலயத்தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை முற்றாகவே மறுக்கப்பட்டுள்ளது. அங்கு வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமாகும். அவர்கள் பேரணி களையோ ஆர்ப்பாட்டங்களையோ தமது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்து நடத்தினால் போக்குவரத்துத்தடை, பொதுமக் களுக்கு இடையூறு போன்றன காரணங்களாகக் கூறப்பட்டு துப்பாக்கிச் சூடு, தண்ணீர்ப் புகைப் பிரயோகம், தடியடி என்பன பொலிசாரைக் கொண்டு மேற் கொள்ளப்பட்டு அவை கலைக் கப்படுகின்றனர். சிலர் உயிரிழக்கும் சம்பவங்களும் பலர் காயமடைவதும் கைது செய்யப் படுவதும்கூட இடம்பெற்று வருகின்றன.

## மறுக்கப்படும் மலையக உரிமைகள்

இவ்வாறு சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் தமது கோரிக்கை களுக்காக வேலை நிறுத்தம் செய்யும் உரிமை சட்டப்படி பறிக்கப்பட, மலையகத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை முதலாளிமார் சம்மேளனத்துக்கும் சில தொழிற்சங்கங்களுக்குமிடையே மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம் மூலம் பறிக்கப்படுகிறது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்டவர்கள் அவர்களின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் அவர்களின் நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் வேலை நிறுத்தம் செய்து தான் பெறவேண்டும் என்ற நிலைமை கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் நிறைவேற்றப்படுமானால் அது நியாயமானதே. ஆனால் அப்படி எதுவுமே நடப்பதில்லை. முதலாளிமார் சம்மேளனம் எவ்வளவு குறைந்தளவு கோரிக்கைகளை வழங்க முடியுமோ அவ்வளவு பிடிவாதமாக நின்று அதை நிறைவேற்றிக் கொள்ளும். இவர்களால் உரிமை வேண்டும். முக்கிய மலையகத் தொழிற்சங்கங்களும் கடைசியில் சரணடைந்து விடுகின்றன.

## கூட்டு ஒப்பந்தத்தில் அதிருப்தி

கூட்டு ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையே மேற்கொள் ளப்படுகின்றது. இந்த இரண்டு வருட காலப்பகுதியில் பல தடவைகள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து பொருள்களின் விலை ஏறிவிடும். ஆனால் தொழிலாளர்களின் சம்பளத்தில் இந்தக் காலப் பகுதியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அவர்கள் மேலும் மேலும் வறுமைநிலைக்கே தள்ளப்படுவர். இங்கே கூட்டு ஒப்பந்தம் முதலாளிகளுக்கு வரமாகவும் தொழிலாளர்களுக்குச் சாபமாகவும் மாறி விடுகிறது.

கடைசியாக மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் பத்தொன்பது மாதங்கள் கடந்து விட்ட நிலையில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

கடந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி மூன்றரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் வாழ்க்கைச் செலவு எத்தனை மடங்கு அதிகரித்துவிட்டது என்பது நாமறிந்த விடயம். அதற்கேற்ற வகையில் சம்பள உயர்வு வழங்கியிருந்தால் அது நியாயமானது. ஆனால் அடிப்படைச் சம்பளத்தில் ஐம்பது 50 ரூபா கூட்டப்பட்டு ஒரு கண்துடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தமாக 110 ரூபா உயர்த்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அடிப்படைச் சம்பளம் தவிர்ந்த ஏனையவை வருகை, தேயிலை விலை என்பனவற்றுக்கு அமைவதாகவே இருப்பதால் அவை குறைவடையவோ. இல்லாமல் போகவோ வாய்ப்புக்கள் உண்டு. அது மட்டுமன்றி சம்பளம் உயர்த்தப்பட வேண்டிய 19 மாதங்க்ளுக்கான நிலுவைப் பணமும் வழங்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

## தேர்தல் காலத்தில் தோன்றும் முகங்கள்

கடந்த பொதுத் தேர்தலில் 1000ரூபா சம்பளம் பெற்றுத் தருவதாகக் கூறியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட்டது. அதை நம்பிய தோட்டமக்களும் அவர்களுக்கு வாக்களித்தனர்.

இது தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால் தேயிலை விலை வீழ்ச்சி, உற்பத்தி வீழ்ச்சி எனக் கூறப்பட்டு முதலாளிமார் சம்மேளனத்தால் சம்பள உயர்வு மறுக்கப் பட்டது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் தொண்டமானும் அதை நியாயப்படுத்தும் வகையில் தேயிலை விலை வீழ்ச்சியான நிலையில் சம்பளம் கூட்டித் தரமாட்டார்கள் எனக் கூறிவந்தார்.

19மாதங்களாகப் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றபோதும் முதலாளிமார் சம்மேளனம் அசைந்து கொடுக்க மறுத்தது.

ஆறுமுகம் தொண்டமான், வடிவேல் சுரேஷ், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் என வெவ்வேறு தொழிற்சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வந்தனரேயொழிய அனைவரும் ஒன்று சேர்ந்து முதலாளிமார் சம்மேளனத்துக்கோ, அரசுக்கோ அழுத்தம் கொடுக்கும் வகையில் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. அதிலிருந்தே இவர்கள் எவ்வளவு தூரம் தொழிலாளர்களுக்கு விசுவாசமாகச் செயற்படக் கூடியவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

1000 ரூபா சம்பள உயர்வு கோரிப் போராட்டம் நடத்திய ஆறுமுகம் தொண்டமான் ஏன் தனக்குச் சொந்தமான தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதனை நடைமுறைப்படுத்தி ஒரு முன்னுதாரமாக விளங்கவில்லையென்ற ஒரு கேள்வியும் எழுகிறது. இங்குதான் ஒரு முக்கிய விடயம் அவதானிக்கப்பட வேண்டும். கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர் சார்பில் கையெழுத்திடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்கள் அனைவரும் தோட்ட உரிமையாளர்கள் என்பது தான் அது.

## தொடரும் தொழிலாளர் போராட்டம்

இந்த நிலையில் தொழிலாளர்கள் தொழிற் சங்கத் தலைமைகளில் கட்டுப்பாடுகளைத் தூக்கி எறிந்து விட்டு விதியில் இறங்கினர். மலையகமே கொந்தளித்தது. இரண்டு வாரத்தில் மட்டும் 100 கோடி ரூபா நட்டம் காட்டியது. மலையகத்துக்கு ஆதரவாக வடக்கு – கிழக்கு, கொழும்பு எனப் பல முனைகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. தொழிலாளர்கள் 1000ரூபா சம்பளத்தைப் பெற்றே ஓய்வோம் என்ற நிலையிலிருக்க, இரும்பும்பிடியில் நின்ற முதலாளிமார் சம்மேளனம் இறங்கிவந்தது. தொழிலாளர் போராட்டத்தை மழுங்கடிக்கவும் திசை திருப்பவும் மேற்கொள்ளப்பட்ட கண் துடைப்பே தற்போதைய அவசர கூட்டு ஒப்பந் தம்.

இதனை முதலாளிமார் சம்மேளனமும் சில தொழிற்சங்கங்களும் அரசும் ஒன்றிணைந்து ஏற்கனவே நன்கு பின் னப்பட்ட ஒரு சதிவலையின் அடிப்படையில் தொழிலாளர்களுக்குப் போட்ட கைவிலங்கு என்றே கருத வேண்டியுள்ளது.

தொடர்ந்து தொழிலாளர்களை முட்டாள்களாக்க முடியாது. போகந்த லாவை, அக்கறைப்பத்தனை ஆகிய இடங் களில் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து போராட்டங்கள் வெடித்துள்ளன. அவை மேலும் விரிவடையலாம்.







**மேடம்:** உறவினர் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் பன்மடங்கு உயரும். காணாமல் தேடிய பொருள், புதிய முயற்சியால் கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**இடபம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உருவாகின்ற இடையூறைச் சரி செய்வீர்கள். ஆதாயம் சீராக இருக்கும். வெளியூர் பயணத்தில், திடீர் மாற்றம் ஏற்படலாம். ஆடை, ஆபரணம் சேரும்.



**மிதுனம்:** அனைவரின் நம்பிக்கைக்கு உரியவராவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்கள், குடும்ப வளர்ச்சி கண்டு மகிழ்வர்.



**கடகம்:** அத்தியாவசிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. பெண்கள், கணவரிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம்.



**சிங்கம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், அனுகூலமான சூழ்நிலை உருவாகும். வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகம் உண்டு.





**கன்னி:** நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், உருவாகும் வளர்ச்சி கண்டு பிறர் வியப்படைவர். பெண்கள், ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.



**துலாம்:** அவசரப் பணியால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.



**விருச்சிகம்:** கொடுத்த வாக்குறுதியை மீற நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**தனுசு:** புதிய அணுகுமுறையால் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.



**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடந்தேறும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**கும்பம்:** நிதானத்தைப் பின்பற்றினால், சிரமத்தை தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் சுமார். உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



**மீனம்:** ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

ஆஸ்பத்திரியில் வந்து ஒருத்தன் கத்தியால குத்திட்டுப் போற அளவுக்கு எப்படிய்யா அலட்சியமா இருந்தீங்க?



டாக்டர் தான் ஆபரேஷன் பண்றாரோன்னு நினைச்சிட்டேன் சார்!

"கடலை எண்ணெய் என்ன விலைங்க?"
"நூத்தி இருபது ரூபா"
"எப்போ குறையும்?"



"அளந்து ஊத்தும் போதுதான்..."

டாக்டர்: ஏம்மா அந்த பேஷண்ட் பேர் என்ன...?
நர்ஸ்: வாழவந்தான் சார்...



டாக்டர்: அப்புறம் ஏம்மா அவன் இங்க வந்தான்...?

WhatsApp

ரீச்சர்: உங்க அம்மா, அப்பா சண்டை போட்டா நீ யாரு பக்கம்?
மாணவன்: தெருப்பக்கம்



## தணிக்கை பெற்ற தனுஷ் கார்த்தியின் படங்கள்

கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள 'காஷ்மோரா', தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'கொடி' ஆகிய இரண்டு படங்களும் தணிக்கைச் சான்றிதழ் பெற்றுள்ளது.

தனுஷ் முதன் முதலாக இரட்டை வேடத்தில் நடித்திருக்கும் அரசியல் திரில்லர் படமான 'கொடி' படத்துக்கு 'யு' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக த்ரிஷா மற்றும் 'பிரேமம்' நாயகி அனுபமா பரமேஸ்வரன் ஆகியோர் நடித்துள்ளனர்.

இதேபோல், கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள சரித்திர படமான 'காஷ்மோரா' படத்துக்கு 'யுஏ' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

நயன்தாரா, ஸ்ரீதிவ்யா உள்ளிட்டோர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். தணிக்கை பெற்ற இந்த இரு படங்களும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வருகிற ஒக்ரோபர் 28ஆம் திகதி வெளியாகவுள்ளது. இரு படங்களின் மீதான எதிர்பார்ப்பும் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.




வள்ளி புள்ள மணிடா
முதலிடத்திற்கு ஆசைப்படுபவன்
ஒரு முறையாவது தோற்பான்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | | 7 | 5 |
| | 1 | | | 6 | 7 | | | 3 |
| 8 | | | 3 | 5 | | 1 | | |
| | | | 4 | 1 | | | | |
| | 6 | 2 | | | | 8 | | |
| | | | | 7 | | | | |
| 4 | | | | 9 | | 3 | | 6 |
| | | 1 | 7 | | 4 | | | |
| 9 | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 7 | 1 | 3 | 5 | 6 | 4 | 8 |
| 8 | 1 | 6 | 4 | 2 | 9 | 7 | 5 | 3 |
| 5 | 4 | 3 | 8 | 7 | 6 | 9 | 1 | 2 |
| 6 | 5 | 9 | 3 | 4 | 8 | 2 | 7 | 1 |
| 4 | 3 | 2 | 7 | 6 | 1 | 5 | 8 | 9 |
| 7 | 8 | 1 | 5 | 9 | 2 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 4 | 9 | 8 | 7 | 1 | 2 | 5 |
| 1 | 2 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 |
| 9 | 7 | 5 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பாகற்காய்ச் சம்பல்



### தேவையான பொருள்கள்

நடுத்தர அளவான பாகற்காய்கள் – 2 (500 கிராம்)
தக்காளி – 150 கிராம்
பெரிய வெங்காயம் – பாதி
பச்சை மிளகாய் – ஒன்று
மஞ்சள் தூள் – ஒரு தேக்கரண்டி
உப்பு – அளவுக்கு
எண்ணெய் – பொரிக்க

### செய்முறை

மேலே குறிப்பிட்டுள்ள தேவையான பொருள்களைத் தயாராக எடுத்துக் கொள்ளவும்.
வெங்காயத்தை மெல்லியதாக, நீளமாக அரிந்து உதிர்த்து வைக்கவும்.
தக்காளி, பச்சை மிளகாயை வட்டமாக நறுக்கி வைக்கவும்.
பாகற்காயைக் கழுவி நீளமாக இரண்டாக வெட்டி, உட்பகுதியை கரண்டியால் சுரண்டி நீக்கி மெல்லியதாக (அரைவட்டமாக) நறுக்கி வைக்கவும்.
நறுக்கிய பாகற்காயுடன் மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு சேர்த்துப் பிசைந்து வைக்கவும்.
சட்டியில் எண்ணெயைக் காய விட்டு, காயை சிறிது சிறிதாகப் போட்டு (காய் நீர் விட்டு இருக்கும். அழுத்திப் பிழியாமல் வடித்து எடுத்துப் போடவும்) பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். எண்ணெயை நன்றாக வடியவிட்ட பின் அந்தப் பொரியலை ஏற்கனவே கலக்கி வைத்துள்ள பொருள்களுடன் பிசைய வேண்டும். (ஏற்கனவே பொரிக்கும் சமயம் காய்க்கு உப்பு சேர்த்திருப்பதால் இப்போது குறைவாகச் சேர்த்தால் போதும்) கலக்கும் போது அழுத்திப் பிசைய வேண்டாம். சம்பலில் பாகற்காய்த் துண்டுகள் இளகாமல் மொறுமொறுப்பாக இருக்க வேண்டும். கசக்காத, சுவையான சம்பல் தயார்.




பல அளவுகளில் கொழுக்கட்டை அச்சுகள் அறிமுகமாகியுள்ளன. 3 அளவுகளில் உள்ள இவற்றின் மூலம் கொழுக்கட்டை சுலபமாக விரும்பிய அளவில் செய்து முடிக்கலாம். இது 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 400 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 500 | 390 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 700 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 500 | 300 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 500 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 350 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 300 | 300 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 200 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 300 | – |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 80 | 200 |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 300 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 40 | 50–120 | 60 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 60 | 140 | 80 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 200 | 120 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 110 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 60 | 60 | 60 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 70 | 80 | 80 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 120 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 45 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 500 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 140 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 60 | 80 | 80 | 200 | 80 | 100 |

## அரிசி கழுவிய தண்ணீரில் உள்ள சத்துக்கள்

அரிசி கழுவிய தண்ணீரை வீணாக்காமல் சருமத்தை அழகு படுத்துவதற்கும் பயன்படுத்தலாம். அரிசி கழுவிய நீரால் முடி பாதிக்கப்படுவது தடுக்கப்படுவதாக ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அரிசி கழுவிய தண்ணீரை கொண்டு சுண்டைக்காய் காரக் குழம்பு செய்யலாம். சமையலில் இதனை பயன்படுத்துவதால் சுவை கூடுதலாக இருப்பதோடு, சுவையாகவும் இருக்கும்.

அரிசி கழுவிய தண்ணீரைச் சுட வைத்து அந்தத் தண்ணீரை கொண்டு குழந்தைகளின் கால்களுக்கு ஊற்றவும். உடல் முழுவதும் குளிக்க வைப்பதால் உடலுக்கு தேவையான பலம் கிடைக்கும். இதனால் சீக்கிரமாக கால்களுக்கு பலம் கிடைத்து குழந்தைகள் நடக்கும். இதனை இன்றும் கிராம புறங்களில் பின்பற்றுகிறார்கள்.

அரிசியை சுத்தமான நீரில் 1/2 மணி நேரம் ஊறவைத்து, நன்றாக 2 முறை கழுவிக் கொள்ள வேண்டும், பின்னர் அந்த நீரை வடிகட்ட வேண்டும். அந்த நீரால் முகத்தையும், கூந்தலையும் அலச வேண்டும்.



## நாளை
ஐப்பசி-08

திங்கட்கிழமை -24.10.2016
திதி: நவமி பி.ப. 05.41
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.02.33
ராகுகாலம்: 07.32-09.02 வரை
சுபநேரம்: 12.02-01.32 வரை

# இதய நோயிலிருந்து மீண்டு இதயம் கவர்ந்த ரொனால்டோ



உலகமே போற்றும் கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, இதய நோயால் பாதிக்கப்பட்டவர் என்பது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, தற்போது புகழின் உச்சியில் உள்ளார். பெரும் பணக்கார கால்பந்தாட்ட வீரர்கள் பட்டியலிலும் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார். ஆனால் அவர் இந்த இடத்துக்கு வந்தமைக்குப் பின்னால் ஏகப்பட்ட பிரச்சினைகள், சவால்கள் உள்ளன.

1985ஆம்ஆண்டுபெப்ரவரி5ஆம்திகதிரொனால்டோ பிறந்தார். குடும்பத்தில் மொத்தம் நான்கு பேர் உள்ளனர். ரொனால்டோதான் கடைக்குட்டி. ரொனால்டோவின் குடும்பம் கடற்கரையில் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து வந்துள்ளனர். ரொனால்டோவின் தாய் துப்புரவு மற்றும் சமையல்காரராக பணியாற்றியுள்ளார். சிறுவயதிலே ரொனால்டோவுக்கு கால்பந்து விளையாட்டின் மீது தீராத மோகம் இருந்தது. தனது பத்தாவது வயதில் தி அன்ரோறினா கால்பந்து அணியில் ரொனால்டோ விளையாடினார். 15 ஆவது வயதில் ரொனால்டோவுக்கு இதய பிரச்சினை இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. ஓர் அறுவைச் சிகிச்சைக்கு பின் அவர் மீண்டு வந்துள்ளார். இவ்வாறான ஒரு பெரும் பிரச்சனையிலிருந்து மீண்டு வந்ததை இன்று வரை தன்னால் நம்ப முடியவில்லை என அவரே அடிக்கடி சொல்லிக் கொள்கிறார். 17 ஆவது வயதில் ஐரோப்பிய கழகமொன்றின் உறுப்பினராக இணைந்ததை தொடர்ந்தே ரொனால்டோவின் வாழ்க்கை மாற்றம் அடைந்துள்ளது.

தற்போது உலகெங்கும் ஆடம்பர வீடுகள், விடுதிகள், சொந்மாக விமானம், கப்பல், குண்டுதுளைக்காத கார், ஏகப்பட்ட மெய்ப்பாது காவலர்கள் என்று மிகப்பெரும் பணக்கார விளையாட்டு வீரராக ரொனால்டோ உள்ளார்.

## பங்களாதேஷ் சரியான சூடு!

பங்களாதேஷுக்குஎதிரானடெஸ்ட்தொடரில் இங்கிலாந்தின் முக்கிய பிரச்சினையாக கொளுத்தும் வெப்பம் சொல்லப்படுகிறது. பங்களாதேஷுக்குஎதிராகஒருநாள்தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இங்கிலாந்து. இரு அணிகளுக்கும் இடையில் தற்போது டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. டெஸ்ட் தொடரைப் பொறுத்தவரை இங்கிலாந்துக்குப் பெரிய பிரச்சினையாக கொளுத்தும் வெப்பம் சொல்லப்படுகிறது. நீண்ட நேரம் நிலைத்துநின்று துடுப்பெடுத் தாடவும், களத்தடுப்பு நேரங்களிலும் இங்கிலாந்தின் வீரர்கள் மிகவும் சோர்வடைகின்றனர். பங்களாதேஷில் உள்ள தட்பவெப்ப நிலமைகள் தமக்குப் பெரும் சிரமத்தைத் தரும் என இங்கிலாந்து அணியின் தலைவர் அலிஸ்டர் குக் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கிரிக்கெட் அல்லது குதிரை

தற்போது ஓய்விலிருந்துவரும் இந்திய அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் ஜடேயா தனது பொழுதுகளை குதிரைகளுடன் செலவளித்து வருகிறாராம்.

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணி தற்போது விளையாடி வருகிறது. அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா அணி முழுவதுமாகக் கைப்பற்ற ஜடேயாவும், அஸ்வினும் முக்கிய காரணமாக இருந்தனர். அடுத்ததாக இங்கிலாந்துக்கு எதிராக ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடவுள்ளது. இதனால் இங்கிலாந்துக்கு எதிரான தொடரைக் கருத்தில் கொண்டு தற்போது நடைபெற்றுவரும் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் அஸ்வினுக்கும், ஜடேயாவுக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டது. தனது ஓய்வு காலத்தை தனது பண்ணையில் தன் குதிரைகளுடன் செலவு செய்து வருகிறாராம் ஜடேயா.


## இழுபறியின் பின்னர் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் நீண்டகால இழுபறி நிலையின் பின்னர் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்தது.

17 வீரர்கள் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இருப்பினும் மூத்த வீரர்கள் சிலர் குறித்த ஒப்பந்தத் தில் காணப்பட்ட இரண்டுவிதிமுறைகளுக்கு எதிர்ப்பினை வெளியிட்டிருந் தனர்.

அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், ரங்கன கேரத், தினேஸ் சந்திமல், திமுத் கருணாரத்ன, குசல் ஜனித் பெரேரா, சுரங்க லக்மல், லகிரு திரிமன்ன, தில்ருவன் பெரேரா, குசல் மெண்டிஸ், மிலிந்த சிறிவர்தன, நுவான் பிரதீப், கௌசால் சில்வா, தனஞ்சய டி சில்வா, துஸ்மந்த சமீர, தனுஸ்க குணதிலக, ஜெப்ரி வண்டர்சே, சன்டகன் உள்ளிட்ட வீரர்கள் அவ்வாறு கையொப்பம் இட்டனர்.



# துகிலுரிப்பு

(36 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை அடுத்து இறங்கியவர்கள், கைகளில் போத்தல்கள் வைத்திருந்தனர். அவர்கள் குடிகாரக் கும்பல் என்று சொல்லாமலே புரிந்தது. இதற்கு மேலும் அவ்விடத்தில் நின்றால் ஆபத்து என்பதை உணர்ந்த அவன், அவளைச் சுமந்தவாறு சைக்கிளை விறுவிறுவென மிதித்தான். கணக்காக பஸ்ஸும் வந்தது.

அவளுக்கு விடை கொடுத்துப் பிரிந்தான் பிரகாஷ். மாதவிக்கும் பிரகாஷுக்கும் இடையில் இருந்த உறவு, காத லும் இல்லை. நட்பும் இல்லை. எதிர்பாராமல் காலம் காண்பித்த மனிதர்கள் அவர்கள். சந்திப்புத் தருணத்தைச் சாட்சி வைத்து, தொலைபேசியில் உரையாடினர் இருவரும். அன்றும் தொலைபேசி மூலம்தான் அவளைச் சந்திக்க வருவதாகக் கூறிவிட்டு, வந்திருந்தான் பிரகாஷ். பழகிய சொற்ப நாள்களுக்குள் உடலாலும் இணைந்துவிட்டனர் அவர்கள். அதற்கு அடையாளமாக அவள் வயிற்றில் கரு வளர்கின்றது. இதனைக் கூறி, தன் கழுத்தில் தாலி கட்டுமாறு தினமும் அவனுக்குத் தொல்லை கொடுத்தாள் மாதவி. அதற்குப் பிரகாஷ் உடன்படவில்லை. இறுதியாக அவனைத் தேடிதையும் அவனது வீட்டுக்குச் சென்று நியாயம் கேட்டவளிடம், "நான் கேட்டவுடன் என்னுடன் வந்தவள் தானே நீ? இப்படி எத்தனை பேருடன் சென்றிருப்பாய்? உன்னை எப்படி என் மனைவி ஆக்குவது? உனக்கென்ன கண்ணகி என்ற நினைப்போ? மாதவி தானே நீ? போடி" என்று வார்த்தையால் சுட்டான்.

அதில் தீய்ந்தவள், "என்னைப் போல இன்னொரு பெண்ணின் வாழ்க்கையைச் சீர்குலைக்காதே. ஏனென்றால், எல்லோரும் என்னைப் போல உன்னை ஆசீர்வதிக்கமாட்டார்கள்" என்று கூறி விட்டு தற்கொலை செய்யும் எண்ணத்துடன் வேகமாய் நடந்தாள். அவளது கால்கள் அந்தப் பாழ்கிணற்றின் முன்னால் நின்றன.

அந்த வழியால் வந்த கிறிஸ்தவமத பெண் துறவி ஒருவர், அவளது தற்கொலை எண்ணத்தை மாற்றினார்.

அவளுக்கு அறிவுரை கூறி, தான் இருந்த விடுதியில் தங்க வைத்தார். அத்துடன், நீதிமன்றத்தில் எழுதுவினைஞர் வேலையும் பெற்றுக்கொடுத்தார். பத்து மாதங்கள் கழித்து, அழகிய ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் அவள். அந்தக் குழந்தையின் பூவுடலை மெதுவாகத் தடவியவாறு, கட்டிலில் படுத்திருந்தாள். பிரகாஷுடன் பழகிய காட்சிகள் அவளது கண்முன் விரிந்தன. அவளிடம் எஞ்சியிருக்கும் சந்தோசம்- அவன் நினைவுகள் மட்டும்தான். பிரகாஷ் என்றோ ஒருநாள் தன்னையும் பிள்ளையையும் ஏற்றுக்கொள்ள வருவான் என்ற நம்பிக்கையில் அவள் இருந்தாள். காலாவதியாகாது அவனது நினைவுகள் அவளுள் தேங்கிக் கிடந்தன. 3 வருடங்கள் உருண்டும் அவனுக்கான அவளது காத்திருப்பு நீடித்தது.

அச்சமயத்தில், அவளைப் போல அந்த விடுதியில் இன்னொரு பெண் சேர்க்கப்பட்டாள். அவள் பெயர்- சர்மிளா. அவளுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்த மாதவி, அவள் கருவுக்கும் காரணம் பிரகாஷ் என்பதை அறிந்தாள்- அதிர்ந்தாள். அத்துடன், அவன் ஒரு பெண் பித்தன் என்பததையும் தெரிந்துகொண்டாள். மனதின் சேமிப்புக் கிடங்கிலிருந்த அவனது நினைவுகளை மீண்டும் மீட்டெடுக்காத வண்ணம் குழிதோண்டிப் புதைத்தாள். அனைத்தும் ஒரு கனவு போல் நடந்தேறின அவளது வாழ்க்கையில். தீரா வலியைச் சுமந்திருந்த அவள், அவனால் பாதிக்கப்பட்ட இன்னொரு பெண்ணுக்கு இப்போது ஆறுதல் கூறிக்கொண்டிருக்கிறாள்.

மழைக்காலம் முடிந்து மீண்டும் கோடை காலம் மலர்ந்தது. கால வளர்ச்சியில் சர்மிளாவும் அழகிய ஆண் குழந்தைக்குத் தாயானாள். பிரகாஷின் துயிலுரிப்பால் முகிழ்த்த பிள்ளை, நிலாக்கள் இரண்டும் வளர்பிறை போன்று நாளும் பொழுதும் வளர்ந்தன. அவர்களின் மழலை இன்பத்தில் திளைத்திருந்தது அந்த விடுதி. பகலுக்கு ஓய்வளித்துத் தன் கடமையைப் பொறுப்பேற்க விரைந்து வந்தது இரவு. மொட்டவிழ்த்த மல்லிகைப் பூக்களின் வாசனையைச் சுமந்து வந்தது மாருதம். அதனை நுகர்ந்தபடி நிலா முற்றத்தில் பெண் துறவி, சர்மிளா புடை சூழ கதைத்துக் கொண்டிருந்தாள் மாதவி. "வாழ்க்கை தொடர்ந்து விதிகளைப் பொய்யாக்கிக்கொண்டே இருக்கிறது.

என்னதான் பெண்கள் கல்வியில் முன்னேறினாலும், காதல் என்ற போர்வையில் அரங்கேறும் துயி லுரிப்பு விடயத்தில் தொடர்ந்தும் ஆண்களிடம் ஏமாறும் நிலை நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது. இதனை மாற்ற வேண்டும். அதற்கு நாம் தீவிர விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்" என்று சர்மிளாவிடம் கூறிக்கொண்டிருந்தாள் மாதவி. அவர்களின் சிந்தனையை அந்தப் பெண் துறவியும் வரவேற்றார். வேலை, சமூகப்பணி என்று மாதவியின் வாழ்நாள்கள் கரைந்துகொண்டிருந்தன.

ஐந்து வருடங்கள், ஐந்து யுகங்கள் போல் கழிந்தன அவளுக்கு. வழமைபோன்று தன் கடமைக்குச் சென்றாள் அவள். அவளுடன் அவளது பிஞ்சு மகனும் அன்று சென்றான். வேலை ஓய்வின் மத்தியில் நீதிமன்ற அமர்வைத் தன் பிள்ளைக்குக் காண்பிக்கும் பொருட்டு அழைத்துச் சென்றவள், குற்றவாளிக் கூண்டில் பிரகாஷ்- தன் பிள்ளையின் தந்தை நிற்பதைக் கண்டாள். எதிர் முனையில் இன்னொரு பெண் நின்றாள். அவளுக்காக அந்தப் பெண் வழக்கறிஞர் ஆக்ரோசமாக வாதாடிக் கொண்டிருக்கிறார். "கனம் யுவர் ஆனர் அவர்களே! இந்தப் பெண்ணின் குழந்தைக்கு இதோ குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரகாஷ்தான் காரணம் என்பதற்குத் தகுந்த சாட்சியம் கிடைத்துவிட்டது. பிள்ளைக்கு இவர்தான் அப்பா என்பதை டி.என்.ஏ. பரிசோதனை நிரூபித்து விட்டது. ஆதலால், பிள்ளையையும் தாயையும் பிரகாஷ் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் மறுக்கும் பட்சத்தில், அவர்களுக்கு சீவனோபாயத் தொகையைப் பெற்றுக் கொடுப்பதுடன், அவருக்குக் கடும் தண்டனையும் அளிக்க வேண்டும் என்று தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்" - என்றார்.

யாரை மீண்டும் சந்தித்துவிடக்கூடாதென அவள் நினைத்தாளோ- அவன் கண்முன்னே தோன்றினான். அதுவும் இன்னொரு பெண்ணின் துகிலுரித்தவனாகத் தோன்றினான். மாதவி, சர்மிளாவைத் தொடர்ந்து இன்னும் எத்தனை பெண்களை அவன் வேட்டையாடியிருப்பான் என்று யாருக்குத் தெரியும்? புதைக்கப்பட்ட அவனது நினைவுகள் உயிர்பெற்று கம்பளி மயிர்க்கொட்டிகளாய் ஊர்ந்தன அவள் மனதுள். மாதவியையும் அவன் முகச்சாயலில் அவளருகே இருந்த குழந்தையையும் ஏக்கத்துடன் நோக்கினான் பிரகாஷ். அவன் பார்வையை நிராகரித்தவளாக வெளியேறினாள் மாதவி. அந்த மன்று பேரமைதியைச் சுமந்து கொண்டிருந்தது- அவளது உள்ளத்தைப் போல.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 443

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| 9 | | 10 | ■ | 11 | | 12 | |
| | ■ | 13 | 14 | | ■ | 15 | |
| 16 | 17 | | | ■ | 18 | | ■ |
| ■ | 19 | | ■ | 20 | | ■ | 21 |
| 22 | | ■ | 23 | | | 24 | |
| 25 | | | | | ■ | 26 | |

அனுப்புபவர் பெயர்:......................................................
பூரணமான தபால் விலாசம்: ..............................................
.................................................................
கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. உடற்பயிற்சி
6. ஒரேயளவான
7. அடிமை
9. வம்பர்கள் செய்வது
11. பழுத்தல்
13. (கடவுள்)தரும் அருள்
15. மேரு
16. விளையாடும் இடம்
18. புதிய
19. காந்திஜீயின் கடைசி வார்த்தை
20. மிகப் பெரிய
22. மன...
23. சின்னாபின்னமாகி சிதறுதல்
24. தங்களுடைய
25. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்
26. விடிந்த வேளை

### மேலிருந்து கீழ்

1. வடபகுதித் தமிழருக்கான விசேட சட்டம்
2. பயிர் விளைவிப்பு
3. தந்தை
4. பிச்சை
5. ஒரு வகைக் காய்ச்சல்
8. மாத்திரை
10. பூமி
12. தங்களது
14. ஒரு குடிவகை
17. தேவைக்கு அதிகமாக
18. முறைப்பாடு
20 . ஒரு நட்சத்திரம்
21. காடும் காடு சார்ந்த இடமும்
22. துணை
23. ஒரு குறியீடு
25. பொருத்தமற்ற

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 441 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) நிம்மதி (4) எருது (6) தறைதல் (8) வாதம் (10) கலாபம் (11) கிரி (12) அரம் (13) சகலம் (15) நர (16)மனனம் (17) ஆரம் (18) கும் (19) பவளம் (21) முல்லை (22) புறா

**மேலிருந்து கீழ்**

(1) நிர்வாகி (2) மதம் (3) திறை (4) எல்லாம் (5) துலாம்பரம் (7) தகரம் (9) தரிசனம் (12) அலம்பல் (14) கன (15) நரம்பு (16) மகுடி (17)ஆள (20) வலை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**

**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.443
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(02.11.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 441 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

ஜெ.காயத்திரி,
இல.57, இரண்டாம் குறுக்குத்தெரு,
வவுனியா.

**2 ஆம் பரிசு**

சிவம் சத்தியேந்திரா,
இல. 10/2, நடுத்தெருலேன், அரியாலை,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**

தி.பிரியதர்சினி,
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

யோகராசா,
இல. 150, சிவபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**

திருமதி தி.மதுரைநாயகி,
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**பாராட்டுப் பெறுவோர்**

தி.சியாமளாதேவி,
லோகி எஸ்டேட்,
தலவாக்கலை.

ம.நிஷாமிகா,
தரம் 6E, யா/வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை, யாழ்ப்பாணம்.

வ.தினகரன் ராஜராம்,
'மிதிலை' ஆத்தியடி,
பருத்தித்துறை.

சொற்சிலம்பம் போட்டி இல.443இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.11.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 441இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# இந்த வாரம்

23.10.2016 முதல் 29.10.2016 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். தாமதமான பணிகளில் முன்னேற்றம் ஏற்படும். நிதானமாக கப் பேசுவது நல்லது. வாகனத்தில் பராமரிப்பு செலவு உயரும். புத்திரர்களின் எண்ணங்களைச் செயல்படுத்துவீர்கள். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு வரும். பணியாளர்களுக்கு, நிர்வாகத் தால் மனக்கஷ்டம் ஏற்படலாம். பெண் களுக்கு, வீட்டுச் செலவுக்கு சற்று சிரமம் வரலாம். மாணவர்கள், மிகுந்த முயற்சி எடுத்தால் தான் மதிப்பெண்ணைத் தக்க வைக்க முடியும்.

## இடபம்

சூரியன், புதன், குரு அளப்பரிய நன்மை தருவர். நண்பர்களின் அன்பு மனதில் நம்பிக்கையை வளர்க்கும். வாழ்வில் வளம் பெற புதிய திட்டத்தை வகுப்பீர்கள். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர்கள் நல்வழியில் நடந்து நற்பெயர் பெறுவர். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். கணவன், மனைவிக்குள் சிறுபிரச்னை வந்து நீங்கும். பயணத்தால் செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க வேண்டும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு கூடுமளவு வருமானமும் உயரும். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர், சந்திரன் நற்பலன்களை வழங்குவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். புத்திரர்கள் சில தேவைகளை நிறைவேற்ற பிடிவாதம் செய்யலாம்.
உடல்நிலையில் முன்னேற் றம் ஏற்படும். கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நற் பெயரும் சலுகையும் பெறுவர். பெண்கள், தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்களுக்கு, படிப்பில் ஞாபகத்திறன் மேம்படும்.

## கடகம்

செவ்வாய், புதன், சுக்கிரனால் நன்மை ஏற்படும். நடைமுறை வாழ்வில் இருந்த சிரமம் குறையும். உங்களை அவமதித்தவர்கள் விலகுவர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்களின் அறிவுப்பூர்வமான செயல்களைக் கண்டு மகிழ்வீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். கணவன், மனைவி பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள், பணிகளை வேகமாக முடித்து நற்பெயர் பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்புடன் மற்ற துறைகளிலும் முன்னேறுவர்.



## சிங்கம்

சூரியன், குரு, சுக்கிரன் நன்மை தருவர். மனம் அமைதியாக இருக்கும். நண்பர்கள் உங்கள் ஆலோசனையை மதித்து செயல்படுவர். புதிய வீடு வாகனம் வாங்க நிதியுதவி கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு வேலையில் முன்னேற்றம் காண்பர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து லாபம் கூடும். பணியாளர்கள், தொழில் நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், நன்றாகப் படித்துப் பரிசு பெறுவர்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், கேது அனுகூல பலன் தருவர். பேச்சின் வசீகரத்தால் மற்றவர்களைக் கவர்வீர்கள். எதிர்பார்த்த நன்மை எளிதில் வந்து சேரும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். பூர்வபுண்ணிய பலன் முக்கிய தருணத்தில் துணை நிற்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு, வேலைப்பளு உயர்ந்தாலும் அதற்கேற்ற பணவரவு உண்டு. பெண்கள், தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள், நன்றாக படிப்பர்.

## துலாம்

சுக்கிரன், செவ்வாய், ராகு ஆதாய பலன் தருவர். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றம் உருவாக்கும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். தாய்வழி உறவினர் உதவுவர். புத்திரர்கள் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். உடல்நிலை நன்றாக இருக்கும். கடன்களைச் செலுத்துவீர்கள். மனைவி உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் கூடும். பணியாளர்கள், குறித்த காலத்தில் வேலைகளை முடித்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், பிரார்த்தனை நிறைவேறி இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்களுக்கு, படிப்பில் கவனம் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் நிம்மதி நிறைந்திருக்கும். மதிப்பு மரியாதை கிடைக்கும். பயணங்களை அளவுடன் மேற்கொள்வீர்கள். தாராள செலவில் புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாகும். சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். கணவன், மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, கடனுதவி கிடைக்கும். பெண்கள், குடும்ப உறுப்பி னர்களின் பரிபூரண அன்பை பெறுவர்; மாணவர்கள், படிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

## தனுசு

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நன்மை தருவர். எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை விலகும். வாழ்வில் புதிய நல்மாற்றம் உருவாகும். உடன்பிறந்தவர்களின் உதவி உண்டு. வாகனப் பயணத்தால் வருகின்ற நன்மை அதிகரிக்கும். புத்திரரின் குளறுபடியான செயல்களை இதமுடன் சரி செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வழக்கு விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி அதிக அன்பு பாசம் கொள்வார். வெளியூர் பயணம் சுபபலன் தரும். பணியாளர்கள், அதிக வேலை வாய்ப்பை ஏற்பர். பணப்பற்றாக்குறை தீரும். பெண்கள், கணவரின் நல்ல குணம் பாராட்டுவர்.



## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உளளனர். சாதனை நிழ்த்தும் எண்ணத்துடன் பணி புரிவீர்கள். சுற்றுச்சூழல் சாதகமாக அமையும். தம்பி, தங்கைக்கு உதவுவீர்கள். விபரீத ராஜயோகத்தினால் புதிய வீடு, வாகனம் வாங்குவீர்கள். புத்திரர்களின் செயல்கள் பாராட்டும்படி இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக்கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும். பணியாளர் களுக்கு, சலுகை கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

## கும்பம்

செவ்வாய், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். திட்டமிட்ட செயல் நிறைவேற கூடுதல் முயற்சி உதவும். உடன் பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத் திரர்களின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். கணவன், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத முன்னேற்றம் உண்டு. பணியாளர்கள், புத்துணர்வுடன் பணிபுரிவர். பணவரவு திருப்திகரமாகும். பெண்களுக்கு, நகை, பணம் பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். மாணவர் கள், ஆழ்ந்து படித்தால் தான் நல்ல மார்க் பெற முடியும்.

## மீனம்

புதன், குரு, சுக்கிரன், ராகு அளப்பரிய செல்வ வளம் தருவர். செயல்கள் எளிதாக நிறைவேறும். உடன்பிறந்தவர்களுக்கு சுப நிகழ்ச்சி நடந்தேறும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர்கள் அறிவாற்றல், செயல் திறனில் மேம்படுவர். உடல்நிலை பலம்பெறும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடித்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், உறவினர் வருகையால் மகிழ்வர். மாணவர்கள், விரும்பிய பொருளை பெற்றோர் வாங்கித்தருவர்.

# உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப்பங்குத் திருச்சபையின் நூற்றாண்டுப்பெருவிழா மகிழ்வில்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப்பங்குத் திருச்சபையின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டங்கள் இவ்வாண்டு ஒய்வுநிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஏறக்குறைய 60 குருக்கள் புடைசூழக் கொண்டாப் பட்டதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இந்தக் கட்டுரைக்கான தகவல்கள் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய நூற்றாண்டுவிழா சிறப்பு மலரில் இருந்தும் பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதர் அடிகளாரிடம் இருந்தும் பெறப்படடன.

**நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் உரும்பிராயில் விசுவாசவித்து**


போர்த்துக்கேயர் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டு 250 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் விசுவாச வித்து இங்கு விதைக்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி மீண்டும் பண்டாரி - கணபதி - சீனியன் ஆகிய அந்த மூன்று பேரும் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரிடம் வந்து எவ்வித எதிர்ப்பின் மத்தியிலும் கத்தோலிக்க மதத்தைத்தழுவத்தயார்எனத்தெரிவித்ததை அடுத்து ஐப்பசி மாதம் 9 ஆம் திகதி சுவாமி ஞானப்பிரகாசர் முதன் முறையாக உரும்பிராய்குச்சென்று கத்தோலிக்க மறையைத் தழுவ விரும்புவோரின் பெயர்களைப் பதிந்தார்.

**குத்தகைக் காணியில் கொட்டில் கோவில் - 1916**

பண்டாரி - கணபதி - சீனியன் ஆகிய மூவரும் சுவாமி ஞானப்பிரகாசரைச் சந்தித்த இரு தினங்களில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஒரு காணியில் ஒரு சிறிய கொட்டில் போடப்பட்டது. முதலாவது கோவிலான இந்தச் சிறிய கொட்டில் கோவிலே சுவாமி ஞானப்பிரகாசரின் தங்கும் இடமாகவும் அதேசமயம் கோவிலாகவும் விளங்கியது. இக்கொட்டில் கோவிலானது தற்போதைய ஆலய முன் பக்கத்தில் இருந்து தென்கிழக்குப் பக்கமாக கிட்டத்தட்ட 400 யார் தூரத்தில் இருந்தது. இப்பகுதி முன்னர் அவர்களின் சுடுகாடாகவும் விளங்கியது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்தக் கோவிலிலேயே சுவாமி ஞானப்பிரகாசர் 1916 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி முதற் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். இதுவே உரும்பிராயப் பங்குத் திருச்சபையின் ஆரம்ப வரலாறாகும். கோவில் கட்டி திருப்பலி ஒப்புக்கொடுத்த செயலானது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சுவாமியின் இச் செயற்பாடு கிராமத்தில் கலகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்று கத்தோலிக்க உயர் பீடத்திற்கு முறையிடப்பட்டது. ஆயினும் ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை சுவாமி ஞானப்பிரகாசருக்கு ஊக்கமும் உதவியுமே கொடுத்து வந்தார்.

**திருமுழுக்குச்சடங்கில் ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை**

1916 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி உரும்பிராயைச் சேர்ந்த 107 பேர் திருமுழுக்குப் பெற்று திருமறையைத் தழுவிக் கொண்டனர். ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகையும் கியோமர் அடிகளாரும் (பின்னர் ஆயர்) வேறு இரு குருக்களும் திருமுழுக்குச் சடங்கை மிகவும் ஆடம்பரமாக நடத்தினர். முன்பு நீதிமன்றத்தில் கிறிஸ்தவர்களுக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கமாட்டோம் என்று உறுதி கொடுத்தவர்கள் மீண்டும் இப்புதிய கிறிஸ்தவர்களுக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினர். இந் நிலையில் திருமுழுக்கு கொண்டாட்டத்துக்கென மூன்று மடங்கு நீளமாக விஸ்தரிக்கப்பட்ட கொட்டில் கோவிலை 1916ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சுவாமி ஞானப் பிரகாசர் பாடசாலையாக மாற் றித் தானே அப்பாடசாலையின் முதல் ஆசிரியருமா னார். கோவில் பாடசாலையாக மாற்றப்பட்டமையால் ஒரு புதிய கோவிலுக்கான தேவை ஏற்பட்டபோது பாசை யூர் பங்குத்தந்தையாக இருந்த கென்றி ஜெலான் அ.ம.தி சுவாமியார் உரும்பிராய்க் கோவிற்பற்றிற்கு உதவ முன்வந்து பாசையூர் கத்தோலிக்கர்களிடம் இருந்து பண உதவி பெற்றுக் கொடுத்தார். பாசையூர் கத்தோலிக்கர்களிடம் இருந்தும் வேறு சிலரிடம் இருந்தும் பெற்ற உதவியுடனும் ஒரு புதிய கொட்டில் கோவில் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. அக் கோவில் தற்போதைய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வளவில் அமைந்திருந்தது. இக்கோவியில் அன்று வைக்கப்பட்டு இன்றுவரை அங்கிருக்கும் மிக்கேல் அதிதூதரின் திருச்சொரூபம் 1875ஆம் ஆண்டு யாழ். ஆசனக் கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட மிக்கேல் பக்திச் சபைக்கு உரியதாகும்.



மக்களின் விசுவாச வாழ்வைப் பிரதிபலிக்கும் கல்லினாலான ஆலயம் ஒன்றைக் கட்டி எழுப்ப முடிவு செய்யப்பட்டு 1932 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதி அத்திபாரம் இடப்பட்டது. 1932 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஆயர் மேதகு கியோமர் ஆண்டகை இவ்அடித்தளத்தை ஆசீர்வதிக்க உரும்பிராய் சென்றார். அரைகுறை நிலையில் இருந்த அந்தஆலயம் 1932 ஆம் ஆண்டு மார்கழியில் பெய்த மழையினால் இடிந்து விழுந்து பெரும் சேதத்திற்குள்ளானது. ஆயினும் சுவாமி ஞானப் பிரகாசரின் அயராத முயற்சியால் அடித்தளம் இடப்பட்ட இடத்திலேயே மீண்டும் ஒரு கொட்டில் கோவில் அமைக்கப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது.

**பல குருமாரின் முயற்சியில் படிப்படியாக வளர்ச்சி**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரே (1916 - 1946) இங்கு விசுவாச வித்தை விதைத்தார். பின்னர் ரி.ஏ.ஜே. மதுரநாயகம் அடிகளார் (1946 - 1952), வி.சூசைப் பிள்ளை அடிகளார் (1952 - 1958), ஜே.ஸ்பம்பத்தி அ.ம.தி அடிகளார் (1958 - 1960), கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளார் (1960 - 1961), பஸ்ரியாம்பிள்ளை அ.ம.தி அடிகளார் (1961 - 1962) ஆகியோர் இங்கு பணியாற்றினர்.

உரும்பிராய்ப் பங்கில் தங்கிப்பணியாற்றிய முதல் பங்குத் தந்தையாக பெனட் கொன்சன்ரைன் அடிகளார் (1962 - 1966) (தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார்) விளங்குகிறார். இவர் காலத்தில் முன்பு நடைமுறையில் இருந்து இல்லாமற் போன ஆண் பெண்களுக்கான மரியாயின் சேனைகள் மீண்டும் செயற்படத் தொடங்கின. கோவில் காணியில் சில பகுதிகள் விற்கப்பட்டு கோவில் கட்டட நிதி சேகரிக்கப்பட்டது. மக்கள் வெங்காயம் பயிரிட்ட போது குடும்பத்திற்கு ஒரு முடிச்சு என ஆலயக் கட்டட நிதிக்கு காணிக்கையாகச் செலுத்தினர். பீடப்பணியாளர் வருடாவருடம் நடத்தும் கரோல் நிகழ்ச்சி மூலம் பணம் சேகரிக்கப்பட்டு ஆலய கட்டட நிதிக்கு வழங்கப்பட்டது. ஆலய வளவினுள் ஆயர் செலவிலே ஒரு கிணறு



தோண்டப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்ட சேமக்காலைக்காணி அளக்கப்பட்டு எல்லை போடப்பட்டது.

என்.எம்.சவிரிமுத்து அடிகளார் (1966 - 1970) (மரிய. சேவியர் - தற்போது திருமறைக்கலா மன்ற இயக்குநர்) பங்குத் தந்தையாகப் பணியாற்றிய போது திருப்பாடுகளின் காட்சி என்றால் அது உரும்பிராய்தான் என்று கூறும் அளவுக்குச் சிறப்புப் பெயர் பெற்று விளங்கியது. இவர் மக்களிடம் காணப்பட்ட கலை ஆர்வத்தை வளர்த்ததோடு பிள்ளைகளிடம் துறவற பற்றையும் ஊட்டினார். பின்னர் பேனாட் ரட்ணய்யா (1970 - 1971) அடிகளார் ஓராண்டு பணியாற்றியுள்ளார். இராயப்பு யோசப் அடிகளார் (1971 - 1974) (தற்போதைய மன்னார் ஆயர்) ஆற்றிய அப்போஸ்தலிக்கப் பணியும் மக்களின் ஆன்ம வாழ்வில் காட்டிய அக்கறையும் உரும்பிராய் மக்களின் மனதில் இவருக்கு நீங்காத இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. தற்போதைய ஆலயத்தைக் கட்டும் பணியில் இவர் முழு மூச்சுடன் செயற்பட்டார். கடினமான காலத்தில் உணவுக் கூப்பனுக்கு கிடைத்த உலர் உணவுப் பொருள்களைக் குருவிடம் அளித்து அதை விற்று ஆலயத்தை மக்கள் கட்டினர். ஆலயத்தின் பெரும் பகுதி மக்களின் தியாகத்தினாலும் உடல் உழைப்பாலுமே உருவானது எனத்தெரிவிக்கப் படுகிறது.

இராயப்பு யோசப்பு அடிகளாரின் காலத்தில் கட்டப்பட்ட ஆலயத்தின் முடிவுறாத வேலைகள் ஏ.எப்.எக்ஸ். ஜெயசேகரம் அடிகளாரின் (1974 - 1978) காலத்தில் நிறைவு செய்யப்பட்டன. இவருடைய காலத்தில்த்தான் பங்குப் பணிமனை கட்டப்பட்டது. இதற்கான முழுச் செலவையும் யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையே ஏற்றுக் கொண்டார்.

ஏ.பிலிப் அடிகளாரின் பணிக்காலத்தில் (1978 - 1980) 1978ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி ஆலயத்திற்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டது. சின்ன ராசா அடிகளார் 1980இல் 3 மாதங்கள் பணியாற்றியுள்ளார். ஆர்.எம்.ஜி.நேசநாயகம் (1981 - 1984) அடிகளார் - எஸ்.எவ்.கிருபானந்தன் (1984 - 1985) அடிகளார் ஆகியோரும் பணியாற்றியுள்ளார். பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் (1985 - 1988) சேமக் காலைக்கு அதற்குரிய வடிவத்தைக் கொடுத்தார். ஆர்.சி.எக்ஸ். நேசராஜா (1988 - 1993) அடிகளார் காலத்தில் ஆலயத்தை சுற்றி மதில் அமைக்கும் பணி இடம் பெற்றது. ஜே.பி.அன்ரனிதாஸ் (1993 - 1995) அடிகளார் - ஜி.அருள்நேசன் (1995 - 2001) அடிகளார் ஆகியோரும் இங்கு பணியாற்றியுள்ளனர். சி.யே.அன்ரனிபாலா அடிகளார் காலப்பகுதியில் (2001 - 2005) ஆலயத்தின் முன் முகப்பின் இரு பக்கங்களும் கோபுரங்களும் – ஆலயத்தின் முன்பக்க வீதியுடன் இணைந்ததாக பிரதான வாயிலும் அமைக்கப்பட்டு இருபக்கமும் மரங்கள் நடப்பட்டன.

எஸ்.செபநேசரத்தினம் அடிகளார் காலப்பகுதியில் (2005 - 2008) உரும்பிராய் மக்களின் கல்வியை முன்னேற்றும் நோக்குடன் கல்விக்கழகம் அமைக்கப்பட்டு, கல்வியைக் கற்பிப்பதற்கான மண்டபமும் அமைக்கப்பட்டது. மேலும் ஆலயத்தின் முன்பக்க வளாகம் திருப்பலியை நடத்துவதற்கு ஏற்றவிதமாக இருந்ததைவிட மேலும் புற்தரையாக மாற்றியமைக்கப்பட்டதுடன் சேமக்காலையின் துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வாயிற்கதவு புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஏ.யூட் நிக்சன் அடிகளார் (2008 - 2015 ஒக்ரோபர்) காலப்பகுதியில் மகாஞான ஓடுக்கம் (2011 பெப்ரவரி) 40 நாள்கள் நடத்தப்பட்டது. ஆலயத்திற்கான சுற்றுமதில் அமைக்கப்பட்டது. மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்த வைகறை நிலையம் அமைக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு ஒக்சீலியம் சலேசியன் அருட்சகோதரிகள் மடம் இரண்டு மாடிகள் கொண்டதாக அமைக்கப்பட்டது. ஆலயத்தின் பீடப்பகுதி இடிக்கப்பட்டு கோபுரம் அமைக்கப்பட்டதுடன் இருபக்க கைக்கோவில்களும் கட்டியெழுப்பப்பட்டன. கடந்த ஆண்டு நீண்ட கால இடைவெளியின் பின்னர் திருப்பாடுகளின் காட்சி சிலுவையின் அதிர்வுகள் என்னும் தலைப்பில் மேடையேற்றப்பட்டது. வசந்தன் அடிகளாரினது மூன்று மாத கால பணியைத் தொடர்ந்து மடுத்தீன் பத்திநாதர் அடிகளால் ஆலய வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு நூற்றாண்டு விசேட நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டது. விசேட நிகழ்வுகளாக மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி - விளையாட்டுப் போட்டி - வளர்ந்தோருக்கான விளையாட்டுப் போட்டி - இறைவார்த்தைத் தியானம் நற்கருணை ஆசீர் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. சுவாமி ஞானப்பிரகாசரின் அடியிடலில் தம் ஆழ்ந்த விசுவாசத்தை வெளியிட்டு 100 ஆண்டுகளைத்தாண்டி தலை நிமிர்ந்து நிற்கும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப்பங்குத் திருச்சபை மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

## நுட்பம்



### காற்று மாசடைதலை தவிர்க்க சுத்திகரிப்பு நிலையம்

சீனாவின் தலைநகர் பிஜிங் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் அமைந்துள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாகவும் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற அளவுக்கதிகமான வாகனங்கள் மூலமும் வெளியேற்றப்படுகின்ற புகை அன்றாடம் அதிகரித்து வருகின்றது.

இதனால் இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு அதிக அளவிலான பனி மூட்டமும் பனிப் புகையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலே சீனத் தலைநகர் பிஜிங்கில் அமைந்துள்ள 751 டி பார்க் ஆர்ட் என்ற பகுதியில் 7 மீட்டர் உயர கோபுர வடிவிலான காற்று சுத்திகரிப்பான் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதனை நெதர்லாந்து நாட்டை சேர்ந்த டான் ரூசெகார்டி என்பவர் வடிவமைத்துள்ளார். இதன் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இவை மணிக்கு 30 ஆயிரம் கன மீட்டர் அளவிலான காற்றில் கலந்துள்ள மாசுக்களை 75 சதவீதம் அகற்றி சுத்தமான காற்றை வெளியிடும். இந்த சுத்திகரிப்பான் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




### புற்றுநோயைக் கண்டறிய புதிய கருவி அமெரிக்க நிபுணர்கள் கண்டறிவு

புற்றுநோயைக் கண்டறிவதற்கான கருவி ஒன்றை வோசிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதன்பிரகாரம் இந்த கருவியை நாம் தற்போது பயன்படுத்துகின்ற நவீன சிமாட் போனுடன் இணைத்துக் கொள்வதன் மூலம் வீட்டிலிருந்தபடியே குறைந்த செலவில் புற்றுநோயை கண்டறிந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

மிகப் பிரதானமாக இந்த வழிமுறையின் மூலம் ஆய்வுக்கூடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற புற்றுநோயின் பாதிப்பு குறித்த முடிவுகளை தெரிந்து கொள்ளும் பரிசோதனை முறைமையை இவை கொண்டுள்ள தாக ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

புற்று நோயை குணப்படுத்தக் கூடிய மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் அதுமட்டுமன்றி புற்றுநோயை கண்டறிதல் தொடர்பிலும் நோய்க்கான சிகிச்சைகளை பெறுவதிலும் மக்கள் அதிக பணவிரயங்களை எதிர்கொள்கின்றனர்.

இவை தவிர புற்றுநோய் தொடர்பான சோதனைகளை மேற்கொள்வதற்கு மக்கள் பெரிய ஆராய்ச்சி நிலையங்களை தேடிச் செல்ல வேண்டிய சூழ்நிலைகள் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அரச காப்புறுதி நிறுவனமாகிய இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தனது வாடிக்கையாளர்களின் சிறார்களுக்கான பரிசில்களை வழங்கியது. யாழ்ப்பாணக் கிளையின் விற்பனை முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் பரிசில்களை வழங்கினர். (த)

வணிகம்


# 65ஆவது கிளையை பொரளையில் திறந்து வைத்தது யூனியன் வங்கி

யூனியன் வங்கி, அதன் 65ஆவது கிளையை இல. 40, ஞானரத்ன ப்ரதீப மாவத்தை. கொழும்பு 08 என்ற முகவரியில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது. இவ்வங்கிக் கிளையானது, வங்கியின் முழுமையான 'பொருட்கள் மற்றும் சேவைகளை சில்லறை வர்த்தக வங்கியியல், சிறிய மற்றும் நடுத்தரவர்த்தகவாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு அளிக்க, தயார் நிலையில் உள்ளது.

பொரளையில் உள்ள இந்தப் புதிய கிளையானது, யூனியன் வங்கியின் புதிய மற்றும் துடிப்பான ஆளுமை நிறைந்த வங்கிச் சேவைகளைப் பிரதிபலிக்கினறது. இந்தக் கிளையானது, வாடிக்கையாளர்கள் சௌகரியமாகத் தமது வங்கி அலுவல்களை நிறைவேற்றும் வகையில், திறந்த, வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட, அனுசரணை நிறைந்த சூழலைக் கொண்டு, புத்தாக்கம் செய்யப்பட்ட வங்கி அனுபவத்தை, ஸ்நேகபூர்வமான வாடிக்கையாளர் சேவையுடன் அளிக்கக் காத்திருக்கின்றது .

இந்த வங்கிக் கிளையானது வைபவ ரீதியாக, யூனியன் வங்கியின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இந்திரஜித் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் கருத்துரைத்த அவர் இந்தப் புதிய கிளை வடிவமைப்பானது, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு உச்ச மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதீத பெறுமதி மற்றும் சௌகரியமான வங்கி நடவடிக்கைகள் ஆகியவற்றை அளிக்கும் துரித கதியில் முன்னேற்றமடையும் வங்கி என்ற யூனியன் வங்கியின் கருப்பொருளையும் பிரதிபலிக்கின்றது. எமது இந்த புதிய பொரளை கிளையானது, வாடிக்கையாளர்களுக்கு வசதியான சுற்றுச்சூழலை அளிப்பதுடன், தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளையும், ஒருங்கிணைக்கப்பட்ட சுயசேவைகளையும், நிபுணத்துவ ஆலோசனைகளையும் அளிக்கும். இதனூடாக வாடிக்கையாளர்கள், தமது நிதியை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான விரும்பிய சேவை முறையினைத் தேர்ந்தெடுக்க முடியும். யூனியன் வங்கியானது, கடந்த 20 வருடங்களாக ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கையின் வலு மீது கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றை மேலும் முன்னெடுத்த வாறு, நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்பு நல்கும் தொழில் முனைவோர், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்கள் ஆகியோரை மேம்படுத்துவதான தமது கடப்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என தெரிவித்தார். (த)

## முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வசதி புனர்வாழ்வு அதிகார சபை இலங்கை வங்கியூடாக நடவடிக்கை



புனர்வாழ்வு அதிகார சபை புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு இலங்கை வங்கியூடாக சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ள தாக தெரிய வருகின்றது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்று கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மண்முனை வடக்கு டேர்பா மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் எம்.யுகேந்திரன் தலைமையில் இடம்பெற்றிருந்த இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் ஏற்கனவே புனர்வாழ்வு அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்ட நிதி மூலங்களைக்கொண்டு வங்கிகள் மேற்கொண்டுள்ள கடன் வழங்கல் செயன்முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு தற்போது மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலேயே இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த ஒரு வருட காலப்பகுதியினுள் ரூபா 8 மில்லியன் வரை சிறு கைத்தொழில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை வாழ்வாதார மேம்பாட்டுச் சுயதொழில் கடனானது ஒவ்வொருவருக்கும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 4 வீத வட்டியில் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்தத் தொகையை அதிகரித்து வழங்குவது தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடல் நிகழ்வு வங்கிகளுக்கும், அரச அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், புனர் வாழ்வு அதிகார சபையின் தலைவர் என்.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன், மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஏ.கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ரி - 2)



யாழ். நீரிழிவு அஷோசியேஷன் ஏற்பாட்டில் எசட்லைன் லீசிங் கொம்பனியின் அனுசரணையுடன் மாவட்ட செயலகத்தில் நீரிழிவு விழிப்பூட்டல் பதாகைகளை காட்சிப்படுத்தும் திட்ட ஆரம்ப நிகழ்வாக நீரிழிவு அஷோசியேஷன் தலைவரும் எசட் லைன் லீசின் பிரதி நிதியும் மாவட்ட செயலாளரிடம் பதாகையை கையளித்தார். (ற-ரி)



யாழ். மாவட்ட சாரண சங்கத்தின் கலைக்கூறு 1 அண்மையில் யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ற-ரி)



தொழில்சார் கற்கைகள் நிறுவனத்தில் கற்றுவெளியேறிய பிரிவு 3 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இராமநாதன் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள நிறுவனத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிகப் பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில் க.சாந்தகுமார் மாணவருக்கு சான்றிதழ் வழங்கினார். (ற-ரி)






சரவணை பள்ளம் புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் 35 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் நிலையத்தலைவர் சோ. சிவயோகலிங்கம் தலைமையில் அண்மையில் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. (ற-ரி-167)



திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் அண்ணல் மகாத்மா காந்தியின் பிறந்த தின நினைவு விழா நடைபெற்றது. இந்த விழாவில் மலையக கலை கலாசார சங்கம் நடத்தும் சமூக சேவையாளர்களுக்கான இரத்தின தீபம் தேசிய கௌரவப்பட்டம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. கௌரவப்பட்டம் பெற்று விருது பெறுபவர்கள் பான்ட் வாத்திய சகிதம் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். (ற-ரி-167)



மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை சமூகத்தினரால் அண்மையில் ஆசிரியர் தின விழா பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது. பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணனுக்கு பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் க.இராசதுரை பரிசில் வழங்கினார். (ற-ரி, 9)



பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் அதிபர் அ. ஸ்ரீபன் றெக்ஸ் தலைமையில் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் இளவாலை கிளை முகாமையாளர் அழ. பகீரதனும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ற)



வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சங்கானை நிகரை வைரவ ஆலய முன்றிலில் முதியோருக்கான விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ற-ரி-29)






திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கான அனர்த்தப் பாதுகாப்பு தொடர்பான களச் செயலமர்வு முன்பள்ளிப் பணிப்பாளர் திருமதி கர்ணி தனபாலன் தலைமையில் காங்கேசன்துறை துறைமுகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ற-ரி-29)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி முதன்மை நிலை ஒன்றுக்கான பரிசளிப்பு விழாவில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கிருபானந்தன் உரையாற்றுவதையும் கலை நிகழ்வையும் காணலாம். (ற-ரி)



கடந்த 45 வருடங்களாக சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் முன்பள்ளியின் ஆசிரியையாக கடமையாற்றி அமரத்துவமடைந்த திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கத்தின் திருவுருவப்படம் அவர் அமரத்துவமடைந்து 45 ஆவது தினமான கடந்த 20 ஆம் திகதி முன்பள்ளி மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது. (ரி, 9)



நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இந்த வருடம் நடைபெற்ற "வில்லி பாரதம்" தொடர் இசைப் பேருரையின் பூர்த்தி விழாவன்று ஆர்மோனிய வித்துவான் கண்ணனின் இசைப் பணிகளைப் பாராட்டி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மா, பொன்னாடை போர்த்தி "சுபஸ்வரஞானபூஷணம்" என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தார். (ற-ரி)



வடக்கு மாகாணக் கல்வியமைச்சு, ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும், கணினி மூலமாக இலத்திரனியல் பயிற்சி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் செயலமர்வு ஒன்று அண்மையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் கணினிக் கூடத்தில் நடைபெற்றது. (ற-ரி-29)



சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் "சர்வதேச சமாதான தினம்" அண்மையில் மன்னார் தேவன்பிட்டி கிராம மைதானத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எம்.சிறிஸ்கந்தகுமாரும் கௌரவ விருந்தினராக அருட்தந்தை ஸ்ரனி சுவாம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக தேவன்பிட்டி கிராம சேவையாளர் ஜி.டி.நிசாந்தும் கலந்து கொண்டனர். (ற-ரி)






உதயன் விசாரணைக்குழு

# பல்கலை மாணவர்கள் சாவு:



## புதைந்து கிடக்கும் மர்மங்கள்

வழக்கமாகவே மாணவர்களிடம் காணப்படும் துடுக்குத்தனம்தான் அவர்களிடமும் இருந்தது. கடைசி வரை இருந்துவிட்டுக் கடைசி நாளுக்கு முன்பாகப் பரபரப்பாக இயங்கி எப்படியாவது முடித்து டியூட் கொடுத்து விடும் வித்தை அநேகமாக எல்லா மாணவர்களுக்குமே தெரியும்.
பல்கலைக்கழகத்தில் கொடுக்கப்பட்டிருந்த 'அசைன்மென்ட்' முடிக்கவேண்டும் என்ற வேகம் தான் அவர்களிடமும் இருந்தது. திருநெல்வேலியில் இருந்து நண்பர்களைவிட்டுக் கிளம்பும் போது 'டியூட்' முடிக்கும் அவசரமே அவர்களிடம் அரக்கப் பறக்கத் தெறித்தது. காலனின் பாசக் கயிறு காலிலேயே கொழுவிக் கிடப்பது தெரியாமலேயே மோட்டார் சைக்கிளின் 'செல்வ் ஸ்ராட்டை' நுள்ளிக் கிளப்பினான் சுலக்சன். பின்னாலேயே தொற்றிக்கொண்டான் கஜன். ஹெல்மெட்டுக்களை மாட்டிக்கொண்டார்கள். "பாய் மச்சான்" என்ற வார்த்தைகளுடன் பிரிந்துபோனார்கள்.
புது மோட்டார் சைக்கிள். புறப்பட்டதுமே நன்றாகப் 'பிக்கப்' கொடுத்தது. ஹெல்மெட்டில் ஓங்கி அறைந்து உடலை உதைத்துப்போன குளிர் காற்றின் ஊடே அவர்களின் பயணம் நகர்ந்த போது, அந்தக் காற்றோடு காற்றாகத் தாமும் கலக்கப் போகிறோம் என்பது நடராசா கஜனுக்கும் பவுன்ராஜ் சுலக்சனுக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

### மாணவர்கள் சாவு

"இரவு பதினொன்ரரை இருக்கும். திடீரென்று படபட வென்று நாலஞ்சு வெடிச் சத்தம். பிறகு படார் என்றொரு பெரிய சத்தம். நடுங்கிப் போனம். என்னடா ஏது என்று பயந்து பயந்து வீட்டுக்கு வெளியில வந்து பார்த்தால் மோட்டார் சைக்கிள் ஒண்டு பிரண்டு போய்க் கிடந்தது. பொலிஸ்காரரும் நின்றிச்சினம். மோட்டார் சைக்கிளோட ரெண்டு பெடியள் விழுந்து கிடந்தாங்கள்."





நண்பர்களிடம் இருந்து புறப்பட்ட பின்னர் இடைவழியில் முடிந்து போன கஜன், சுலக்சனின் வாழ்க்கைக் கதை மீண்டும் இப்படித்தான் ஆரம்பிக்கிறது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் கற்கிறார் கஜன். கிளிநொச்சி பாரதிபுரம் சொந்த இடம். யாழ்ப்பாணத்துக்குக் கல்வி கற்க வந்து இரண்டு வருடங்கள் கடந்தாயிற்று. சுலக்சன் நெருங்கிய நண்பன்.
சுலக்சன் ஊடகவியல் துறையில் 3ஆம் ஆண்டு மாணவன். குறும் படங்கள் நடிப்பதில் அதீத ஆர்வம் கொண்டவன். ஈழச் சினிமா பற்றிய தேடலும் ஆர்வமும் கொண்டவன். யாழ்ப்பாணம் அளவெட்டி அவனுக்கு வசிப்பிடம்.
இருவரும் வெவ்வேறு துறைகளில் கற்பவர்கள் என்றாலும் பகிர்ந்துகொள்வதற்கும் தெளிந்துகொள்வதற்கும் இருவருக்கும் இடையில் நிறையவே விடயங்கள் இருந்தன. அதற்கேற்ற நெருக்கமும் இருந்தது.
திருநெல்வேலியில் இருந்து கஜனின் வீட்டுக்கே இருவரும் சென்றுகொண்டிருந்தார்கள் என்கிறார்கள் நண்பர்கள். ஆனால், எப்படி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குள் மாட்டிக்கொண்டார்கள் என்பது மர்மமாகவே இருக்கின்றது. என்ன நடந்தது என்பதைச் சொல்ல பொலிஸும் அரசும் மறுக்கின்றன.
அவர்களின் சாவுகள் தொடர்பில் 5 பொலிஸாரைக் கைது செய்திருக்கிறோம், பெற்றோருக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம் என்றெல்லாம்தான் அரச தரப்புத் தகவல்கள் வருகின்றனவே தவிர, அவர்கள் ஏன் சுடப்பட்டார்கள்? எப்படிச் சம்பவம் இடம் பெற்றது? என்பன போன்ற கேள்விகளுக்கு எவரிடமும் தெளிவான பதில் இல்லை.

### குளப்பிட்டியில் சம்பவம்

நள்ளிரவு சுமார் 12.30 மணியளவில் குருதி வடிந்த நிலையில் சுலக்சனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட போது, குற்றுயிரும் குலையுயிருமாக கஜனும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டான். எனினும் சிகிச்சை செய்து காப்பற்றத்தக்க நிலையை அவன் கடந்திருந்தான். சிறிது நேரத்திலேயே அவனது உயிர் வைத்தியசாலையிலேயே பிரிந்தது.
காலையில் கொக்கு வில் குளப்பிட்டிச் சந் திப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். குற்றப்பகுதி என்று அறிவிக்கும் பொலித்தீன் பட்டைகள் வீதியில் கணிசமான நீளத்திற்கும் மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் விழுந்து கிடந்த பகுதியைச் சுற்றியும் கட்டப்பட்டும் வீதியில் கிடத்தப்பட்டும் இருந்தன.
மோட்டார் சைக்கிள் விழுந்து கிடந்த இடத்திலிருந்து கொக்குவில் சந்திப் பகுதியை நோக் கிச் சிறிது தூரத்திற்கு வீதியில் படிந் திருந்த குருதிக் கறை தூறிக் கொண்டிருந்த மழையில் கரைந்து கொண்டிருந்தது.
வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் சிற்றுண்டிக் கடை ஒன்றுக்கும் மற்றொரு பழைய கடைக்கும் இடையில் காணப்பட்ட மிகக் குறுகலான பதைக்குள் புகுந்த நிலையில் தெற்கு நோக்கிச் சரிந்து கிடந்தது. அருகில் கடையின் வாசலோரம் இரண்டு ஹெல்மெட்டுக்களும் ஒழுங்காக ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.
மோட்டார் சைக்கிளின் இடப்புறக் கைபிடியில் காய்ந்திருந்த குருதிக் கறையை மழை ஈரலிப்பாக்கிக் கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியின் மீதும் குருதி சிதறியிருந்தது. முன் சில்லு அடிவாங்கியதில் 'ரிம்' நெளிந்திருந்தது. சில கம்பிகளும் உடைந்திருந்தன. மோட்டார் சைக்கிளின் வேறு பகுதிகளில் எந்தச் சேதத்தையும் பார்க்க முடியவில்லை.

### விசாரணை ஆரம்பம்

காலை 9 மணியளவில் யாழ்ப்பாண நீதிவான் சதீஸ்கரன் பொலிஸ் அதிகாரிகளுடன் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை நடத்தினார். யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணர் யு.மயூரதனும் சம்பவ இடத்தில் களஆய்வுகளை நடத்தினார். பொலிஸாரின் தடயவியல் நிபுணர்களும் (சோக்கோ டீம்) களஆய்வில் ஈடுபட்டனர்.
அதற்கு முன்னதாக சம்பவம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் நள்ளிரவே ஈர்க்கப்பட்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் விடயத்தை மைத்திரிபாலவின் கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு சென்றார்.
ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரிடம் அது குறித்து விசாரித்திருந்தார். ஆனால் மாணவர்கள் விபத்தில் சிக்கியே இறந்தனர் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டாலும், மாணவர்கள் மீது




சூடு நடத்தப்பட்டமை ஆரம்ப விசா ரணைகளில் இருந்து அறியப் பட்டது. இதனை அடுத்து யாழ். பொலிஸ் நிலையத்தில் இருந்து முதல்நாள் இரவுக் கடமைக்குச் சென்ற பொலிஸார் அனைவரை யும் வெளியே செல்லவிடாமல் உயர் அதிகாரிகள் மறித்து வைத் தனர்.
விடயம் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குச் சென்றதைத் தொடர்ந்து விசாரணைகள் கொழும்பில் இருந்து நேரடியா கவே நெறிப்படுத்தப்பட ஆரம்பித்தன. விரைவு நடவடிக்கைக் காக முல்லைத்தீவு பொலிஸ் நிலை யத்தில் இருந்து ஒரு பொலிஸ் அணி யாழ்ப்பாணம் அனுப்பப் பட்டது. ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவர்கள் 5 பொலி ஸாரைக் கைது செய்தனர்.
மாணவர்கள் உயிரிழந்தமை தொடர்பில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவலை மட்டும் அரச தகவல் திணைக்களம் மாலையில் வெளியிட்டது. ஆனால், நடந்த சம்பவம் என்ன, மாணவர்கள் மீது ஏன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட் டது என்ற எந்த விவரமும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

**உடல்கூறு பரிசோதனை**

இதற்கிடையில் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. இரு மாணவர்களுக்கும் நடந்தது என்ன என்று அறிவதற்காக நூற்றுக் கணக்கான மாணவர்கள் வைத்தியசாலையின் பிண அறை முன்பாகக் கூடி நின்றனர். அவர்கள் மத்தியில் பரபரப்பும் பதற்றமும் காணப்பட்டது.
மாணவர்கள் விபத்தில் இறந்தனரா? அல்லது பொலிஸார் சுட்டுக் கொன்றனரா என்கிற தகவல்கள் எவையும் சரிவரத் தெரியாததே மாணவர்களின் பதற்றத்துக்குக் காரணம். மாண வர்கள் இருவரையும் பொலிஸாரே சுட்டுக் கொன்றிருந்தால் அவர்களின் விசாரணையையும் அவர்கள் முன்பாக நடக்கும் உடற்கூற்றுப் பரிசோதனையையும் எப்படி நம்புவது,
எனவே மாணவர் பிரதிநிதிகளின் முன்னிலையிலேயே உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் குழம்பத் தொடங்கினர். எனினும் அரசியல்வாதிகள், பல்கலைக்கழக நிர்வாகிகள் ஆகியோரின் உதவியுடன் மாணவர்கள் ஒருவாறு சமாதானப்படுத்தப்பட்டனர்.
நடத்தப்பட்ட உடற்கூற்றுப் சோதனையின் அடிப்படையில் சுலக்சனின் மார்புப் பக்கமாகப் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு முதுகுப்புறமாக வெளியேறி இருந்தமை கண்டறியப்பட்டது. உள்ளே பாய்ந்த குண்டு இதயத் திற்கு மேலாக குருதி நாடியை துண்டறுத்துப் பாய்ந்திருந்ததால் விரைவில் அவரது இறப்பு சம்ப வித்ததாக உறுதிப்படுத்தப்பட்டது. அவரது உடலில் கழுத்துப் பகுதியிலும் முழங்காலுக்குக் கீழான பகுதியிலும் காயங்கள் காணப்பட்டபோதும் அவை துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்டவையாக இருக்க வில்லை. விழுந்து அடிபட்டதால் ஏற்பட்ட உரஞ்சல் காயங்களாக இருந்தன.
கஜனின் உடலில் துப்பாக்கிச் சூட் டுக் காயங்கள் ஏதும் காணப்படவில்லை என்றபோதும் தலை நொருங்கியிருந்தது. கீழே விழுந்து அடிபட்டதாலோ சுவரில் மோதியதாலோ இவ்வாறு தலை பலமாக அடிபட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.



நொறுங்கிய தலையில் ஹெல்மெட்டின் உடைந்த சிதறல்கள் பலவும் மீட்கப்பட்டிருந்தன. எனவே ஹெல்மெட்டுடன் சேர்த்து பலமான பொருள் மீது தலை மோதுண்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.
அப்படி நடந்திருக்கலாம் என்று சட்டவைத்திய அதிகாரி கருதுகின்றபோதும், 100 வீதம் அதுதான் காரணமாக இருக்கும் என்ற உடனடியான தீர்மானத்துக்கு வரமுடியாது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.
மாணவர்கள் இருவரும் மது அருந்தியிருந்தனரா என்பதை அறிய அவர்களது குருதி மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனினும் உடற்கூற்றுப் பரிசோதனையின் ஆரம்பக்கட்டத்தில் அதுபோன்று மது அருந்தியதற்கான ஆதாரங்கள் எவையும் கண்டறியப்படவில்லை.
உடற்கூற்றுப் சோதனைகளின் பின்னர் இரவு 9 மணியளவில் இரு மாணவர்களினதும் உடல்கள் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து அகற்றப்பட்டன.





**பொலிஸ் கூறும் காரணம்**

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை நிற்குமாறு பொலிஸார் சைகைகாட்டியபோதும் அவர்கள் நிற்கவில்லை. அதனால் வாள் வெட்டுக்குழு என்று நினைத்துப் பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளனர். நிற்குமாறு சைகை காட்டியபோது அவர்கள் நின்றிருந்தால் பிரச்சினை வந்திருக்காது.

விபத்தினால் உயிரிழந்தனர் என்றுதான் முதலில் கூறப்பட்டது. உயிரிழந்தவரது சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டது. அங்கு சட்ட மருத்துவ நிபுணரும் நீதிவான் ஆகியோரே செல்ல முடியும். நாங்கள் சென்று என்ன நடந்தது என்று பார்வையிடமுடியாது. பிறகுதான் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் தெரியவந்தது. என்று யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லாஸ் நேற்றுத் தெரிவித்தார்.

**மாணவர்கள் குழப்பம்**

உடல்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதை அடுத்து அவர்களின் இறுதிச் சடங்குகளை நடத்துவதில் மாணவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். எனினும் தமது சக மாணவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அவர்கள் குழப்பத்திலேயே உள்ளனர். பொலிஸார் ஏன் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்ற உண்மை தமக்குத் தெரியவரவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். பக்கச்சார்பற்ற முறையான நீதி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.
இரு மாணவர்களது இறப்பும் தற்செயலானதாகவோ தெரியாமல் நடந்த தவறாகவோ கொள்ளப்படாமல் திட்டமிடப்பட்ட படுகொலை என்றே விசாரிக்கப்படவேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். பல்கலைக்கழகச் சமூகமும் இதே கோரிக்கையையே வலியுறுத்துகின்றது.
நாளை திங்கட்கிழமை முதல் வகுப்புக்களைப் புறக்கணிப்பது உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபடுவதா என்பது குறித்தும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். விரைவில் அதுபற்றிய அறிவிப்புக்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. மாணவர்கள் இருவரும் உயிரிழந்தமைக்கான உண்மைக் காரணம் கண்டறியப்பட்டு அது மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அதுவே தேவையற்ற எதிர் விளைவுகளைத் தடுக்கும்.

# பல்கலை. மாணவர்கள் நாளை போராட்டம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், இந்தப் படுகொலைக்கு நீதி கோரியும் நாளை திங்கட்கிழமை அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிவித்துள்ளது. இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கைதான...

ஸாரும் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்துக்கு வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த 5 பேரையும் கைது செய்து நேற்று யாழ். நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரனிடம் முற்படுத்தினர். இதன்போதே அவர்களை நவம்பர் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் மதியம் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு உடனடியாகச் சென்று விசாரணை செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டார்.

இதன்படி நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 10 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணை நடத்தியிருந்தனர். இதனையடுத்து 5 பொலிஸார் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிராகத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அவர்கள் நீதிமன்றில் நேற்று முற்பகல் 9 மணியளவில் முற்படுத்தப்பட்டபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உப பரிசோதகர் சரத் திஸ்ஸ, பொலிஸ் சார்ஜன்ட் ஜெயவர்த்தன, பொலிஸ் கொஸ்தாபல்களான சந்தன, லங்காமன், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி நவரத்தின ஆகியோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அணி யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று விசாரணைகளைத் தொடர்கிறது என்று பொலிஸார் கூறினர். (த-4)

## தூதரகத்தை...

நாளை திங்கட்கிழமை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்போவதாக மே பதினேழு இயக்கம் அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர், கடந்த வியாழக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கட்சிகள் பலவும் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப் போவதாக மே பதினேழு இயக்கம் அறிவித்துள்ளது. நாளை திங்கள்கிழமை காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் மே பதினேழு இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அரசியலில் யாழ். பல்கலைக்கழக மாணவர் எழுச்சியே முக்கியத்துவம் வாய்ந்தது. சிங்களப் பேரினவாதத்தின் தொடர் இனப் படுகொலை முயற்சிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டம் நடத்தியது யாழ். பல்கலைக்கழக மாணவர்களே.

யாழ். பல்கலைக்கழக மாணவர் படுகொலை என்பது பன்னாட்டுச் சமூகத்தின் தோல்வி. அமெரிக்கத் தீர்மானத்தின் தோல்வி. இந்தியத் துரோகத்தின் விளைவு. இனப் படுகொலையின் தொடர்ச்சி.

தமிழக மாணவர்களே! சிங்கள பேரினவாதத்தின் கொலை வெறிக்கு எதிராக அணிதிரள்வோம்–என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## பொருளாதார....

ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மதகுவைத்த குளத்தில் பொருளாதார மத்திய நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கான ஏற்பாடுகள் முடிவுற்றிருந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர், வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் இடத் தெரிவு தொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்து, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடிய பின்னர் முடிவெடுக்கலாம் என்றும் அதனால் அடிக்கல் நடும் நிகழ்வை ஒத்திவைக்குமாறும் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு அமைவாக அடிக்கல் நடும் நிகழ்வை ஒத்திவைக்குமாறு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

**பின்னணி**

2016 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கான இடத் தெரிவில் சர்ச்சை தோன்றியிருந்தது. தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினரும், ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் நின்றமையினால், இழுபறி ஏற்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டிருந்தது.

இதன் பின்னர் கொழும்பு அரசு, வவுனியா மதகுவைத்த குளத்திலும், முல்லைத்தீவின் மாங்குளத்திலும் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப் பரிந்துரைத்தது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்திருந்தார்.

இதற்கு அமைவாக, மதகுவைத்த குளத்தில் பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் வன்னி மக்கள் பிரதிநிதிகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5-101)

## பல்கலை...

யாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் மாணவர்களுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது- 23) என்ற யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை மாணவனின் உடலம் நேற்று 155 ஆம் கட்டை, கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவனான யாழ்ப்பாணம், கந்தரோடையைச் சேர்ந்த பவுன்ராஜ் சுலக்சனின் உடலம் அவரது இல்லத்தில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அரசியல் தலைவர்கள் உட்படப் பலரும் அங்கு திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். கிளிநொச்சி மாணவன் கஜனின் சடலம் இன்று ஞாயிற்றுக்கிழமையும் கந்தரோடை மாணவன் சுலக்சனின் சடலம் நாளை திங்கட்கிழமையும் அடக்கம் செய்யப்படவுள்ளன. (த-21-101)

## யாழில்...

400 இற்கும் மேற்பட்ட பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து யாழ்.குடாநாட்டில் பதற்றமான நிலையே காணப்படுகிறது. இதனால் எங்காவது குழப்பங்கள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றால் அதனைக் கட்டுப்படுத்தவெனப் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதற்காகச் சகல பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸார் உசார்படுத்தப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான பொலிஸார் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எங்காவது குழப்பங்கள் இடம்பெற்றால் அதிரடியாகக் களமிறங்க அவர்கள் தயாராக உள்ளனர்.

யாழ்.நகர் உள்ளிட்ட பல இடங்களிலும் பொலிஸார் சிவில் உடையிலும் இறக்கிவிடப்பட்டு கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த-4)

## கண்டிக்கிறார்...

சம்பவத்துக்கு ம.தி. மு.க பொதுச் செயலர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பவுன்ராஜ் சுலக்சன், நடராசா கஜன் இருவரும்

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்துக் கொல்லப்பட்டனர்.

ஈழத்தில் சிங்கள இனவெறி இன்னும் தணியவில்லை, தமிழ் மக்களின் குருதி சிந்தப்படுகிறது என்பதற்கு இந்தக் கொடூரச் சம்பவம் எடுத்துக்காட்டாகும். மைத்திரிபால சிறிசேன அரசு உலகத்தை ஏமாற்ற அமைதி வேடம் போட்டுக் கொண்டே தமிழ் மக்களைச் சிங்கள இராணுவம் மற்றும் காவல்துறை மூலம் ஒடுக்கும் வகையில் அரச பயங்கரவாதத்தை ஏவி விடுவது கடும் கண்டனத்துக்குரியதாகும்.

உலகெங்கும் வாழும் தமிழர்களும், ஈழத்தில் தமிழர்கள் மீதான அடக்குமுறையை எதிர்த்து குரல் கொடுத்து வருகின்றனர். இந்திய அரசு சிங்கள இனவாத அரசுக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்- என்றார். (த-ரி)

## சாவடைந்த...

நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சாவு தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களின் சாவுச் செய்தியைக் கேட்டு மிகவும் கவலையடைந்துள்ளேன். ஒரு தந்தையாக நான் இந்தக் கவலையைத் தெரிவிக்கின்றேன். அந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாகப் பக்கச்சார்பற்ற- சுயாதீனமான விசாரணையை நடத்தி அது குறித்த அறிக்கையை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அதற்கமைய அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை எந்தவொரு தடையுமின்றி மேற்கொள்ளப்படும்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (த-5)

## மறித்தும்...

வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தமை குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்கள் மதுபோதையில் காணப்பட்டுள்ளனர். பரிசோதனையிலும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைப் பிடிக்கப் பொலிஸார் வீதிகளில் நின்று இரவிரவாக காவலில் ஈடுபடுகிறார்கள். இந்த நிலையில் தேவையில்லாத இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நிற்குமாறு கூறியபோது அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

மாணவர்கள் விபத்தினால் உயிரிழந்தனர் என்றுதான் முதலில் கூறப்பட்டது. விபத்துக்குள்ளானவுடன் அவர்களைப் பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்தனர். ஒருவர் உயிரிழந்ததால் அவரது சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டது. அங்கு சட்ட மருத்துவநிபுணர், நீதிவான் ஆகியோரே செல்ல முடியும். நாங்கள் சென்று என்ன நடந்தது என்று பார்வையிட முடியாது. பிறகுதான் அங்கு சென்றிருந்தேன். அதன் பின்னரே சுட்டமையால் தான் அவர்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரியவந்தது.

அவ்வாறு சுடுவதாக இருந்தாலும் முழங்காலுக்குக் கீழே தான் சுட் முடியும். ஏன் அது மீறப்பட்டது என்பது உள்ளிட்ட விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன–என்றார். (த-4)

## திட்டமிட்டுச்....

சேர்ந்த கஜன் ஆகிய இரு பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு கொக்குவிலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள நண்பரின் வீட்டிலிருந்து கந்தரோடைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிந்தபோது அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் சுலக்சன் கொல்லப்பட்டார். யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது கஜன் உயிரிழந்தார்.

பொலிசாரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டது. இதனடிப்படையில் 5 பொலிசார் கைது செய்யப்பட்டனர்.

சடலங்கள் வைத்தியசாலையில் வைத்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சுலக்சனின் நெஞ்சுப் பகுதியில் இதயத்துக்கு மேலே துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இதயத்துடன் இணைந்துள்ள குருதிக் குழாயைத் தாக்கியுள்ளது. அதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தெரிவித்தது.

இந்நிலையிலேயே கொல்லப்பட்ட கஜனின் பெற்றோரைப் பொலிஸார் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று மன்னிப்புக் கோரியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் குழு வருகிறது. சுட்டவர்களைக் கைது செய்துள்ளோம். நீதிமன்றின் ஊடாக நடவடிக்கை எடுப்போம். தெரியாமல் நடந்த இந்தச் சம்பவத்தை நீங்கள் மன்னித்துக் கொள்ளுங்கள்.

சடலம் வைப்பதற்கான பெட்டிச் செலவு, இறுதிக் கிரியைகளுக்குத் தேவையான அனைத்துச்செலவுகளையும் பொலிஸார் ஏற்றுக் கொள்வர் என்று பொலிஸார் கோரினர். எனினும் உங்கள் (பொலிஸாரின்) உதவி எதுவும் வேண்டாம் என்று நாங்கள் உறுதியாகக் கூறிவிட்டோம் என்று கஜனின் பெற்றோர் தெரிவித்தனர். (த-4-101)

**வீடு காணி விற்பனைக்கு**

தெஹிவளையில் Duplex Apartment விற்பனைக்குண்டு. 3 படுக்கையறை, 2 பாத்ரூம், 1150 சதுர அடி உறுதி உண்டு. With Parking காலி வீதியிலிருந்து 100 மீற்றர்

077 442 3680

**வீடு விற்பனைக்கு**

பம்பலப்பிட்டி சந்திக்கு அருகில் 3Bedrooms/ 2 Bathrooms /Servant Room With bathroom உடன் கூடிய விசாலமான தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. 1312sqft/1st Floor தொடர்புகளுக்கு

Re/ Max Cornerstone 077 9347 222

**வீடு வாடகைக்கு**

60/3, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணத்தில் மூன்று அறைகள் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.

077 062 5463

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக்.23

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் முன்னாள் தலைவர் து.ஜயரட்ணதின் நினைவுப்பேருரை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் இளைய சமூகத்தினரிடம் சுய ஒழுக்கத்தையும் கற்கும் ஆற்றலையும் மேம்படுத்தல் என்ற தலைப்பில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி உரையாற்றவுள்ளார். (ற-ரி)

## கண்காட்சியும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாம்ப்பாண வலயக் கல்வி அலுவலக ...பிப் பிரிவின் கண்காட்சி சான்றிதழ் வழங்கல், நூல் வெளியீட்டு நிகழ்வானது இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக, வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந் திரராஜா தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை யாழ்ப்பாணம் கோட்டக்கல் விப்பணிப்பாளர் எஸ்.சண்முக குமார் அவரது துணைவியார் எஸ்.அருள்மதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## மாணவருக்கு விசேட பதிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டக் கற்கைகள் மாணவர்களுக்கான விசேட பதிவுகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. பதிவு மேற் கொள்ளத் தவறியவர்கள் பதிவுகளை மேற் கொள்ள முடியும் என யாழ் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார். (ற-ரி)

**உடல் பருமன் கொண்டோருக்கும் உடல்எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)**

ஆண், பெண் இருபாலருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை, டொனிக், கிறீம்.

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல்எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.**

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/= 3 மாதத்திற்குரியது)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச் சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

**(விலை 3500, 5500)**

தொடர்பு: 077 210 6155
221, நாவலர் றோட் (பிறவுன்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

**STUDY IN ABROAD & VISIT VISA**

UK | Canada | Australia | Swiss
Malaysia | Singapore | Korea
Romania | India

- Student VISA
- Bank Loan
- Permanent Resident VISA
- Medical VISA
- Appeals & Reject VISA

**VMU CENTER**
No. 280, 1/2, George R. D. Silva Mawatha, Kotahena, Colombo 13.
Hot Line: 0777745436 Tel: 011 588233
E-mail: admin@vinayaka.lk Web: www. vinayaka.lk

**LED பல்ப்**


பிளாஸ்டிக் LED பல்ப் ரூபா. 40/-ல் இருந்து


அலுமினியம் LED பல்ப் PARTS 3W ரூபா. 50/-ல் இருந்து


U Type LED 3W-24W ரூபா. 160/-ல் இருந்து


Panel Light 3W -24W Slab / Ceiling Type ரூபா. 175/-ல் இருந்து

LED பிளாஷ்கள், எமர்ஜன்ஸி பல்புகள், டியூப்லைட், LED டோர்ச், மோஷன் சென்சர்.

**SUPER TRONIC**
07 - 1/5, 1ம் மாடி (Sunshine Plaza)
1ம் குறுக்குத் தெரு, புறக்கோட்டை.
அழையுங்கள் : 0778 226 295 / 0112 337 016
FLEX Graphic

**SB Travels**



➤ மலேசியா, தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கான வீசா உடன் எடுத்துத் தரப்படும் வீசா விண்ணப்பங்கள் நிரப்பித் தரப்படும்.

➤ அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கட்கள் மிகக் குறைந்த விலையில் வழங்கப்படும்.

வீசா விண்ணப்பப்படிவம் நிரப்ப 100 /= மட்டுமே

சென்னை -19,800/= மதுரை -17,800/= டோகா -15,000/=

**212, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.**
(சி/23252)(13.18.17) தொடர்புகளுக்கு: 021 222 7111, 021 222 7888

**பொதுசுகாதார ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்**
**பதவி வெற்றிடம் - ஒப்பந்த அடிப்படை**
**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழான மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

Ministry of Health, Nutrition of Indigenous Medicine
555/5, Elvitigala Mawatha, Colombo - 05

இலங்கையில் மலேரியாவை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் மேற்கூறப்பட்ட அமைச்சு உலகளாவிய நிதியத்திலிருந்து எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா (GFATM) என்பவற்றினைத் தடுப்பதற்கான தரத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை (GFATM) எதிர்க்கும் உலகளாவிய நிதியம் சுகாதார அமைச்சு, 555/5, வவிறிகலா மாவத்தை, கொழும்பு - 05 என்பவற்றின் கீழான மலேரியா நீக்குதல் நிகழ்ச்சி.

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினைத் தவிர்ப்பதற்காக (GFATM ) இலங்கையில் மலேரியாவைத் தடுப்பதற்கான வலிமைப்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கூறப்பட்ட அமைச்சு உலகலாவிய நிதியத்திட்டமிடல் தரத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இயக்குநர் GFATM திட்டத்திற்கான மலேரியா பிராந்திய அலுவலகத்துக்கு அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ( PHLT ) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் 3 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**வேலைவிவரம்**

* தடிப்பான, மெல்லிய இரத்தப்பரிசோதனை அறிக்கைகளை மலேரியா ஆய்வுக்காக நிறியிடுதல், பரிசோதித்தல், தயாரித்தல்
* தொடர்புடைய பதிவுகளை பேணுதல் - மலேரியா எதிர்ப்பு பிரசார செயல்முறைகள் முடித்த பின் தொடர்புடைய நுண்ணிய மற்றும் ஏனைய பரிசோதனை முடிவுகளை அனுப்புதல்
* AMC வழி காட்டுதலின் படியான மலேரியா நோயாளிகளை அணுகுதல்
* மலேரியா எதிர்ப்பு பிரசாரம் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் கீழான பிராந்திய மலேரியா அலுவலகத்தின் வழிகாட்டலிலும் மேற் பார்வையாளர்களின் கீழ் பணி செய்தல் வேண்டும்.
* மலேரியா எதிர்ப்பு பிரசாரத்தின் படியான தரமான உறுதிப்படுத்தல் வேலைகளுக்காக பரிசோதிக்கப்பட்ட குருதி ஆய்வு கூற்றுக்காக சமர்ப்பித்தல்.
* மலேரியா நுண்ணங்கிக்கு தேவையான காரணிகளில் தேவையான இருப்புக்களைப் பேணுதல்.
* பிராந்திய மலேரியா அலுவலர்களால் நிர்ணயிக்கப்படும் ஏனைய பணிகளைச் செய்தல்.

**தகைமையும் அனுபவமும்**

* மலேரியா நுண்ணங்கிகள் தொடர்பான (PHLTT) அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவரும் குஙறந்தது 10 வருட அனுபவமும்.
* ஆள்சேர்ப்பின் ஒரு பகுதியான மலேரியா எதிர்ப்பு பிரசாரத்தில் மற்றும் அதனுடன் தொடர்புடைய பகுதியில் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் அவர் ஓய்வுபெற்று 5 வருடங்களுக்கு மேற்பட்டு இருத்தல் வேண்டும்.

**வயது எல்லை - 65 வருடங்களுக்கு கீழ்**

**சம்பளம் - மேலாண்மை சேவை சுற்றறிக்கையின் பிரகாரம்** (01/2016 dated 24th March 2016 (Level PS 6, Grant size between USD 5-15 million)

**பொதுவான நிலைமைகள்**

* ஆரம்ப ஒப்பந்த காலம் ஒருவருடம் : ஒதுக்கீடுகளும், நீடிப்புக்களும் திட்டத்தின் இருப்பு மற்றும் செயல்திறன்களில் தங்கியுள்ளது.
* சுருக்கமாக நிரற்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே நேர்முகத் தேர்தவிற்காக அழைக்கப்படும்.
* தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உடனடியாக வேலைக்கமர்த்தப்படுவர்.

**ஏனைய நன்மைகள்**

சம்பளம் மீதான உரிமையாளரின் பங்களிப்புக்கள் EPF 12% மற்றும் ETF 3% சம்பளம் மீதான ஊழியர் பங்களிப்பு EPF8%

தேவையான சான்றுகள், பத்திரங்கள், தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் மற்றும் சிபாரிசு செய்பவரின் விவரங்கள் உள்ளடக்கிய பதிவு செய்யப்பட்ட சுயவிவரக்கோவையினை அறிவித்தல். கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்குள் GFATM திட்ட இயக்குநர் No.555/5 பொது சுகாதார அமைச்சு, Colombo 05 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்கள் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் Public Heath Laboratory Technicians (Pegional Post) Malaria Programme Under GFATM எனக் குறிப்பிட்டு GFATM அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் முக்கியமாகக் கொள்ளப்படும்.

(C/22820)
(11.17.18)

Project Director
GFATM Project Officer, Public Heath Complex, 3rd Floor,
No.555/5, Elvitigala Mawatha, Colombo -5

**Bata**

**உங்கள் வணிக வளாகத்துக்கு ஒரு சிறந்த முதலீடு**

66 வருடங்களுக்கு மேலாக பரந்த சில்லறை விற்பனை வலையமைப்பைக் கொண்டுள்ள Bata இலங்கையின் வாடிக்கையாளர்களின் முதல் தெரிவாக இருக்கின்றது.

இவ்வலையமைப்பை விரைவாக விரிவுபடுத்துவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒரு வணிக வளாகம் தேவை.

நீங்கள் சிறந்த வணிக முகாமையாளராகவும் 300 Sqft இற்கு மேற்பட்ட இடப்பரப்பை உடையவராகவும் ஏனைய உள்ளக கட்டமைப்புக்களை உடையவராகவும் இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

Mr.S.Jaykanthan
077 232 7058
Bata Shoe Company of Ceylon Limited
No.100, General Sir John Kothalawela Road, Ratmalana.

# 'மனசுக்குள் ஒரு மழைச் சாரல்' திரையிடப்படும் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 23

உள்ளூர் கலைஞர்களின் 'மனசுக்குள் ஒரு மழைச் சாரல்' எனும் முழு நீளத் திரைப்படம் 2ஆவது தடவையாக இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். ராஜா திரையரங்கில் திரை யிடப்படவுள்ளதாக படக்குழுவினர் தெரி வித்துள்ளனர். ராஜ் மூவிஸ் வழங்கும் இந்தத் திரைப்படம் அனேகரின் வேண்டு கோளுக்கிணங்க இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.30 மணிக்கு மீண்டும் காண்பிக்கப் படவுள்ளது. (த-ரி)


## பதவி வெற்றிடம்

**SALES REPRESENTATIVE:** Nutrrtional Food
விற்பனை பிரதிநிதி உடன் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.

**TECHNICAL OFFICER:** NCT Or சமமான கட்ட
நிர்மாணத்துறையில் குறைந்தது இரண்டு வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ACCOUNT ASSISTANT:** A/L Commerce
சுயவிவரக் கோவையை நேரில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும். (J 5607) (14,17,18)

**VISVAKARMA(PVT)LTD.**
28, Maari Amman Lane, Thirunelvely,Jaffna.
Tel: 021 222 6781 / 021 492 7338
Fax: 021 221 9976 Mail: msivam25@yahoo.com

## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவு தினம்



கடந்த 24.09.2016
சனிக்கிழமை அன்று
அமரத்துவம் அடைந்த எங்கள்
குடும்ப குலவிளக்கு

அமரர் தங்கராசா
**பகவத்சிங்கம் (அங்கிள்)**
(ஓய்வு நிலை மேற்பார்வையாளர்.
நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயரில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களையும் கண்ணீர் அஞ்சலி பதாகைகளையும் வெளியிட்டு உதவியவர்கட்கும், அனுதாபச் செய்திகளை தொலைபேசி மூலமும் இணையத்தளங்கள் மூலம் தெரிவித்தவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஒட்டுசுட்டான் புனித கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 31ஆம் நாள் நினைவுதின திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மேற்படி நிகழ்விலும் 24.10.2016 திங்கட்கிழமை அன்று 12 மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிக்கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

'தயாநிதி இல்லம்'
இல.335, மு/ஐ/க.வு/கரை
4ஆம் கண்டம், பண்டாரவன்னி,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

குடும்பத்தினர்
076 7473773 -(முகுந்தன்-மருமகன்)
077 2045665 -(தயாநிதி-மனைவி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16.06.1982

மறைவு
22.09.2016

அமரர்
**ஜெயபாலன் சதீஸ்குமார்**



கடந்த 22.09.2016 அன்று சிவபதமடைந்த ஜெயபாலன் சதீஸ்குமார் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவறுவில் மத்தியகல்லூரி
ஆரம்பபாடசாலை முன்பாக.
குடும்பத்தினர்.

## வாடகைக்கு உண்டு

* நல்லூர் மாநகரில் பருத்தித்துறை வீதியில் பிரபல்யமான மூன்று மாடி விற்பனை நிலையம் கட்டடத்துடனும் தள பாடங்களுடனும் வாடகைக்கு உண்டு. வீடும் வாடகைக்கு உண்டு.
* யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சந்தைக்கு முன்னால் பிரபல்யமான கடைவாடகைக்கு உண்டு. (J 5619. (17.15.19)

உடன் தொடர்புக்கு:- 07777 47864

## சேவை

தேங்காய் எண்ணை, நல்லெண்ணை, இலுப்பெண்ணை என்பன சிறந்த முறையில் ஊற்றிக்கொடுக்கப்படும். அத்துடன் அனைத்து அரைத்தல் வேலைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள். **அரிசிமா, ஆட்டா மா, கோதுமை மா விற்பனைக்கு உண்டு. வேலைக்கு ஆள்கள் தேவை.**

**பிருந்தா மில்ஸ், 246, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்,**
T.P: 077 991 2304
(J 5620. (17.15.19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சீ.நடேசு**
(ஓய்வு பெற்ற அதிபர், திருஞானசம்பந்த வித்தியா சாலை, ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதய கல்லூரி)

திதி - 24.10.2016

மலர்வு 27.07.1924 உதிர்வு 05.11.2015

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறுமோ எம் துயரம்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

077 368 7327 உங்கள் பிரிவால் வாடும்
071 826 1311 மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(C 22815) (14,17,18)

## திவ்விய ஆயுர்வேதம்

சகல நோய்களுக்கான ஆயுர் வேத சிகிச்சை இந்தியாவில் இருந்து வர வழைக்கப்பட்ட மருந்து ஆயுர் வேத மருந்து, மாத்திரைகள், எண்ணெய் வகைகள், சூரணங்கள், லேகியங்கள் போன்ற வற்றிலான விசேடசிகிச்சைகள்

### விசேட சிகிச்சைகள்

* வாதநோய்கள், பாரிசவாதம் மற்றும் அடிபட்ட நாட்பட்ட நோவு, என்பவற்றுக்கு பற்று ஓயில் மசாச்
* குழந்தை இன்மை
* மாதவிடாய் கோளாறு
* ஆண்மைக் குறைபாடு
* வயிற்றுப் புண் (அல்சர்)
* நாட்பட்ட தோல் நோய்கள்
* சிறுநீரக கற்கள்
* ஆஸ்மா நாட்பட்ட பினிசம், தலையிடி, அம்மல்
* முள்ளந்தண்டு நோய்கள்
* உடல் மெலிவு, கணச்சூடு
* நரம்புத் தளர்ச்சி
* கொலஸ்ரோல்
* சலரோகம்
* முகப்பரு, தலைமுடி உதிர்வு, இளநரை, சொடு, பேன்
* மூலரோகம்

இடம்:- இல. 1,
2ஆம் குறுக்குத் தெரு,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 077 666 4674

## Full Time Immediately

எமது American நிறுவனமானது இறக்குமதி மற்றும் களஞ்சியப்படுத்தல் நிறுவனம். இந் நிறுவனம் மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் புதிதாக கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால், 28 புதிய பதவி வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்பட வுள்ளன.

* Operation Department
* Marketing / Sales DPT
* Distribution/Ware Housing

தகைமை:-
O/L , A/L மேல் கல்வி கற்றோர்.
குறிப்பு:- தங்குமிட வசதி, உணவுவசதி உண்டு.

தொடர்பு:- 077 985 6671,
071 187 3807, 023 568 1210

## Vacancies

கடந்த மூன்று வருடங்களாக சிறந்த முறையில் சேவையாற்றி வரும் எமது விசா ஆலோசனை நிலையத்துக்கு பணியாளர்கள் தேவை.

* Receptionist
* Office admin

தகைமை - G.C.E. A/L தகைமை

* ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவர்கள்
* 18-30 வயதுக்குட்பட்டவர்கள்
* கணினி அறிவு (Ms Office / Photoshop / Ms excel)

அனுபவம் அவசியமில்லை. தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும். கவர்ச்சிகரமான அடிப்படைச் சம்பளமும் இதர ஊக்குவிப்புக்கள் கொடுக்கப்படும்.
தகைமையுடையவர்கள் உங்கள் புகைப்படத்துடன் கூடிய சுய விவரக் கோவையினை 7 நாள்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**WINSTAR VISA CONSULTANTS**
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
070 236 3676

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிதம்பரம்
**இராசலிங்கம் (J.P)**
ஓய்வு பெற்ற ஊழியர்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை)



தோற்றம் 25.01.1934 மறைவு 07.11.2012

ஈகையின் வெறுமதி மொழிந்த நீதிவானே
நீதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வில்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்
போனாலும் எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண்விட்டு
மறைந்து நீங்கள் வானுலகம் சென்று
நான்கு ஆண்டுகள் ஆனாலும்
மனம் விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீரே.

உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி :
V.C.C மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி :
தேவாலய வீதி,
சங்கானை.
(J 5613) (16,17,19)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம் சமூக காவலர். மகாஜன சிற்பி
அமரர் தெ.து. ஜயரட்ணம்
(முன்னாள் தலைவர் - நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்)
அவர்களின் நினைவாக

## நினைவுப்பேருரை

காலம் - 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி
இடம் - தேவஸ்தான அன்னபூரணி மண்டபம்
தலைவர் - செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் (தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
நினைவுப்பேருரை - பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் (கல்வி ஆய்வாளர்)
விடயம் - இளைய சமூகத்தினரிடம் சுய ஒழுக்கத்தையும் கற்கும் ஆற்றலை மேம்படுத்தல்
நன்றியுரை

**அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.**

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
நிர்வாகசபை.

## விக்னேஸ்வரா, நசரேத் அணிகள் முன்னேறின

கரணவாய், ஒக். 23

மனோகராவின் கால்பந்தாட்டத் தொடரில் புத்தூர் விக்னேஸ்வரா மற்றும் வேலணை நசரேத் விளையாட்டுக் கழகம் என்பன மூன்றாம் சுற்று ஆட்டங்களுக்கு முன்னேறின.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புதுத்தோட்டம் சுடரொளி விளையாட்டுக் கழகமும் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்தில் விஜய் பெற்ற கோலின் மூலம் 1:0 என்ற விக்னேஸ்வராவின் முன்னிலையுடன் முடிவுக்கு வந்தது முதற் பாதி. இரண்டாம் பாதியின் 6 ஆவது நிமிடத்தில் விக்னேஸ்வரா சார்பாக மேலும் ஒரு கோல் பதிவானது. ஆட்டத்தின் இறுதி நேரத்தில் சுடரொளியின் வீரர் மது கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் வேலணை நசரேத் விளையாட்டுக் கழகமும் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் நசரேத் அணி வெற்றி பெற்றது. (ம-108)



## இலங்கை கிரிக்கெட்டில் ஊழல் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்

இலங்கை கிரிக்கெட் தற்போது சூதாகிப் போய் விட்டது என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிதாக வீரர்களை சேர்த்துக் கொள்வது முதல் அனைத்துமே ஊழல்களின் அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றன. இங்கு பிரதானமாக அமைவது பணம் மட்டுமே. விளையாட்டு வீரர்களுக்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் போது பேரம் பேசப்படுகின்றது. பணத்தை அடிப்படையாகக்கொண்டே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. நல்லாட்சியில் காணப்படும் சில அமைச்சர்களின் முறையற்ற இந்த செயல் விளையாட்டு வீரர்களின் மன அமைதியை சீர்குலைக்கின்றது. அவர்களால் விளையாட் டில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படு கின்றது. தற்போதைய கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழு மற்றும் சில முறையற்ற அமைச்சர்களின் செயல்களால் இலங்கை கிரிக்கெட் அணி தனது தனித்துவத்தை படிப்படியாக இழந்து வருகின்றது என ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)

## கால்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

கரணவாய், ஒக். 23

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கால்பந்தாட்ட மத்தியஸ்தர் தர பரீட்சை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெவுள்ளது.


பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் வடமராட்சி கால்பந்தாட்ட சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற கழகங்களின் அங்கத்தவர்கள் மாத்திரம் லீக்கின் செயலாளர் அல்லது நடுவர் சங்கச் செயலாளரிடம் விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பரீட்சையில் தோற்றலாம் என வடமராட்சி கால்பந்தாட்டச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ம-108)

## கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக். 23

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்ற சரசாலையைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் அ.புவிதரனை சரசாலை வடக்கு உதயநிலா விளையாட்டுக் கழகத்தினர் இன்று கௌரவிக்கவுள்ளனர். சரசாலை சிறிகணேசா வித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் ப.நிமல்ராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் கலந்து கொள்வார். (ம-9)

## ஸ்ரோக்ஸ் அபார ஆட்டம் இங்கிலாந்து முன்னிலை



இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின் படி பங்களாதேஷின் கைகளுக்குள் இருந்த ஆட்டம் இங்கிலாந்தின் கைகளுக்கு மாறியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 293 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மொயின் அலி 68 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 52 ஓட்டங்களையும், ரூட் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மிராஸ் 6 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், இஸ்லாம் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் இரண்டாம் நாள் முடிவில் 221-5 என்ற நிலையில் இருந்தது. சகிப் அல் ஹசன் 31 ஓட்டங்களுடனும், இஸ்லாம் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் சகிப்பால் பெறமுடியவில்லை. இஸ்லாமால் முடிந்தது இரு ஓட்டங்களே. ரகுமான், மிராஸ், கமரூல் மிராஸ் மூவரையும் சொற்ப ஓட்டங்களில் வீழ்த்தினார் ஸ்ரோக்ஸ். முடிவில் 248 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். பந்து வீச்சில் இங்கிலாந்தின் சார்பாக ஸ்ரொக்ஸ் 4 இலக்குகளையும், மொயின் அலி 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

45 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து ஆரம்பத்தில் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. குக், ரூட், டக்லெட், பலன்ஸ் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 46 ஓட்டங்களில் நான்கு இலக்குகளை இழந்தது இங்கிலாந்து. ஸ்ரோக்ஸ், பரிஸ்ரௌவ் இணை ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றியது. இணைப்பாட்டமாக 127 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் மூன்று ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் பரிஸ்ரௌவ். 85 ஓட்டங்களுடன் ஸ்ரோக்ஸும் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் 228-8 என்றுள்ளது இங்கிலாந்து. (ம)

## சோமஸ்கந்தனின் இறுதியாட்டங்கள்

கரணவாய், ஒக். 23

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியாக இரு பிரிவுகளாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

சோமஸ்கந்தனின் மைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் 'ஏ' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## கபடி உலகக்கிண்ணத்தை மீண்டும் வென்றது இந்தியா



உலகக்கிண்ணக் கபடித் தொடரில் ஈரானை வீழ்த்தி மீண்டும் சம்பியனானது இந்திய அணி.

இந்தியாவின் அகமதாபாத்தில் தொடர் நடைபெற்று வந்தது. நடப்பு வருட உலகக்கிண்ண கபடித் தொடர் மூன்றாவது தொடராகும். நேற்று இரவு இறுதிப் போட்டி நடைபெற்றது. ஏற்கனவே முடிவடைந்த இரு தொடர்களிலும் இந்தியாவே சம்பியனாகியிருந்தது. இதனால் இம்முறையும் கிண்ணம் வென்று ஹற்றிக் படைக்க அந்த அணி தீவிர முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலக கபடி அரங்கில் இந்தியாவுக்கு சவால் வழங்கக்கூடிய அணியென்றால் அது ஈரானாகத்தான் இருக்கமுடியும். இதனால் இந்தியா, ஈரான் அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. முதற் பாதியின் முடிவில் 18:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்து இந்தியாவுக்கு சிறிது பதற்றத்தை வழங்கியது ஈரான். ஆனால் இரண்டாவது பாதியைச் சிறப்பாகவே கையாண்ட இந்திய அணி முடிவில் 38:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. (ம)

## இந்தியா நியூசிலாந்து மூன்றாவது ஆட்டம்

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங் களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெற வுள்ளது. முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் இந்தியாவும், இரண்டாவது ஆட்டத்தில் நியூசிலாந்தும் வெற்றிபெற்றன. இதனால் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி பின்னர் எஞ்சியிருக்கும் இரு ஆட்டங்களில் ஒன்றில் வெற்றிபெற்றால் கிண்ணத்தைக் கைப்பற்றலாம். மாறாக இன்றைய ஆட்டத்தில் தோல்வியடையும் அணி அடுத்த இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும். எனவே தமது அழுத்தத்தைக் குறைக்க இரு அணிகளும் இந்த ஆட்டத்தில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தும். மொகாலி மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெற வுள்ளது. (ம)






## டென்மார்க் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார் சிந்து

டென்மார்க் பூப்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான பி.வி.சிந்து.

டென்மார்க் பூப்பந்தாட்டத் தொடர் ஒடென்சி நகரில் நடைபெற்று வருகிறது. இந்தியாவின் நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான சிந்துவும் தொடரில் கலந்துகொண்டார். அண்மையில் முடிவடைந்த ரியோ ஒலிம்பிக் தொடரில் சிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். இதனால் இந்தத் தொடரிலும் அவர் சிறப்பாகச் சாதிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன்படியே சிந்துவும் முதலாவது ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

சிந்துவும், ஜப்பான் வீராங்கனை சயாகா சாட்டோவும் நேற்றுமுன்தினம் தமது இரண்டாவது சுற்றில் விளையாடினர். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் சயாகா. இரண்டாவது செற்றை 23:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் சிந்து. வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சயாகா முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். இந்த ஆட்டம் 65 நிமிடங்கள் நடைபெற்றது. (ம)

## சிம்பாப்வே தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக இலங்கை அணியின் துணைத்தலைவர் சந்திமல்லுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் எதிர்வரும் 29 ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக சந்திமல்லுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.


இலங்கை அணி விவரம் – மத்தியூஸ் (அணித் தலைவர்), குசல் ஜெனித் பெரேரா, குசல் மென்டிஸ், கவுசால் சில்வா, திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, நிரோசன் டிக்வெல்ல, ரங்கன கேரத், டில்ருவான் பெரேரா, லக்சான் சண்டகன், கசுன் மதுசாங்க, லகிரு குமார, லகிரு கமகே, சுரங்க லக்மல், அசேல குணரத்ன, (ம)





## பார்சிலோனா – நெய்மர் ஒப்பந்தம் கைச்சாத்து

பார்சிலோனாவுடன் நீண்ட கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார் நட்சத்திர வீரரான நெய்மர்.

பிரேஸிலின் நட்சத்திர வீரரான நெய்மர், கழகங்களுக்கு இடையிலான ஆட்டத்தில் பார்சிலோனாவுக்காக விளையாடி வந்தார். இவரது ஒப்பந்த காலம் இன்னும் சில வாரங்களில் முடிவடைய இருந்தது. இதனால் நெய்மரை ஒப்பந்தம் செய்ய வேறு பல அணிகளும் போட்டிபோட்டு களத்தில் இருந்தன. நெய்மரும் பார்சிலோனாவை விட்டு வேறொரு அணிக்குச் செல்ல திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் நெய்மரை அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது பார்சிலோனா. 2021 ஆம் ஆண்டு வரை பார்சிலோனாவுக்காக நெய்மர் விளையாடவுள்ளார். இருப்பினும் ஒப்பந்தத் தொகை தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை. (ம)




## ஆஸ்திரேலியாவுக்கு இறுக்கமான அட்டவணை



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தனது சொந்த மண்ணில் வைத்து இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரை முடித்துக்கொண்டு அடுத்த நாளே இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் அணிகள் தொடர்ச்சியாக விளையாடிவரும் அட்டவணை மிகவும் நெருக்கமாக உள்ளது. தொடர்களுக்கிடையில் போதுமான இடைவெளி, வீரர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதில் ஒருபடி மேல் சென்று, ஆஸ்திரேலிய அணி 16 மணித்தியாலய இடைவெளியில் ஆஸ்திரேலியா, இந்தியா என இரு நாடுகளில் களமிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடத்த உடன்பாடு ஏற்பட்டது. 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடர் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட் பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை புனேயில் நடைபெறவுள் ளது. இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் பெப்ரவரியில் நடைபெறவுள்ள மூன்று ரி-20 தொடர்களைக் கொண்ட தொடரின் இறுதியாட்டம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. எனவே கடைசி ரி-20 ஆட்டம் முடிந்த பிற்பாடு கிட்டத்தட்ட 16 மணி நேர இடை வெளியில் ஆஸ்திரேலியா இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் களமிறங்க வேண்டும். ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ரி-20 ஆட்டங்களில் இளம் வீரர்களைக் களமிறக்கு கின்ற போதிலும் பொதுவான வீரர்களான சிமித், வோர்ணர், கவாயா, ஸ்ராக், லையன் போன்ற முக்கிய வீரர்கள் மட்டிலேயே தற்போது சிக்கல் நிலை உள்ளது. (ம)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்...

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.

**பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:**
**யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.**

**இலவசம்:** PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...



**பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...**

சென்வோர் : யாழ். வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

**ஆரம்பம்: 30.10.2016 உடன் பதிவு செய்யுங்கள்.**
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

# SUN TRAVELS

UK, USA. NORWAY, DENMARK, FRANCE போன்ற நாடுகளுக்கான Touris Sponser Visa online மூலம் விண்ணப்பித்துக் கொடுக்கப் படும். INDIA விற்கான Touris Visa சிலமணி நேரத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
France, German, Swiss, போன்ற நாடுகளுக்கான Settelment Visa. Appoiment online மூலம் செய்து கொடுக்கப்படும்.
மேலும் அனைத்து நாட்டு Visa விண்ணப்பங்கள் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
(இந்தியாவுக்கான Visa விண்ணப்பபடிவம் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.)

**தொடர்புகளுக்கு - 077 9361427**
**077 2259030**
முகவரி -கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## கணினி திருத்தம்

உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். T.P.0779086737
GUNA BEST PC COMPUTER REPAIR

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 மகம் நட்சத்திரத்தில் பிறந்த MBBS பட்டதாரி Doctor மணமகனுக்கு பட்டதாரி அல்லது அரச தொழில் புரியும் மணமகள் தேவை.
**தொடர்பு: 076 782 7969**

## அமெரிக்க லொத்தர் விசா



ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
**யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்**
**விரையுங்கள் - இன்னும் 9 நாட்களே உள்ளன**
**0768226230**
V2 Travels
www.facebook.com/v2tandt

## ஞாலத்தில் புதுமை புகும் தாலம்
## பனைசார் உற்பத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும், ஆய்வரங்கு மற்றும் விற்பனையும்
## 2016



பதநீரும் பதநீர்சார் உற்பத்திகளும் தயாரிப்பது எப்படி?
பனங்களியை போத்தலில் அடைக்கும் தொழில்நுட்பம் யாது?
இரசாயன கலப்பற்ற பனங்களி சேர்க்கப்பட்ட யோக்கட், ஐஸ்கிறீம்
மற்றும்
பனங்கிழங்கிலிருந்து கிடைக்கப்பெறும்
ஒடியல் மா, புழுக்கொடியல் மா சேர்க்கப்பட்ட பிஸ்கட்,
குக்கீஸ், முறுக்கு, பனம்கேக்
என்பவற்றை உண்டு
உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த
கண்காட்சியை கண்டுகளிக்க வாருங்கள்! பயன்பெறுங்கள்!!

**முதலீட்டாளர்களே!**
**புதிய வடிவமைப்பிலான கைப்பணிப் பொருள்களையும்,**
**பனைசார் உணவு உற்பத்திப் பொருள்களையும்**
**சர்வதேச சந்தையில் விற்பனை செய்ய விரும்புகின்றீர்களா?**
**கண்காட்சிக்கு வாருங்கள்**
**சர்வதேச தரத்திலான தொழில்நுட்பம்**
**உங்களுக்காக காத்திருக்கின்றது.**





### 03ஆம் நாள் நிகழ்வுகள்

**தலைமை : திரு. வி.பி. தேவராஜா**
**(நிதி முகாமையாளர்,**
**பனை அபிவிருத்திச் சபை)**
**இடம் : யாழ். மத்திய கல்லூரி**
**காலம் : 23.10.2016**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**

பிரதம விருந்தினர்
**உயர்திரு நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

கௌரவ சிறப்பு விருந்தினர்
**திரு. ஜி.தேவஞானம்**
உதவிக்கணக்காய்வாளர் நாயகம் (வடக்கு)

கௌரவ விருந்தினர்
**திரு. சோ.கோகுலதாசன்**
முன்னாள் தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை

## 40 நிமிடத்தில் சமையல். உணவு சமைக்கும் இயந்திரம்.

ரைஸ் ஸ்ரீமர் மெசின்

RICE STEAMER MACHINE புகை,வெப்பம் வெளிவிடாது !!




• சோறு • இடியப்பம் • வட்டலாப்பம் • மரக்கறி • இறைச்சி • புட்டு • மா
போன்ற உணவுப் பொருட்களை இலகுவாகவும் விரைவாகவும் சமைக்ககூடியது.
தமிழில் தொடர்பு கொள்ள :
**0773918870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

## உங்கள் வருமானத்தை மும்மடங்காக அதிகரிக்க

ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்




• 1 வரு. உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவையுண்டு
• இலவச விநியோகம்

தமிழில் தொடர்பு கொள்ள
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.